End :

இப்போது இவைகளேயெல்லாஞ் சேர்த்துக்கொண்டு சர்க்காரிலே வருஷா வருஷம் சூழ் (60) வராகன் விழுக்காடு உப்பளம் மேரை தவிரக் கொடுக் கிருர்கள். இது நடந்து கொண்டு வருகிறது. [சி] (செ) லவு ரொம்ப கோயி லுக்குச் செல்லுகிறபடியினுலே நடக்கும்படியாய் தாங்கள் தயவு பண்ணி நடப் பிக்கவேண்டியது.

(கு-பு): —

இது, திருக்கடன்மல்லே யல்லது "மல்லபுரம்" என்னும் விஷ்ணு ஸ்தலத்தின் ஆதிவரலாற்றையெடுத்து உணர்த்துவதாம். இதில் சுவாமி தலசயன சுவாமி, நாய்ச்சியார், நிலமங்கையார் இத்தலம் முன்னர் மல்லேசு வர ராசாவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தமைபற்றி மல்லாபுரம் என்ற பேராலே வழங்கப்பட்டு வந்ததாம். இனி, மல்லே யெனவும் வழங்கப்படும். மற்று, இத்தலத்திலே புண்டரீக மகாமுனிவர்க்கு மகாவிஷ்ணு க்ஷிராப்தி நாதனுர் ஒரு விருத்தராய் காட்சிகொடுத்தளித்து அவர் சாத்த எண்ணியிருந்த தாமரைப் பூவை யணிந்திருந்து மணலேயே திண்ணேயாகக் குவித்துப்பள்ளி கொண்டிருந்தமை பற்றித் "தலசயனம்" என்றதாகவும் வழங்கப்பட்டு வருகின்றது. அம்மல்ல ராசராலே திருக்கோயின் முதலான பல திருப்பணி கள் செய்யப்பட்டிருக்கின்றன. கடற்கரையிலே இத்தலம் அமையப்பெற்றது. இவ்வரசன் ஷெ புண்டரீக மா்முனிவரால் முதலே சாபம் நீக்கப் பெற்றிருந்த " அரிப்பிரியன் என்ற மகாராசரது மரபிற்ருேன்றியவர் ஆகார். அரிப்பிரிய ருக்கு மூதாதையர் அரிசேகர மகாராசர் தந்தையார் அரிநந்தன் என்னு

மவர் மகன், சதாநந்தன்", என்னும் மேற்கூறிய மல்லராசர் ஆவர். இவ் வரிப் பிரியர் முன்னம் தம்மையன்னங் கேட்டார் ஒரு பார்ப்பனரைப் பரிக சித்து முதலேயாகச் சாபம் ஏற்றவர். இம் மன்னர் யாவரும் வராக மூர்த்தியை ஆராதிப்பவராயிருந்தார்கள் என்பது இதிலிருந்து புலனு கின்றது.

நிற்க, மகாபலி சக்கிரவர்த்தியும் இங்கே வதிந்திருந்து ஆட்சி செய்தமை பற்றி "மகாபலிபுரம்" என்றும் வழங்கப் பெறும் என்ப. இது, திருமங்கை யாழ்வார், பூதத்தாழ்வார்களால் திருப்பாடல் சாத்தப்பெற்று மங்களா சாசனம் பெற்ற தலமாம். இத்தலம் செங்கற்பட்டுக்குக் கிழக்கில் சுமார் 18 மைல் தூரத்திலிருக்கின்றது. இப்பிரதி மிக அழகாகப் பெயர்த்து எழுதப் பெற்றிருக்கிறது. டைலர் துரை காட்லாக்கு 434-ஆம் பக்கம், 835-ஆம் எண்ணிலே வருணிக்கப்பெற்ற நூலிலிருந்து எழுதப்பட்டதாம். ஆனால் மிக எழுத்துப் பிழையுள. இந் நாட்டில் முன்னர் நிகழ்ந்த கலகம் ஒன்றை இன்ன காலம் எனக் குறியாமல் பொதுவாகக் கூறுகின்றது.

No. 3182. திருக்கழுக்குன்றங் குருக்கள்மார் வரலாறும், பண்டைய மன்னர் கால அட்டவணையும்.

TIRUKKALUKKUNRAṄ KURUKKAḶMĀR VARALĀṞUM PANḌAIYA MANNAR KĀLA AṬṬAVAṆAIYUM.

Pages, 27. Lines, 17. On a page. Extent 230 granthas.

Begins on fol. 4(b) of the manuscript described under D. No. 3181.

Complete.

Same work as that described under D. No. 2772. This manuscript is a restored copy of No. 835 of Taylor's catalogue of manuscripts collected by Col. Mackenzie.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2772-ஆவது எண்ணில் வந்துள்ளதே யாம். ஆனால் டைலர் காட்லாக்கு 835-ஆம் எண்ணில் வந்துள்ளதைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாம். முற்றும் இருக்கிறது. எழுத்துப் பிழை காணப் பெறுகின்றன.

No. 3183. திருக்கழுக்குன்ற தேவஸ்தான வரலாறும் சாசன அட்டவணையும்.

TIRŪKKALUKKUNṞA DĒVASTHĀNA VARALĀṞUM ŚĀSANA AṬṬAVAṆAIYUM.

Pages, 9. Lines, 13-15 on a page. Extent, 68 granthas.

Begins on fol. 17 (b) of the manuscript described under D. No. 3181.

Complete.

A legendary account of the holy place of Tirukkaḻukkunṟam in Chingleput district. This is a list of the stone inscriptions that are found in the temple of Talakkōyil of the above Dēvasthānam. This manuscripts is a restored copy of the work described under No. 35 of Taylor's Catalogue Vol. III, pp. 434 and 435 which belongs to the Mackenzie collection of manuscripts.

Beginning :

Tirukkaḻukkunṟa varalāṟu. திருக்கழுக்குன்றத்தைச் சார்ந்த தேவஸ்த் தானங்கள் ஒன்பதுக்கு விவரம்—திருக்கழுக்குன்றம் ருத்ரகோநாதர் கோயில், திரு இடைச்சுரம் திருப்போரூர் பரமேசுவரி மங்கலம் * * * * * * * திரு வாலக் கோயில் ஆக தேவஸ்த் தானம் (கூ) ஒன்பதாம்.

கட்டளை கிராமம் ௩௰௨-க்கு **விவரம்.**—கொத்திமங்கலம், தத்தனூர் உழுதமங்கலம், தச்சூர், போசனகுப்பம், பனவெட்டுத்தாங்கல் ஆகக் கிராமம் ௩௰௨.

திருப்பணிக் கிராமங்கள் ௰அ-க்கு **விவரம்.**—வைவமுதூர், வடத்திம்மூர், நருவக்கரை, குன்றப்பாக்கம், * * * * * கீழ் நரசிங்கக் குப்பம், மேலப்பட்டு ஆகத் திருப்பணிக் கிராமம் ௰அ. ஆகக் கிராமம் மொத்தம் ௫௰.

திருக்கழுக்குன்றந் தாழக் கோயில் சிலாசாதனங்களுக்கு நெம்பர் வாரி —(அட்டவணை) முதல் நெம்பர் மடப்பள்ளி வாசம்படி ஊர்ப்பாக்கம் சாதனம் (க.) (உ) ஷ வெளிப்பக்கத்தில் * * * * * * * * * * * (௫௰க) சங்குதீர்த்தக் குளக்கரை தீர்த்த ஈசுவரர் கோயிலண்டை படிக்கல் ௩-க்குச் சாதனம். க. ஆகத் தாழக் கோயில் வகையரா சாதன நம்பர் ௫௰க. திருமலையின்பேரில் சாதனம் க. ஆகச் சாதனம் நெம்பர் மொத்தம் ௫௰௨. ஆம்.

இனி, திருக்கழுக்குன்றங்கோயில் சிலாசாசனங்களிலே பாதி பாதியா யிருக்கிற துண்டுக்கல் நெம்பர்கள். (க) முதல் நெம்பர் பக்தவத்சலசுவாமி வாசப் படிக்குத் தென்னண்டைச் சுவரில் (க.) * * * * உ௰ரு ரு (5) நிலை கோபுரவாசப்படியில் துண்டு சாதனமாய் இருக்கிறது.

(கு-பு) : —

திருக்கழுக்குன்ற தேவஸ்தானத்துக்கு உரியதொரு வரலாறுகும். இதிலே ஷ தேவஸ்தானத்துக்குள் அடக்கமாக நடக்கும் தேவஸ்தானம் (கூ) ஒன்பது என்றும், நித்தியக் கட்டளைக்கு உரிமைபூண்டு நடந்துவருங் கிராமங்கள் (௩௰௨) முப்பத்திரண்டாம், என்றும், திருப்பணிக்காக நடந்து வரும் கிராமம் (௰அ) பதினெட்டு என்றும், மற்று, திருக்கழுக்குன்றம், தாழக்கோயில் சிலாசாசனங்கள் மொத்தம் 52, உண்டு என்றும், இவை

தவிர்த்து, துண்டு துண்டாய்க் காணப்படும் சாசனங்களும் 25. உள, என்றிவை முதலியவை விளக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரதி டைலர் துரை காட்லாக்கு 835 (pp. 434)-ஆம் நம்பரில் வந்துள்ளதிலிருந்து பெயர்த்தெழுதப்பட்டதாம். எழுத்து அழகாக விருப்பினும் பிழைகள் மிகவுள.

No. 3184. பாண்டிய பிரதாப வம்சாவளி.

PĀṆḌIYA PIRATĀPA VAMIŚĀVAḶI.

Pages, 78. Lines, 15 on a page. Extent. 625 granthas.

Begins on fol. 22 (a) of the manuscript described under D. No. 3181.

Complete.

A genealogical account of the Celebrated Kings, who ruled in Pāṇḍiya maṇḍalam at Madura. This manuscript is restored from No. 835 of the Taylor's Catalogue (pp. 435-36) Vol. III which belongs to one of the Mackenzie collection manuscripts.

Beginning :

பாண்டிய பிரதாப வமிசாவளி என்னவென்றால் முன்யுகத்திலே தேவேந்திரராவர் தேவ லோகத்திலே சதிர்பண்ணிக்கொண்டு முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத் தெண்ணாயிரம் இருஷிகள், கின்னரர்கள், கிம்புருடர், கருடர், கந்தருவர், சித்த வித்தியாதரர்கள் சகலரும் நிறைந்த சபையிலே தேவதாஸ்த்ரீகளது நாட்டியம் பார்த்துக் கொண்டு இருக்கிற சமயத்திலே தேவேந்திரன்றன் குருவாகிய வியாழபகவான் அவ்விடத்துக்கு வந்தார். வந்தபொழுது இவர் நர்த்டியமும் மற்றதும் பார்த்துக் கொண்டு அந்தக் கோஷ்டியிலே மோகமாயிருந்ததனாலே * * * * இவ்வளவு மகிமை வந்ததாவென்று வியாழ பகவான் கோபித்துக் கொண்டு போய்விட்டார். அதின் பேரிலே தேவேந்திரனுக்குத் தேவ போகமாயிருக்கப்பட்ட ஐசுவரி[யத்தினால்] (ம்) நாளுக்கு நாள் குறைந்து வந்தது.

* * * * * * * * *

End :

அப்போது இராயர் நாகம நாயக்கரை அனுப்புவித்து அந்த "வீரசேகர சோழனை", யடிச்சு, ஜெயிச்சுச் "சந்திரசேகரபாண்டியனுக்கு" இராச்சியங் கொடுத்து வரச் சொன்னபடிக்கு வராமல் அந்த நாகமநாய்க்கன் சோழனை மாத்திரம் ஜெயித்துத் துரத்திவிட்டு இராச்சியத்தைப் பாண்டியனுக்குக் கொடாமல் இராயர் உத்திரவை நிராகரித்துப் போட்டு இராச்சியத்தை தான் அபகரித்துக் கொண்டு நாலு வருஷம் துறைத்தனம் பண்ணிக்கொண்டிருக்கச் செய்தே இராயர் உத்தரவின்பேரில் விசுவநாத நாயக்கர் வந்து தனக்குத் தகப்பனாகிய நாகம நாயக்கரை ஜெயித்துப் பாண்டியனுக்கு

இராச்சியங் கொடுத்தபோது சந்திரசேகர பாண்டியன் வெகு சந்தோஷப் பட்டுத் தனக்குச் சந்ததியும் இல்(லே) (லாமல்) தன் குலம் விருத்தி யில்லாமற் போனபடியினுலே தனக்குப் பிற்காலம் இராச்சியம் சத்துருக்கள் அபகரித்துக் கொள்ளப்போகிருர்கள் என்றெண்ணி ''விசுவநாத நாயக்கரைத் தானே புத்திர (ஸ்ரீ) (ஸ்வீ) காரம் பண்ணிக்கொண்டு மீனுட்சியம்மன்'' சந்நிதியிலே பட்டங்கட்டித் தம்முடைய இராஜ முத்திரையெல்லாங் கொடுத்து அது முதலாக விசுவாத நாயக்கர் சந்ததி பாண்டிய தேசத்துக்கு இராசா வாய்ப் பரம்பரையாய் இரச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். **இப்படிக்குப் பாண்டிய ராஜ வம்சாவளி.**

(கு-பு) : —

இந் நூல், மதுரைப் பாண்டிய மன்னர்களது மரபினையெடுத்துக்கூறுந் துறையிலே அமைந்திருக்கின்றதாம். இப்பாண்டிய மண்டலம் முதலிற் கதம்பவனக் காடாயிருந்து பின்னர் நாடாகியது என்ப.

அது, முன்னம், ''மணிபுரம்'' என்னும் மணலூரிலே அரசாண்டிருந்த முதற் ''குலசேகரபாண்டிய மன்னராலே'' அத்தலத்தில் தேவேந்திரனல் ஆராதிக்கப் பெற்றிருந்த சொக்கநாதக் கடவுளாரது ஆணைக்கிணங்க செய்யப் பெற்றது, என்று இந்நூல் குறிக்கிறது. அம்மணிபுரம் என்னும் மணலூர்ப் பட்டினத்துக்கும் இக் கதம்பவனத்துக்கும் இடை ஐந்து நாழிகை வழியாம். இந்திரன் ஆராதித்து தனக்கிருந்த பிரமகத்தி சாபமதனை நீக்கிக் கொள் வதற்காம். பிரம்ம கத்தி தோஷம், ''விசுவரூபன்'' என்னும் தனது குருவின் தலையை ''வச்சிராயுதத்தான்'' வெட்டியதனுல் ஏற்பட்டது. அத் தோடத்தை நீக்குவதற்கே இங்குறையும் சொக்கநாதரை இந்திரன் யாகாதிகளைச் செய்து ஆராதித்தான் என்பது புராதன கதையாம். இக்கதையும் நூலாரம்பத்தில் விரிக்கப்பட்டுள்ளது.

இனி, இங்ஙனம் இத்தலத்தில் தேவேந்திரனும், மற்ற தேவர்களும், சுவா மியை, வந்தனை வழிபாடுகளைச் செய்து தாம் தமது முன் நஷ்டமாய்ப் போயி ருந்த சுவர்க்க இலட்சுமியினை மீட்டுக் கொண்டமை பற்றிக் கடவுளார் ''சொர்க்க நாதர்'' என்னப் பெற்றுர் போலும். ''ஸ்வர்க்கம்,'' என்ற சொல், ''சொர்க்கம்,'' ''சுவர்க்கம்,'' ''சொக்கம்'', என்பதாகத் திரிபா தலைக் காண்க. அங்ஙனம், குலசேகர பாண்டியன் கடவுளைத் தனக்குப்பட் டினத் தெல்லையைக் குறிப்பிக்குமாறு வேண்டி, சர்ப்பராசர் தோன்றி வளையமாக நின்று எல்லையைக் குறிக்கவே அது கொண்டு அந்நகரத்துக்கு ''ஆலாசியம்'', ''ஆலவாய்'', என்ற பெயர் புனைந்துக் கட்டுவித்தானுய்ப் படை முதலாயின வகுத்தமைத்து (சூா) (4,100) வருடம் ஆண்டு கொண் டிருந்தார். இவர் மகனர் ''மலையத்துவச பாண்டியர்'' ஆவார். இவருக் குப் புத்திர காமேஷ்டி யாகத்திலே ஓமகுண்டத்தினின்றும் மீனுட்சியம்மை புத்திரியாகத் தோன்றினுள். இவளுக்குப் பிறவியில் மூன்று முலைகள் அமைந்திருந்து திருமண காலத்திலே அதுமறைந்தது. பின்னர், மீனுட் சியை மணம் புரிந்த சுந்தர பாண்டியனுர் முதற் கொண்டு (51) ஐம்பத்

தோராம் மன்னரான பாண்டிய வமிசசேகர பாண்டியன் வரையில் இடையருது பாண்டிய மரபு மல்கி வந்துள்ளது. பிற்காலம் சேரமன்னர்களுக்கும் பாண்டிய மன்னர்களுக்கும் சம்பந்த மேற்பட்டு வைப்பாட்டியர் மகன் வாயிலாக வமிச விருத்தியாய்ப் பதினேழாயிரம் வருடம் வரை ஆண்டார்கள். அப்பால் சிறிது நாள் 3,000 வருடம் வரை வமிசம் அற்றிருந்தது. அப்புறம் ஒருமறுயுகப் பிரளயமாகியதாம். பின்னர் கீர்த்தி பூஷணன் என்ற பாண்டிய மன்னர் அகத்திய ராஜனையால் "காடு வெட்டி நாடாக்கி," "மது வருஷம்" பொழிந்ததால் "மதுராபுரி" யென நகரம் உண்டாக்கினர். அம்மன்னர் முதலாக, "குணசுந்தர பாண்டியன்", வரைக்கும் பாண்டிய மன்னர் மரபு இடையருது வந்தது ; என்று ஆதியாகக் கூறி, பின், துவாபர யுகத்தில், சித்திராங்கதையை மணம் புரிந்த அர்ச்சுனனிடத்துத் தோன்றிய பப்புருவாகனனை முதற்கொண்டு (௨டு) இருபத்தைந்தாம் மன்னரான "குலவர்த்தன பாண்டியன்" இறுதியாக மன்னர்கள் இடையருமல் வந்து கொண்டிருக்க அக்குலவர்த்தன பாண்டியருடன் முகம்மதிய மன்னர் "முல்லா" என்பவர் உயுத்தஞ் செய்து இராச்சியத்தையும் வயமாக்கிக் கொண்டார் என்று இடையில் விளக்கியுளது. மற்று, இவர் குமாரர் சோமசேகர பாண்டியன் என்றவர், தமது இராச்சியாதிகாரத்தை அபகரித்துக் கொண்டிருந்த கம்மண உடையார்க்கு யஜமானராம் பசவதேவ மகாராஜாவைப் பேட்டிசெய்து அவரைக் குறையிரந்து பட்டங்கட்டிக் கொண்டார் எனவும், விளக்கப்பட்டிருக்கின்றன. மற்றும், அவருக்குப்பின் "குவலயானந்த பாண்டியன்" முதல், "சந்திர சேகர பாண்டியன்" கடையாகப் பத்து மன்னர்கள் அரசு செலுத்தினர்கள் ; இவருடன் பாண்டிய வமிசம் முடிவடைந்தது எனவும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இங்குக் கடையிற் கூறப்பெற்ற சந்திரசேகர பாண்டியரை, "வீரசேகர சோழன்", என்றவர் அரசைவலிந்து அபகரித்துக் கொண்டாராய் அடித்துத் துரத்திவிட்டார். பின்னர், இம்மன்னர், இராயர் சமஸ்தான மேறச் சென்று கிருஷ்ண ராயரைக் குறையிரக்க இவர்க்குப் பட்டங் கட்டுவிக்குமாறு நாகமநாயக்கரைத் துணையாக அனுப்பினர்.

ஆனல், நாகம நாயக்கர் அங்ஙனம் நடத்தாது அரசைத் தம்வயமாக்கிக் கொண்டார். அது தெரிந்துகொண்டு, ஷெ இராயர் ஷெ யாரின் குமாரர், விசுவநாத நாயக்கர் பிதாவை யொறுத்துவர மதுரைக்கு அனுப்புவித்தார். அது முதல் மதுரை சமஸ்தான ஆட்சி நாயக்கர்கள் ஆட்சிக்கு உட்பட்டதாயிற்று என்று உள்ளது. இதற்குப் "பாண்டிய ராச வமிசாவளி" என்ற பெயர் இறுதியிற் கொடுக்கப் பெற்றிருக்கிறது, மெகென்ஸி தொரை சம்பாதித்தது. டைலர் காட்லாக்கு (11. 434–435) 835–ஆம் எண்ணுள்ள பிரதியைப் பெயர்த்து எழுதப் பெற்றதாம். பின்னர், தெலுங்கு பாஷையில், பாண்டிய தேசத்து, திருநெல்வேலிச் சீமையில் "சங்கர நாராயணன் கோவில்" அண்மையில் உள்ள "சோழபுரம்" என்ற ஓர் கிராமத்தின் வரலாறு ஒன்று இருக்க வேண்டும். மாதுருகையை நோக்க.

No. 3185. ஜைனர்கள் வரலாறும் ஜினாலயம் அறுபத்தாறின் பெயர் அட்டவணையும்.

JAINARKAḶ VARALĀṞUM JINĀLAYAM AṞUPATHĀṞIN PEYAR AṬṬAVAṆAIYUM.

Pages, 19, Lines, 16—26 on a page. Extent, 250 granthas.

Begins on fol. 62 (a) of the manuscript described under D. No. 3181.

Complete.

An Account of the Jains, their customs and manners, and a list of sixty-six (66) Jain temples, or *Fanes* in Kanchi district, etc., the property allotted to each, etc., are given here.

This manuscript is a restored copy of the manuscript described under D. No. 835 of Taylor's Catalogue (pp. 434–437) Vol, III, which belongs to one of the manuscripts collected by Col. Mackenzie.

A mention of the different ages, according to the Jainism is made. There are twenty-four Tīrthankaras, 14 Manus, and 12 Chakravartis, etc., among them. The commencement of the Saka era is specified in the Kaliyuga year, 741. Many Jains came, from the north to the Kanchi district, in the Kaliyugam 1451, Śali, Saka 710, in the reign of Hima Śitala Mahārāja. It was then a forest; which they had cleared, and cultivated. In his time a quarrel or *sehism* (*anteh-Kalaha-a*) arose between the Jains and the Buddhās. It is found that there are (4) four gaṇams or sanghas and they are called Śrikulasaṅgam and (5) five Jainabhāṣa matams in Jainism.

Akalañkadevar overcame the Buddhas. Some of the Buddhas were intended to be put to death in a large stone oil-mill but, instead of that, were embarked on board the ships, or vessels, and sent to Ceylon or Singalam. Some subsequent matters are mentioned; and then a reference to Appar and Mānikkavācakar is given. Subsequently, times of war and disturbance, are adverted to; in which the Jains were scattered and went to various places; their fanes being injured, or destroyed. Revenue matters of the Honourable Company are also mentioned. In the Pira deśam of Tiruppāruttekkunram there are about one hundred Jain house-holders. Fifteen fanes are large, some small; in all there are [sixty-five] sixty-six fanes. A list of these, and the villages allotted to them are also given. It is also mentioned here, that, according to the Jains there are four kinds of Jaina saṁghams and they are called "Śrikulam" and another five are called "pañca Jainabhāśam"

Beginning :

ஷக்ஷிணஹாறத்து ஹரதக்ஷேத்ரத்தில் ஆறுகாலம் வர்த்திக்கிறது. அந்தக் காலத்தில் முதல் மூன்று காலம் போகபூமி மேல் மூன்று கர்மபூமி. போக பூமி. அந்திய காலத்திலும் கர்மபூமி காலத்திலேயும் மனுக்கள் பதினுலு பேர், தீர்த்தங்கரர் இருபத்து நான்கு பேர். அகருவர்த்தி பன்னிரண்டு (பேர்), பலதேவர் ஒன்பது பேர், வாசுதேவர் ஒன்பது (பேர்), பிரதிவாசுதேவர் ஒன்பது பேர். இவர்கள் அனைவரும் க்ஷத்திரிய குலத்திலே ஜெநராகிப் பிறந்து இராச்சியம் அதிகாரம் பண்ணி அவர் அவர்கள் தங்கள் தங்கள் யோக்ய மான கதியை அடைந்தார்கள்.

End :

இப்போது கம்பெனியார் நாளையில் நடந்து வந்ததைக்கட்டிப் போட்டுத் தேவஸ்த்தானம் பூஜை பண்ணுகிற ஆசாமி பேரிலே ஆசாமிக்கு நஞ்சை புஞ்சை ஒரு காணி விழுக்காடு நடப்புவித்துக் கொண்டு வருகிறார்கள். முன் மாமூல் நடந்தது—பெரிய தேவஸ்த்தானங்களுக்குக் கிராமமும், மத்திய தேவஸ்தானங்களுக்குப் புஞ்சை நஞ்சையிலே இருபது காணி, இருபத்தஞ்சு காணி மானியமும் சில்லறை தேவஸ்த்தானங்களுக்கு அஞ்சு காணி ஆறு காணி மானியமும் சுவத்திரம் வர்த்தனையும் நடந்து வந்தது. அது சமை கட்டிப் போட்டார்கள். முன் மாமூல் நடந்து வந்த படிக்குத் தேவஸ்தானங் களுக்குக் கிராமங்கள் வர்த்தனை மானியங்கள் முதலானவை நடக்கும்படி யாய்க் கும்பினியிலே உத்திரவு ஆகவேணும்.

(கு-பு) : —

இது ஜைன மதத்தவரது மதக்கோட்பாடாகும். பழக்கமும் ஒழுக்கமும் முதலானவற்றையும், மற்று, அம்மதத்து அகளங்கர், வீரஸேநாசார்யர் முதலான ஆசார்யர்கள் " இமசீதள மகாராசன் " (கலி) ஸ்ரீ 1451–சாலிசகம் 710 ஸ்ரீ " அமோகவர்ஷன் " (கலி ஸ்ரீ 1561 சாலிவாகனம் 820) முதலான மன்னர்களின் ஆட்சித்திறன் அக்காலத்துப் பௌத்தர்கள் அகளங்காசார்ய ரால் இந்நாடு விட்டு, சிங்களம் சென்றவகை, ஜினலயங்கள் (66) அறுபத்தா றின் பெயர் அட்டவணை என்றின்னோன்ன ஜைனமதசம்பந்தமானவைகள் எல்லாவற்றையும் சுருக்கமாக வெடுத்துக் கூறி, கம்பெனி துரை மக்களிடம் ஷெ கோயில்கள் விடயமாக உள்ள மானியம் முதலானவைகளை முன்போல் நடத்திவைக்க வேண்டும் என்பதாக " வேண்டிக் கோடல்" முறையிலே யமைந்திருக்கிறது. நிற்க, கலி 741 க்கு மேல் சகன் பிறந்தான். அது முதலாம் சக ஆண்டு தோன்றியது. இம் மதத்தில் ஜிநஸேநா சார்யர், சாலி சகம் 820 ஸ்ரீ க்கு மேல் மகா புராணஞ் செய்து போந்தார். அதனை ஜைன சங்கத்தில் நாலு கணத்து, ஆசார்யர்களும் சீடபரம்பரையாய் உபதேசஞ் செய்து வருகின்றனர். இந் நால்வரும் ஸ்ரீ குலசங்கத்தார் எனப் பெறுவர். சுமார் நானூறு வருடங்கட்கு முன்னர் " கேசவண்ணன் " என்றவர் அம் மதக் கிரந்த " சாரத்திரயங்களுக்கும் " வியாக்கியானஞ் செய்துள்ளனர்.

அவை, திரிலோகஸாரம், கோமடசாரம், இலப்திஸாரம் என்றவையாம். ஒரு கால விசேடத்தில் நாலுசங்கத்தவர்களுக்கும் மதப்பிணக்கு உண்டாய், ஜைன பாசமதம் ஐந்தும் தோன்றினவாம்.

இனி, அப்பர் சரித்திரம் கூறப்பட்டுள்ளது. இது, டைலர் காட்லாக்கு 835 (pp. 434–437) ஆம் எண்ணில் வந்ததைப் பெயர்த் தெழுதப் பெற்றதாம். முற்றும் உள்ளது. இடையில் இராயர் பிரஸ்தாபமும் உளது.

No. 3186. ஸ்ரீரங்கம் [திருச்சினுப் பள்ளி], பிராமணர்கள் பிரத்யுத்தரம்.

ŚRĪRAṄGAM [TIRUCCINĀPAḶḶI], PIRĀMAṆARKAḶ PIRATYUTTARĀM

Pages 29, Lines, 18 on a page. Extent, 380 granthas.

Begins on fol. 71 (b) of the manuscript described under D. No. 3181.

Complete.

Answers of the Brahmins at Śrirangam to queries of Mr. Mackenzie. About 30 questions are answered. They are very interesting for the varieties of the questions and their answers.

Enquiry about Ramanuja : Some particulars are given concerning him. He is said to have flourished in Salivahana Saka 939 and he is said to have killed Krimikaṇṭa cōlan. Enquiry about Sankarācārya : Interesting particulars about him are given. Enquiry about Paṇḍārams and their coinsidence. Details of their different places of dwelling namely dharuma Purāṇam, etc., are given. Enquiry about Cēra kings : Nothing special is stated. Enquiries about Koṅkudēsa and Madura, The reply to a reference concerning Kēraḷa desam is unimportant. In reference to Brahmins, they assert that these were always in the country ; yet admit the introduction of same. The reply is vague on this point and on others they indolently profess ignorance.

Beginning :

(மெகென்சி-துரையின் கேள்விகளுக்கு) ஸ்ரீ ரங்கம், திருச்சினுப்பள்ளியி லிருக்கப்பட்ட பிராமண வித்துவாமிசர்கள் சொன்ன உத்தர [வு]ங்கள்.

௧. வது கேள்வி :—தர்மவர்மா என்னப்பட்டவர் யார் ? அவர் தானு தர்மராசர் ? அவராலேதானு ஆதியிலே ஸ்ரீரங்கம் கோவில் எற்பட்டது ? ' வர்மா, ' என்பதற்கு அர்த்தம் என்ன. ?

உத்தரம் (விடை) தர்மவர்மா வென்கிறவர் சோளதேசத்து ராஜா. அவர் தர்மராஜா அன்று. இந்தக் கலியுகத்திற்கு முன் துவாபராந் தத்தில் தர்மராஜாவினுடைய காலம், தர்மவர்மாவினுடைய காலம், (24) ௩௰௬ சதுர் யுகத்திற்கு முன் திரேதாயுகத்து ராஜா, விபீஷணருக்குக் கொடுத்த ஸ்ரீரங்க திவ்விய விமானத்துக்குத் தர்மவர்மா சப்தப் பிரகாரம், மண்டபம் கோபுராதிகள் கட்டினவர். "வர்மா" என்கிற சப்தத்துக்குக் 'கவசம்' என்று அர்த்தம், ஆகச்[சே] செய்தே தர்மத்தைக் கவசமாக உடையவர். (வர்மசப்தம் க்ஷத்திரியரைக் குறிக்கும் ஓர் குறிப்பேராம் அது; 'சர்மா' என்றது பிராமணரைக் குறிப்பது போலாமென்க.) தர்மவர்மா வுடைய வாசஸ்த்தானம் உறையூர், அதுக்கு 'நிசுளாபுரி' என்றும் (வட மொழியிற்) பேர், அவர் துறைத்தனம் முதல் தான் அந்தப்பட்டணத்துக் குப் பிரசித்தி.

உ. கேள்விக்கு, உத்தரம் :—சகத்தின் விபரமாவது எந்த ராஜா சகல குணபரிபூரணமாய்ச் சக்கிரவர்த்தியாயிருக்கிருரோ அவருடைய காலத்துக் குப் பிறகு திரும்ப ஒருவன் அவனைப் போலே உண்டாகிறவரைக்கும் அந்த முன் ராஜாவினுடைய சகம் என்று காலத்துக்கு நியமம் பண்ணுகிறது. கலியுகம் பிறந்தபிறகு ௩௲ வருஷத்துக் குள்ளாக இப்படிக்குத் தர்மபுத் திரருடைய காலத்துக்குப் பிறகு விக்கிரமாதித்தியனுடைய காலம் வரைக்கும் 'யுதிஷ்டிரசகம்' என்று நடந்தது. பிறகு சாலிவாகனனுடைய கால பரி யந்தம் "விக்கிரமாதித்திய சகம்" என்று நடந்தது. இப்போது "சாலி வாகனசகம்" என்று நடக்கிறது. இனிமேல் "சக ராஜா விசயாபி நந்தன்" என்று உண்டாகப் போகிருன். அது பரியந்தம் (இது) நடக்கப்போகிறது. இந்தக் கலியுகம் பாக்கி ஸ்ரீசாஉ௰எ௲ வருஷத்துக் குள்ளாக இன்னம் நாகார்ச்சுன பூபதி யென்றும் 'கலி (யன்)' என்றும் உண்டாகப் போகிருர் கள் இப்படிக்குச் சாஸ்த்திரத்தில் இருக்கிறது. சோழன், சேரன் கதைகள் எங்களுக்குத் தெரியமாட்டாது. தெற்கு தேசத்திலிருக்கப்பட்டவர்களைக் கேட்டால் தெரியும்.

* * * * * *

End :—

௫௩. ஆம் கேள்விக்கு உத்தரம். இந்தத் தெற்கு இராச்சியங்களில் ஒருக்காலும் பிராமணர் முதலானபேர் இல்லாமலிருந்ததேயில்லை. ஆனால் நடுவில் ஒருகால் இட்சுவாகு மகாராசாவினுடைய பிள்ளை தண்டகன் என்கிற ராசாவுக்கு சுக்கிராசார் யாருடைய சாபத்தினுலே சிறிது நாள் சிறிது தேசங்கள் பலாயனமாய்ப் போனதில் தெற்கு இராச்சியத்தில் சிறிது பூமிக்குத் "தண்டகாரண்யம்" என்று பேராயிருந்தது. உடனே அகத் திய மகாருஷி சாபத்தைத் தீர்த்துப் போட்டார். பிறகு அந்தத் தேசம் எப்போதும்போலே ஆய்ப்போச்சுது. இந்தக் காரியங்கூட உ௰ச சதுர்யுகத் திற்கு முன்னே நடந்தது. இவ்வளவுக்குள்ளாக நாங்கள் எழுதிய சங்கதி கள் போக. மற்றவைகள் எல்லாம் சாஸ்திரோக்தமாகாத சங்கதிகள் ஆகச்சே அவைகளுடைய விபரம் எங்களுக்குத் தெரிந்தவைகளும் அல்ல வென்பது.

20

(கு-பு) :--

இது, திருச்சி ஜில்லாவில் உள்ள ஸ்ரீரங்கம் (திருவரங்கம், பெரிய கோயில்) என்ற வைணவ நூற்றெட்டுத்திருப்பதிகளுள் மிக முக்கியம் வாய்ந்த திவ்விய க்ஷேத்திரத்தின் அரங்கநாதன் கோவில் விடயமாகவும், அதனைக் கட்டிச் சிறப்புறச் செய்த உறையூர்ச் சோழ வமிச மன்னராம் " தர்மவர்மாவின் " சரித்திரம் முதலான விடயங்களைப்பற்றிய (13) பதின்மூன்று வினுக்களுக்கு விடையிறுக்கும் முறையிலாக வமைந்திருக்கின்றதாம். ஸ்ரீரங்கம் பிராமண வித்துவாமிசர்களால் இறுக்கப்பட்டது. முற்றும் உள்ளது. மெகென்ஸிதுரை நூல்களைச் சார்ந்ததாய் டைலரது கட்லாக்கு 434-437 ஆன பக்கங்களில் 835 ஆவது எண்ணில் வருணிக்கப் பெற்ற நூனிலிருந்து பெயர்த்து எழுதி வைக்கப் பெற்றதாகும். இக்கோயிற், 24 சதுர்யுகத்துக்கு முன் விப்ஷணமகாராஜாவால் பிரதிஷ்டை பண்ணப் பெற்றதாகும். ஆக மிகப் பழமையானதலம் என்க. நிற்க அக்காலம் திரேதாயுகத்தில் நிசுளாபுரியில் (உறையூர்) அரசு செலுத்திய " தர்மவர்மன் " என்னும் பேரரசரால் சப்த பிரகாரம், மண்டபம், கோபுரம், முதலிய பல திருப்பணிகள் செய்விக்கப் பெற்றதலமாகும். இவர் விபீஷணருக்குச் சம காலத்தவர் ஆவார் என்பது விளக்கமாகின்றது. அஃது எத்துணைப் பொருத்தமோ ? ஆராயற்குரியது. மற்று, இதில் ஆதி சங்கராசார்யர் மலை நாட்டில் காலடி யென்னும் ஊரில் அவதரித்தது முதலான விருத்தாந்தங்களும், அதுபோல் ஸ்ரீ வைஷ்ணவமதத்தில் இராமானுசாசார்யர் கலி ௩௰௱ ௰௯௲௱௰௨. சாலி-சகம் ௯௱௩௰௯ அவதரித்தது முதல் 120-ஆம் வயதில் ஸ்ரீவைகுண்டம் சென்றது வரையிலான சரித்திர வரலாறும், பின் வேதாந்த தேசிகர் ஸ்ரீரங்கத்தில் கிருஷ்ணமிசிரரை வென்றதும், திருவலஞ்சுழியிலே கோட்டை முதலானவைகளை யமைத்து அரசு செலுத்திய சோழ மன்னர் முதலான பல மன்னர்களுடையவும், சேர, கொங்கு, பாண்டிய நாயக்கர் மன்னர்களுடையவும், மதுரையில் இராயர் முதலானேர்களுடையவுமான ஆட்சித்திறனும், அவ்வவ் நாட்டின் எல்லைகளும், சைவ, வைணவ கோயில்கள் உள்ள தலங்களும், மலையாள வரலாறும் நன்கு விளக்கப்பட்டுத் தெளிவாகின்றன. இந்நூல் சரித்திர நூலாராய்ச்சியாளர்களுக்கு மிகவும் ஊதியம் பயக்கும் எனக் கருதப்படுகின்றது.

No. 3187. உத்தம நம்பிகள் கூடஸ்தர் வமிச பரம்பரை (ஸ்ரீரங்கம்.)

UTTAMA NAMBIKAḶ KŪṬASTHAR VAMIŚA PARAMPARAI (ŚRĪRANGAM).

Pages, 41. Lines 17 on a page. Extent, 380 granthas.

Begins on fol. 86 (a) of the manuscript described under D. No. 3181.

Complete.

A genealogical account of Uttama Nambikaḷ, a manager of the Temple at Srirangam. It begins from Periyāḻvār of Śrī Villiputtūr, Kali Saka 46th year.

Beginning :

உத்தம நம்பிகள் கூடஸ்த்தர்களுடைய வமிச பரம்பரை :-

பாண்டிய தேசத்திலே ஸ்ரீவில்லிபுத்தூரிற் பிராமண உத்தமரான பெரிய திருவடி நயினார்க்குலத்திலே குமுதபட்டருக்குக் குமாரராகக் கலி பிறந்த சமசு வருஷத்துக்கு மேல் செல்லாநின்ற குரோதன நாம ஸம் வத்ஸரம் ஆனிமீ கூஉ ஸ்வாதி நக்ஷத்திரத்திலே பெரியாழ்வார் திருவ வதாரம். கிரந்தங்களிலே பிரஸித்தமாய்ச் சொல்லுகிற பெரியாழ்வார் " விஷ்ணுசித்தர் ", என்னும் பேரை யடைந்து பகவத் கடாக்ஷத்தினாலே சகல வேத சாஸ்திரங்களையும் அடைஞ்சு இதர மதகண்டனமான " **பரதத் த்துவ நிர்ணயம்** " பாணிப் **பாண்டிய தேசாதி** பதியான " **வல்லப தேவன்**", என்றவனையும் ஸ்வசிஷ்யனுக்கிக்கொண்டு வேதாந்தசாரமான திவ்வியப் பிரபந்தங்களையும் பண்ணிச் சூடிக்கொடுத்தாளுக்குப் ' பிதாவாய்க் கலி பிறந்த ஒரு ஷூ த்தில் ஸ்ரீரங்கனுதரும் ஸ்ரீரங்கமன்னுராகச் சூடிக்கொடுத்த கோதையையும் திருக் கல்லியாணம் பண்ணினுர். ? (பண்ணுவித்தார்)

* * * * * *

கூஙு-வது, அவர் குமாரர் உத்தம நம்பி ஸ்ரீரங்கார்ச்சாரியர் ஷெ சங்கதிக்காக ஷெ கோவிலுக்கு கிராமங்களாய்த்தானே நடந்து வரவேணும் என்று கலெக்டர் துரையவர்கள் சமக்ஷமதிலேயும் மகாராஜராஜ ஸ்ரீ மண்றுரெ சாயப்பு அவர் கள் சமக்ஷமதிலும் அர்ச்சுகள் கொடுத்திருக்கின்றுர்கள். கூஙகூ-ஆவது தலைமுறையில் உண்டான சக்கர ராயர் (முதல்) நாளது வரைக்கும் தலை முறை (உஙக)-க்கு விவரம் :—க-வது :—பொன்னய்யன் சக்கிராயர் சஙரு ஷூ எழுந்தருளியிருந்தார், * * * * * *

ரு-வது .—அவர் குமாரர் ஸ்ரீரங்க சக்கிரராயருக்குச் சகாப்தம் கூாகூஙு ஷூ இந்தத் தேசாதிபதியான குலோத்துங்க சோழ ராஜா ஷெ அவருக்கு ஒரு ஆதீனம் கட்டளையிட்டார். அது தொடங்கிச் சக்கிரராயர் ஆதீனம் நடந்து வருகிறது. அவர் கூஙக ஷூ எழுந்தருளியிருந்தார்.

* * * * * *

உய-ஆவது. அவர் குமாரர் வேங்கடரங்கய்யங்கார் சக்கிராயர். ருஙசஷூ எழுந்தருளியிருந்தார்.

உஙக-ஆவது. அவர் குமாரர் ஸ்ரீரங்கராயர் சக்கிரராயர் ருஙகூஷூ எழுந் தருளியிருந்தார்.

* * * * * *

மகாராஜராஜஸ்ரீ மெகன்ஸி துரை யவர்களின் ரயிட்டர் பாபுராயர் கேட்கப் பட்ட கேள்விக்கு ஆக உத்தரம் எழுதிக்கொடுக்கலரச்சுது.

(கு-பு): —

இது, ஸ்ரீரங்கம் (திருவரங்கம்) பெரிய கோவில் ஸ்ரீரங்க நாதனாது கோயில் திருப்பணிகள் நடாத்தும் (தர்மகர்த்தர்) உத்தம நம்பிகள் என்றவர்களின் வமிசாவளியை யெடுத்துக் கூறுகின்றதாம். இவர்கள், "பெரியாழ்வார்," "விஷ்ணுசித்தர்" என்னும், சூடிக்கொடுத்த நாய்ச்சியாரது தந்தையாரை மூலபுருடராகக் கொண்டுவந்த மரபில் தோற்றியவர்களாவார் என்றது இதிலிருந்து தெற்றெனத் தெளிவாகின்றது.

இம் மரபினர் யாவரும் கலியாரம்பத்திலிருந்த வல்லபதேவ பாண்டியன் காலம் முதலாக (கலி—சயிசூ-ஆம்௵) இன்று வரையில் தொடர்ந்து வந்து ஸ்ரீரங்க ஸ்ரீயைக் காத்துவருகின்றனர் என்பது இங்கு யாவராலும் குறித்துக் கொள்ளத்தக்க தொன்றும். இத்திருப்பணி இங்ஙனாக ஆதியில் வல்லபதேவனால் கட்டளையிடப்பட்டதாம். இப் பாண்டியனும், "பாண்டியன் கொண்டாடப் பட்டபிரான் வந்தான் என்று," என்னுமதான நாலாயிர திவ்வியப் பிரபந்த ஆதிதனியனால் விளக்கப்பட்டவனே. பெரியாழ்வாருக்குச் சீடனாக வமைந்தவன். சூடிக்கொடுத்த கோதையையும், பெரியாழ்வாரையும் இக் கோயிலிலே முதன் முதலாக பிரதிஷ்டிப் பித்தவனாவான். பெரியாழ்வார் குமாரர் "ஸ்ரீ ராமாண்டார்" என்பவர், 70 ௵ ஸ்ரீரங்க ஸ்ரீயைக் காத்து வந்தவர் ஆவார். அவர் முதலாக இம் மரபு விருக்ஷம் பண்ணப்பணைத்து 90 தலைமுறையாளர்களைக் கொண்டிருக்கின்றது. நிற்க, 69-ஆம் உத்தம நம்பி கிருஷ்ணய்யன் உத்தம நம்பியின் திருத்தம்பியார் "சக்கரராயர்" என்றவரை முதற்கொண்டு இம்மரபின் வேறோர் கிளையும் பணைத்து வந்து (21) தலைமுறையினரைக்கொண்டு விளங்குகின்றது. முதலதில் 74-ஆம் தலைமுறையினரைக் "கருடவாகன பண்டிதர்" என்னும் உத்தம நம்பியார் சூ-சகம் சூாசூயிரு ஆம்-௵த்து (995-ஆம்௵) (பாஷ்யகாரர்) உடையவர்க்குச் சம காலத்தவராயிருந்தவர். இவரே "திவ்விய சூரி சரிதம்" என்ற வட மொழி நூலுக்கும் ஆசிரியர். இவர் நாளையிலேயே இம் மரபில் மற்றோர் கிளையில் தோன்றிய 5-வது தலைமுறையினராய் **ஸ்ரீரங்கராய சக்கிரராயரும்** அக்காலையில் இத் தேசாதிபதி "குலோத்துங்க ராஜர்" அவர்களும் பல சிறப்புகளுஞ் செய்து ஒரு ஆதீனமும் வழங்கினார்கள். அவர் முதல் அவ்வாதீனமும் தனியாக "சக்கிரராயர் ஆதீனம்" என்றதாக ஒன்றும் நடந்து வருகின்றது. ஆகவே, இம் மூவரும் சமகாலத்தவர் ஆவார் என்பதும் விளக்கமாகின்றது. மற்று, இதிலிருந்து பல திருப்பணிகளும், பொற்குடங்களைச் சமர்ப்பிப்பதைக் குறிக்குஞ் சிலாசாஸனமும் இருப்பதாக விளக்க முறுகின்றன. கடையில் 3 வட மொழி சலோகங்கள் 3 சாஸனங்களை யுணர்த்தும் பேராருகின்றன. அவை மிக எழுத்துப் பிழையுடனாக அமைந்திருக்கின்றன. இனி, இரத்தினகிரீடம் ஒன்று 13-வது உத்தம நம்பியாலும், தங்கத்தில் தூபக்கால் தீபக்கால் பஞ்சபாத்திரம் வட்டில்கள் 15-வது உத்தம நம்பியாலும் கோபுர பிரகார மண்டபங்களின் சீர்ணோத்தரம் 27-ஆம் உத்தம நம்பியாலும், நூற்றுக்கால் மண்டபம் 75-வது உத்தம நம்பியாலும் கோவிலுக்குள் வஸந்தோதீஸவக்குளம், தியாக மண்டபம், சுற்று மண்டபம், அதுக்கு முன் பெரிய மண்டபம் முதலானவை

76-வது உத்தம நம்பியாலும் நிறைவேற்றப் பட்டனவாம். 80-வது உத்தம நம்பி கிருஷ்ணராய உத்தம நம்பியார் என்பவர் விஜயநகரம் ராஜா அரிஹரபுக்கராயர் ? குமாரர் கம்பண்ண ? உடையாரையும் இத்தல மேற அழைத்துவந்து பெரிய பெருமாளைத் தரிசனம் பண்ணுவித்து ராஜா கையில் நின்றும் 16,000 பொன்னும் அவரது பிரதானி செப்பண்ண நாய்க்கர் கையில் நின்றும் 1,000-மும், ஆக 17 ஆயிரம் பொன் எற்று திருவிடையாட்டத்துக்காக 60 கிராமங்கள் வாங்கியும் ச-சகம்-1304-ஆம்௵ பல திருவாபரணம், மண்டப பிரகாரங்கள், வீதிகள் முதலாயினவற்றையுங் கட்டுவித்தார்கள். பின்னர், செம்புகேசுவரத்தாருக்கும், ஸ்ரீரங்கத்தாருக்கும் ச–சகம் 1328-ல் எல்லாச் சண்டைகளும் நேரிட்டதாக, அதில் 81 ஆம் உத்தம நம்பிகள் எல்லையோடு 16 கால் மண்டபமும் மதிலும், அதைச் சேர்ந்த மற்றொரு மண்டபமும் கட்டுவித்தாராகையாலே இவர்க்கு ஷை ராயர் குமாரர் விர்ப்பன்ன உடையார் அவர்கள் " எல்லை நிலையிட்ட பெருமாள் உத்தம நம்பி " என்ற பேர் அளித்தார்களாம். இதுபோல இராயர்கள் பலரும், பிற மன்னர்களும், இக் கோயிலுக்குத் திருப்பணிக்காக பொன் வழங்கியுள்ளார்கள் என்பது போதருகின்றது. இறுதியில் இக் கோயில் திருவிடையாட்டக் கிராமங்கள் முழுவதிலும், " திருவரங்கம் " " பெரியகோவில் " என்ற சொற்களே முகத்தல் அளவையில் 1–2 என்ற எண்களுக்குப் பதிலாக வழங்கப்பட்டு வருவதற்குக் காரணமும் விளக்கமாகிறது. 83-ஆம் தலைமுறை உத்தம நம்பிகள் காலம்-சா-சகம்-1455-ஆம் ௵த்தில், மதுரையதிபதி கிருஷ்ணப்ப நாய்க்கர்கள் ஸ்ரீரங்கம் கோயில் நெல்லை க்ஷாமகால நிமத்தமாக வளந்து கொடுக்குமாறு நிர்ப்பந்திக்க இவர் அந் நாயகரையே பிடிக்கும்படி செய்து, திருவரங்கம் என்று அளந்து பெரிய் கோயில் எனத் தம் குடரையே யளந்து கொடுத்து இரணம் தீரப் பண்ணினர். இது காரணமாகக் குடல் சக்கிரவாளர் உத்தம நம்பிகள் எனப் பேர் வந்தது என்பது. இப் பிரதி, மெகென்ஸி துரையின் புத்தகங்களில் ஒன்றாய் டைலர் காட்லாக்கு 434—438-ஆம் பக்கம் 835-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றதிலிருந்து பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாம். முற்றும் உளது. பிழைகள் அதிகம் காணப்படுகின்றன. இதன் மூலப் பிரதி மிகவுஞ் சிதைவுற்றுள்ளது. இதன் விளக்கம் டைலர் காட்லாக்கில் காணப்படும்.

No. 3188. சந்திரவமிச ராஜர்கள் வரலாறு.
CANDIRA VAMIŚA RĀJARKAḶ VARALĀṞU.

Pages, 10, Lines 17 on a page. Extent, 125 granthas.

Begins on fol. 107(a) of the manuscript described under D. No. 3181.

Complete.

A list of the kings of the various dynasities who ruled over India. Starts from king Parīkṣit of the lunar dynasty upto Śāraṅgapāṇi. It also gives an account of the Dharma in the Kali Age and the formation of various Eras like Śālivāhana Śakha, etc.

Same work as that described uuder No. 835 of Taylor's Catologue pp. 434—440.

Beginning :

சந்திரவமிச ராஜர்கள் வரலாறு.

கலியுகத்துக்கு வருஷம் ச லக்ஷத்து முப்பத்திரண்டாயிரம். பாபம் மூன்று பங்கும் தருமம் ஒரு பங்குமாய் நடக்கும். ராஜா-கலி புருஷன், மந்திரி, பாபபுருஷன். இவர்கள் இருவரும் ? வாதிச்சுக்கொண்டு இருக் கிறபடியினாலே சகல ஜனங்களும் சவுக்கியங்கள் யுத்தமாய் நடப்பார்கள். சகல ஜனங்களுக்கும் பணமே ஆதாரமாயிருக்கும். அதனாலே வர்ணா சிரம தர்மம் தப்பும். புருஷப் பிரமாணம் முழம் ச, பரஸ்த்ரீ பாதன ? அபேட்சையாகிறபடியினாலே ஆயுசுப் பிரமாணம் தப்பி க்ஷீணகதிகளாய் வர்த்திக்கும். இன்னம் இந்தக் கலியுக லட்சணங்கள் அனேக விதங்களாயி ருக்கும்.

ஆதிமகாராஜா.

End :

முன்னால் விக்கிரமார்க்க ராசாவைக் கொன்றுபோட்ட "சாலியவாகனன்" என்கிற இராசர் அன்று முதற்கொண்டு எாயஅ ஷு தபசுபண்ணி வந்து ஈசுவர ஷு முதல், சாலிவாகனன் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்து துன்முகி ஷுத்தில் அந்தரத்தியானமாய் மறைந்துபோனபடியினாலே அவன் நாள் முதற்கொண்டு சாலிவாகன சகாப்தம் நடந்துவருகிறபடி யினாலே இன்னம் துறைத்தனம் அவனதே யென்று சொல்லப்படும். அவன் வமிசம் ஆனதுதான் மேற்குக் கன்னட தேசத்தில் மைசூர்ப்பட்டம் துறைத்தனம் பண்ணுகிற ? ராசசூர நந்தி ராஜா அவர்கள் வமிசம் இருந் தும் அந்தரத்தியானமாய்ப் போனவனுடையடியினாலேயும் சகம் அவன் பேராலேயே நடக்கிறபடியினாலேயும் " வமிசாவளி " இவ்விடத்திலே கண் டெழுதாமல் போய் விட்டது. சாலிவாகனனுடைய வமிசத்தால் அப்படி யிருக்க, மற்ற தேசத்துக்கு யாதவ வமிச ராஜாக்கள் துறைத்தனத்துக்கு ஏற்பட்டிருக்கின்றார்கள். இந்த யாதவ ராஜாக்களுடைய பட்டங்களான பிற் பாடு, இதுக்குள்ளே சந்திரகிரி கோட்டை சமாசாரங்கள் வரும். பிற்பாடு சந்திரகிரியாண்ட இராயப்பட்டங்கள் [வமிசம்] வரப்போகிறது. அவை யெல்லாம் இன்னும் ஒரு தபாலிலே அனுப்புவிக்கிறேன்.

சந்திரகிரி
சூன்மீ ௰கஉ
சுக்கிர வாரம்

வேணும்.
வே. பரசுராமன்.

(கு - பு) :—

இது சந்திர வமிசத்தில் தோன்றின பரீக்ஷித்து மகாராஜாவை முதற் கொண்டு, இராசநரேந்திரன்றன் இளைய மகனும் " சாரங்கபாணி," யென்ற வரைக் கடையாக உள்ள மன்னர்களுடைய சரித்திர வரலாறுகளையும் வமிசாவளியையும் எடுத்துக் கூறிப்பின், அச்சாரங்கபாணி மன்னன் அட்சய முதல் விகாரி வரையில் உளயச (214) வருடம் வரை இராச்சிய பாரம் தாங்கினான். அவனோடு அச் சந்திரவமிச மரபு முறை முடிவடைந்து

விட்டதாம் என்றும், மற்று, இராசநரேந்திரன் றன் மூத்தமகனும் சாரங்கதாரன் என்றவரை, மன்னரின் மூத்த மனைவி இரத்தினாங்கி யென்னும் அவள், ஜன்மப்பகையால் சூழ்ச்சியால் கொல்விக்கவெண்ணிக் கை, கால்களை வெட்டுவித்தாளாக, சாரங்கதாரனுக்குச் சித்தர் மகிமையால் பழையபடியே கை, கால்கள் வளரப்பெற்றுத் தானும் ஒரு சித்தனானான். அவன், இராய வேலூருக்கு மேற்கில் பள்ளிக் கொண்டையில் ஒரு மலைச் சாரலில் வாசம் புரிகின்றான் என்றும் சந்திரவமிசத் தொடர்பைக்கூறி முடிக்கின்றது. பின், சூத்திர மகாராஜன் 154 ஆண்டு ஆட்டுக்கடா நிமித்தமாக ஸ்ரீமுக வருடம் மரணமானான். இவர்க்குப்பின் மன்னர் களது சரித்திர வித்தாரம் "ஸ்ரீபாகவத நூலில்" விளக்கமுறும் என்கிறது. பின் விக்கிரமார்க்க மகாராஜன் 1,745 வருடம் வரையில் அரசு செலுத்தினர். இவனைப் பிராம்மண பிந்துவி [கொச] (குய)ப் பெண்ணிடம் பிறந்த "சாலியவாகனன்" என்ற பேர் அரசர் கொன்று போட்டார். பின் போசராசன் விக்கிரமார்க்கன்றனது சிம்மாஸனத்தில் ஏறியிருந்தார். இடையில் வேதாளக் கதை அல்லது முப்பத்திரண்டு கதை பிரஸ்தாபம் உளது. அவர் 144 வருடம் ஆட்சி புரிந்தனர். வடமொழி வித்துவானாக விருந்தவர். காளிதாசனோடு தோழமை பூண்டிருந்தவர். காளிதாசர் ஒரு விலைமாதினால் மரணம் அடைய, அப்பிரிவாற்றாமையால் போசனும் மரண மடைந்தான். பின்னர் நந்தன் சக்கிரவர்த்தி 62 ஆண்டும், திரிபுவன சக்கிரவர்த்தி 57 ஆண்டுகளும் ஆண்டார்கள். பின் சோழர் அரசேற்றனர். அவ்வாட்சியில் 23 சோழ மன்னர்கள் இருந்திருக்கின்றார்கள். 16-ஆம் பட்டம் தொண்டைமான். சோழன் 17-ஆம் பட்டம் ஷ குமாரர் ஆதொண் டைச்சோழன். இவர் திருப்பதியில் மலைமேல் வேங்கடாஜலபதிக்கு பலமண்ட பங்களும், கலியாண மண்டபம், உக்கிராண மண்டபம், இன்னும், பல திருப் பணிகளும் நடத்துவித்திருக்கிறார். திருமலைக்குக் கிழக்கும் வட கிழக்கும் உள்ள காடுகளை யெல்லாம் வெட்டி அழித்து நாடாக்கித் "தொண்ட நாடு" யென்கிறதாய்க் காளஹஸ்தியண்டையில் தன்பேராலே பெரிய பட்டணமுங் கட்டி வைத்திருக்கிறார் என்பதாகவும் இடையிற் கூறப்பெற்றிருக்கின்றது. இறுதியிலே (22), "சுந்தரபாண்டிய சோழன்," ஆண்ட வருடம், "ஸ்ரீ முக," முதல் பரீதாபி ஆ௰ சய. ? ஆ௰-ஆம். அவர்க்குப்பின் (24) ? பொக்க பூ சோழன் ஆண்ட ஆ௰ 24-ஆம். நிற்க, இறுதியிலே காணப் பெறும் தொடர்மொழியில் "யாதவ ராஜாக்கள் சரித்திரம்" சந்திரகிரி கோட்டை மன்னர் சரித்திரம், சந்திரகிரி இராய மன்னர்கள் சரித்திரம் என்ற இம் மூன்று வரலாறுகளையும் மெகென்ஸி துரைக்குப் பின்னர் அனுப்பக் கருதியிருப்பதாகக் கூறி ஒரு தோற்றுவாய்க் காணப்படுகின்றது. இனி, அங்ஙனம் அம்மூன்றும் இருக்குமாயின் சரித்திர உலகுக்கு மிகப் பயன்படும் என்பது. மற்று, இப்பகுதிக்குச், "சந்திரகிரி சந்திரவமிச மன்னர் வரலாறு," என்பதாகவும் பேரிட்டால் தகுதியாம் எனத் தோன்றுகிறது. இது, முதற்பகுதியாயும் இருக்கலாம். இப்பிரதி மிகச் சுருக்கமாயினும், ஆராய்ச்சிக்குப் பயன்படும் என்க. மெகென்ஸி நூல் வகையைச் சார்ந்ததாய் டைலர் துரையது கேட்லாக்கில் 434-440 P. P. 835 ஆம் எண்ணின் குறிப்புகளில் காணப் பெற்ற பிரதியில் நின்றும் பெயர்த்து எழுதிவைக்கப்

பெற்றிருக்கின்றதாம். முற்றும் உளது. மிக எழுத்துப் பிழைகள் உள. இதன் வித்தாரம் ஷி காட்லாக்கில் காணப்பெறும். இனி " கலியுக மன்னர்கள் வரலாறு ", என்பதாக இதனை டைலர் துரை வழங்குகின்றனர்.

No. 3189. துறையூர் பஞ்சாள (ய) த்தார் வரலாறு.

TŪṞAIYŪR PAÑCĀḶATTĀR VARALĀṞU.

Pages, 18. Lines 17 on a page. Good, New, Extent, 200 granthas.

Begins on fol. 112 (a) of the manuscript described under D. No. 3181.

Complete.

This is a restored Copy of the Mackenzie collection of the manuscript which is described under No. 835 of the Taylor's Catalogue Vol. III, pp. 434 to 441.

This is in the form of an appeal to the East India Company from artisans (like Blacksmith, Carpenters, etc.) complaining about the bad treatment meted out to them by the Kavari people and Harijans. It traces the origin of their community to Lord Visvakarma, the Divine Architect and gives an account of their coustoms and manners, etc.

(உரை :)

பூமியில்லாத வேளையும் ஜலம் இல்லாத வேளையிலும், தேயுவில்லாத வேளையிலும், வாயுவில்லாத வேளையிலும், பிரம்மா, விஷ்ணு, நட்சத்திரம், தாரகம் ? இல்லாத வேளையிலும், சருவமுஞ்சூன்யமாய் ஜலப்பிரளையமாயிருக்கிற வேளையிலே விசுவகர்மா செனனமானார். பரப்பிரம்மத்திலேயிருந்து விந்துவாச்சுது

* * * * * * * *
* * * * * * * *

End :

* * * * * * * *

பின்னும், பஞ்சாளத்தாருடைய விருதுகள் என்னவென்றால் ஆகாசம் பூமி சந்திர சூரியர்கள் உள்ள மட்டுக்கும் எறும்பு கடையான தலை ? யெண்பித்து நாலாயிரம் ஜீவசந்துக்களுக்கும் அவர் அவர்களுக்குப் பிழைக்கும்படியாய் அவர் அவர்கள் கேட்டபடிக்குத் தெய்வங்கள் முதலானவைகளுஞ் செய்து கொடுக்கும்படியாய் அஞ்சு சாதியாய் அவர் அவர்கள் செய்து கொடுக்கிறதே ஒருவிருது மெத்தவும் பெருமை வாய்ந்தது பஞ்சாயத்தார் ஏழையானபடியினாலே கம்பெனியார் அவர்கள் " கவறை ", என்கிற வினைப் பஞ்சாளத்தார் வழி போகாமல் இரக்ஷிக்கிறதே ஒரு விருதும் குமரன் றுணை, சிரீ ராம செயம்

(கு - பு) :—

இது, "துறையூர்", என்னும் சைவஸ்தலத்தில் குடியிருப்பாளராகிய சில்ப்பியர் ஐங்குடியினரும் (கருமான், கொல்லன், தட்டான், கன்னான், தச்சன் என்றவர்கள்) ஒன்றாய்ச் சேர்ந்து ஈஸ்ட்டு இன்டியா கம்பெனி மக்களுக்குத் தமக்குக் "கவறை,"ச் சாதியினராலும், பறையராலும் நேர்ந்த இடையூறுகளைத் தெரிவித்து, அவை நீக்குவான் விழைந்து வேண்டிக்கொடன் முறைமையிலே யமைந்திருக்கின்றதாம். இதில் ஆரம்பத்தில் விசுவகர்ம சாதியினரது மதத்திற் கிசைந்ததொரு ஜகத்சிருஷ்டி முறைமையும், "ஆதிவிசுவகர்ம தேவருக்கும்" பரமசிவனுக்கும் நேர்ந்த சாப பிரதிசாப முறைமைகளும் விளக்கப்பட்டுள. நிற்க, இப்பஞ்சாளத்தார், தமக்குள் நேர்ந்த வழக்குகளைத் தாமே நீதிவாயிலாகப் பஞ்சாயத்துக் கூடித் தீர்த்துக்கொடன் முறைமை தமக்குத் தொன்றுதொட்டு வருகின்றதெனவும், இன்னும் இதுபோன்ற சில பழக்க ஒழுக்கங்கள் உண்டு, எனவும், தமக்கு ஆதிகுல தேவதை "ஏகாம்பிரேசுவரர்" "காமாக்ஷியம்மை", என்றவர்களே யெனவும், அவர்கட்குத் தாம் திருவிழாக்களைப் பிரம்மோற்சவம், நவராத்திரி உத்ஸவம் முதலாக வழங்கி வருடந்தோறும் செய்துவரும் முறைமை இன்னவை யெனவும், தங்களுக்கு விவாகம் நடக்கையில் ஆதியில், மணமகன் மணமகள் இருவரையும் யானை மேலும், பிலேயில் குதிரைகள் மேலுமாக இருத்தி மணக்கோலத்துடன் பல விபவங்களுடன் நடத்திவருதல் பண்டைய வழக்காறும் எனவும், இன்னும் இன்னோரன்ன செய்திகள் பலவும் இதில் விளக்கப்படுகின்றன. முதலில் காணப்பெறும் 3 வடமொழி சுலோகங்கள் மிகப் பிழையுடனும் ஓர் அடி குறையாகவும் இருக்கின்றன. இச்சாதியர் வலங்கையினர் போலும். பறையர் இடங்கை வகையினர் போலும். கவறையர் இன்ன ஜாதியினர் என இதிலிருந்து விளங்கவில்லை. இப்பிரதி மெகென்ஸி துரையாலீட்டப்பெற்ற புத்தகங்களில் ஒன்றாய் டைலர் துரை காட்லாக்கு 434, 441 ஆன பக்கங்களில் வருணிக்கப்பெற்றதிலிருந்து பெயர்த்து எழுதி வைக்கப் பெற்றதாகும். முற்றும் உளது. இப்பிரதி பவானிக்கடல் வைத்தியன் குப்பையன் கையெழுத்துப் பிரதியிலிருந்து பெயர்த்து எழுதப்பெற்றதாக டைலர் துறை குறிப்பில் காணப்படுகின்றது.

No. 3190. தஞ்சை மகாராஷ்டிர மன்னர் வமிசாவளி.

TAÑJAI MAHĀRĀṢṬIRA MANNAR VAMIŚĀVAḶI.

Pages, 37. Lines, 17 on a page. Tamil, Good, New, Extent, 400 granthas.

Begins on fol. 121 (a) of the manuscript described under D. No. 3181.

Complete.

Account of the Mahārāṣtira Rajas of Tanjore. Restored from No. 835. pp. 434 to 441 of Taylor's Catalogue Vol. III. which is one in the Mackenzie's collection of manuscript. This is a restored copy of D. No. 3180.

Beginning :

ஸ்ரீராமஜயம்.—தஞ்சாவூர் இராச்சியத்தில் இராச்சிய பரிபாலனம் பண்ணின (மகாராஷ்டிரர்) மராட்டியர் போசல் ராஜாக்களின் வமிசாவளி சரித்திரம் முதலானது:—அமுருத சிங்கு மகாராஜா இராச்சிய பாரம் பண்ணுகிற நாளையிலே சரபோஜி மகாராஜா அவர்களது கூட்டத்தார் அமுருத் சிங்கு மகாராஜாவுக்கு இராச்சியஞ் செல்லாது என்பதைப்பற்றியும் சரபோஜி மகா ராஜாவுக்குச் செல்லும் என்கிறதை ஒப்புவிக்கும் படியாகவும் கனம் பொருந்திய மகா ராஜ ராஜ ஸ்ரீ கம்பெனியார் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த ஈயாதியை ? ப் பார்த்தவிடத்தில் அதிலிருந்து பெயர்த்து எழுதப் பட்டது. அந்த இயாதி ? யெங்கிருந்து அகப்பட்டது என்னில், தரங்கம் பாடியில் ஆதீனம் மாற்கு..... .....ராசாவின் தொலகு அஸதுயின்றயி ....பிரசன்னராயிருந்த (ராசப்) பிள்ளை வீட்டிலிருந்து.......... தூஅாயடு மார்ச்சுமீ உயடுவ வாங்கி அவ்விடத்தில் இருந்தப்படி பெயர்த்து எழுதிவைக்கப்பட்டது. ஆதி முதலாய் நடந்து வந்தது. மூல புருஷன் புதாசிராசர் அவர்களுடைய குமாரன் எகோஜி ஒருத்தர். மாஞேஜி ஒருத்தர். விட்டோஜீ ஒருத்தர். அவருடைய குமாரன் புதாசி ராசர். * * * * * * * *

End :

கம்பெனியார் இந்த நியாயம் நன்ருய் விசாரணை பண்ணி யோக்கி யனைத்தொட்டு..........யோக்கியம் பண்ணி வைத்ததினுலே கம்பெனி யார் சர்வசனங்களும் பயமாயிருப்பார்கள். ஞாயம் நன்ருய் நடத்தினுல் சருவத்திர ஜனம் சம்மதமும் சம்மதிப்பார்கள். ஆகையினுலே ஞாயம் நன்ருய் வழங்க வேண்டியது. வேணும். குமரன் துணை.

(கு-பு) :—

இப்பகுதி, தஞ்சை மகாராஷ்டிர (மராட்டியர்) மன்னர் வமிசாவளியை யெடுத்துக் கூறுவதாம். கடையிலே, ஈஸ்ட்டு இண்டியா கம்பெனியாளரது ஆட்சியிலே "அமிருதசிங்கு", அல்லது "அமிர்சிங்கு", என்றவருக்கு அநீதமாய்ப் பட்டங்கட்டப்பெற்றதை யெடுத்து விளக்கி அவ்வரசுரிமை துளஜா மகாராஜர்க்குச் சுவீகாரமகனும் "சரபோஜி மன்னருக்கே" உரித் தானது என்றும் வலியுறுத்தி அங்ஙனம் நியாயம் வழங்கல் வேண்டும் என வேண்டிக் கொள்ளப்பட்டிருக்கிறது. அங்ஙன் நடந்ததும் திவான் சிவ ராயரும் பச்சையப்ப முதலியாரும் கூடிச் (சதி) சூழ்ச்சி செய்ததனுலாம். தற்காலம், அதனை உள்ளவாறு கம்பெனிக்கு எடுத்துரைக்க வல்லுநர் இல்லாமலிருந்ததாலும் ஆம் என்கிறதாய்க் கூறுவதுடன் அவ்வமர் சிங்கும் பகையாளர் கம்பெனிக்கும் பொதுமக்களுக்குமாகத் தீங்குகள் பல விழைத்துப் போந்ததனையும் எடுத்து உணர்த்துகின்றது. இனி, இவ் விருத் தாந்தம் முன்னம் D. நெ. 3180-ஆம் நம்பரில் வந்துள்ள நூலிலும் வருகின்றதாதலின் அதனை, இது வலியுறுத்துகிறதென்க. சரபோஜியின் எதிரியின் பேர் முதலில் "அமிருதசிங்கு" எனவும், அமர்சிங்கு, அமீர்சிங்கு என்று இடைகளிலும் பலவிதமாகக் கூறப்பட்டுள்ளதாதலின் சரியான

இயற்கைப் பெயரை உணர்தற்கு அரிதாயிருக்கின்றது. அங்கங்கே கிரந்த வீழ்ச்சியுடன் உள்ளது. பிழைகள் மிகவுள. பாணம் அரிக்கப் பெற்றிருக்கிறது. முற்றுமுளது. இப்பிரதி மெகென்ஸி துரை சம்பாதித்த புத்தகங்களில் ஒன்ருய் டைலரது கேட்லாக்கு 835-ஆம் நம்பரில் (pp. 434–441) வருணிக்கப் பெற்ற நூலிலிருந்து பெயர்த்து எழுதப் பெற்றதாம். மாதருகையும் மிகச் சிதைவுற்றும் மிகப் பிழையுடன் காணப்படுகின்றது. கிரந்த பாதமும் உள.

No. 3191. துறையூராதீனஞ் சிவப்பிரகாச தேசிக சுவாமிகளது கைலாச பரம்பரை வரலாறு.

TUṞAIYŪR ĀDHĪNAM ŚIVAPPIRAKĀŚA DĒŚIKA ŚVĀMI KAḶADU KAILĀSA PARAMPARAI VARALĀṞU.

Pages, 19. Lines, 17 on a page. Tamil, Good, New, Extent. 200 granthas.

Begins on fol. 140 (a) of the manuscript described under D. No. 3181.

Complete.

Gives the genealogy of Śivapirakāśa Śvāmigaḷ of Tuṟaiyūr ādhīnam and his contribution to the upkeep and renovation of the various śaivite temples and his other noteworthy deeds. This is described under No. 835 on pp. 434 to 442 of Taylor's Catalogue of the Manuscripts collected by Col. Mackenzie.

Beginning :

துறையூர் அதீனஞ் சிவப்பிரகாச சுவாமியார் அவர்களுடைய கைலாச பரம்பரையில் வந்த சந்ததி விபர[ம்] வரலாறு.

என்னவென்றல் சுவாமி கைலாசத்திலே நந்திகேசுவர சுவாமிக்கு அனுக்கிரகம் பண்ணின முறைமையைத் தக்ஷிணமூர்த்தியாய் எழுந்தருளிச் சனகாதியர் நால்வருக்கும் அனுக்கிரகம் பண்ணினது. சனகாதியர் பிரம்ம சோதி மாமுனிக்கு அனுக்கிரகம் [பரப்] பிரம்ம சோதி மாமுனிவர் பூலோகத்திலே திருவெண்ணெய் [ெ] நல்லூரிலே மெய்கண்ட சிவசாரியார் சுவாமிக்கு அனுக்கிரகம், மெய்கண்ட சிவாசாரியார் சுவாமி அருள் நந்தி சிவாசாரியாருக்கு அனுக்கிரகம். * * * *

End :

இந்தத்துறையூரிலிருக்கும் இலிங்கதுரையவர்கள் அடுமையாகச் சிவ லிங்கதாரணமும் தீட்சை முதலாகியதும் செய்து கொண்டு தன்னுடைய அரண்மனைக்குமுன் திருமடமுங் கட்டிவைத்துக் குருதசென எத்தேச காலமும் செய்யவேணும் என்கிறதாய் எழுந்தருளச் செய்து அதிலிருக்கப் பட்ட தம்பிரான்கள் திருக்கூட்டம் முதலாகிய சுவாமிகள் அனைவரும் சிவ பூஜை மகேஸ்சுவர பூஜைகள் நடக்கும்படியாக நாடோறும் தம்முடைய உக்கிராணத்திலிருந்து நித்தியப்படி பத்துப்படி காலாகாலம் அமுதுபடியும் அமுதுக்குண்டான மேற் செலவுகளும் பூஜை திரவியங்களும் பிரதான செலவுக்கும் துறை அஞ்சு அஞ்சு பொன்னும் கொண்டுவந்து பாதத்திலே வைத்து நமஸ்காரம் பண்ணிக்கொண்டு தினந்தோறும் நடப்பித்து வந் தார்கள். இப்படி வெகு நாளாய் நடந்து கொண்டு வருங்காலத்திலே ஞானக் கூத்து சிவப்பிரகாச சுவாமிகளுக்கு அனுக்கிரக முறைமை செய்து பட்டாபிஷேகஞ் செய்து கொண்டு பத்துத் தலை முறைவரைக்கும் இந்த உக்கி ராண திரவியங்களையும் பூசைத் திரவியமும் நித்தியம் அஞ்சு பொன்னும் ... .வாள் கொடுக்க சிவபூஜை மகேசுவர பூஜையை நிறை வேற்றி வருகிறது. அதற்கு மேல் தாமிரசாசனத்துக்கு நக்கல்:—

(கு-பு): —

இது, துறையூர் மடத்து ஆதீனத்து ஆதிபுருடராம் வீரசைவா சிவப் பிரகாச சுவாமியாரது சித்தப் பெருமை முதலானவற்றையும், தில்லை நடராசர் இவர்திறத்திற் செய்த அருள் முறைமையினையும், இவர் கைலாச பரம்பரையினர் குருமரபில் தோன்றியவராய்க் கைலாசத்து நந்திகேசு வரரது உபதேச வாயிலாக தக்ஷிணமூர்த்தி நமச்சிவாயர் வரையிலாக வந்த தீட்சா விதியை மெய்கண்ட சிவாச்சாரியார் என நமச்சிவாய குருவிடத்தில் நின்றும் பெற்ற முறைமையினையும் இறுதியில் இச் சிவப்பிரகாச சுவாமி கட்கு துறையூர்ப் பிரபு "இலிங்கத்துரை" யென்ற பெரும் வள்ளல் மடம் முதலாயின சமைத்துக் கொடுத்து நித்த பூஜை கட்டளைக்காகப் பத்துப்படி அமுதுப்படியும் மேற் செலவுக்குரிய ஐந்து பொன்னும் வழங்கி வந்து அபிமானித்து ஆதரித்தார் என்றதனையும் விளக்கிக் கூறி முடிக்கின்றது. இச்சிவப்பிரகாச தேசிகர் தம் நாளையில் தில்லையில் மூவாயிரவர்க்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் விரோதமாகி நடராசர் பூஜைக்கும் பங்கம் விளைந்தி ருக்க அதன் பரிகாரம் இத் தேசிகரால் நடந்தேறும் என தில்லையீசர் கட்டளையிடத் தில்லை மூவாயிரவரும் முத்துச் சிவிகையுடன் போய் திருவாவடு துறையிலிருந்த தேசிகரை வேண்டித் திருப்பணிகளை முடித்துக் கொடுக்கு மாறு வேண்டிக்கொள்ள, தேசிகர் தாம் உடனே இராய வேலூரேறச் சென்று இராயர்க்கு மந்திரி பிரதானியராம் "இலிங்கண்ணபத்தரைக்" கண்டு குறையிரக்கும் நேரத்தில், அவர் வீர சைவராய் அங்க லிங்க சம் யோக வடிவினரையே பேணித் தெய்வமாகச் சிவமாக எதிர் கொள்வார். ஆதலின் தேசிகருடன் திரையிட்டுக் கொண்டு பேச, அது காரணமாகத் தேசிகர், அளவை நூல்கள் (28) சைவாகமங்களையும் ஆராய்ந்து முடிவாகச் சிவ ரகசியத்தில் ஆராயுமிடத்து அங்கலிங்க சம்யோகமே எல்லாத்துக்கும்

முதலாம் என்றும், எல்லாவற்றிலும் சைவம் என்றும், வீர சைவம் என்றும் கூறி இரண்டும் வேறில்லாதபடி இருக்கும் படியைத் தேறித் தெளிந்து சபாநாதர் அருள் வாக்கால் கட்டளையிட்ட உடையவர் மூர்த்தத்தையே சிரமேற் பூண்டாராய், அவ்வடிவுடனேயே மீட்டும், ஷே இலிங்கண்ண பத்தரைச் காண்கையில் அவர் பேரானந்தத்துடன் பதினாறு உபசாரங்களுடன் எதிர்கொண்டு சென்று தேசிகர் குறையைக்கேட்டுத் தில்லைக்கு வந்து நியாயம் வகுத்து நடராசர்க்கு முன்பு போல ஆனி மாதம் இரதோற்சவம் முதலாயினவற்றை இடையூறின்றி நடத்தி வரக் கட்டளையிட்டுக் கொடுத்தார். இவ்விருத்தாந்தத்தை இராயருங் கேட்டு அகமகிழ்ந்திருந்தார் என்கின்றது. இவ்விராயர் இன்னார் என்று விளங்கவில்லை; ஆயினும் தமிழ் "அபிதான சிந்தாமணி" நூல் விருபாக்ஷிராயர் எனக்குறிக்கின்றது, நோக்கத்தக்கதாம். ஆகவே, இதனால் தேசிகர் இராயரது மந்திரிப் பிரதானியர் இலிங்கபத்தருடன் சமகாலத்தவராவர் என்பது தெளிவாகின்றது. மற்று இத் தேசிகர் திருவாவடுதுறையிற் சில காலம்வரை தங்கியிருந்தார். பின்னரே "துறையூர் இலிங்கத்துரை" யவர்கள் ஆதரித்து மடம் சமைத்துக்கொடுத்தார்கள். திருவண்ணாமலையிலும் ஓர் மடம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவர் ஊர் திருவண்ணாமலைக்கு அண்மையானது. இவர் பெருஞ் சித்த புருடராய் இருந்தமைபற்றி ஆறு வருடக் கருப்புக் காலத்தில் "மேகராசக் குறிஞ்சி" திருவையாற்றுப் பதிகம் ஓதுவித்து, சோனை மழையைப் பொழியச் செய்து வைத்தாராம். இன்னும் சில பல விந்தைகளையும் இவர் தலந்தோறும் சென்று வழிபடுகையில் உண்மையாக நிகழ்த்துவித்தார் என்கின்றது. அவையாவன:—ஓர் சிவி தலத்திற் கேதாரி உடையார் என்னுமவர் இவர்க்குப் பொற்சிவிகை தாங்கினார். அங்குள்ள நந்திகேசுவரரை நேரிற் கடலையையருந்துவித்தார். திருச்சிராப்பள்ளியிலே தீவட்டிக்கு எண்ணெயில்லாது போக காவேரி நீரைத் தருவித்து எண்ணெயாக உபயோகித்து எரியச் செய்தார். திருவண்ணாமலைக்கருகில் பெண்ணையாற்றின் பெருநீர்ப் பெருக்கைத் தணியச் செய்தார். அண்ட நல்லூரில் ஒரு பார்ப்பனச் சிறுவன் நாகவிடம் தீண்டி உயிரிழந்து தாய் தந்தையர் ஆற்ருது அலற்ற, போன உயிரை மீட்டுக் கொடுத்தார். திருவாரூரிலே ஓர் குஷ்டரோகியின் ரோகம் நீக்கிக் காத்தார். பட்டீசுவரத்தில் அரசனுக்குப் பிடித்திருந்த பிரம்மகத்தியை நீக்குவித்தார் என்பன முதலியனவாம். முற்றும் இருக்கிறது. இப்பிரதி மெகென்ஸி துரை புத்தகங்களில் ஒன்ருய் டைலர் காட்லாக்கு 434 அண்டு 442 ஆன பக்கம் 835-ஆம் எண்ணிலே வருணிக்கப்பெற்ற நூற் பிரதியிலிருந்து பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாம். இதன் மாத்ருகை பிரதி மிகவும் சிதைவுற்றுப் பழுதுபட்டிருக்கிறது. எழுத்தும் தெளிவாயின்றி மாசுற்றுளது. இதில் மிகப் பிழைகள் காணப்படுகின்றன. இத்தேசிகரது பரம்பரையில் இவரது நேரிய சீடராம் "ஞானக்கூத்து சிவப்பிரகாசர்", என்றவரை முதற்கொண்டு பின் பத்துத் தலைமுறை பட்டமிருந்திருக்கின்றன வென்றுந் தெளிவாகின்றது. இனி, இம்மடத்துக்கு உரிய ஓர் தாமிர சாசனப்பிரதியும் ஓர் ஏட்டுச் சாசனப்பிரதியும் உண்டு. அவை, அடுத்த நம்பர்களில் தொடர்ந்து வருணிக்கப்படும்.

No. 3192. துறையூர் சிவப்பிரகாச தேசிகர் மடத்துத் தாமிர சாசன நக்கல்.

TUṞAIYŪR ŚIVAPPIRAKĀŚA DĒŚIKAR MAḌATTU TĀMIRAŚĀSANA NAKKAL.

Page, 7. Lines, 16 on a page. Tamil, good New. Extent 70 granthas.

Begins on fol. 146 (a) of the manuscript described under D. No. 3181.

Complete.

This is a restored copy of the Inscription on Copper plates which belongs to the Śivappirakaśa dēśikar Mutt of Tuṟaiyūr. Same work as that described under No. 835 of Taylor's catalogue Vol. III. PP. 435—442.

Beginning :

துறையூர் சிவப்பிரகாச தேசிகர் மடத்துக்குரிய தாம்மிர சாசன நக்ககல் :— ஸ்ரீமான் மகா மண்டலேசுவரன் * * * * * * * * * * * திக்கெல்லாம் செலுத்தும் ஸ்ரீ மல்லிகார்ஜுனதேவ மகாதேவ ராயார் வீரவசந்தராயர் விரூபாட்சி ராயர் சதாசிவ ராயர் இவர்கள் பின்ருயம்....................யளில் திருச்சிராப்பள்ளி சமஸ்தானம் ஸ்ரீமத் இராசாதிராசராகிய? சதுர்க்கோத்திரம் செட்டிக் கௌமப்பல்ல கொல ஸ்ரீமத் நல்லய்ய ரெட்டியார் அவர்கள் பௌத்திரன் ஸ்ரீமத் இலிங்க ரெட்டியார் அவர்கள் குமாரர் ஸ்ரீமத் வேங்கடாஜல ரெட்டியார் அவர்கள் பிருதுவீராச்சிய பரிபாலனம் பண்ணிவரும் நாளையில் சகாப்தம் தசுா .. ..க்கு மேற் செல்லா நின்ற உருதிரோத்காரிஷு சித்திரைமீ ....வீரசைவ ஸ்தயனுசாரியரான திருவண்ணுமலை மடம் வீர........சனத்துக்குக் கர்த்தரான சுவாமியார் "**சிவப்பிரகாச சுவாமியார்**" சன்னிதானத்துக்கு ராஜஸ்ரீ............................ஸ்ரீநல்லப்ப ரெட்டியார் பேரன் ஸ்ரீ இலிங்கப்ப ரெட்டியார் அவர்கள் குமாரர் "ஸ்ரீமத் வேங்கடாசல ரெட்டியார்", அவர்கள் தீக்ஷாகாலத்தில் அன்னதான, சுவர்ண தான, வஸ்த்திரதான, பூதானம் முதலாகிய மகா தானங்களும் மன சாரியார்? சன்னிதானத்தில் தத்தம் பண்ணின பூதானத்துக்குத் தரும சாஸன தாம்மிர பட்டையம் எழுதிக் கொடுத்தபடி..

End :

..................இப்படிக்குச் சம்மதித்து சிவப்பிரகாச சுவாமியார் அவர்கள் சன்னிதானத்துக்குத் தாம்மிர சாசனப் பட்டையம் எழுதிக் கொடுத்தோம். ஸ்ரீமத் வேங்கடாசல ரெட்டியார்.

(கு. பு.):—

இது துறையூர், திருவண்ணுமலை வீரசைவ மடங்கட்கு முதன்முதல் ஆசிரியரான ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர் அவர்களது திருமுன்புக்குத் திரிசிரபுரம் (திருச்சிராப்பள்ளி) ஆதீனத்துக்கு உரியவராம் ஸ்ரீ நல்லப்ப ரெட்டியார் பேரனும், இலிங்கப்ப ரெட்டியார் அவர்கள் குமாரனும் ஆகிய ஸ்ரீ வேங்கடாசல ரெட்டியார் அவர்கள் தமது சைவ சமய தீக்ஷா காலத்தில் ஆசிரியர்க்கு உப்பிலியபுரம் வைரி செட்டிப் பாளையம், கருப்பம்பட்டி, சொக்கபுரம் என்னும் இவ்வூர்கள் நான்கும், முறையே, வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு எல்லைகளாக அமைந்த ''காரப்புட்டமானயடியை ?''த் தருமமாகத் தாரை வார்த்தளித்து, அதற்குச் செப்புப் பட்டையம், ஒன்றை சா—சகாப்தம்.. ....இல் எழுதிக் கொடுத்ததையும், மற்று குரு பூஜை தினத்துக்குத் துறையூர்ச் சீமை முற்றவுஞ் சருவமான்யமாக வழங்கியதனையும் தன் தந்தையார் இலிங்க ரெட்டியார் அவர்கள் அளித்த தருமத்தை வலியுறுத்திக் கொடுத்ததனையும் இன்னும் இன்னோரன்னவைகளையும் எடுத்துக் கூறுவதாம். முற்றும் உள்ளது. இது மெகன்ஸி துரைப் புத்தகங்களுள் ஒன்ருய் டைலரது காட்லாக்கு (pp. 435 and 442) 835-ஆம் எண்ணில் வருணித்துக்கூறியவதனைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாம். எழுத்துப் பிழைகள் மிக உள. மற்று, இதன் தாய்ப்பிரதி மெத்தவும். சீரணமாய்ச் சிதைவுற்றும் எழுத்து மை யூறப் பெற்றும் படித்தற்கு அரிதாயுமிருக்கின்றது. கிரந்த பாதம் உள்ளது.

No. 3193. துறையூர் மடாதிபதி சிவப்பிரகாச தேசிகர்க்குரிய மான்ய சாசனம்.

TUṞAIYŪR MAṬĀDHIPATI ŚIVAPPIRAKĀŚA DĒSIKARKKURIA MĀNYAŚĀSANAM.

Page, 3. Lines, 16 on a page. Tamil, good. New. Extent, 36 granthas.

Begins on fol. 149 (b) of the manuscript described under D. No. 3181.

Complete.

The Sanad of Śrī Venkatachala Reddiar relating to the donation of lands to the Śivaprakāśa Śvāmigaḷ of Tiruvaṇṇāmalai Mutt.

Beginning :

துறையூர் ஆதீனம் சிவப்பிரகாச சுவாமியார் (தேசிகர்) அவர்களுக்குத் துறையூர் கிராமங்களில் விடப்பட்ட மாணியம் ஓலைப்பட்டையத்துக்கு நக்கல் :—

ஸ்வஸ்தி ஸ்ரீ விஜயாப்யுதய சாலிவாகன சகாப்தம்௲௬௱௬௰௫ (1665)க்கு மேல் செல்லாநின்ற, உருத்ரோத்காரி ௵ ஆவணி௴ உ௰௩௨ ராஜஸ்ரீ வீர சைவஸ்தயகரான திருவண்ணுமலை மடம் வீர சிவ செனத்துக்குக் கருத்த

ரான சுவாமியார் "சிவப்பிரகாச சுவாமியார்" சந்நிதிக்கு ராஜஶ்ரீ சதுர்க் கோத்திரம் செட்டிக்குளம், பள்ளக்குளம் நல்லப்ப ரெட்டியார் பேரன் ஶ்ரீ இலிங்க ரெட்டியார் அவர்களுக்குக் குமாரன் ஶ்ரீமத் வேங்கடாசல ரெட்டியார் அவர்கள் சிவபூசை........க்கு நம்மதாசாரியார் சன்னி தானத்திலே தெத்தம் பண்ணின தானத்துக்குத் தரும சாசனப்பட்டையம் எழுதிக்கொடுத்தபடி.

கிராமங்களில் சுவாமியார் அவர்கள் சந்நிதிக்குப் பண்ணின பூதானம் நிலம் துறையூர் பெரிய ஏரிக்கரையிற் சல வாரம்பத்தில் ஏரிக்கரைக்கு மேற்கு ஓடைக்கு கிழக்கு நஞ்சையில் செய் உ ஓடைக்கு மேற்குப் புஞ்சை ருயரு. இதுவும் ஏரிக்கரை நடுப்பக்கத்தில் நந்தவனங்கள் எ. இதுவும் சுற்றுப் பக்கக் கிராமங்களில்? அடைத் திக்குக்களில் விடப்பட்ட மானியம் மருவத்தூர் குழி ரு. கிரும்பூர் குழி. நாகலாபுரம் குழி அ. எலந்தலேப்பட்டி குழி அ. ....தளிகை குழி யஉ. இந்த மட்டுக்கும்.

End :

இப்படி மனப்பூர்வமாகத் தர்ம சாசனம் பண்ணிக்கொடுத்தோம். சிவப் பிரகாச சுவாமியார் சன்னிதானத்துக்குத் தர்ம சாசனம் எழுதிக்கொடுத்த படி. ஶ்ரீமத் வேங்கடாசல ரெட்டியார். இதுவும் ஷ மடாதிபதி சிவப்பிரகாச தேசிகர் அவர்களது சன்னிதானத்துக்கு ஷ ரெட்டியார், சாசன பூர்வமாகப் பூதானம் வழங்கியதைத் தெரிவிக்கும் ஓலைப் பட்டயத்தை (சா—சகாப்தம் 1665. A.P. 1743-ஸூ) எடுத்து உணர்த்துவதாம். முற்றும் உள்ளது. இது மெகென்ஸி துரையவர்கள் புத்தகங்களில் ஒன்றாய் டைலர் காட்லாக்கு 835 ஆம் எண்ணில் (434 and 442 ஆம் பக்கங்களில்) வருணிக்கப் பெற்றுள்ள ஓலைப்பட்டையப் பிரதியை பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதொரு பிரதியாம். பிழையுள்ளது.

No. 3194. வேணம்பர் நாட்டு நாட்டாண்மைக்காரர் இரட்டி மக்கள் வரலாறு அல்லது வேணம்பர் நாட்டு வரலாறு.

VEṆAMBAR NĀṬṬU NĀṬṬĀṆMAIKKĀRAR IRAḌḌI MAKKAḶ VARALĀṚU OR VEṆAMBAR NĀṬṬU VARALĀṚU.

Page, 2. Lines, 17 on a page. Tamil, good. New. Extent, 20 granthas,

Begins on fol. 151 (a) of the manuscript described under D. No. 3181.

Complete.

This is an account of the emigration of some persons of the Reddi caste from the Nellore district to Trichinopoly in the time of Nārāyana-rāyar. It concerns the Reḍḍiyar chiefs of Turaiyur. The statement was

given to the Colonel Mackenzie by Vēṇankulam Maccireḍḍiyar. Bangloor Viruddhācala Reddiyar and Vepparattai Tirumalai Reddiyar who were chiefs of Vēnambar Nāḍu of South. Restored on 28th February 1891 from a Mackenzie Collection manuscript described under No. 835. pp. 434 and 442 of Taylor's Catalogue, Vol. III.

Beginning :

மகாராஜ ஸ்ரீ சர்வேயர் ஜெனரல் மெகென்ஸி துரையவர்கள் சமுகத்திற்கு வேணம்பர் நாட்டுக்குப் பெரிய நாட்டார் வேணங்குளம் மாச்சி ரெட்டியார், வெங்களூர் விருத்தாசல ரெட்டியார், வேப்பந்தட்டை திருமலே ரெட்டி இவர்கள் எழுதிக்கொடுத்த கைபீயத்து.

என்னவென்றுல் வடக்கே நெல்லூரிலேயிருந்து (வந்து) திருச்சிராப் பள்ளி சீமையில் இருந்து வந்த எங்கள் முன் (ஞேர்கள்) இந்தத் தென் தேசத்துக்கு அதிபதியாயிருக்கிருர்கள். நாராயண ராயர் அவர்கள் நாளேயில் இவ்விடத்துக்கு வந்து எா. சொச்ச வருடங்கள் ஆயிற்று. நாங்கள் வரும் முன்னுக்கு இவ்விடத்தில் சருகுகள் பூராவும் வேணம்பர் நாடு பூமி என்னப்பட்டது. சில கிராமம் காடு கொண்டனவும் சில கிராம ரூபமாயும் இருந்தப்படியினுலே காடு வெட்டிக் கிராமங்கள் பஸ்த்தி செய்து வைக்கிறது என்கிற உத்தரவாகிற முன்னுக்கு நாங்கள் பஸ்த்தி செய்யப்பட்ட இந்த வேணம்பர் நா(ட்)டுப் பூமிகள் எங்களுக்குத் தானுதி விக்கிரயங் களுக்கு யோக்கியமாயிருக்கும் படிக்கு உத்தரவு கேட்டுக்கொண்டதற்கு அந்தப்படியே உத்தரவு செய்து எங்கள் முன்ஞேர்கள் நாள் முதலாய் நடந்துவந்தது.

End :

அப்படிக்கு நடக்கும் போதும் எங்கள் பெரியோர்கள் தேவாலயம் பிரம்மாலயங்கள், சத்திரம், பின்னுஞ் சில பேர்களுக்கு இனும் விடப் பட்டதும் அந்த நாள் முதலாய் இது (வுரைக்கும்) துருக்கராயிருக்கப்பட்ட பேர்களும் சாரி செய்து வருகிருர்கள். பின்னும் இப்படியாய்ச் "செஞ்சி தேசிங்கு ராஜா நாளேயில்...............................

(குறிப்பு) :—

இது, தெற்கில் திருச்சிராப்பள்ளி சீமையரசுரிமைக்கு நெல்லூரிலிருந்து நாராயண ராயர் அவர்கள் நாளேயிலே குடியேறிய இரட்டியர் அவர்களின் வரலாற்றையும் ? வேணம்பூர் நாட்டுக்கு மற்காலந் தொடங்கி இடையருது வரும் இவர்களது நாட்டாண்மையையும் தானுதி விக்கிரயங்களுக்கு அருகமாய் நடந்து வந்தனேயும் இவ் வமிசத்தவர் தேவாலயம், அக்கிரகாரம், சத்திரம் இனும் முதலியனவற்றையும் நடத்தி வைத்திருக்கிருர்கள் என்றதனேயும் எடுத்து விளக்குகின்றதாம். இவ் வரலாறு இந் நாட்டுப் பெரிய நாட்டாண்மைக்காரர்கள் வேணங்குளம் மாச்சி ரெட்டியார், பெங்களூர் விருத்தாசல செட்டியார், வேப்பந்தட்டை திருமலே ரெட்டியார் என்ற மூவராலும் ஒருங்கு கூடி எழுதுவிக்கப்பெற்றது என்பதாக

நூலாரம்பத்துக் காணும் ஒரு தொடர்மொழி குறிக்கின்றது. இக் குலத்தவர்கள் சுமார் 700 வருடங்கட்கு முன்னதாக நெல்லூரிலிருந்து திருச்சிராப்பள்ளியதிகாரங் காரணமாகக் குடியேறியிருக்கிருர்கள் என்கிற தாகவுங் குறிக்கின்றது. ஆனல், இறுதியில் வாக்கியம் முடியப் பெரு திருத்தலின் இதன் பகுதி இன்னும் ஒரு சிறிது இருக்கும் போலும். இது மெகென்ஸி துரை நூல் வகையைச் சார்ந்ததாய் டைலர் காட்லாக்கு 835-ஆம் நம்பர் பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப் பெற்றதாம். பிழைகள் மிகுந்து உள. நிற்க, "இப் பிரதியில் 3-14 ஆன பிரிவுகளில் வந்த யாவும் மெகென்ஸி வால்யும் 4-ஆவதிலும் pp. 235-301, ஆன பக்கங் களில் பெயர்த்து எழுதப் பெற்று இருக்கின்றன," எனவும் டைலர் துரை குறித்துள்ளார்கள்.

No. 3195. வேத சாஸ்திர புராணுதி விஷய விவரண அட்டவணே.

VĒDA ŚĀSTIRA PURĀṆĀDI VIṢAYA VIVARAṆA AṬṬAVAṆAI.

Paper, 13¾″ × 8½″. Pages, 40. Lines, 28 on a page. Tamil and grantha. much injured, old. Extent 1220 granthas.

This belongs to the Mackenzie Collection, manuscript and is same as the work described under No. 790 (pp. 347—351) of Taylor's Catalogue, Vol III.

Abridged account of the Vedas; Sastras; Puranas; Books of general literature and of Various temples. Contains 1—43 sections.

Beginning :

இந்து தேசத்தின் வேத சாஸ்த்திர புராண கலே(க்கியானம்) ஞானம் பல கோவில்கள் பூருவோத்திரம் இராச சரித்திர புத்தகப் பேர் விவர அட்டவணே யாவென் . . . . . §

நாலுவாதிகள் அபிமதமான சாஸ்த்திரங்களில் முதல் முந்திய பிரமாணம் இருக்கு வேதம், யசுர் வேதம், சாம வேதம், அதர்வணவேதம். இந்த நாலும் சுவயம்பூவென்றும் ஈருவேசுவரனல் சொல்லப்பட்டது என்று மொத்தத்திற் சொல்லப்படும். அவற்றில் இருக்கு வேதம் உ௰க பேதம். யஜுர் வேதம் ஈக (101) பேதம். சாமவேதம் பேதம், அதர்வண வேதம் கூ பேதம். இவை இவ்வித பேதமாக எத்தைச் சொல்லும் என்றல் விதிவாதம், அர்த்தவாதம், மந்திரவாதம் நாமதேயம் எனும் நாலு விதமாக நாலு லட்ச ? வரு சமஸ்த்த தருமங்களேயும் சொல்லும்.

* * * * * * * * * * * *

End :

இன்னகாலத்தில் செய்தது என்ற விவரமும் தெரியப்படுத்துவோம்.

(கு - பு):—

இது, மெகென்ஸிதுரை புத்தகங்களிலே ஒன்றும் டைலர் காட்லாக்கு 347—351-ஆம் பக்கம் 835-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றதேயாம். இருக்கு யசுச் சாமாதர்வண வேதம் முதலாயுள்ள சுருதி, ஸ்மிருதி, இதிகாசம் 18 புராணம், 18 உபபுராணம், (4) உபவேதம் (32) உப நிஷதம், ஆர்ஹதம், பர்கஹஸ்பத்பம், சௌக்தம் என்னும் புற மதம் மூன்று, சித்திகள் பத்தொன்பது, சைவ வைணவ மதம், மாகாதி வடமொழி காவியங்கள், சாகுந்தளாதி நாடகம், அரிச்சந்திராத்யு பாக்யானம் முதலான பல்வேறு விஷயமான நூல்களின் பெயர்களையும் அவற்றின் விஷயங்கள் சுவரூபங்கள் முதலாயினவைகளையும் விளக்கும் ஓர் அட்டவணை வடிவில் அமைந்திருக்கின்றது. முற்றும் உள்ளது. மெகென்ஸி பெரிய வால்யும் 2-ஆவதில் 297—343-ஆன பக்கங்களிலே டைலர்துரையால்-பெயர்த்து எழுதப்பெற்றதால் மிகப் பிழையுடன் உளது. மிகச் சிதைந்ததாம். மற்று, இதில், சோழர், பாண்டியர், மலைநாடு, நடுநாடு, தொண்டை சைவ, வைணவ மண்டலம், வடநாடு முதலான வைகளில் உள்ள திவ்வியதேசக் கோயில் விளக்கமும், தமிழ் நூற் பெயர்களும், சில தொகைப் பெயர் விளக்கமும் உள. மிக வித்தார மானதாம். இது பயன்படத் தக்கதாம்.

No. 3196. புதுவை இடங்கை, வலங்கை, சாதியார் வரலாறு.

PUDUVAI, IḌAṄKAI, VALAṄKAI JĀTIYĀR VARALĀṞU.

Paper, 13″ × 8″. Page 27. Lines 26 on a page. Tamil, much injured, old. Extent, 648 granthas.

Begins on fol. 1 (a) of the manuscript described under D. No. 2221 of T.D.C., Vol. III.

The other works which are contained in this Volume are described from Nos. 3197 to 3208.

Complete-

An account of the people of Puduvai, Idangai, etc. their customs and manners, the relationship with each other is given. The Castes or Classes of people, with their modes of dress, and distinctive titles of Puduvai or Puducchery are given. It is also called Pāṇdicchēry in South Arcot district.

This manuscript belongs to one of the Mackenzie collection manuscripts and a restored copy of No. 800 of the Taylor's Catalogue, Vol. III. (P.P. 351.)

புதுவை, இடங்கை, வலங்கை சாதியார் வரலாறு.—

Beginning :

— — — * * —

துறைத்தனத்திலே என் மக்களுக்குக் கலியாணம் பண்ணும்போது ஒரு விகாதமும் இல்லாமல் சவளக்கழி பிடித்து ஊர்கோலம் வந்தோம். இதெல்லாம் ராஜராஜ ஸ்ரீ மூசேலர் அவர்கள் நாளையிலே என் மக்கள் கலியாணமும் முகிந்தது. அன்றைக்கே வள்ளிபட்டாசாரி மச்சானுக்குக் கலியாணம் பண்ணி ஊர்கோலம் வந்தபோதும் சவளக்கழி பிடித்து வந்தார்கள். விகாதம் நடந்ததில்லை. வேறே கலியாணம் செய்தது உண்டு. எனக்கு ஞாபகம் இல்லை யென்று சொன்னார். இடங்கையாருக் குள்ளே வெள்ளைக்குடை பிடிக்கவும், வெள்ளைக் குதிரை அஞ்சு செம்பு ஆருக்குச் சுவதந்திரம் என்று கேட்டதுக்கு வெள்ளைக் குடையும், வெள்ளைக் குதிரையும் செட்டிகளுக்குச் சுவதந்திரம் இல்லை. இந்த ஊரிலே கம்மாளர்க்கு வெள்ளைக்குடை பிடிக்கிறதுண்டு. * * * * * * * * *

End :

தேசங்களிலே வெள்ளாழர் ஒரு கட்சியிலேயும் சேராமல் பொதுவா யிருக்கிறது மெய்தான். புதுச்சேரியிலே எந்தவிதத்திலேயோ கட்சிக் கூடிப்போயிருக்கிறது தெரியாது என்று சொன்னார். இதிலே ஆறு மொழி கிறுக்கென்றெழுதியிருக்கிறது. கனகசபையென்று கையெழுத்து.

(கு - பு): —

இது, புதுவை யல்லது புதுச்சேரி (பாண்டிச்சேரி) யென்னும் ஊரில் குடியிருந்த இடங்கை, வலங்கை சாதியார் அவர்களுடைய பண்டைய் பழக்கவொழுக்கங்கள் முதலானவற்றை விளக்குவதாம். முதலில் நூல் தொடக்கத்தை நோக்க ஒரு சிறிய பகுதி இல்லையெனத் தோன்றுகிறது. இது மெகென்ஸிதுரைப் புத்தகங்களில் ஒன்றாய் டைலரது கேட்லாக்கு 351-ஆம் பக்கம் 800-ஆம் நம்பரில் வருணிக்கப்பெற்றதைப் பெயர்த்து எழுதப்பெற்றதாம். மிக எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. இதில் பலதலைமுறை புருடருடைய வாக்கு மூலங்களும் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. இவர்களது விவாக காலங்களில், வெள்ளைக்குதிரை, வெள்ளைக்குடை, சவளக்கழி, அஞ்சுசெம்பு, என்னும் இவைகளில் இன்னின்னது இன்னின்னாரால் தரிக்கத்தக்கது என்று முற்காலத்தி லிருந்த நியதிகள் பல இதிலிருந்து விளங்குகின்றன. மற்று, இதிலிருந்து வெள்ளாழர், இடங்கையரிலும், வலங்கையரிலும் சேராது பொதுவாக இருப்பவர் எனவும் தெரிகிறது.

No. 3197. நெறும்பூர், குறும்பூர் கோட்டை வரலாறு.

NEṞUMBŪR, KUṞUMBAR KŌṬṬAI VARALĀṞU.

Pages 5. Lines 26 on a page. Tamil, much injured, old. Extent, 100 granthas.

Begins on fol. 14 (a) of the manuscript described under D. No. 3196.

Comp: t.

An account of the Kurumbar's fort at the Village of Nerumbur, which is in the vicinity of a Jagheer in Chingleput district. It enables one to form an idea about the extent of their kingdom, the way in which they ruled the land, etc.

This is a restored copy of the Mackenzie manuscript described under No. 800. P. 351 of the Taylor's Catalogue, Vol. III.

Beginning :

நெறும்பூர், குறும்பர் கோட்டை வரலாறு. சாகீரில் ? நெறும்பூர் குறும்பர்க் கோட்டையினுடைய விசேஷித்த கைபீது. இந்த நெறும்பூரில் குறும்பர்க்கோட்டை மேடென்று ஒருவிடம் இருக்கிறது. அதைச் சேர்ந்து பார்க்குமிடத்தில் வருத்தமாயும், தமிழ் இராசாக்களுடைய கோட்டைக்குச் சமானமாயிருக்கிறது. இந்தக் கோட்டை வடக்குக்கும், தெற்குக்கும் எழுநூற்று ஐம்பத்தைந்து (755) அடியிருக்கிறது. கிழக்குக்கும், மேற்குக் கும் அறுநூற்றுத் தொண்ணூறு அடியிருக்கிறது. இந்தக் கோட்டையைச் சுற்றியும் அகத்திப்பள்ளம் என்று பிரசித்தியாய்ச் சொல்லப்பட்ட ஒரு அகிழ் சுற்றிலும் இருக்கிறது. இந்த அகிழ் விசாலமாய் இப்போது தொண்ணூறு நெட்டடி இருக்கிறது. இதற்கு நடு அல்லதிநாக்கோட்டை நடுவில் இரண்டு குறும்பர்க் கேணி காடுமூடிப்போயிருக்கிறது. அதில் ஒன்று பதின்மூன்றடியாம். அதிலே மூன்று கிணறு. இதையடுத்தாப் போலே குறும்பர் பிரமுகர்களுடைய அரண்மனைகளிருக்கின்றன.

End :

இந்தக் குறும்பருக்கு (114) நூற்றுப்பதினாலு கோட்டைகள் இருக் கின்றன. இவைகளை இந்தச் சாகீர் முழுதுஞ் சுற்றித்திரிந்து பார்க்கவேணும். வீரர்ப்புறம் குறும்பர்க்கோட்டை. அவர்களுடைய நெற்களஞ்சியம் ஒன்றும் அங்கே இவர்களுடைய தனம் புதைந்திருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள்.

(கு - பு): —

இது, நெறும்பூரில் உள்ளதொரு பெரிய குறும்பர்க்கோட்டையினது வரலாற்றை விளக்குவதாம். இக் குறும்பர்கள் வெள்ளாழர்களைத் தம்மை வணங்குமாறு செய்ய நினைந்து வலிந்து சூழ்ச்சி செய்து துன்புறுத்திப்

போருகையில் அந் நெறும்பூர் வேளாளர் தாமும், சூழ்ச்சி செய்து ஓர் மயிர்வினைஞனால் முடிவிளக்கும் வியாசத்தால் எழு குறும்பர் தலைவரைக் கொல்வித்தனராம்.

அங்ஙனம் அவர்கள் உதவிபெற்றதற்காகத் தங்கள் வருடாந்திர இழவுச் சடங்காற்றும் பிதுர்க் கடனில் முதன்முதலில் அம்பஷ்டருக்கு எள்ளின் ஜல தருப்பணம் ஆற்றி வருகின்றனர் என்று முதலானவற்றை விளக்கிப்போகின்றது. முற்றும் உளது. இதில் இக்கோட்டையிலிருந்து வீராபுரத்துக் குறும்பர்க் கோட்டைக்குக் குடியேறினார்களாம். இக் குறும்பர்க்கு (116) நூற்றுப்பதினாறு கோட்டைகள் இருந்தன. குறும்பர் சாகும்போது நெறும்பூரில் முப்போகம் தானியங் கண்டதாம். வீரர்புரம் குறும்பர்க் கோட்டையில் நெற்களஞ்சியம் ஒன்றில் குறும்பர்கள் தனம் சேமித்துப் புதைத்திருக்கின்றனராம். அவ்வேழு குறும்பர் தலைவரும் நித்தம் அருகக் கடவுளை வழிபடுவர். அச் சைன விக்கிரகம் வடக்குக் கோட்டைக்கு அண்மையில் உள்ளது. இவர்கள் சதுரங்கச் சேனைபலத்தால் பெருநில மன்னரையும் போரில் வென்றார்கள். இவர்களுக்கு உரித்தாய தொரு வெள்ளித் தேர் இருந்தது. அது காலகதியில் பெருங் காற்று மழையால் அண்மையில் உள்ள "காராம் மடுவில்" விழுந்து கிடக்கின்றது, என்றவிவைகளை நாம் தெரிந்துகொள்ளலாம். இது முன்னர் 3114-ஆம் எண்ணில் வந்துள்ள நூலோடு ஒரு சிறிது ஒப்புமையுடையதாம். மெகென்ஸி மேனஸ்கிருப்டைச் சார்ந்ததாம். டைலர் காட்லாக்கு 800-ஆவது எண்ணில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. (p. 351) அதனைப் பெயர்த்து எழுதப்பெற்றதாம்.

No. 3198. தமிழ் ராசாக்கள் கால ஒழுங்கு.
TAMIL RĀJĀKKAḶ KĀLA OḶUÑKU.

Pages 5. Lines 26 on a page. Tamil, much injured, old. Extent, 65 granthas.

Begins on fol. 16 (a) of the manuscript described under D. No. 3196.

Complete.

A Chronological table of the Hindu Rajas of Tamil Nad. This is a restored copy of one of the Mackenzie collection manuscripts and which is described under No. 800, p. 351 of the Taylor's Catalogue Vol. III and similar to D. No. 3115 ante.

Beginning :

தமிழ் ராசாக்களுடைய விசேஷித்தக்கால ஒழுங்கு :—

பூர்வத்தில் இராச்சியம் பண்ணின இராசாக்கள் வயணம்.—

கிருதயுக ராசாக்கள் ஆவார்—

(கலி-ஹப) யஎ. இலட்சம். உயஅசூஹப. கிருதவித்துயுத், திரிசங்கு, ஹரிச்சந்திரன், முசுகுந்தன், பைரவன், உள்ளுதன், பத்துமநாபன், ஹிரண்யாட்சன், ஹிரண்யகசிபன், பிரஹ்லாதன், வைரோசனன், பாணுசுரன், கபிலன், பரசுராமன்.

* * * * * * * * * * * * * *

கலியுகத்துப் பெரிய ராசாக்கள்:—

பரீக்ஷித்து, செனமேசயன், இராசநரேந்திரன், யாதவராயன், வல்லாளன், சந்திரகுப்தன், சிம்டிசேனன், சூத்திரிகராயன், சிரேணிகன், பைரவன், இராசபல்லன், சாமுண்டன், விக்கிரமார்க்கன், சாலிவாகனன்.

உருத்திர ராசா சதம் ஙாசயகூ, சீத சந்தன ராசா சாஉயஎ, ரூபகர ராசா ரூாகூ, அஸ்தங்கத ராஜா ரூாகூயகூ, மதனகோபால ராசா சூாருரு, போஜ ராசா, மகாதேவ ராசா, ராசதேவ ராசா, ரத்னதேவ ராசா, சகாதேவ ராசா, காசியப ராசா, சூரிய ராசா, சசி ராசா, சோம ராசா, விசய ராசா. சத்திர ராசா, குண்டோதர ராசா.

* * * * * * * * * * * * * *

அனே ராசா, தோமா ராசா, தூஅங. பிரதத்தி ராசா, சாலிவாகன சகம் தூசூரு டில்லியில் இந்து ராசாக்கள் முடிவு தூா

(கு - பு) :—

இது, முன்னம் 3115-ஆம் எண்ணில் வந்துள்ள நூலைப்போன்று தமிழ்த் தேயத்துள் முன்னம் ஆண்டிருந்த மன்னர்களுடைய காலத்தைக் குறிக்கின்றது. மெகென்ஸிப் புத்தகங்களில் ஒன்றுய் டைலர் காட்லாக்கு 800-ஆம் எண்ணில் வருணிக்கப்பெற்றதைப் பெயர்த்து எழுதப்பெற்றதாம். (351-ஆம் பக்கம் பார்க்கவும்.)

No. 3199. ஆதொண்டை சக்கிரவர்த்தி நாகக்குமாரன் வரலாறு.

ĀTOṆḌAI CAKKIRAVARTTI NĀGAKKUMĀRAN VARALĀṞU.

Pages 13. Lines 26 on a page. Tamil, injured, old. Extent 280 granthas.

Begins on fol. 18 (b) of the manuscript described under D. No. 3196.

Complete.

A historical account of Nāgakumāra Cōḻan alias Ātoṇḍai Chakkiravartti and his brother—Vīracōḻan, who was in Aṛantāṅki city in South India. It also gives an account of the religious rivalry, etc. prevalent in those days.

This is a restored copy of one of the Mackenzie collection manuscripts which is described under No. 800 (pp. 351) of the Taylor's Catalogue Vol. III. This statement is given by a Brahmin, Krishnamachari of Kumbhakōṇam, in Tanjore district.

Beginning :

ஆ தொண்டைச் சக்கிரவர்த்திக் கதை வரலாறு :—

கும்பகோணம் சீமை கிருஷ்ணமாசார்யர் சொற்படிக்கு நாககுமாரன் ஆ தொண்டைச் சக்கிரவர்த்தி ராசாவினுடைய கதை என்னவென்றால் :

பூர்வகாலத்தில் புராண சித்தப்படிக்குச் சூரிய வமிசத்தில் உற்பத்தி யான அநேக சோழ ராசாக்கள் இராச்சியம் பண்ணிக்கொண்டு அநேக தேவஸ்த்தானங்களும் உண்டுபண்ணிக்கொண்டு தேவதாமிசத்தாலே தெய்வ லோகத்துக்குப் போய் வந்துகொண்டு இருந்தார்கள்.

இதில் சூரிய சோழன் என்னப்பட்டவன் . . . . . இருந்தான். அவன் வங்கிஷத்திலே இருந்தார்கள். அவன் பேர் ஆறில் ஒன்று கடமை கொண்ட சோழன் என்று பேர் பிரசித்தமாயிற்று. அவன் பிள்ளை மனுநீதி கண்ட சோழன். அவன் பிள்ளை கரிகாற்சோழன். அவன் பிள்ளை சூரிய சோழன். இராச்சியபாரம் பண்ணிக்கொண்டு இருக்கிற நாளையிலே * * * தன்னுடைய வாசப் பட்டணமாகிய அறந்தாங்கியில் வந்து சேர்ந்து இராச்சியம் பெருநீதியில் செய்துகொண்டிருக்கிற நாளையிலே * * * * * * * * * * * * * * * * * *

End :

தன்னுடைய பிதாவின் பட்டணமாகிய அறந்தாங்கிக்கு வந்து சேர்ந்து இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டுவந்தான்.

(கு - பு) :—

இது தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ளதொரு "அறந்தாங்கி" என்கிற பட்டணத்தில் அரசு செலுத்திய சோழ மன்னரில் "சூரிய சோழன் மகனும் வீர சோழன்" என்றவருடையவும், அவர் தம்பி நாக குமாரன், ஆதொண்டைச் சக்கிரவர்த்தியினுடையவுமான இவ்விருவர் வரலாற்றையும் எடுத்து உணர்த்துகிறது. இதில், சூரிய சோழர் வேட்டைக்காகச் சென்றிருந்த போது ஒரு மாபெருங்காட்டில் "நாகரத்தினம்" ஒன்றைக் கண்டு, கைக் கொள்ள விரும்பி அந் நாகத்தைக் கொன்று அந் நாகரத்தினத்தையும், நாகத்தினது சொல்லையும் கொண்டு போந்து, பாதாளமிறங்கி, அங்கிருந்த ஒரு நாக கன்னி யையும் மணந்து, பல நாளிருந்தான். மற்று, அங்கிருந்து வரும்போது அக்கன்னிகைக்குத் தன் மகன் கழுத்தில் ஆதொண்டை மாலையை அடையாளமாகச் சுற்றியனுப்பினால் அவனையுணர்ந்து கொண்டு இராச்சியத்தில் சிறிது பாகம் அளிப்பதாக உறுதி கூறி, அறந்தாங்கிக்கு வந்து சேர்ந்தான். சேர்ந்து தன் தாயை வணங்கினான். பின், அந் நாககுமாரனும், அங்ஙனே வந்து சேர்ந்து தன் பிதாவிடமிருந்து கல்வி முதலாயின பயின்று, கற்றுத் தேர்ந்திருக்க, அரசன் மூத்தவன் வீர சோழனுக்குச் சோழ மண்டலத்தாட்

சியை வழங்கிப் பின்னவனும், ஆதொண்டைமானுக்கு (தொண்டை மண்ட லத்தாட்சியையும்) வடபுரத்து ஆட்சியையும் அளித்தான்; அவ்விளையவன் ருன் காடு முதலாயின் வெட்டி நாடு திருத்திக் குறும்பர் குறும்படக்கித் "தொண்டைமண்டலம்" என அந் நாட்டுக்குப் பேரையும் வழங்கி ஆண்டு வந்தான். இங்ஙனமிருக்கையில் "வீர சோழன்" சைவாபிமானியா யிருந்து தன்னாட்டிலிருந்து, நடு நாட்டில் "திருவகீந்திரபுரம்" வரையிலாக உள்ள வைணவக் கோயில்கள் பலவற்றையும் இடித்துப்போட்டு வந்து, ஷை திருவகீந்திரபுரத்து அண்டையில் வர "தேவநாதப் பெருமாள்" ஷை மன்ன னுக்கு பிரம்ம விஷ்ணு உருத்திரவடிவமான தன்னுருவத்தைக் காட்டிக் காட்சியை யளித்துப் போருகையில் "எல்லாம் ஒன்றென்று" தெளிவித்து, அவன் மேற்கொண்டிருந்த இடித்தற்றொழிலை நீக்குவித்தார் என்றும், பிறகு மன்னன் காஞ்சியில் இளையவனைக் கண்டு அவன் வீரமதனையும் உணர்ந்து கொண்டவனுய், ஈசுவரருக்குத் திருப்பணிகளைச் செய்வித்து, மீட்டும் அறந்தாங்கியேறச் சேர்ந்தான் என்று கூறி முடிக்கின்றது. நிற்க, இடை யில், இக்காலத்து, **ஸ்ரீ பெரும்பூதூரிலே உடையவர்** (இராமாநுசர்) அவதார மாய், நம் பெருமாள் கோயிலிலே வசிக்கையில் அவரை, அவ் **வீர சோழன்** பலவந்தமாய் "சிவாத்பரதரம் நாஸ்தி" என்று ஓலை எழுதி அனுப்பியதில் கையெழுத்து இட நிர்ப்பந்தித்துச் சொல்ல, அவ்வேட்டில் பிரிய சீடராம் "**கூரத்தாழ்வான்**" என்னுமவர், "துரோணமாஸ்தித்த: பரம", (குறு ணியிலும் பதக்கு மேலாக விருக்கின்றது என்று பொருள்) என்று எழுதி யனுப்புவிக்க, அவன் ஆழ்வான்றன் திருக்கண்களைப் பிடுங்க உத்தர விட்டானும். அதற்குள்ளாக அவ்வாழ்வானும், "பாதகனைக் கண்ட கண்கள் ஆகா," எனத்தாமே தம் கண்களைப் பிடுங்கிக் கீழே வைத்தார். பின், உடையவர் அவரை யாற்றுவித்து, திருமண்ணுலே தமது விக்கிரகம் போல்வதொரு படிமம் அமைத்து வைத்து, அது தம்மைப் போல் பேசும் படியாகவும், தமது மந்திர வரலாற்றில் அமைத்துக் கொடுத்தார்கள்; என்ற இச் சரித்திரக் குறிப்பும் காணப் பெறுகின்றது. இங்கு, சிலர் கிரிமி கண்ட சோழன் எனவும் திரித்துக் கூறுவர். இவ்விரண்டிலும் "எது துணிபு" எனக் கூறுவதற்குப் போதுமான சான்றுகள் இல்லையாதலால் இது போது துணியக்கூடவில்லை. அங்ஙனம் இந் நாககுமாரன் (தொண்டைமான்) சரித் திரத்திலும் சிறிது திரிபு காணப் பெறுகின்றது. அதுவும், உண்மை துணி யக் கூடவில்லை. முற்றும் இருக்கிறது. மெகென்ஸி துரைப் புத்தகங் களுள் ஒன்றுய், டைலர் காட்லாக்கு 800 (pp. 351) ஆம் எண்ணிலே வருணிக்கப் பெற்றதைப் பெயர்த்து எழுதப் பெற்றது. இதில் மிகப்

பிழைகள் காணப்படுகின்றன. இந்நூல், முன்னம் 3097-ஆம் எண்ணில் வந்துள்ள "தொண்டைமான் சரித்திரம்" என்ற நூலினும் வேறான நூலாம்: அதனுடன் இது, மாறுபட்டுக் காணப்படுகின்றதாதலின்.

No. 3200. மதுரைத் தலக்கோயில் உண்டான வரலாறு.
MADURAIT TALAKKŌIL UṆḌĀNA VARALĀṞU.

Pages, 4. Lines, 26 on a page. Tamil, injured, old. Extent, 70 granthas.

Begins on fol. 24 (b) of the manuscript described under D. No. 3196.

Complete.

Explains the causes for the building of the Saiva temple at Madurai. It gives briefly the account of the life of goddess Minakshi and the incidents leading to her marriage with Lord Sundaresvara. A restored copy of the Mackenzie (Madura collection) manuscript which is described under No. 800. pp. 351.

Beginning :

ஆதி கிருதயுகத்திலே தேவேந்திரனுகிய தேவராசாவுக்கு விருக்தி ரஹத்தி தோஷம் வந்து பிடித்துக்கொண்டு அன்னம், ஆகாரம், நித்திரை நினைவுமில்லாமல் நிரம்பவும் தேகத்துக்கு உபத்திரவமாயிருந்தது. அனேகமான புண்ணிய க்ஷேத்திரங்களாயிருக்கிற தலங்கள் எல்லாம், போய்த் தரிசனம் பண்ணி, அந்த உபத்திரவம் தீராமல் மதுரை ஸ்தலத்து எல்லையில் வந்த உடனே விருத்திரஹத்தி தோஷமானது அப்பக்கத்தில் நின்று போச்சுது. அந்தத் தோஷம் நின்ற உடனே இந்த க்ஷேத்திரத்தில் அதிசய மிருக்கிறதென்று தேவதைகளை அழைப்புவித்து * * * * பார்க்கச் சொன்னதில் அப்போது சுந்தரேசுவரர் கதம்பவன விருட்சத்தடியிலே சோதி ரூபமாய் எழுந்தருளியிருந்தார்.

* * * * * * * * * * * * * *

End :

அப்பால் மீனுட்சியம்மனுக்குப் பாண்டியன் பட்டாபிஷேகம் பண்ணி வைத்து இராச்சிய பரிபாலனம் பண்ணுகிற நாளையில் தேவதைகளுடனே யுத்தம் பண்ணவேணும் என்று அநேக தளத்துடனே கைலாசத்துக்குப் போய்த் தேவேந்திரன் முதலான தேவதைகளையும் செயித்துக் கொண்டு வருகிறபோது சுந்தரேசுவரர் புரத்துக்கு வந்தார். சுவாமியைக் கண்டமாத்திரத்திலேலே மத்தியிலேயிருந்த ஸ்தனயம் மறைந்த உடனே சமஸ்த்தமாயிருக்கப்பட்ட தேவதைகள் கலியாணத்துக்கு நிச்சயம் பண்ணுவித்து இதுக்கு

எட்டாம் நாள் சோமவாரத்து நாள் பூலோக கைலாசமான மதுர்புரியிலே கலியாணம் பண்ணுகிறோம். என்று நிச்சயம் பண்ணுவித்து விவாகமாகிச் சுந்தர பாண்டிய மகாராசாவாக இருந்து நீதியாய் இராச்சிய பரிபாலனம் வெகுகாலம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள்.

(கு-பு) :—

இது, மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் உண்டான வரலாற்றைக் குறிக்கின்றதாம். இத்தலத்தில் தேவேந்திரன்தான் விருத்திராசுரனைக் கொன்றதால் வந்த தனது பிரஹ்மஹத்தி தோஷத்தை நீக்கிக் கொண்டு வெகுகாலம்வரை சொக்கலிங்கரைப் பூசித்திருந்தானாய்ப் பின்னர், கலியாணபுரத்திலே யரசுபுரிந்திருந்த "குலசேகரபாண்டியன்" என்றவருக்கு அறிவித்துக் கதம்பவனத்தை யழித்துப் பட்டணம் கட்டுவிக்குமாறு கட்டளையிட, பாண்டியன் மதுரையைக் கட்டுவித்துச் சொககலிங்கேசுவரரது கோவிலையுங் கட்டுவித்தான். பின் அவன் குமாரன் "மலையத்துவச பாண்டியன்" அரசாட்சியில், அவனுக்குப் பிள்ளையில்லாமல் கடைசியாக "மீனாட்சியம்மன்" திருக்குமாரியாக அவதரித்து யுக்தவயதிலே அரசு உரிமையை ஏற்றிருந்து திக்கு விஜயம் செய்து இருக்கையிலே சுந்தரேசக் கடவுள், தக்க மணவாளனாகத் தோன்றி மணம் புரிந்து கொள்ள இருவருமாக அரசாண்டிருந்தார்கள். சுந்தரேசுவரரைக் கண்ட வக்கணத்திலேயே மீனாட்சியம்மைக்கிருந்த மூன்றும் முலை காணுதொழிந்தது ; என்றதாக இச் செய்தியைக்கூறி முடிக்கின்றது. முற்றுமிருக்கிறது. மிகச் சுருக்கமாயுளது. மெகென்ஸிதுரைப் புத்தகங்களுள் ஒன்றாய் டைலர் துரை காட்லாக்கு 351-ஆம் பக்கம் 800-ஆம் எண்ணில் வந்துள்ளதினின்றும் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாகும். பிழைகள் உள.

No. 3201. பாண்டிய மன்னர் வமிசாவளி.

PĀṆḌIYA MANNAR VAMIŚĀVAḶI.

Pages, 7. Lines, 26 on a page. Tamil, good, old. Extent, 160 granthas.

A Genealogical account of Pāṇḍiya kings of Madurai. This also gives an account of how the (Koon) hunch-backed King Pandiya was converted to Hinduism. This is a restored copy of the Mackenzie collection manuscripts and which is described under No. 800 pp. 351 of Taylor's Catalogue Vol. III.

Beginning :

பாண்டியராசர் இராச்சிய பரிபாலனம் பண்ணிக் கொண்டு வந்ததற்கு வமிசாவளி வயணம்.

(1) ஆதிகுலசேகர பாண்டியன். அவனுடைய பிள்ளை.

(2) மலையத்துவச பாண்டியன். அவனுடைய பெண்.

(3) மீனாட்சியம்மை. அவளுடைய புருஷன்.

Acc 16331
C440
33

(4) சுந்தரேச பாண்டியன். அவருடைய பிள்ளை.

(5) உக்கிர பாண்டியன். * * * அவர் பிள்ளை.
சத்துருசாசன பாண்டியன். அவர் பிள்ளை. கூன் பாண்டியன். அவன் சுந்தர பாண்டியன்; ஆகப் பாண்டியர் பட்டம் (௩௰௧) முப்பத்தொன்று.

* * * * * * * * * * * * * *

End :

அப்பால் ஞானசம்பந்தமூர்த்திகள் வெள்ளத்துடனே ஏடு போன பின்னுடனே போகிறபோது சுவாமி விருத்த ரூபமாய்த் தோன்றி அவ் வேட்டை யெடுத்துச் சம்பந்த மூர்த்திக்கிட்டக் கொடுத்துப்போட்டு மறைந் தார். அது, "திருவேடகம்," என்று ஸ்தலம் உண்டாயிற்று. திருவேடக நாதரைப் பூசை பண்ணி (னர்) பாண்டிய ராசா அவ்விடத்துக்கு வந்து அந்தஸ்தலத்தைப் பெரிய பட்டணமாக உண்டு பண்ணி அங்கே ஒரு வருஷம் இருந்து எல்லாரையும் மதுராபுரிக்கு அனுப்புவித்துக் கொண்டு அதற்குமேல் ஞானசம்பந்தமூர்த்திகள் சிவஸ்த்தலம் எல்லாம் தரிசனம் பண்ணுகிறதற்கு ஆற்றுக்கு வடக்கே பயணம் போனார்கள். பாண்டியன் சிவபக்தர்கட்குள்ளே மகா முக்கியமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணிக் கொண்டு இருந்தார்கள். பாண்டியன் நான்கெல்லைக்கு வயணம் :—

கிழக்கு இராமேசுவரம் வரைக்கும், தெற்கே கன்னியாகுமாரி வரைக்கும், மேற்கே, சத்தியமங்கலம் வரைக்கும், வடக்கே, துவாரங்குறிச்சி சமீபத்தில் பாலாற்று வரைக்கும், இவ்வளவும் பாண்டிய தேசமாம்.

பாண்டியர் சரித்திரம் முற்றும்.

(கு-பு) :—

இது, மதுரையில் பாண்டியர் அரசாண்ட ஒழுங்கையும், அவர்களது பட்டம் (31) முப்பத்தொன்று என்பதனையும், மற்று, இம்மரபிற் "**கூன்பாண்டியன்**" என்ற மன்னன் (கூன் இருந்தது) சமண மதத்திலே புகுந்திருந்தான்; அவன் பட்டமகிஷீ, சோழவரசன் பெண் "வனிதேசுவரி," யென்பாளும், மந்திரி பிரதானி "குலவர்த்தனன்," என்பவரும் கூடி மன்னனைச் சமணமத விசுவாசத்தில் நின்றும் மீட்கக் கருதி சீகாழியில், முருகப்பிரான்றன் அவதாரமாகத் தோன்றிய "திருஞான்சம்பந்த மூர்த்திகளை" மதுரைக்கு அழைத்துவரச் செய்ய, சம்பந்தர் பதினாயிரம் பேர் அடியார் கூட்டத்துடன் மதுரைக்கு எழுந்தருளிச் சுவாமி தரிசனம் செய்து, இரவில் மடத்தில் நித்திரையிலிருக்க, ஒரு சிலர் மடத்தில், மந்திரவாற்றலால், அக்கினியை ஏவிக் கொளுத்துமாறு செய்ய, அஃதுணர்ந்து இவர், அவ்வக்கினியை யரசன் மீது ஏவி விட்டார். அது தாபச்சுவரமாய் மாறிப் பாண்டியனைத் துன்புறுத்தியது. அஃதாற்றுது பாண்டியன் அரற்ற, இச்சமயம் சிலர் சம்பந்தரது மந்திரவாற்றலால் நீங்கலாம் என அரசனுக்குத் தெரிவிக்க, அதற்கு மன்னன் உடன்படாதிருக்க, அவ்விருவரும், சமணரையும், சம்பந்தரையும் நிறுத்தி, யாரால் சுரம் நீங்குமோ அவரையே நாம் குருவாக வழிபடலாமென்று, ஒரு வரையரையை ஏற்படுத்தியதற்கு அரையனும்

உடன்பட்டிருக்க, சமணர் எண்ணுயிரவரும் வந்து மந்திரித்தும் பயன்படா தொழிய, ஞானசம்பந்தர் மந்திரித்த இடப்பக்க நோய் அக்கணமே நீங்கியது ; வலப்பக்க நோயையும் திருவாலவாயர் மடைப்பள்ளிச் சாம்பலாலே மந்திரித்து அந்நோயையும் நீக்குவித்தார்களாம். உடனே மன்னன் சம்பந்தரையே குருவாக மனம் இசைந்தாராயிருக்க, அப்போதே முதுகு கூனும் நீங்கிற்று என்பதும், பின்னரே " சுந்தர பாண்டியன்," என்ற சுந்தரப் பேரும் வாய்ந்திருந்தான் என்பதும் நன்கு விளங்குகின்றன. நிற்க, சமணர்களைக் கற்காணத்திலிட்டு ஆட்டுவித்தார். அதுபோது, இருமதத்து மந்திர ஓலைகளையும், ஆற்றிலேயும், நெருப்பிலேயும் இட்டு, எது வன்மையுடைத்து என ஆராய்ந்து, ஜைனர்களின் ஓலை கரிந்தும் சமுத்திரத்திலும் போய் அழிந்துவிட்டன. சைவ மதத்துத் தேவாரம் எழுதிய எடுகள் மேற்கே யெதிர்த்துச் சென்றன. அது கொண்டும் பாண்டியன் சைவ மதத்தின் உண்மையைத் தெளிந்தான் என்கின்றது. அங்ஙனமே எதிர்த்துச் சென்ற எடுகளைச் சுவாமி ஒரு விருத்த வடிவாய்த் தோன்றிச் சம்பந்த மூர்த்திக்கு எடுத்துக் கொடுத்துவிட்டு மறைந்திருந்தார். அத்தலமே, இதுபோது " திருவேடகம் " என வழங்கப்பெறுகின்றது. பாண்டிய நாட்டெல்லை–கிழக்கே இராமேசுவரமும், தெற்கே–கன்னியாகுமாரியும், மேற்கே–சத்தியமங்கலமும், வடக்கே–துவரங்குறிச்சிக்குச் சமீபம் பாலாறு வரையுமாக விருந்தது, என்றும் கூறுகின்றது. முற்றுமிருக்கிறது. இது மெகென்ஸிதுரைப் புத்தகங்களுள் ஒன்ருய் டைலர் காட்லாக்கு 351-ஆம் பக்கம் (800-ஆம்) எண்ணிலே வருணிக்கப்பெற்றதாம். மிகப் பிழைகள் உள.

No. 3202. மெகென்ஸி துரையின் கேள்விகள்.

MACKENZIE TŪRAIYIN KĒḶVIKAḶ.

Page, 3, lines 26, on a page, Tamil, injured, old. Extent, 60 granthas.

Begins on fol. 29 (b) of the manuscript described under D. No. 3196.

Complete.

Questionnaire issued by Col. Mackenzie to the Brahmins of Srirangam, Trichinopoly, for being answered. The answers for these questions are found in manuscript No. D. 3186.

This manuscript belongs to the Mackenzie's collection of manuscripts and is the same as that described under No. 800 of Taylor's Catalogue. (pp. 351) Vol. III. (For the answers *see* D. No. 3186 ante). Taylor mentions one more work about the greatness of Vishṇu at Tiru Nārayanapuram in Trichinopoly district ; It is not found in this volume.

Beginning :

மெமோரண்டம் யாதாஸ்து ஞாபகம், அறியவேண்டியது :—ஸ்ரீரங்கம் (திருச்சிராப்பள்ளியில்) புத்திவந்தவர்களாய் இருக்கப்பட்ட பிராம்மண வித்துவாமிசர்களாலே விசாரிக்கவேண்டியது :—

(1) தர்ம வர்மா என்னப்பட்டவர் யார் ? அவர்தானு தர்ம ராசா ? அவராலேதான் ஸ்ரீரங்கம் கோயில் கட்டப்பட்டதா ? வர்மா என்னப்பட்ட தற்கு அர்த்தம் என்ன ?

(2) சகம் எப்படியுண்டாச்சுதோ ? * * *

End :

வெள்ளாழர் ; கருமான், தச்சன் முதலாகிய பேர்கள் பராய் தேசத்திலே யிருந்து எப்போது அதிகமாய்த் தெற்கே வந்து பயிர் இல்லாத இடத்தில் பயிர் செய்தார்கள்.

(கு-பு) :—

இது, ஸ்ரீரங்கம் பிராம்மண வித்துவர்ன்களைக் குறித்து மெகென்ஸிதுரை யவர்கள் தமக்கு விடையிறுக்குமாறு பல கேள்விகளைக் கேட்டு விடுத்த தொரு மெமோரண்டம் எனத் தெரிகிறது. இங்குக் கேள்விகள் மாத்திரமே யுள. இவைகட்கு உரிய விடைகளை முன்னர் 3186-ஆம் எண்ணில் வந்துள்ள நூலைப் படித்து உணர்க. முற்றும் உள்ளது. மிகப் பிழைகள் இருக் கின்றன. டைலர் துரை காட்லாக்கு 351-ஆம் பக்கத்தில் 800-ஆம் எண் ணில் வந்துள்ளதேயாகும். ஆனல், இங்கு டைலர் துரை காட்லாக்கில் "திருநாராயணக் கோயில் குறிப்பு", (திருச்சிணுப்பள்ளி—விட்டுக்கட்டித் தாலுகா) எனக் குறித்திருக்கின்ற நூலாம். பிறவும் பெயர்த்து எழுதப் பெறவில்லை. எது பற்றியோ ?

No. 3203. ஆயக்குடி ஜமீன்தாரி கொண்டம நாயகன் வமிசாவளி.

ĀYAKKUḌI JAMĪNDĀRI KONḌAMA NĀYAKAN VAMIŚĀVAḶI.

Pages 19, lines, 26 on a page, Tamil, injured, Old, Extent, 375 granthas.

Begins on fol. 30 (b) of the manuscript described under D. No. 3196.

Complete.

A genealogical account of the Zamindar Kumāra Konḍama Nāyakan of Āyakkuḍi pālayappaṭṭu near Dindigal. It ālso contains an account of the lands and villages, etc., granted freely to temples etc. This is another copy of the manuscript described under D. 2827

& 2851. But this is clearer than the other two. This manuscript belongs to the Mackenzie collection of manuscripts and is a restored copy of manuscripts described under No. 800 of Taylor's Catalogue. *p.p.* 351.

Beginning :

மகா-ராஜ-ராஜ-ஸ்ரீ கர்னல் காலன் மெகென்ஸி சாயபு சர்வேயர் ஜென்ரல் இண்டியா துரை அவர் உசூருக்கு தரியாபத்து நிட்டல நாயன் அய்யர் -திண்டுக்கல் வகையரா ஆயக்குடி பாளையப்பட்டு சமீன்தாரி கமிட்டி "குமார கொண்டம நாயகன்", ஆகிய நான் மிகவும் வணக்கத்துடனே சலாஞ் செய்து எழுதிக் கொண்ட விண்ணப்பம் :—

End :

அந்த முன்னுக்கு அகோபிலேசுவரம் பெருமாள் கோயில் தேவஸ்தானம் பச்சை நாயகன் பட்டியும் தீர்ப்பு செய்து, அதிற்கண்டு முதலானது நகைக்கீடாக ஷ கோவிலுக்கு, ஸ்தானீகர்ப் படித்தனம் சிப்பந்தி முதலாகியவைகட்குத் தஸ்தீகை கண்டு உண்டு பண்ணுவித்துக் கொடுத்தார். அதன் பிற்பாடு சாலிவாகன சகாப்தம் ௲எ௱யஅ (1718) சௌமிய வருஷ முதல் சகாப்தம் ௲எ௱௨௰க............௲எ௱யச வருஷம் எப்ரல் மாதம் ௰௬ தேதி ஆயக்குடி ஜமீன்தார் குமாரர் கொண்டம நாயக்கர்.

(கு-பு) :—

ஆயக்குடி பாளையப்பட்டு ஜமீன்தாரி, பெரியப்பக் கொண்டம நாயகன் வமிசத்திலே தோன்றிய, "கமிட்டி குமார கொண்டம நாயக்கன்", என்றவர் தமது வமிசாவளியை யெடுத்துக் கூறுந் துறையிலேயமைந்து உள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2827, 2851-ஆம் எண்ணில் வந்ததற்கு மற்றோர் பிரதியாகும். முற்றும் உள்ளது. அதன் எழுத்துமை யடியோடு விளங்காமலிருப்பதால் இப்பிரதி மிகவும் பயன்படும். பிழைகள் மிகுந்து உள்ளன. எடுகள் சிதைந்து உள்ளன. மெகென்ஸி துரைப் புத்தகத்தைச் சார்ந்தது. டைலர் காட்லாக்கு 351-ஆம் பக்கம் 800-ஆம் எண்ணிலே வருணிக்கப்பெற்றுள்ளது.

இதில் சாலி—சகம். 1321, கலி வருஷம் 4,500 வருஷம் இல் இடில்லி பாட்சா சமஸ்த்தானிருந்த பெரியப்பக் கொண்டம நாயகன் முதற் கொண்டு மொத்தம் பத்தொன்பது பட்டக்காரர்கள் என விளக்கமாகிறது. இறுதியில் விருபாட்சி கூளப்ப நாயகன் வரலாறு கூறப்படுகிறது. இடையில், 11-ஆவது பட்டக்காரர் கோட்டுக்கொண்டம நாயக்கர் சிந்தல வலிசை ? என்கிறபட்டியை யுண்டாக்கி ஸ்ரீரங்கம் பரசரப்பட்டருக்கு (வமிசத்தினர் ஒருவர்) ஐந்துமா நிலம் தாராதத்தஞ் செய்தார் என்றிருக்கிறது. இம் மரபினர் இன்னும் இது போன்ற பல தருமங்களும், பல கிராமங்களும் செய்திருக்கின்றனர். 14-ஆம் பட்டக்காரர் பாப்பான் குளத்துப் பரமேசுவர பட்டர் அய்யருக்குச் சுரோத்திரிய கிராமமாக வழங்கித் தாமிரசாசனமுங் கண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

No. 3204. பத்துமாசல வரலாறு.

PADUMĀCALA VARALĀṞU.

Pages 6, lines 25, on a page, Tamil, injured, Old, Extent, 120 granthas.

Begins on fol. 40 (a) of the manuscript described under D. No. 3196.

Complete.

A Legendary account of padumācalam alias Varāhagiri near Coimbatore district. It gives an account of the Gods enshrined there.

Beginning :

பதுமாசலவரலாறு பதுமகிரி மலே எவ்வளவு விஸ்தாரம் ? எப்படி வளர்ந்தது ? அதனுடைய விருத்தாந்தங்களேச் சொல்லவேணும் என்று அகத்தியர் கேட்க, பிரம்மா சொல்லுகிருர். * * * *
* * * * * * * * * *

End :

அதை முறைக்குத் தந்தோம் என்று சொல்லி ' சௌபரி ' என்கிற இருஷிக்கு சௌபரி சந்தானம் என்கிற நாமகரணமும் கொடுத்து அன்று முதல் தோரபுண்யத் தீர்த்தம் ? என்று வழக்கமாய் வரப்பட்டது என்ற வாறு.

பத்துமாசல வரலாறு முற்றும்.

(கு-பு) :—

இது, ஆமலகவனம் என்றதில் உள்ள " பதுமாசலம் ", அல்லது " வராககிரி ", என்ற திவ்விய க்ஷேத்திரத்தின் தலவரலாற்றைக் கூறுவதாம். முன்னம். 2114-ஆம் எண்ணிலே வருணிக்கப் பெற்றதிலும் இது வேறும். சுவாமி பத்மாலிங்கேசுவரர், ' இரத்தினகிரீவரர் ' என்றுங்கு அழைக்கப்படுவர். அகத்தியர், சௌபரி முதலானேர் பூசித்த தலமாம் விருத்திராசுரனும் இக் கிரியிலிருந்தான். ஒருத்தர் விசுவாமித்திர முனிவரது சாபத்தால் பொன்மான் வேடமாய், பிராமணவேடம் நீங்கியிருந்தார். இத்தலத்து, ஈசுவரானுக்கிரகத்தால் அது நீங்கினர். அது கும்ம நதியினுடைய அருகிலே யானதால், அப் பொன்மான் நின்ற இடத்துக்குப் "பொன்னு மான் றுறை" என்ற பேர் வழங்கலாயிற்று, முருகக்கடவுளுக்கும் வராக வடிவம் பெற்றிருந்த திருமாலுக்கும் போர் இங்கு நிகழ்ந்தமை பற்றி இப் பதுமாசலம் " வராககிரி ", என்னப் பெற்றது. மற்று, சூரபத்மாசுரன் வசித்திருந்தமை பற்றிப் " பதுமகிரி ", என்னப் பெற்றது எனினும் பொருந்தும். அகத்தியர் தமிழ் கற்றதும் இக் கிரியிலேயாம்.

" வர்த்தனீ " யென்றெரு புண்ணிய நதியுண்டு. ஸ்நான வர்த்தனம் என்ற பேர் சௌபரி வரத்தால் வந்ததாம். திண்டிமா நகரீ, திண்டிகேசுவரர் என்ற பேர்கள் அப் பெயரினை ஒரு இராட்சதனிருந்து அவனைச் சுவாமி கொன்றமைபற்றி வழங்கப்பெற்றனவாம் என இன்னேரன்ன விடயங்கள்

பல இதில் விளக்கமாகின்றன. முற்றும் உள்ளது. சிதைந்திருக்கப் பெற்றது. இது, மெகென்ஸி துரை சம்பாதித்தவைகளில் ஒன்றும் டைலர் துரை காட்லாக்கு 351-ஆம் பக்கம் 800-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றிருக்கின்றதைப் பெயர்த்து எழுதிய பிரதியாகும்.

No. 3205. நிலக்கோட்டை ஜமீன்தாரி கூளப்ப நாயக்கன் வமிசாவளி.

NILAKKŌṬṬAI JAMĪNDĀRI KŪḶAPPA NĀYAKKAN VAMIŚĀVAḶI.

Pages 5, lines, 25 on a page, Tamil, injured, Old, Extent, 100 granthas.

Begins on fol. 42 (b) of the manuscript described under D. No. 3196.

Complete.

Same work as that described under Nos. D. 3161, 3175.

This belongs to the Mackenzie collection of manuscripts and is a restored copy of the manuscript described under No. 800 of Taylor's Catalogue, Vol. III, *p.p.* 351.

(கு-பு) :—

இது டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3161, 3175-ஆம் எண்களில் வந்துள்ள தேயாம்; டைலர் காட்லாக்கு 1351-ஆம் பக்கம் 800-ஆம் எண்ணிலே வருணிக்கப் பெற்ற பிரதியைப் பெயர்த்தெழுதிய பிரதியாம். முற்றும் உள்ளது. சிதைந்துள்ளது. பிழைகள் மிக உள.

No. 3206. காளஹஸ்தி ராசாக்கள் வரலாறு அல்லது தாமரை வ்மிச மன்னர்கள் வரலாறு.

KĀḶAHASTI RĀJĀKKAḶ VARALĀṚU ALLATU TĀMARAI VAMIŚA MANNARKAḶ VARALĀṚU.

Pages 6, lines, 25 on a page, Tamil, injured, Old, Extent, 115 granthas.

Begins on fol. 44 (b) of the manuscript described under D. No. 3196.

Complete.

A genealogical account of the Kings of Padumavamiśa who were born from the feet of Mahāviṣṇu. It is stated that they settled at Madras and later got Kāḷahasti and other places from the Nawab of Golconda for putting down the gangs of highway robbers and other unruly elements in the land. This is a restored copy of No. 800, of the Taylor's Catalogue, Vol. III *p.p.* 351, of Mackenzie manuscripts.

Beginning :

காளஹஸ்தி ராசாக்கள் வரலாறு அல்லது பதுமவமிச ராசாக்கள் வரலாறு. ஸ்ரீமன் நாராயணனுடைய முகத்தில் பிராம்மணர்களும், தோளிலே க்ஷத்திரியர்களும், தொடையில் வைசியர்களும், பாதார விந்தத்தில் பதும நாயகா வமிசம் என்னப்பட்ட உத்தம சூத்திர வமிசமும் உண்டாச்சுது. அந்த வமிசம் எப்படிப்பட்டதென்றால் ஈசுவரன் முதலான பேர் பிரம்மாவிடத்துக்குப் போய்ச் சூரிய சந்திர வமிசத்துக்கு அதிகமான கீர்த்தியுள்ள சாதியை உண்டாக்கவேணும் என்று வேண்டிக்கொள்ளு கையில் அப்போது, "தாமரை வமிசம்" என்னும் ஒரு வமிசத்தை உண்டாக் கினார். அந்த வமிசத்தில் விஷ்ணு(வை) "வல்லப்ப நாயுடு" என்று ஒரு புருஷன் பிறந்தான். அவர் வெகு கீர்த்தி பெற்றுத் தெற்கே கொஞ்சம் வெட்டி இராச்சியம் உண்டாக்கிக்கொண்டு சீவனம் பண்ணிக்கொண்டிருந் தார். அந்த வல்லம நாயகனுக்குத் திம்மபூபதி என்றொரு பிள்ளை பிறந் தான். " * * * * * * * * * * * * * அந்த அய்யப்ப நாயுடு வுக்குச் சென்னப்ப நாயுடு தன் பித்ரார்ச்சிதமான தெற்கு இராச்சியம் விட்டுச் சிறிது சேனைகளைச் சேர்த்துக் கொண்டு வடக்காகப் புறப்பட்டு வழியில் * * * * * மைலாப்பூர், திருவல்லிக்கேணி, இவ்விரண்டு ஸ்தலத்தையும் பார்த்து நிரம்பவும் மனதிற்கு இஷ்டமாய் ஒரு குப்பம் சமுத்திரக் கரையோ ரத்தில் கட்டுவித்து "சென்ன நாயகன் குப்பம்" என்று பேரும் வைத்துக் கொண்டு வாசம் பண்ணிக்கொண்டிருந்தான். * * ° * * * * * * * * * *

End :

இப்பொழுது இராச்சியம் ஆண்டுகொண்டிருப்பவன் பெத்த வேங்கடப்ப நாயகன். இவனுக்கு ஒரு பிள்ளை திம்ம நாயுடு என்று பிறந்து எட்டு வயசில் இருக்கிறான். இவர்கள் பந்துக்கள்.

* *

முற்றிற்று.

(கு-பு) :—

இது காளத்தி மாநகரிலே இராச்சியம் ஆண்டுகொண்டிருந்த நாயக வமி சத்தரசர்களுடைய சரித்திரம் உணர்த்துவதாம். இதில் இம் மன்னரது வமி சம் தாமரை வமிசம் ஆகும். அது ஸ்ரீமந் நாராயணன் பாத கமலத்திலிருந்து உண்டாகியதாம். இம் மரபுக்கு மூலபுருடன் "வல்லப நாயுடு" என்றவர் ஆவர். அவருக்கு (22) ஆம் புருடராம் "சென்னப்ப நாயுடு" என்றவர் "திருவல்லிக்கேணி, மயிலை மாநகரம்," என்றவைகளைக் கண்டு அங்கே வசிக்க எண்ணிக் கடலோரத்தில் (பீச்சில்) "சென்னப்ப நாயகன் குப்பம்", என்றதைக் கட்டி வசித்து வந்தார். இவர் மிகவும் வீர புருடராய் இருந்தார். அவருக்கு அக்கப்பர் தோன்றி வீரபுருடராயிருந்தார். அதோடு பக்திமானு மாயிருந்தார். அக்காலம் சுற்றுவட்டாரங்களில் எட்டுப்பாளையக்காரர்கள் வலுத்து வழிப்பறிக் கொள்ளை நடத்தி வந்தனராகக் கோல்கொண்டாவில் இராசாவாயிருந்த "பாட்சா", அவர்கள் அக்கொள்ளைக் கூட்டத்தாரை வலி

யடக்குவிக்குமாறு எண்ணியிருந்து ஷெ சென்னம நாயக்கன் மகன் அக்கப்ப நாயகனை அழைப்பித்து வெகுமதிகள் பல செய்து நீர், "காளத்தி", "திருப்பதி", என்ற இவைகட்குச் சுற்று வட்டாரங்களில் உள்ள கொடுங் கோலாளரை வலியடக்கி வைத்துக் காளத்திக்கு விடுத்திருக்கும் (114) நூற்றுப்பதினான்கு கிராமங்களைத் தலைமுறை தலைமுறையாக, நும்கைவச மாக்கிக்கொண்டு, சுவாமி காரியங்களைக் குறைவர நடத்துவீராக வென்று (பரமாணு) ஆணையிட்டுக் கொடுக்க அவர் அங்ஙனமே காளத்தியைச் சேர்ந்து, பாட்சாவுக்குத் தோப்பாப் பணம் நிலுவைகளை வாங்கியனுப்பினார். தமக்குத் தக்கதொரு அரண்மனையும் அமைத்துக் கொண்டார். இவர்க்குப்பின் சந்த தியாக மூவர் இருந்தனர். இருபத்தினான்கு வேங்கடப்ப நாயக்கர் ஆம் புருடர் ஆற்காட்டு நவாப்பிடமிருந்து, உதையகிரிக்குச் சமீபத்தில் "பாமூரு", இராச்சி யத்தைச் சாகிராய்ப் பெற்றிருந்தார். அவர் குமாரர் திம்ம நாயக்கர் அயிதர் (ஹைதர்) போரிலே வென்று, நவாப்பிடமிருந்து விருதுகள் பெற்று, நரசிம்ம நாயுடு மகளாம், "பங்காரம்மாளை", மணம் புரிந்து, "பெத்த வேங்கட நாயுடு" (2) குமார வேங்கட நாயகன்", என்ற இரு புதல்வரைப் பெற்றார். அக்கம்மாள் என்ற பெண் உண்டு. அவளை பங்காரு எச்சம நாயக்கனுக்கு மணம் புரிவித்தார் எனக் கூறி முடிக்கின்றது. முற்றும் உளது. பிழையுள. இது டைலர் காட்லாக்கு 351, பக்கம் 800-ஆம் எண்ணில் வந்த பிரதியைப் பெயர்த்து எழுதப்பெற்ற பிரதியாகும். மற்று, இதற்கு முன்னர் சில நூல்கள் இருப்பவை மாதுருகைப் பிரதியிலே முறை பிறழ்ந் தும் எழுதக் கஷ்டமாகவும் இருப்பதால், அவை, இங்கு எழுதிவைக்கப் பெற வில்லை போலும்.

No. 3207. திருவையாற்றுப் பஞ்சநதேசுவரன் கோவில் சிலாசாசனம்.

TIRUVAIYĀṬṞUP PAÑCHANADĒŚUVARAN KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 9 lines, 30 on a page. Tamil, injured. Old. Extent, 250 granthas.

Begins on fol. 57 (a) of the Manuscript described under D. No. 3196.

Complete.

Same work as that described under D. No. 2745 and (No. 2353) of Taylor's Catalogue *p.p.* 73, ante and seems to be a restored copy of the same (Manuscript No. D. 2745):

(கு-பு) :—

இது, முன்னம் 2745-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றதிலிருந்து பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றது போலும்.

No. 3208. திருக்கண்டியூர் முதலானவிடத்து ஈசுவரன் கோவில்கள் சிலாசாசனங்கள் (தஞ்சை ஜில்லா)

TIRUKKAṆḌIYŪR MUDALĀNAVIḌATTU ĪŚUVARAN KŌVILKAḶ ŚILĀŚASANAṄKAḶ (TANJUR DISTRICT.)

Pages, 15, lines, 30 on a page. Tamil, injured. Old. Extent, 450 granthas.

Begins on fol. 61 (a) of the manuscript described under D. No. 2221.

Complete.

Same work as that described under D. No. 2744. (and Taylor's No. 2351, p.p. 71 of Mackenzie, manuscripts.)

(கு.பு) :—

இது 2744-ஆம் எண்ணில் வந்துள்ளதைப் பெயர்த்து எழுதிவைத்த பிரதியாம் எனத் தோற்றுகிறது. முற்றும் உள்ளது. அது, டைலர் காட்லாக்கு 71-ஆம் பக்கம், 2351 எண்ணில் வருணிக்கப் பெற்றிருக்கிறது.

No. 3209. மலையாளம் இருங்காலிக் கோட்டை க்ஷேத்திர பூர்வோத்திரம் முதலியன.

MALAIYĀḶAM IRUṄKĀLIKKŌṬṬAI KṢĒTTIRA PŪRVŌTTIRAM MUDALIYANA.

Paper, 12 × 8¼ inches. Tamil & Malaiyalam, Very much injured. Old.

This belongs to the Mackenzie collection of manuscripts. It is described under No. 826, pp. 663, of Taylor's, Catalogue Vol. III.

This contains thirty sections. Of these eleven are on temples and choultries. Fourteen are the customs and manners of the people of those places; the remaining five are genealogical account of Tribes. The papers are too injured to be handled.

(கு-பு) :—

இது மலையாள தேசத்து இருங்காலிக்கோட்டை க்ஷேத்திர வரலாறு முதலான அத் தேயத்துவிடயமான பல வரலாறுகளை யெடுத்துக் கூறுவதாம். மெகென்ஸி திரட்டிய புத்தகங்களில் ஒன்றாய் டைலர் காட்லாக்கு 663-ஆம் பக்கம், 826-ம் எண்ணில் வருணிக்கப் பெற்றதேயாம். அதில் அத் தேயத்துக் கோயில்கள், சத்திரங்கள் விஷயமான வரலாறுகள் பதினொன்றும், ஜனங்களின் பழக்க ஒழுக்கங்கள், தானியங்கள், வரிகள் முதலான வரலாறுகளைக் குறிக்கும் வரலாறு பதினான்கும், வமிசாவளி யல்லது பல சாதி விவரணம் ஐந்தும் ஆக (30) முப்பது பகுதிகள் அடங்கி யிருக்கின்றனவென்று குறிக்கப்பெற்றிருக்கிறது. ஆனால் இதுபோது இவ்

வால்யும் மிகவும் சீர்ணமாய்ப் பொடிப் பொடியாயிருக்கின்றதாகலின். கையினாலே எடுத்துப் பார்க்கவுங்கூடாத முறையில், அத்துனை சிதைந்துள்ளது. பெயர்த்தெழுதிய பிரதியொன்று இருப்பது பின்னால் வருணிக்கப்படும் என்க. இதில் ஏடுகளை எண்ண முடியவில்லை.

No. 3210. கன்னிவாடி அப்பைய நாயகன் வமிசாவளி
KANNIVĀḌI APPAIYA NĀYAKAN VAMIŚĀVAḶI.

Paper, 12¾ × 10¼ inches, pages, 30, Lines, 38, on a page. Tamil, very much injured. Very old, Extent, 1140 granthas.

Begins on fol. 1 (a) The other works which are contained in the Volume are described under Nos. 3211—3214.

Complete.

Same work as that described under D. No. 3165 and is described under No. 817, of Taylor's Catalogue of Mackenzie collection of Manuscripts Vol. III. P. 375.

(கு-பு) :—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3165-ஆம் எண்ணிலே வந்துள்ளதற்கு மாதுருகை பிரதியாம், டைலர் காட்லாக்கு 375-ஆம் பக்கம், 817-ஆம் எண்ணில் வருணிக்கப்பெற்றதே. முற்றும் உள்ளது.

No. 3211. சிலங்குலம் போடி நாயக்கர் வமிசாவளி.
ĪLAṄKULAM BŌḌI NĀYAKKAR VAMIŚĀVAḶI.

Pages, 6 lines, 34–36 & 42 an a page. Much injured, Old. Extent, 252 granthas.

Begins on fol. 16 (a) of the manuscript described under D. No. 3210.

Complete.

Same work as that described under D. No. 3166. This seems to be the original of that manuscript and is described under No. 817, p. 375, of Taylor's Catalogue of Mackenzie Manuscripts, Vol III.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3166 ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றதற்கு மாதுருகை பிரதியாமெனத் தோன்றுகிறது. டைலர் காட்லாக்கு 375-ஆம் பக்கம் 817-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றதேயாம். மிகப் பிழையுள. எழுத்துக்கள் சரியாக விளங்கவில்லை. ஏட்டுச் சிதைவுகள் அதிகம்.

No. 3212. பெரியகுளம் இராமபத்திர நாயக்கன் வமிசாவளி.

PERIYAKUḶAM IRĀMABHADDIRA NĀYAKKAN VAMIŚĀVAḶI.

Pages 12, Lines, 35—42 on a page. Much injured. Old. Extent, 404 granthas.

Begins on fol. 19 (a) of the manuscript described under D. No. 3210.

Complete.

Same work as that described under D. No. 3167 and seems to be the original. This is described under No. 817, (p. 375) of Taylor's Catalogue of Mackenzie Manuscripts, Vol. III.

(கு-பு): —

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3167 ஆம் எண்ணிலே வருணிக்கப் பெற்றதற்கு மாத்ருகை பிரதியாமென்று தோன்றுகிறது. மெகென்ஸி மேனஸ்கிருப்ட்ஸ்களில் ஒன்றுய் டைலர் காட்லாக்கு 375 ஆம் பக்கம் 817-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றதேயாம். முற்றும் உள்ளது. எழுத்துப் பிழைகள் மிகவும் உள்ளன. ஏடுகள் மிகச் சிதைந்திருக்கின்றன. 24 (b) ஏடு வெற்றேடாயுளது.

No. 3213. மதுரை சமஸ்தானத்துத் திருமலை கொண்டம நாயக்கன் வமிசாவளி.

MADURAI SAMASTHĀNATTUT TIRUMALAI KOṆḌAMA NĀYAKKAN VAMIŚĀVAḶI.

Pages 5. Lines, 32 on a page. Much injured. Old. Extent, 160 granthas.

Begins on fol. 25 (a) of the Manuscript described under D. No. 321

Complete.

Same work as that described under D. No. 3168, and this seems to be the Original of the Manuscript (No. 3168). This is described under No. 817, p. 375, of Taylor's Catalogue of Mackenzie Manuscripts, Vol. III.

(கு-பு): —

இது, முன்னம் 3168 ஆம் எண்ணில் வந்துள்ளதேயாம். டைலர் காட்லாக்கு 375 ஆம் பக்கம் 817 ஆம் எண்ணிலே வருணிக்கப் பெற்றிருக் கிறது. முற்றும் உள்ளது. எழுத்துத் தெளிவாக இல்லை. மிகப் பிழைகள் உள. மிகச் சிதைந்த பிரதியாம். 27 (b) ஏடு வெற்றேடாம்.

No. 3214. குன்றத்தூர் புதையல் தாமிர சாசன வரலாறு.

KŪNṞATTŪR PUDAIYAL TĀMIRA ŚĀSANA VARALĀṞU.

Pages 4. Lines, 26 on a page. Much injured. Old. Extent, 52 granthas.

Begins on fol. 28 (a) of the manuscript described under D. No. 3210.

Complete.

Same work as that described under D. No. 3169 and seems to be the Original of the same. This is described under No. 817 (p. 375) of Taylor's Catalogue of Mackenzie Manuscripts.

(கு-பு): —

இது, முன்னம் 3169 ஆம் எண்ணிலே வந்துள்ள பிரதிக்கு மாத்ருகை யாம் எனத் தோற்றுகிறது. டைலர் காட்லாக்கு 375 ஆம் பக்கம் 817 ஆம் எண்ணிலே வருணிக்கப் பெற்றதேயாம். முற்றும் உள. ஏடுகள் சிதைந்து உள. மிகப் பிழைகளோடு விளக்கமின்றியும் இருக்கின்றன.

No. 3215. சல்லியம்பட்டி எரம நாயக்க பாளையக்காரன் வமிசாவளி.

ŚALLIYAMPAṬṬI ERAMA NĀYAKKA PĀḶAIYAKKĀRAN VAMIŚĀVAḶI.

Paper 12″ × 9½″, Pages 13. Lines 20 on a page. Tamil, good. New. Extent 145 granthas.

Begins on fol. 1 (a). The other works which are contained in this volume are described from Nos. 3216 to 3225.

Complete.

This is a restored copy of the manuscripts described under D. No. 3130 and 809 (p. 369) of the Taylor's Catalogue Vol. III.

(கு-பு): —

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3130 ஆம் எண்ணிலும், டைலர் காட் லாக்கு 809 (369-ஆம் பக்கம்) ஆம் எண்ணிலும், வருணிக்கப் பெற்ற பிரதி யிலிருந்து பெயர்த்து எழுதிய பிரதியாகும். முற்றும் உள. பிழையும் உள.

No. 3216. சிஞ்சுவாடி பாளையக்காரன் சம்பே நாயக்கன் வமிசாவளி.

ŚIÑJUVĀḌI PĀḶAIYAKKĀRAN ŚAMBĒ NĀYAKKAN VAMIŚĀVAḶI.

Pages 7. Lines, 20 on a page. Good, New. Extent, 88 granthas.

Begins on fol. 7 (b) of the manuscript described under D. No. 3215.

Complete.

This is a restored copy of D. No. 3131 and 809 of the Taylor's Catalogue of Mackenzie Manuscripts (P. 369) Vol. III.

(கு-பு) :—

இது டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3131 ஆம் எண்ணிலும், டைலர் காட்லாக்கு (369 ஆம் பக்கம்) 809 ஆம் எண்ணிலும் வருணிக்கப்பெற்ற பிரதியிலிருந்து பெயர்த்து எழுதி வைத்த பிரதியாகும். முற்றும் உள. மிகப் பிழையுடன் உள.

No. 3217. புவனசக்கிரம்.
BHUVANA CAKKIRAM.

Pages 35. Lines, 21 on a page. Good, New, Extent, 740 granthas.

Begins on fol. 11 (a) of the manuscript described under D. No. 3215.

Complete.

This is a restored copy of the work described under D. No. 3132 and 809 of Taylor's Catalogue (P. 370) of Mackenzie Manuscripts Vol. III.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3132-ஆம் எண்ணிலும், டைலர் காட்லாக்கு 3701-ஆம் பக்கம் 809-ஆம் எண்ணிலும் வருணிக்கப் பெற்ற திலிருந்து பெயர்த்து எழுதப் பெற்றதாம். முற்றுமிருக்கிறது. மிகப் பிழையுள. இதற்கடுத்ததாக மூலப்பிரதியில் "ஐந்து சாதி வரலாறு" அல்லது "கொங்குமண்டல வரலாறு" என்று காணப்பெறும் ஒரு நூல் இப்பிரதியில் எழுதப் பெறுமல் விடப்பட்டுள்ளது. அது யாது காரணம் பற்றியோ தெரியவில்லே. அது, 3133-ஆம் எண்ணில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. அது வேளாளர் ஐங்குடியர் வரலாற்றைத் தெரிவிக்கின்றதாம்.

No. 3218. ஆவுடையார்புரம் பாளையக்காரர் மல்லராசன் வமிசாவளி.
ĀVUḌAIYĀRPURAM PĀḶAIYAKKĀRAṞ MALLARĀJAN VAMIŠĀVAḶI.

Pages 16. Lines, 20 on a page. Good, New, Extent, 250 granthas.

Begins on fol. 29 (a) of the manuscript described under D. No. 3216.

Complete.

Restored copy of D. No. 3134 and No. 809 of Taylor's Catalogue of Mackenzie Manuscripts (pages 369 and 370) Vol. III.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு எண் 3134 இலும், டைலர் காட்லாக்கு 809-ஆம் எண்ணிலும் வருணிக்கப் பெற்ற நூலைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதொரு பிரதியாம். இதற்கு ஆவுடையார்புரம் மல்லரது பிள்ளை வரலாறு எனவும் பெயர் வழங்கப்படும் போலும். " மல்லராசன் " என்பது இக்குலத்திற்கு மூலபுருடராம் வரகுணராம சிந்தாமணி புலித்தேவன் என்ற பாளையக்காரர், பாண்டிய மன்னரது ஏவலால், நாகமலையிலிருந்த ஒரு கரும்புலியோடு மல்யுத்தம் செய்து வெட்டி வீழ்த்தியதைக் காரணமாகக் கொண்டு வந்தது போலும்.

No. 3219. மறுதுறை கிராமம் ஆலால சுந்தர பண்டிதர் வமிசாவளி.

MAṞUTUṞAI KIRĀMAM ĀLĀLASUNDARA PAṆḌITAR VAMIŚĀVAḶI.

Pages 8. Lines, 20 on a page. Good. New. Extent, 120 granthas.

Begins on fol. 32 (a) of the manuscript described under D. No. 3215.

Complete :

A restored copy of the manuscript described under D. No. 3135 and No. 809 of Taylor's Catalogue of Mackenzie Manuscripts (pages 369) Vol. III.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3135 ஆம் எண்ணிலும், டைலர் காட்லாக்கு 809 ஆம் எண்ணிலும் (369-ஆம் பக்கம்) வருணிக்கப்பெற்ற பிரதியிலிருந்து பெயர்த்தெழுதப் பெற்றதாம். முற்றும் உளது.

No. 3220. மறுதுறை கிராமத்துச் சைவ மடாதிபதி ஆலால சுந்தர பண்டிதற்குரிய பூதான சிலாசாசனம்.

MAṞUTUṞAI KIRĀMATTU ṢAIVAMAṬHĀDHIPATI ĀLĀLASUNDARA PAṆḌITARKKURIYA BHŪDĀNA ṢILĀŚĀSANAM.

Pages 2. Lines, 20. on a page. Good, New, Extent, 30 granthas.

Begins on fol. 41 (a) of the manuscript described under D. No. 3215.

Complete .

A restored copy of No. 3136 and No. 809 of Taylor's Catalogue of Mackenzie Manuscripts (pages 369 and 370), Vol. III.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3136 ஆம் எண்ணிலும், டைலர் காட் லாக்கு 369 ஆம் பக்கம் 809 ஆம் எண்ணிலும் வருணிக்கப் பெற்றிருக்கும் பிரதியைப் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாகும். முற்றும் உளது. பிழை கள் மிகவிருக்கின்றன.

No. 3221. சிவகிரி சுப்பிரமணியர் ஸ்தல வரலாறு.

ŚIVAGIRI ŚUPPIRAMAṆIYAR STHALA VARALĀṞU.

Pages 10. Lines, 20 on a page. Good. New. Extent, 150 granthas.

Begins on fol. 42 (a) of the manuscript described under D. No. 3215.

Complete.

A restored copy of the manuscript described under D. No. 3137 and No. 809 of Taylor's Catalogue of Mackenzie Manuscripts (pages 369 and 370), Vol. III.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3137.ஆம் எண்ணிலும், டைலர் துரை காட்லாக்கு 369–370-ஆம் பக்கம், 809-ஆம் எண்ணிலும் வருணிக்கப் பெற்ற பிரதியிலிருந்து பெயர்த்து எழுதி வைக்கப் பெற்றதாம். முற்றும் உள. மிகப் பிழைகள் உள.

No. 3222. ஆண்டிப்பட்டி பாளையக்காரர் பொம்ம நாயக்கர் வமிசாவளி.

ĀṆḌIPPAṬṬI PĀḶAIYAKKĀRAR BOMMA NĀYAKKAR VAMIŚĀVAḶI.

Pages 14. Lines, 22 on a page. Good. New. Extent, 210 granthas.

Begins on fol. 47 (a) of the manuscript described under D. No. 3215.

Complete.

A restored copy of the manuscript described under D. No. 3138 and 809 of Taylor's Catalogue of Mackenzie Manuscripts (pages 369 and 370), Vol. III.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3138-ஆம் எண்ணிலும், டைலர் காட் லாக்கு 369–370-ஆம் பக்கம் 809-ஆம் எண்ணிலும் வருணிக்கப் பெற்ற பிரதியிலிருந்து பெயர்த்து எழுதியதாகும். முற்றும் உள. பிழைகள் உள.

No. 3223. அரவக்குறிச்சித் தாலூகா கிராமக்கணக்கரிடமிருந்த பண்டைய கணக்குகள் வரலாறு.

ARAVAKKUṞICCIT TĀLŪKĀ KIRĀMAKKAṆAKKARIḌAMIRUNDA PAṆḌAIYA KAṆAKKUKAḶ VARALĀṞU.

Pages 19. Lines, 20 on a page. Good, New. Extent, 330 granthas.

Begins on fol. 54 (a) of the manuscript described under D. No. 3215.

Complete.

A restored copy of D. No. 3139 and 809 (pages 369) of the Taylor's Catalogue of Mackenzie Manuscripts, Vol. III.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3139-ஆம் எண்ணிலும், டைலர் காட்லாக்கு 369-ஆம் பக்கம் 808-ஆம் எண்ணிலும் வருணிக்கப் பெற்றதிலிருந்து பெயர்த்து எழுதிய பிரதியாகும். முற்றும் உளது. மிக எழுத்துப் பிழைகள் உள.

No. 3224. கலச க்ஷேத்திர மான்மிய வரலாறு,

KALAŚA KṢĒṬṬIRA MĀNMIYA VARALĀṞU.

Pages 22. Lines, 20 on a page. Good. New. Extent, 352 granthas.

Begins on fol. 63 (b) of the manuscript described under D. No. 3215.

Complete.

A restored copy of the manuscript described under D. No. 3140 and 809 of Taylor's Catalogue Mackenzie Manuscripts (pages 369 and 370), Vol. III.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3140-ஆம் எண்ணிலும், டைலர் காட்லாக்கு 369–370-ஆம் பக்கம், 809-ஆம் எண்ணிலும், வருணிக்கப் பெற்ற நூலிலிருந்து, பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றதாம். முற்றும் உள்ளது. மிகப் பிழைகள் உள்ளன.

No. 3225. திருநெல்வேலி ஜில்லா, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலான விடத்துத் தேவஸ்தான சிலாசாசனங்கள்.

TIRUNELVĒLI JILLĀ, ŚRĪVILLIPUTTŪR DĒVAŚTHĀNA ŚILĀŚĀSANAṄKAḶ.

Pages, 80. Lines, 20 on a page. Good, New. Extent, 1,200 granthas.

Begins on fol. 75 (a) of the manuscript described under D. No. 3215.

Complete.

This is a restored copy of the Manuscripts described under D. 3226 and under No. 823 of Taylor's Catalogue of Mackenzie Manuscripts (pages 306), Vol. III. Contains 128 inscriptions on stones from the Tirunelveli Province. Gives an account of the inscriptions found in the temples of Srivilliputhur.

Beginning :

திருநெல்வேலி சீமைக்குச் சேர்ந்த நடுமண்டலம் தாலூகா ஷை தாலூகா கசுபா ஸ்ரீவில்லிபுத்தூர் தேவஸ்த்தானங்கள் மூன்றிலும் உள்ள சிலா சாசனங்களிற் கண்டெழுதின சிலாசாசனங்களுடைய நக்கல்கள். க. சூடிக் கொடுத்த நாய்ச்சியார் கோவிலில் உள்ளவைகள். ௲அ௱௰௪ ஷூ ஜூலை௴ ௩௨ முதல் பார்வையிட்டு எழுதினது. தாரியாபத்து நிட்டல நாயன் அய்யன். ஷை கோவில் கருப்பக்கிரஹம் பிராகாரமாகிய ஸ்ரீ கோவில் முன், அர்த்தமண்டபத்தில் தெற்குப்புறமுள்ள சாசனங்கள், தமிழும் கிரந்தமுங் கூடி எழுதியிருக்கிறத்தின் நக்கல். (௩)

* * * * * * * *

End :

௲அ௱௰௪. ஷூ ஜூலை௴ ௩௨ முதல் ஸ்ரீ வில்விபுத்தூர் முதல் பாபநாசம் வரையில் சுத்திக்கொண்டு, ஆகஸ்டு௴ ௰௩. ௨ வரை திருநெல்வேலி சீமையில் பார்வையிட்ட தேவஸ்த்தானங்கள் ௰௩ பதிறுக்குக்கண்டெழுதின சிலாசாசனங்கள், நக்கல்கள் (௱௫)

* * * * * * தரியாபத்து நிட்டல நாயன்.

(கு-பு) :—

இது, மெகென்ஸி புத்தகங்களுள் ஒன்ருய் டைலர் காட்லாக்கு 306-ஆம் பக்கம், 823-ஆம் எண்ணில் வருணிக்கப்பெற்ற நூலிலிருந்து பெயர்த்து எழுதப்பெற்றதாகும். முற்றும் உள. 128 கல்வெட்டுச் சாசனங்கள் அடங்கி யிருக்கின்றன. இதன் மாத்ருகை இனியடுத்த எண்ணில் வருணிக்கப்படும்.

No. 3226. ஸ்ரீ வில்லிபுத்தூர் தேவஸ்தான சிலாசாசனங்கள். (திருநெல்வேலி ஜில்லா.)

ŚRĪVILLIPUTTŪR DĒVASTHĀNA ŚILĀŚĀSANAṄKAḶ.

Paper $11\frac{1}{4}'' \times 9''$. Pages 108. Lines, 25. on a page. Tamil, Grantha, Old Script. Very much injured. Old. Extent, 1,200 granthas.

Complete.

This is the Original of the manuscript described under D. No. 3225 and 823 of Taylor's Catalogue of Mackenzie manuscripts page 306, Vol. III.

(கு-பு)— :

இந்நூல் முன் எண்ணில் வருணிக்கப் பெற்றிருக்கும் நூலுக்கு மாத்ருகைப் பிரதியாம். இது மெகென்ஸி துரையால் சம்பாதிக்கப் பெற்றது. டைலர் காட்லாக்கு 306-ஆம் பக்கம், 823-ஆம் எண்ணிலே வருணிக்கப் பெற்றிருக்கிறது. மிகச்சிதைந்துளது. மிகவும் எழுத்துப் பிழை கள் காணப்படுகின்றன. பல கல்வெட்டுகள் அரை குறையாக உள்ளன.

No. 3227. திருவாங்கூர், செங்கோட்டை தாலூகா சாசனங்கள்.

TIRUVĀṄKŪR, ŚEṄKŌṬṬAI TĀLŪKKĀ ŚĀSANAṄKAḶ.

Paper 13″ × 10¼″ Pages, 102. Lines, 24, 36 on a page. Tamil, Grantha, Telugu and Malayāḷam. Very much injured. Old. Extent, 2,250 granthas.

Complete.

This manuscript contains 123 inscriptions found on stone and grants written on paper both referring to the Malaiyāla Country. But they are partly in Tamil and partly in one of the ancient characters formerly used in that Country. This forms one of the manuscripts collected by Mackenzie and is described under No. 802 of Taylor's Catalogue pages 301, Vol. III. Particularly it contains an account of the inscription found in Shencottah.

Beginning :

திருவாங்கூர் சீமைக்குச் சேர்ந்த செங்கோட்டை தாலூக்காவுக்கு அளவுக்குப் போன மேஸ்த்தர் கேப்டன் கர்னல் துறையவர்களுடனே கூட்டி அனுப்பின ரைட்டர் அய்யப்பன் நாயக்கன் எழுதிக்கொண்டு வந்த சிலா சாசனங்கள் முதலானதற்கு நக்கல்கள் ௲அ௱௯அ ௵ செப்டம்பர்௴ ௰அ. உ வரை பார்வையிட்ட தரியாபத்து நிட்டல நாயன் அய்யன்.

செங்கோட்டை கரைவாசலுக்குச் சேர்ந்த ஷை கசுபா செங்கோட்டையில் அழகிய மணவாளப் பெருமாள் கோவிலில் விமானத்துக்கு மேற்குப் புறத் தில் இருக்கும். சிலாசாசனம் * * * * *
* * * * * * * *

End :

௰உ கொல்லம், ௬௱௩௰க ஆவது. மகரஞீ உ௰. உ மீனராசி கொண்டு சமுத்திராத்திங்கல் நிண்ணுபெருமாள் இவிடே பிரதிஷ்டை செய்தது. கிரியை செய்தது. பணயத்தாட்டு நாராயண நம்பூதிரி. அரித்தோட்டத்து ஸ்ரீ கண்டன் தாமோதரன் கையெழுத்து. * * * *

(கு-பு) :—

இது, மலையாள தேயத்துத் திருவாங்கூர்ச் சீமையில் செங்கோட்டை முதலான விடத்துக் காணப்பெறும் சிலாசாசனங்களையும், பேப்பர் தான சாசனங்களையும், மற்றுத் தாமிர சாசனங்களையும் எடுத்து உணர்த்துவதாம். மெகென்ஸி துரையால் சம்பாதிக்கப் பெற்றதாய், டைலர் காட்லாக்கு 301-ஆம் பக்கம், 802-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப்பெற்றுள்ளது. முற்றும் உள்ளது. மிகச் சிதைவுற்றிருக்கிறது. இதில், மொத்தம் (123) சாசனங்கள் அடங்கியிருக்கின்றன. 1 (b), 14, 15 (b), 24, 25, 26 (b), 27, 37 (b), 46 (b), 52 ஆன எடுகள் ஒன்றும் எழுதப் பெருமலே விடப்பட்டிருக்கின்றன.

No. 3228. இயமக்கலாபுரம் ஜமீந்தார் வமிசாவளி.

YAMAKKLĀPURAM JAMĪNDĀR VAMIŚĀVAḶI.

Pages, 4. 11¾" × 8¾". Paper, Lines, 44 on a page. Tamil. Very much injured. Old. Extent, 140 granthas.

Complete.

Begins on fol. 1 (a). The other works which are contained in this volume are described from Nos. 3229 to 3254.

A genealogical account of the Zamindar of Yamakkalapuram in Dindigul Taluk of the Coimbatore District and gives an account as to how they expanded their sway. This belongs to the Mackenzie manuscripts and is described under No. 807 (page 355.) of Tayalor's Catalogue, Vol. III. Restored on pages 141—149 of Vol. II.

Beginning :

இயமக்கலாபுரம் ஜமீன்தாருடைய வமிசாவளி (கணக்கு) சூலைப்பட்டையத்திலிருந்து எழுதினது. கலியுகம் சூஅ௲ஊ௰சு—-சகம் ௲௩௱சக ஞூ மகாராச மானியராய் ஸ்ரீ இராயர் அவர்கள் சமஸ்த்தானத்தில் இராயர் அவர்கள் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிற முன்னுக்கு என் முன்னோர்கள் காமவாரகுலத்தில் காமுலக்கய நாயக்கர் கூட்டத்துத் தேவனும்பட்டணத்தில் குடியாயிருந்து நாட்டாண்மைத்தனஞ் செய்து கொண்டு இருக்கையில் இராயர் அவர்கள் சமஸ்த்தானத்தில் இலாயத்தில் (ஒருகுதிரை) மான தேசி யென்கிற..........ண்டணுகிய குதிரையிருந்தது.

* * * * * * * * * *

End :

கை மெலிந்து ஓடிவிட்டபடியினுலேயும் இய.......... ர்ய்ச் சாகுபடி நஷ்டம் வந்தது. பணம்செல்லாத நிமித்தம் பிறகு பிரஜோற்பத்தி ஞூ முதல் கம்பெனியிலே சப்தி பண்ணியிருக்கிறுர்கள். சீமைக்குத் துறைத்

தனம்..............செய்து இப்போது நூதனமான தகரூர் பூமியெல்லாம் சப்தி செய்து கொடுத்து அடியேன் பேரிற் கம்பெனியார் தயவுசெய்து இரட்சிக்க வேண்டியது.

(கு-பு) :—

இது, யமக்கரைபுரம் அல்லது யமக்கலாபுரம் பாளையக்காரர், காமவார் குலம் காமுலக்கய்ய நாயக்கர் என்பவரது வம்சாவளியை உணர்த்துகிறது. இவ் வம்சத்துக்கு மூல புருடர் கூடலூர் தேவணும் பட்டணத்தில் குடியிருந்தவர். இவர் இராயர் சமஸ்தானத்துக்குப் போய், யாவருக்கும் அடங்காததொரு "மானதேசி" என்னும் குதிரையை, வலியடக்குவித்து, இராயர் அவர்களால் "குதிரை மேற் கொண்ட காமுலக்கைய நாயக்கர்," என்ற பிருதைச் சங்கமுகப் பல்லக்கு முதலான பல நற்சிறப்புக்களையும் செய்யப் பெற்றூர்- பின்னர் மதுரையில் பாண்டியராட்சி வீழ்ச்சியாய் விஸ்வநாத நாயக்கர் மதுரையாட்சிக்கு வந்தபோது தம்முடன் ஷெ பாளையக்காரரை உற்ற துணையாகக்கூட்டிவந்து சிறுமலைக்கு வடக்குக் காட்டையும், யமக்கலாபுரத்தையும் இனுமாகக் கொடுத்து உதவினர். இவர் அங்ஙனமிருந்து, பின்னர் நாயக்கர்க்கு எதிரியாம் "குலசேகரன்" மீது படையெடுத்துப் போய்ப் போர் புரிந்து ஷெ எதிரியால் மரித்துவிட்டார். அவர் குமாரர் அனந்தப்ப நாய்க்கர் பாளையத்துக் கதிகாரியானூர். அவர் முதல் இதனை யெழுதிவித்த "இலக்குமணய்யா" வரை 12 பட்டதாரிகளாவர். முற்றும் உள்ளது. மிகவும் சிதைந்தது. எழுத்துக்கள் படிப்பதற்கு அரியதாய் மை யழியப் பெற்றதாய் இருக்கின்றன. இது மெகென்ஸி பெரிய வால்யும் 2, 141-149-ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதப் பெற்றிருக்கின்றது. டைலர் காட்லாக்கு 807 (355-P)-ஆம் எண்ணிலே வருணிக்கப்பெற்றது.

No. 3229. தொட்டையங்கோட்டை ஜமீந்தார் வமிசாவளி.
TOṬṬAIYAṄKŌṬṬAI JAMĪNDĀR VAMIŚĀVAḶI.

Pages, 4. Lines, 40 on a page, Very much injured. Old. Extent, 120 granthas.

Begins on fol. 3 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

A genealogical account of the Zamindars of Toṭṭaiyaṅkoṭṭai of near Madura in Dindigal District.

This belongs to the Mackenzie manuscripts and is described under No. 807 (p. 356.) of Taylor's Catalogue, Vol. III. Restored on pages 150—168 of Vol. II.

Beginning :

தொட்டியங்கோட்டை ஜமீன்தார் வமிசாவளி இராயர் சமஸ்தானமீதில பாட்சா தண்டெடுத்து வந்தபோது சமஸ்தானம் எடுபட்டுப்போகிற முன்னுக்குச் சிகப்பு வஸ்திரங்களாய்க் கொண்டு வைத்து இதில் சம்சாரத்தின்

பேரில் ஆசையில்லாமல் பெண்ணாசையில்லாதவர்கள் எல்லாம் வஸ்திரங்கள் எடுத்துக்கொண்டு தாம்பூலம் எடுத்துக்கொண்டு இரணகளத்திற்குப் போகச்சொன்னார்கள். அப்போது எங்கள் முன்னோர்கள் ஆதியிற் பெஞ்சை வல்ல கோத்திரத்தில் முதற் பட்டக்காரர் மக்கள் நாயக்கர் அவர்களுடைய கோத்திரத்தைக்கூடக் காட்டிக் கொண்டுபோய் பாளையத்தி லிருந்து.

* * * * * * * *

End :

௰௭-ஆவது பட்டம்—தொட்டையம் சின்னபுழ (கு) நாயக்கன் பவனுப ஷி சீமை ஜமீன்தாருக்கு உள்ள பட்டம் மதுரை திண்டுக்கல் வகையரு வுக்கு கலெக்டராகியும், மகா ராஜ ராஜ ஸ்ரீ ரோசு பீத்தர் துரையவர்கள் கசானாச் சேரியில் செலுத்துவித்துக்கொண்டு மகா ராஜ ராஜ ஸ்ரீ ஆனரபிள் கம்பெனியார் அவர்கள் கட்டளையிட்டருளிய திட்டப்படியே நடந்துக் கொள்ளுகிறேன்.

(கு-பு)— :

இது, மதுரைக்கு முக்காத வழியில் உள்ளதொரு "தொட்டியங் கோட்டை" என்ற ஊர்ப்பாளையத்தில் பாளையக்காரர் அல்லது ஜமீன்தாரர்களு டைய வமிசாவளியை யெடுத்துக் கூறுவதாம். இராயர் சமஸ்தானத்திருந்த மக்கள் நாயக்கரை முதற்கொண்டு இவ்வமிசம் பல்குகின்றது. மொத்தம் 17 பட்டாதாரிகளைக் கொண்டுள்ளதாம். இதில், இடையிற் றோன்றியவர் களில் 9-ஆம் பட்டக்காரையா "பெத்தளு நாயக்கர்" என்றவர் திருமலை நாயக்கரின் இராமப்பய்யன் (தளவாய்) அவர்கட்கு உதவியாளராயிருந்து பாம்பன் (சேது) அணையைக் கட்டிக்கொடுத்து இராமேசுவரத்தில் சேது பதியின் மீது தண்டெடுக்கையில் மிகவும் பேருதவி புரிந்தவர் ஆவர். மெகென்ஸி புத்தகங்களுள் ஒன்றாய் டைலர் காட்லாக்கு 807-ஆம் நம்பர் குறிப்பில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. 355–357-ஆம் பக்கங்களை நோக்கிக் கொள்க. முற்றும் உள்ளது. மிகச் சிதைந்ததாம். மெகென்ஸி பெரிய வால்யும், 150–118-ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதப் பெற்றுள்ளது.

No. 3230. தவசிமேடு ஜமீந்தாரி வமிசாவளி.

TAVAṢIMĒḌU JAMĪNDĀRI VAMIŚĀVAḶI.

Pages, 3, Lines, 42 on a page. Very much injured. Old. Extent, 100 granthas.

Begins on fol. 5 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

A genealogical account of the Zamindars of the Tavaṣimēḍu in the Dindigal District. (Copied from a palm-leaf manuscript.) This manuscript belongs to the Mackenzie manuscript and is described under D. No. 807 of Taylor's Catalogue, PP. 355—357, Vol. III.

Beginning :

தவசிமோடு ஜமீன்தாரி வமிசாவளி :—முன் எங்கட்டுப் பாளையப்பட்டு வந்தது. முன் நாங்களிருந்தது குந்திதேசம், அவ்விடத்தில் எங்களைத் துலுக்கர் பெண் கேட்ட நிமித்தமாக எங்களுடைய பொக்கிஷம், பூஷணாதிகள் சகலத்தையும் எடுக்காமல் விட்டுப் போட்டுத் தெட்சணம் பாண்டிய தேசத்துக்கு வருகையில் * *

* * * * * * * *

End :

கஉ ஆம்பட்டம் இரகுநாத சோதள நாயக்கர் குமாரன் சோத்தள நாயக்கர் ௰கூ ௵ துரைத்தனம் பண்ணிக்கொண்டு கர்த்தாக்கள் உத்தரவுப்படியே நடந்துகொண்டு தான தருமத்துடனே துரைத்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

(கு-பு) :—

இது, மதுரைக்கு மேற்கில் சிறிது தூரத்தில் உள்ளதொரு சிறுமலையில் "தவசிமேடு" என்னும் பாளையப்பட்டுப் பாளையக்காரர்களது வமிசாவளியை எடுத்து உணர்த்துவது. இம் மரபில் மூல புருடர் ஃ தலத்தில் தவம் புரிந்து தெய்வ வழிபாடுகள் இயற்றிய காரணத்தால் இத் தலத்துக்குத் "தவசிமேடு" என்ற பேர் வழங்கப் பெற்றிருக்கிறது என்கின்றது. இதில் இறுதியில் சிறிய பகுதி இல்லாமலிருக்கின்றது. 1—12 பட்டாதாரிகளே காணப்படுகின்றனர். மெகென்ஸி புத்தகங்களுள் ஒன்றாய் டைலர் காட்லாக்கு 807-ஆம் எண்ணிலே வருணிக்கப் பெற்றிருக்கிறது. 355–357-ஆம் பக்கம் பார்க்கவும். மிகவும் சிதைந்துள்ளது. மெகென்ஸி பெரிய வால்யும், 159–166-ம் பக்கங்களில் பெயர்த்து எழுதப் பெற்றுள்ளது.

No. 3231. பல்லியப்ப நாயக்கனூர் ஜமீந்தாரி வமிசாவளி.

PALLIYAPPA NĀYAKKANŪR JAMĪNDĀRI VAMIŚĀVAḶI.

Pages, 4. Lines, 40 on a page. Very much Injured. Old. Extent. 120 granthas.

Begins on fol. 6 (b) of the manuscript described under D. No. 3228.

Complete.

A genealogical account of the Zamindar of Palliyappa Nāyakkanur in the Dindigal District. This belongs to the Mackenzie manuscripts and is described under No. 807 (PP. 355—356) of Taylor's Catalogue Vol. III. Restored on pages of 166—174 of big Vol. II.

Beginning :

பல்லியப்ப நாயக்கனூர் ஜமீன்தார் வமிசாவளி கணக்கு—சுபமஸ்து. ஸ்ரீசாலிவாகன சகாப்தம்௵ சூநாடுடுஎ கலியப்தம்௵ சதூரூாஙுயசூ௵ மேற்செல்லாநின்ற நள௵ சிராவண சுத்த பஞ்சமி சுக்கிரவாரமும் அனுஷ நட்சத்திரமும் பாலவகரணமுங்கூடிய சுபயோக சுப தினத்தில்

விஜையநகரப் பட்டணத்தில் மகா ராஜ ராஜ ஸ்ரீ இராயர் அவர்கள் நாளையில் இராயர் அவர்கள் சமஸ்தானத்தின் பேரில் டில்லி பாட்சா மனிதன் வாலு சாயபு அவன் படையெடுத்து இராயர் சமஸ்தானத்துக்கு எதிர் சமரம் செய்ய வந்தபோது நம்முடைய வமிசம் ஆதியில் உண்டானது பெஞ்சை நகரம்.

* * * * * * * *

* * * * * * *

End :

இந்த உத்திரவுப்படிக்கு அதிசாக்கிரதையாக நடந்துகொள்ளுகிறேன். ஷெ குமாரன் சக்கள நாயக்கருடைய பெண்சாதி விசுவ அம்மாள், மேற்படி அம்மாளுடைய குமாரன் பெரியதம்பி பல்லியப்ப நாயக்கன் பட்டத்துக்கு வந்தேன். ௲௨௱௨௰௧ பசலி முதல் (இந்தப் பல்லியப்ப நாயக்கனுர் வமிசாவளிக் கணக்கு ஓலைப் பட்டையத்திலிருந்து எழுதினது).

(கு-பு) :—

இது, பல்லியப்ப நாயக்கனுர் பாளையத்துப் பாளையக்காரர் பல்லியப்ப நாயக்கரது வமிசாவளியை எடுத்து விளக்குவது. இம்மரபு பெஞ்சையிலிருந்து வந்த வல்லாளமாக்கி நாயக்கன் பட்ட முதற் கொண்டு பெருகினது. முற்றுமுள. மெகென்ஸி புத்தகங்களுள் ஒன்ருய் டைலரது கேட்டலாக்கு 807-ஆம் எண்ணில் (PP. 355–360) வருணிக்கப் பெற்றதேயாகும். மெகென்ஸி பெரிய வால்யும், 166–174-ஆம் பக்கங்களில் பெயர்த்து எழுதப் பெற்றிருக்கிறது. மிகவும் சிதைந்திருக்கின்றது. பிழையுடன் உள்ளது.

No. 3232. சுக்காம்பட்டி ஜமீந்தார் வமிசாவளி.
ŚUKKĀMPAṬṬI JAMĪNDĀR VAMIŚĀVAḶI.

Pages, 7. Lines, 41 on a page. Very much Injured. Old. Extent., 182 granthas.

Begins on fol. 8 (b) of the manuscript described under D. No. 3228.

Complete.

A genealogical account of Zamindar's of Śukkāmpaṭṭi in the Dindigal District.

This belongs to the Mackenzie collection Manuscripts and is described under No. 807 (P. 360) of Taylor's Catalogue, Vol. III. Restored (on PP. 174—189) of Big Vol. II.

Beginning :

சுக்காம்பட்டி ஜமீன்தாருடைய வமிசாவளி :—பூர்வ சங்கதிகளுடைய வர்த்தமானம் வமிசாவளிகளுடைய விவரம் பாலமுக்கொண்டு முத்தய்ய நாயக்கனுர் பாளையப்பட்டுக்கு சப௵ சாலிவாகன சகாப்தம்௵ ௲௬௱௫௰௬ கலியப்தம்௵ ௪௲௯௱௩௰௫ இதற்கு மேற்செல்லாநின்ற நள௵

சிராவண சுத்த பஞ்சமி சுக்கிரவாரம் முதல் அனுஷ நட்சத்திரமும் பாலவ கரணமும் கூடிய சுபயோக தினத்தில் பூருவம் எங்கள் பெரியோர்கள் பாலமுக் கொண்டு முத்தைய நாயக்கர் மகா ராஜ மான்ய ஸ்ரீ இராயர் அவர்கள் சமூகத்தில் கொட்டியம் நாகம நாயக்கரிடத்தில் சேவகஞ் சேவித்துக் கொண்டிருந்தார்கள்.

* * * * * * * *

விசுவநாத நாயக்கர் படை வெட்டப்போகிற முன்னுக்கு எங்கள் பெரியவர்களையும் கண்டறக் கோட்டை துர்க்கத்தாரையும் கூடக் கூட்டிப் படை வெட்டுக்கு அனுப்பிவித்தார்கள். அப்போது, அசனல்லிகான் வல வல கான் சர்தார் இரண்டு பேர் மேலேயும் * * * * *

End :

உ௰ ஆம் பட்டம், பாலமுக்கொண்டு முத்தைய்ய நாயக்கர் பட்டத்தில் கம்பெனியாருக்குச் சீமையதிகாரமாயிற்று. அவர்களுக்குத் தேய் பாணம் உதூறா பணம் கட்டிக் கொண்டு வந்ததில் கொஞ்சம் நான் பணஞ் செல்லாமல் சப்திப்பண்ணிப் போட்டார்கள். அப்பாலும் தயவு செய்து விட்டுக் கொடுத்தார்கள். அது முதல் கம்பெனியாருக்கு பணம் உதூறா, பணம் கொடுத்துக்கொண்டு கட்டளையிட்டபடிக்கு நடந்துக்கொள்கிறேன். இந்தச் சுக்காம்பட்டி வமிசாவளி கணக்கு ஓலைப் பட்டையத்திலிருந்து எழுதினது.

(கு-பு) :—

இது திண்டுகல்லுக்கு அருகாமையிலேயுள்ள, சுக்காம்பட்டி ஜமீன்தார்களுடைய வமிசாவளியையும் அவர்களது நிலங்களுக்குரிய வரியினது கணக்கு வழக்குகளையும் எடுத்து உணர்த்துகின்றதாம். இராயர் சமஸ்தானத்திலிருந்த பாலமுக்கொண்ட முத்தைய நாயக்கர் தொடக்கமாக (20) இருபது பட்டக்காரர்களது சரித்திரங்களை விளக்கும். முற்றும் உள்ளது. மெகென்ஸி கலெக்ஷனில் ஒன்றும் டைலர் காட்லாக்கு 807-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றதே. மெகென்ஸி பெரிய வால்யும், 174-189-ஆன பக்கங்களிலே பெயர்த்து எழுதப் பெற்றிருக்கின்றது. பிழையுள்ளது. மிகவும் சிதைந்திருக்கின்றது.

No. 3233. அம்மைய நாயக்கனூர் ஜமீந்தார் வமிசாவளி.

AMMAIYA NĀYAKKANŪR JAMĪNDĀR VAMIŚĀVAḶI.

Pages, 9. Lines, 31—36 on a page. Very much injured. Old. Extent, 350 granthas.

Begins on fol. 12 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

A genealogical account of the Zamindars of Ammaiya Nàyakanūr in Dindigal District,

This manuscript belongs to the Mackenzie collection of manuscripts and is described under 807 (PP. 355 and 360) of Taylor's Catalogue, Vol. III. Restored on PP. 189—204 of big Vol. II.

Beginning :

அம்மைய நாயக்கனூர் ஜமீன்தார் வமிசாவளி :—இந்த அம்மைய நாயக்கனூர் ஜமீன்தார் வமிசாவளி கணக்கு தாமிர பட்டையத்திலிருந்து பார்த்து எழுதினது :—

பூர்வ சங்கதிகளுடைய வர்த்தமானமும் வமிசாவளிகளுடைய விவரமும் பெஞ்சை மாக்கைய நாயக்கர் பாளையப்பட்டு அம்மைம் நாயக்கருக்கு:—சுப ஸ்ரீ சாலிய வாகன சகாத்தம் ௲ஙாடு௰எ௵ கலியப்தம்௵ சதுடுாஙடு௰சூ ௵ இதன் மேற் செல்லாநின்ற நள௵ சிராவண சுத்த பஞ்சமியும் சுக்கிர வாரமும் அனுஷ நட்சத்திரமும் பாலவ கரணமுங் கூடிய சுபயோக சுப தினத்தில் மகா ராஜ மானிய ஸ்ரீ ராயர் அவர்கள் சமஸ்தானத்தில் எங்களுடைய பெரியோர்கள் பெஞ்சை மாக்கைய நாயக்கர் சேவகஞ் சேவித்துக் கொண்டு இருந்தார்கள். அப்படியிருக்கையில் * * *

* * ∘ * * * * *

End :

வீர முத்தம்மாள் குமாரன் வைத்தியப்ப நாயக்கர் உ௰சு ஆம் பசலி வரைக்கும் கடன்உடன் பட்டுப் பணமுஞ் சர்க்காருக்குச் செலுத்துவித்துக் கொண்டு வருகிறேன். பாளையப்பட்டும் அனுபவித்துக்கொண்டு வருகிறேன். கதிரிநாயக்கன்.

(கு-பு) :—

இது, திண்டுகல்லுக்கு அருகில் உள்ள அம்மைய நாயக்கனூர் ஜமீன் தாரிகளுடைய வமிசாவளி முறையாக அவர் அவர்களது பட்டகாலத்தில் நடந்தேறிய பல சரித்திரங்களையும் எடுத்துக்கூறுவதாம். இராயர் சமஸ்தானத்திருந்த "பெஞ்சைமாக்கையை நாயக்கர்" தொடக்கமாக (28) இருபத்தெட்டு பாளையக்காரர்களது சரித்திரம் இதில் விளக்கமாகின்றன. இது மெகென்ஸி கலெக்ஷனில் ஒன்று. டைலர் காட்லாக்கு 807-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. மெகென்ஸி பெரிய வால்யும், 2-ஆவதில் 189-204-ஆன பக்கங்களிலே டைலர் துரையால் பெயர்த்து எழுதப் பெற்றிருக்கிறது. முற்றும் இருக்கிறது. ஆனால் இறுதிப் பகுதியில் ஓர் ஏடு இடம்மாறிக் கடையில் வைத்துக் கட்டப்பட்டிருக்கிறது. ஆதலின் அது இதுபோது 53-ஆம் ஏடாகக் கணக்கிடப் பெற்றுள்ளது. ஆனால், 16-வது ஏடாக இருக்கவேண்டியது. மிகச்சிதைந்தது. படித்தற்கு மிகவும் அரிதாகவிருக்கிறது. பிழைகளிருக்கின்றன. இதற்கடுத்தாப்போல் இப்பகுதிக்குத் தொடர்பில்லாத (3) ஏடுகளும் (3) பக்கம் எழுதப்பெறுமலும் உள.

No. 3234. கொப்பையநாய்க்கனூர் ஜமீந்தார் வமிசாவளி.

KOPPĀIYA NĀYAKKANŪR JAMĪNDĀR VAMIŚĀVAḶI.

Pages, 8. Lines, 26 on a page. Much injured. Old. Extent, 140 granthas,

Begins on fol. 16 (b) of the manuscript described under D. No. 3228.

Complete.

A genealogical account of the race Koppaiya Nāyakkar (near Dindigal). It gives an account how they acquired the Zamins and how they ruled them.

This manuscript belongs to the Mackenzie collection of manuscripts and is described under No. 807 (pp. 355 and 361) of the Taylor's Catalogue, Vol. III. Restored in pp. 204—215 of Vol. II.

Beginning :

இந்தக் கொப்பைய நாயக்கன் வமிசாவளி ஓலைப்பட்டையத்திலிருந்து எழுதினது. பூர்வ சங்கதிகளுடைய வர்த்தமானமும், வமிசாவளிகளுடைய விவரமும், இராமசத்திரப்ப நாயக்கர் பாளையப்பட்டுக்கு.—சுப ஸ்ரீ சா. ச. ௲௩௱௪௰௨ களியுகாப்தம் சதூ௲௨௰௧ ஸ்ரீ மகாராஜ மான்ய ஸ்ரீ இராயர் அவர்கள் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிற முன்னுக்கு எங்கள் பெரியவர் காமவார் கோத்திரத்தில் இராமசத்திரப்ப நாயக்கர் * * * பங்கிபட்டுகோட்டை கிராமத்தில் குடியிருந்து நாட்டாண்மை செய்து கொண்டிருக்கையில் * * * * *

End :

அடியேன் பாக்கிதாரனுய்ப் போனேன். ஆனதால் அடியேன் பேரில் கம்பெனியார் தயவு செய்து காப்பாற்ற வேண்டியது.

(கு-பு) :—

இது, கொப்பையநாயக்கனூர் (திண்டுக்கல் சமீபம்) பாளையப்பட்டு ஜமீன் தாரிகளின் வமிசாவளியை எடுத்துக் கூறுவதாம். இம்மரபு இராயர் சமஸ் தானத்திலிருந்து தென்றிசைக்கு வந்த இராமசந்திரப்ப நாயக்கர் முதற் கொண்டிருக்கிறது. 14 பாளையப்பட்டக்காரரது சரித்திரம் உளது. முற்றும் உள்ளது. இது மெகென்ஸி கலெக்ஷனில் ஒன்றாய், டைலர் காட்லாக்கு 355—361-ஆம் பக்கங்களில் வருணிக்கப் பெற்றதேயாம். மெகென்ஸி துரை பெரிய வால்யும், 2-ஆவதிற், 204–215-ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதப்பெற்றிருக்கிறது. பிழை மலிவு. இப்போது உள்ள இருப்பில் இதன் தொடக்கம் 53-ஆகக் கணக்கிட்ட எட்டில் காணப்படும். இதன் தொடர் இப்போதுள்ள 48-ஆம் எட்டிலிருந்து 50 (b)-ஆம் எடுவரையில் உள்ளது.

No. 3235. நிலக்கோட்டை ஜமீன்தாரி கூளப்ப நாயக்கர் வமிசாவளி.

NILAKKŌṬṬAI JAMĪNDĀRI KŪḶAPPA NĀYAKKAR VAMIŚĀVAḶI.

Pages, 4; Lines, 36 on a page; Much injured; Old; Extent 145 granthas.

Begins on fol. 20 (a) of the manuscripts described under D. No. 3228.

Complete.

A genealogical account of the Zamindar named Kūḷappa Nayakkar of Nilakkottai palaiyam, in Dindigul district, and how this Zamin was attached by the British.

This manuscript belongs to the Mackenzie Collection of Manuscripts and is described under No. 807 (pp. 355 and 361) of the Taylor's Catalogue Vol. III. Restored on pp. 216—223 in Vol. II by Taylor.

Beginning :

நிலக்கோட்டை ஜமீன்தாரி கூளப்ப நாயக்கர் வமிசாவளி. இராயர் சமஸ்த்தானத்தின் மீது பாட்சா தண்டெடுத்துவந்தபோது சமஸ்த்தானம் எடுபட்டுப்போகிற முன்னுக்கு அப்போது சிகப்பு வஸ்த்திரமாய்க்கொண்டு வந்துவைத்து * * * * * அப்போது எங்கள் முன்னோர் பெஞ்சைவால—கோத்திரத்தில் மாக்கள நாயக்கர் அவர்களுடைய கோத்திரத்தாரையும் அழைத்துக்கொண்டுபோய் * * * * * * *

End :

ஷ பணத்துக்காகக் கம்பெனியார் கொடுத்த பணத்தில் வருஷா வருஷம் கொடுத்து வந்ததில் பணஞ் செல்லாமல் பிரமோதூத வருஷம்....;..... பாக்கி நின்றது. அந்தப் பணத்துக்காகக் கம்பெனியார் அமீன்தார்கள் துறைத்தனம் வருஷம் உ௫௯-ஆக ௵ சா௱சயசை.

(கு-பு) :—

இது, நிலக்கோட்டை ஜமீன்தாரி கூளப்ப நாயக்கர் என்றவரது வமிசாவளியை எடுத்துக்கூறுகிறது. 17 பட்டதாரிகளது வரலாறு இதிலடங்கியிருக்கின்றன. முற்றும்உள. இதுபோது ஏடுகள் முன்னவை பின்னவைகளாக விருக்கின்றன. இதன் ஆரம்பம் இப்போது 51-வது ஏட்டுக் கணக்கிட்டதில் காணப்படும். மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்ததாம். டைலர் காட்லாக்கு பக்கம் 355 and 361, 807-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றிருக்கின்றது. மெகென்ஸி பெரிய வால்யும் 2-இல் 216–223-ஆன ஏடுகளில் டைலர் துரையால் பெயர்த்து எழுதப்பெற்றிருக்கின்றது. மிகப் பிழைகளுடனிருக்கின்றது.

No. 3236. கோட்டைக்காடு ஒடுக்கம் கறுப்பத் தம்பிரான் வமிசாவளி.

KŌṬṬIKKĀḌU OḌUKKAM KAṞUPPATTAMBIRĀN VAMIŚĀVAḶI.

Pages, 4; Lines, 27 on a page; Much injured; Old; Extent 85 granthas.

Begins on fol, 22 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

A genealogical account of a Saint Karuppattambirān of Kottaikkāḍu Odukkam in Dindigul taluk.

This belongs to the Mackenzie Collection of Manuscripts and is described under No. 807 (pp. 355 and 361) of Taylor's Catalogue Vol. III. Restored on pp. 223—228 of Vol. II.

Beginning :

௲அ௱௰கூ௵ ஜூன்மீ ௩௨ அடியனூத்து மிட்டா சேகரம்.

கலியுக சகாத்தம் ௪௲௱௩௰௩-க்குச் சாலி-சகம் ௲௬௱௫௰௩ வருஷத்துக்கு மேல் விரோதிக் கிருது வருஷ விசையரங்க சொக்கலிங்க நாயக்கர்ப்பட்டம் அதன்பிறகு அவருடைய பெண்சாதி பட்டம் ஸ்ரீமீனாட்சி அம்மாள் அதிகாரத்தில் ஷை அம்மாள் தமையன் வேங்கடப்பெருமாள் நாயக்கர் திண்டுக்கல் சீமையதிகாரம் செய்கிற நாளையில் திண்டுக்கல்லுக்குச் சேர்ந்த கசுபா அடியனூத்துக் கிராமத்தில் * * * * *

End :

கம்பெனியார் அவர்கள் தயவுசெய்து பழையபடி மானியங்கள் நடத்தும்படியாக உத்திரவு கொடுத்தால் பரதேசிகளுக்கு அன்னதானம் நடந்துவரும். கம்பெனியார் அவர்கள் எங்கள்பேரில் கிருபை செய்யும்படியாய்த், தயவுசெய்து ரட்சிக்கவேண்டியது. இப்போது நடந்துவருகிறது. சர்க்காரிலே புஞ்சைக்குழி................ நஞ்சைக்குழி இவ்வளவும் நடந்துவருகிறது.

(கு-பு) :—

இது, திண்டுக்கல்லுச் சீமையில் கோட்டைக்காடு ஒடுக்கம் என்ற விடத்தில் அடியனூத்து மிட்டா சேகரம் கறுப்பண்ணத்தம்பிரான் என்றவரது மரபினையெடுத்துக்கூறுவதாம். ஷை கறுப்பண்ணத் தம்பிரான் சா. சகம். 1653-ம௵ மேல் விரோதிக்கிருது வருஷம் பட்டமேற்ற விசையரங்க சொக்கலிங்க நாயக்கரது காலத்துக்குப்பின் ஷையார் மனைவி, மீனாட்சியம்மாள் இராச்சியாதிகாரத்தில் அவளது தமையன் வேங்கடபதி பெருமாள் நாயக்கர் என்பவர் திண்டுக்கல் சீமையதிகாரஞ் செலுத்தும் நாளில் அடியனூத்துக் கிராமத்தில் . குளத்துக்கு மேற்றிசையில் காடுகளில், கறுப்பண்ணத் தம்பிரான் (வேளாளர் திருமேனி) இல்லறம் நடத்திவருங்காலையிலே

மூன்று சித்தர்ப் பெரியார் அத்தலத்துக்கு வந்திருந்து இவர்க்கு உபதேசஞ் செய்து, காசியாத்திரையில் கங்கா ஸ்நானம் பண்ணுவித்து அதேயிடத்துக்கு மீட்டும்வந்து அத்திமரமும் ஒரு நீர் ஊற்றும் அமைந்த தலத்தில் தவம் புரியுமாறு கட்டளையிட்டுப்போனார்கள். கருப்பண்ணத்தம்பிரானும் அங்ஙனி ருக்கையிலே, அப்போது இச் சீமையும் மைசூராரது வசத்திலேயாய் இத் தலத்துக்குவந்த இரகுநாத பண்டிதர் இவரது சித்தாதி பெருமைகளை நேரிற்றுமேகண்டுணர்ந்து இவர்க்கு மானியங்கள் பல ஊர்களிலும் அமைத்துக்கொடுத்தவராய்ச் சமாதியும் கட்டுவித்து அபிமானித்தனர் என்ற வரலாற்றினையும், மற்றவைகளையும் உணர்த்துகிறது.

ஸ்ரீ தவசிகள் சருவசித்து வருஷம் தைமீ இரதசத்தமியிலே சமாதி யானார் என்றுங் குறிக்கின்றது. இவருடைய சீடர் மரூர் சீமையில் செட்டித் திருமேனி "பழனிசாமியார்" என்றவர், அவர் பட்டத்தில் அமைந்திருந் தார். அவர் சமாதியாக வேளாளர்த் திருமேனி அருணாசலப் பரதேசி யென்றவர் பிரான்மலையிலிருந்து வந்து ஸ்ரீ பட்டம் ஏற்றிருந்தார். ஸ்ரீ மடத்தில் இதுகாறும், சுப்பிரமணியர், விநாயகர், வயிரவர் என்ற மூர்த் தங்கட்கு நித்தக்கட்டளை பூசை நடந்துவருவதாகவுந் தெரிகிறது. இது, மெகென்ஸி கலெக்ஷனில் சேர்ந்தது. டைலர் காட்லாக்கு 807-ஆம் எண்ணில் (pp. 355 and 361) வருணிக்கப்பெற்றிருக்கிறது. மெகென்ஸி பெரிய வால்யும் இரண்டாவதில், 223–228 பக்கங்களிலே பெயர்த்து எழுதப்பெற்றிருக்கிறது. இதன் ஆரம்பம், இப்போது 20-ஆம் ஏடாக வுள்ளதில் காணப்படும். முற்றும் உள்ளது.

No. 3237. சிலவாரங்குலம் போடி நாயக்கர் வமிசாவளி.

ŚILAVĀRAṄKULAM BŌḌINĀYAKKAR VAMIŚĀVAḺI.

Pages, 5; Lines, 35—37 on a page; Much injured; Old; Extent 85 granthas.

Begins on fol. 24 (a) of the manuscript described under D. No. 3228.

Incomplete.

Same work as that described under D. No. 3166 of Descriptive Catalogue and No. 807 (pp. 355 and 361) of Taylor's Catalogue of Mackenzie Manuscripts, Vol. III.

(கு-பு) :—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 3166-ஆம் எண்ணில் வந்துள்ள தேயாம். இதில் முற்றும் இல்லை. மெகென்ஸி மேனஸ்கிரிப்ட்டைச் சார்ந்தது. டைலரது காட்லாக்கில் 807-ஆம் எண்ணில் வருணிக்கப்பெற்றது. 355 and 361-ஆம் பக்கக் குறிப்பை நோக்குக.

No. 3238. ஈஸ்டு இந்தியா கம்பெனிக்கு விடுத்த விண்ணப்பம்.

ĪSṬU INDYĀ CAMPANIKKU VIḌUTTA VIṆṆAPPAM.

Pages, 2; Lines, 54 on a page; Much injured; Old; Extent 80 granthas.

Begins on fol. 28 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

A petition to the Honourable Company requesting the construction of a certain aṇnaikkattu or dam and repairing the water course—*See* the notes of pp. 361 of Taylor's Catalogue of Mackenzie Manuscripts, Vol. III. Restored on pp. 235—240 in bigger Vol. II.

Beginning :

நாகநாதர் துணை. ம. ராஜமான்ய ஸ்ரீ கம்பெனியார் அவர்கள் சமுகத்துக்கு முதுகுளத்தூர் தாலூகா, சிக்களத் தாலூகா—இவ்விரண்டு தாலூகாவிற்சேர்ந்த தீற்(ர்)ப்பு ஜீவிதம் தர்மாசனம் சத்திரம்—தேவஸ்தானம்/மானியம் * * * * *

End :

கள்ளியடி யுடைப்பிலும் இந்தக் கலுங்கத்தில் அரைவாசி சேர்த்துக் கலுங்கு கட்டித் தண்ணீருக்குப் போக்குவிட்டுக் கமுதைமுதல் களசி வரைக்கும் ? ஆத்து உள்வாயிலிருக்கப்பட்ட மேடுகள் இடைஞ்சல்களைத் துறைகள் கண்பார்த்துத் தாராளமாக் எடுத்துப்போட்டால் இரகுநாத காவேரி உடைகிறதில்லை. தர்மதுரையவர்கள் ஏழைக்குடிகளை இரட்சித்துக் காப்பாற்றுகிற தாய்ச் சித்தத்திலே கொண்டருள கட்டளையிட்டருளவும். இந்தப்படிக்கு நாங்கள் அனைவோரும் எழுதிக்கொடுத்த வாக்குமூலம், கையொப்பங்கள்—இக்குறி—

* * * * * * * * *

ஆகச் சிக்களத்தாலூகா நபி ௩௰௪, ஆகத் தாலூகா நபி, ௪௰௫.

(கு-பு) :—

இது, ஈஸ்ட்டு இண்டியா கம்பெனி துரை மக்களுக்கு திண்டுக்கல்லுக்குச் சமீபத்தில் முதுகுளத்தூர் தாலூகா, சிக்களத்தூர் தாலூகாக்களிலிருந்த மகாஜனங்கள் தங்களுக்கு நிரந்தர நீர்ப்பாசனத்துக்கு உரித்தாக ஓர் அணைக்கட்டை ஏற்படுத்தி, இடையில் மேடுகளை சமனாக்கிக் கொடுக்குமாறுங் குறிப்பித்து விடுத்ததொரு விண்ணப்பமாம். டைலர் காட்லாக்கு 361-ஆம் பக்கம், 807-ஆம் எண்ணில் குறிப்பில் வருணிக்கப்பெற்றதேயாம். மெகென்ஸி பெரிய வால்யும் 2-ஆவதில், 235—240-ஆனபக்கங்களிலே டைலர் துரையால் பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றுளது.

No. 3239. கொண்டம நாயக்கன் தாமிரசாசனம்.

KOṆḌAMA NĀYAKKAN TĀMIRA ŚĀSANAM.

Pages, 2; Lines, 44 on a page; much-injured; Old; Extent 166 granthas.

Begins on fol. 29 (a) of the manuscript described under D. No. 3228.

Incomplete.

A copy of an inscription commemorating grant of a land by one Kumarakondama Nayakkan to a Brahmin of Atrēyagōtram. Kadambi-Paramēsvara Bhattar Ayyaniār son of Aḷḷakarayyaṅgār. This is described under No. 807. pp. 355 and 362 and Taylor's Catalogue. Restored on pp. 243—244.

Beginning :

குமாரகொண்டம நாயக்கன் பூதான சாஸனம். விஜயாப்யுதய
சூசுாஙடயடு. சதுஅாயிசஷூ இதன்மேல்ச் செல்லா
நின்ற விஜய நாம ஸம்வத்ஸரம் சித்திரைமீ வெள்ளிக்கிழமையும் சுக்கிலப்
பட்சத்துப் பஞ்சமியும் ரோஹிணீ நட்சத்திரமும் * * * * *
சுபதினத்தில் * * * இம்முடி பட்டத்துக்குமார கொண்டம
நாயக்கன் புதுக்கரை வெளிக்குப் பிரதி நாமமான குமார கொண்டம சமுத்
திரம் தாராதத்தம் பண்ணினபடி. ஆத்திரேய கோத்திரத்தில் ஆபஸ்த்
தம்ப சூத்திரத்தில் கிடாம்பி அழகர் அய்யங்கார் புத்திரன் பரமேசுவர
அய்யன் கையில் பல தாம்பூல ஹிரண்ய பூர்வகமாகப் பூதானம் பண்ணிக்
கொடுத்தோம். * * * * * *

End :

இந்தப்படிக்கு தாஞதி விக்கிரயம் உங்களுக்கு யோக்கியமாக அக்கிர
காரமும் பட்டவிருத்தியும் தான சாசனமும் பண்ணிக் கொடுத்தோம்.
இந்தப் பிரகாரத்துக்குப் புத்திர பௌத்திர பாரம்பரியமாய் நடக்கவும்
* * * * * * * * * *

(கு-பு) :—

இது, ஆயிக்குடி, குமார கொண்டம நாயக்கர் அவர்கள் ஆத்திரேய
கோத்திரத்து, கிடாம்பி அழகர் அய்யன் குமாரன் பரமேசுவரபட்டருக்குப்
பூதான சாசனம் செய்த வரலாற்றை யெடுத்து விளக்குவதாம். இப்பகுதி
கொண்டு எடுவிடம் மாறிவைக்கப்பட்டு இருக்கிறது. இது மெகென்ஸி பெரிய
வால்யும் (2) ஆவதில் 240—243 ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதப்
பெற்றுள்ளது. டைலர் காட்லாக்கு 353 and 362-ஆம் பக்கங்களில் 807-ஆம்
எண்ணில் வருணிக்கப் பெற்றதேயாம். முற்றும் உள்ளது. பிழையதிக
முள்ளது. மிகச் சிதைந்தது.

No. 3240. கன்னிவாடி அப்பைய நாயக்கர் அவர்கள் கதிரி நரசிங்கப்பெருமாளுக்கு செய்த காணியாட்சிப் பட்டையம்.

KANNIVĀḌI APPAIYA NĀYAKKAR AVARKAḶ KADIRI NARAŚIṄGAPPERUMĀḺUKKU ŚEYDA KĀṆIYĀṬCIP PAṬṬAIYAM.

Page, 1; Lines, 33 on a page; much injured; Old; Eextent 22 granthas.

Begins on fol. 30 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

A Copy of an inscription on Copper plate from a Pāllaiyakkār of Kannivādi named Malaiāṇḍi Appaiya Nāyakkar to the temple of Kadiri Naraśingapperumal.

This manuscript belongs to the Mackenzie Collection of Manuscripts and is described under No. 807, pp. 355 and 362 of Taylor's Catalogue, Vol III. Restored on pp. 243-244 of Vol. II.

Beginning :

சொஸ்திஸ்ரீ விசையாப்புயதிய சாலிவாகன சகாப்தம் ௲௫௱௨௰௬, கலியுக சகாப்தம் ௪௲௭௱௫ இதன்மேற் செல்லாநின்ற இரத்தாட்சி ௵ ஆவணி ௴ ௰௨, ஸ்ரீமதி கன்னிவாடிக்கதி.தியாகிய மகாராச மானிய ஸ்ரீ மலையாண்டி அப்பைய நாயக்கர் அவர்கள் கதிரி நரசிங்கப்பெருமாள் கோவில் * * * * காணியாட்சி பட்டயம் எழுதிக்கொடுத்தபடி. காணியாட்சி பட்டையமாவது. * * * * *

End :

இந்தப்பிரகாரம் தனக்குக் கோவில் முதக் கொத்துக்காகக் கோவில் சம்பளமும் நஞ்சை புஞ்சை நிலமும் விட்டுக்கொடுத்திருப்பதனாலே என்றென்றைக்கும் ஆசந்திரார்க்கமாய்ப் புத்திர பௌத்திர பரம்புரையாய்க் கல்லுங் காவேரியும் புல்லும் பூமியுமுள்ள வரைக்கும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு சுகமேயிருக்கவும். ஸ்ரீராமா வென்றும் மலையாண்டி அப்பைய நாயக்கர் அவர்களென்று ஒப்பம். அசலுக்குச் சரியான நக்கல்.

(கு-பு) :—

இது கன்னிவாடி ஜமீன்தாரி மலையாண்டி அப்பைய நாயக்கர் அவர்கள் கதிரி நரசிங்கப்பெருமாளுக்குப் பூதானம் வழங்கியதை எடுத்து விளக்குவதாம். முற்றும் உள்ளது. மெகென்ஸி பெரிய வால்யும் 2-ஆவதில் 243—244-ஆம் பக்கங்களில் பெயர்த்து எழுதப்பெற்றிருக்கிறது. டைலர் காட்லாக்கு 807-ஆம் எண்ணிலே வருணிக்கப்பெற்றிருக்கிறது. 355 and 362-ஆம் பக்கங்களிலே பார்க்கவும்.

No. 3241. தேவாரம் பாளையப்பட்டு பெரிய முத்துசாமி நாயக்கர் வமிசாவளிக் கணக்கு.

TĒVĀRAM PĀḶAIYAPPAṬṬU PERIYA MUTTUŚĀMI NĀYAKKAR VAMIŚĀVAḶI KAṆAKKU.

Pages, 2; Lines, 41 on a page; much injured, Old ; Extent 68 granthas.

Begins on fol. 31 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

A genealogical account of the Zamīndar of Tēvāram Pāḷaiyappaṭṭu.

This belongs to the Mackenzie Collection of Manuscripts and described under No. 807. on pp. 355 and 362. of Taylor's Catalogue, Vol. III. Restored on pages, 244-248 of Vol. II by Taylor.

Beginning :

தேவாரம் பாளையப்பட்டு பெரிய முத்துசாமி நாயக்கர் வமிசாவளிக் கணக்கு.

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் ௲௬௱௰௭-ஹு, கலி—சகம், ௪௲௭௱௬௰௬ இதன்மேற் செல்லாநின்ற பிரமோதூத வருஷத்தில் என் முன்னோர்களாகிய முதலாவது பட்டக்காரர் பெரிய முத்துசாமி நாயக்கர் வடக்கே இராஜஸ்ரீ டில்லி பாச்சா சமஸ்த்தானத்தில்.

* * * * *

End :

அந்தப்பெண்ணை நமக்கு விவாகஞ் செய்து கொடுக்கிறீர்களா அல்லது நாம் பலாத்காரமாய் எடுத்துக்கொள்ளுவோமா ? யென்று கேட்டபோது அது காரியம் நாளை பேசிக்கொள்ளலாம் என்று சொல்லிப்போட்டு.

(கு-பு) :—

இது, தேவாரப் பாளையப்பட்டு ஜமீன்தாரி, பெரிய முத்துசாமி நாயக்கரை முதற்கொண்டு பெருகிவரும் தமது வமிசாவளியை எடுத்து விளக்கும் முறையில் அமைந்திருக்கிறது. இப்பிரதி முற்றுப்பெறவில்லை. டெலர் காட்லாக்கு, 355—362-ஆன பக்கங்களில், 807-ஆம் எண்ணிலே விருணிக்கப் பெற்றிருக்கிறது. பெரிய வால்யும் 2-ஆவதில் 244—248-ஆன பக்கங்களிலே பெயர்த்தெழுதப்பெற்றிருக்கிறது. பிழையும் சிதைவும் உள. இதன் ஏடு தலைகீழாக வைத்துக் கட்டப்பெற்றிருக்கிறது. இதன்பின், ஓர் ஏடு எழுதப்பெறுமலிருக்கிறது.

No. 3242. கொம்பை பாளையப்பட்டு திருமலைராயப்பெருமாள் தல புராணம்.

KOMBAI PĀḶAIYAPPAṬṬU TIRUMALAIRĀYAPPERUMĀḶ TALAPURĀṆAM.

Pages, 7; Lines, 29-32 on a page; much injured, Old; Extent, 150 granthas.

Begins on fol. 32 (a) of the manuscript described under. D. No. 3228.

Complete.

The local legend of the fame of Kombai pāḷaiyappaṭṭu near to Dindigul. Belongs to the Mackenzie Manuscripts and is described under No 807. (pp. 355-362) of Taylor's Catalogue, Vol. III. Restored by Taylor on pp. 249-256, Vol. II of Mackenzie Manuscripts.

Beginning :

திண்டுக்கல் வகைராவைச் சேர்ந்த கொம்பை பாளையப்பட்டு திருமலை ராயப்பெருமாள் ஸ்தல புராணம்.—

சுவஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் சூசாசமு கலி—சகா—சதூநா அமுகளூ இதன்மேற் செல்லாநின்ற உருதிரோத்காரிஷூ வைகாசிமீ பஞ்சமி உத்தர நட்சத்திரமும் அமிருத யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் திண்டுக் கல் வகையராவுக்குச் சேர்ந்த "கொம்பை பாளையப்பட்டு திருமலைராயப் பெருமாள்" தல புராண வரலாறு உண்டான விவரம் என்னவென்றால்

* * * * * *

End :

ஸ்த்தானீகனுக்கு வருடா வருடம் திருவிழாவாகி மற்றப் பதினோராம் நாள் வல்லக்குக் கொடுத்து மேளம் கட்டியங்களுடனே வீட்டுக்கு அனுப்பி வைத்து அதுமுதலாய் நெடுகவும் நடந்துவருகிறது. இதேபேன்ரக்கு இதுவரைக்கும் திருவிழாவும் நடத்திவருகிறோம்.

(கு-பு) :—

இது, கொம்பை (இராமகிரி) பாளையப்பட்டு ஆட்சிக்குள்ள திருமலை ராயப் பெருமாள் ஸ்தல புராணத்தையும், பாளையக்காரரது வரலாற்றை யும் எடுத்து விளக்குகின்றது. இத்தலத்து விஷ்ணுமூர்த்தி நாரதரால் கோனேரி தீர்த்தமும் உண்டாக்கிப் பிரதிஷ்டிப்பிக்கப் பெற்றவர் அகத்திய ராலும் பூசிக்கப்பெற்றவர். பின், திருமலைராயப் பெருமாள் இப்பாளையத் துக்கு முதற் பட்டக்காரராம் அப்பாச்சி சீதையக் கவுண்டன் இராமக்கன் மலைக்குக் கீழ்ப்பாரிசம் 4 நாழி தூரத்தில் சாலமலைக்கு அருகிலே ஊருண் டாக்கினர். கோயிற்திருப்பணிகளையும், முற்றுவித்தவராய்ப் பூவலயத்தாத னைப் பூசைசெய்துவருமாறு கட்டளையிட்டனர். அப்போதே கொம்மை(யை) ஊரும் உண்டாக்கினர். அதையும் புலிக்குத்தி கிராமத்தையும் கோயிலுக்கு மானியமாகக் கொடுத்தார். இத்தலம் திருப்பதிக்கு இரண்டாவது தலமாக

எண்ணப்பட்டு வருகிறது. மற்று, 8-ஆவது பட்டக்காரர், 19ஆம் பட்டக்காரர் இவ்விருவர் காலத்தும், இத்தலத்துக்குப் பல திருப்பணிகள் செய்யப்பட்டிருப்பனவாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விருவரைத்தவிர்த்து மற்றப் பட்டக்காரரது வரலாறுகள் ஒன்றும் இதில் விளக்கப்பட்டிலது. முற்றும் உளது. மெகென்ஸி புத்தகங்களுள் ஒன்ருகும். டைலர் காட்லாக்கு 807-ஆம் வண்ணிலே வருணிக்கப்பெற்றிருக்கிறது. 355, 362-ஆம் பக்கங்களை நோக்குக. மெகென்ஸி பெரியவால்யும் (2) ஆவதில், 249–256-ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதப்பட்டுளது.

No. 3243. தேவாரம் பாளையப்பட்டு அரங்க நாயக்கர் தலபுராண வரலாறு.

TĒVĀRAM PĀḶAIYAPPAṬṬU ARAṄGA NĀYAKKAR TALA PURĀṆA VARALĀṚU.

Pages, 4. Lines, 30 on a page, much-injured, old ; extent, 80 granthas.

Begins on fol. 35 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

The local legend of the Vaiṇava fame of Raṅga Nāyākar in the Tēvāram paḷaiyapaṭṭu in Dindigal province. Belongs to the Mackenzie manuscript and is described under No. 807. (pp. 355,362) of Taylor's Catalogue, Vol. III. Restored on Pages of 256-260 of Mackenzie Vol. II.

Beginning :

தேவாரம் பாளையப்பட்டு ரங்க நாயகர் தலபுராண வரலாறு.

சுவஸ்திஸ்ரீ சாலிவாகன சகாத்தம் ௲சாருயிரு, கலியுக சகாத்தம் சதூநாகூயிசு௵. இதன்மேற் செல்லாநின்ற . . . . ௵ . . . . . சுக்கிரவாரமும் அமிருதயோகமுங் கூடிய சுபதினத்தில், திண்டுக்கல் வகையராவுக்குச் சேர்ந்த தேவாரம் பாளையப்பட்டு ரங்கநாயகம் தலபுராண வரலாறு, உண்டான விவரமும் என்னவென்றுல்— "தேவாரம்," என்கிற நாமகரணத்தை உடைத்தாயிருக்கிற இராசதானிக்கு மேற்கே, (2) இரண்டு நாழிகை வழியில் வராககிரிமலைச்சார்பாகிய மலையடிவாரத்தில் முன் ஆதியில் குளிர்ந்த பூஞ்சோலையாயிருந்தது.

End :

முன் நடந்துவந்தபடி தருமமும் அபிஷேகமும் முதலான திருவிழாவும் நடத்திவைத்தால் அப்போது வெள்ளாண்மையும் மழையும் தாற்வில்லாமல் வருஷித்துச் சிறிது சுபிட்சமாகச் செய்கிறேம் என்று உத்தாவாகிறது. இப்படியான தலபுராண வரலாறு.

(கு-பு) :—

இது, தேவாரம் பாளையப்பட்டில், அரங்கநாதர் தலபுராணத்தைத் தெரிவிக்கிறது. முற்றும் இருக்கிறது. மெகென்ஸி கலெக்ஷனிற் சார்ந்தது. டைலர் காட்லாக்கு 355, 362-ஆம் பக்கங்களில் 807-ஆம் எண்ணில் குறிப்பில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. டைலர் தொரையால் மெகென்ஸி பெரிய வால்யும், 256—260-ஆன் பக்கங்களில் பெயர்த்து எழுதப்பட்டிருக்கிறது.

No. 3244 தேவாரம் பாளையப்பட்டு சோலைமலை அழகர் தல புராண வரலாறு.

TĒVĀRAM PĀḺAIYAPPAṬṬU ŚŌLAIMALAI AḺAKAR TALA PURĀṆA VARALĀṞU.

Pages, 2. Lines, 32 on a page, much-injured, old, extent, 42 granthas.

Begins on fol. 36 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

An account of the temple of god Viṣṇu, Ṣōlaimali alakar at Tirumālirunjōlai Tēvāram pāḻaiyappaṭṭu near Madura. Belongs to the Mackenzie collection of manuscripts and is described under No. 807, of Taylor's Catalogue (pp. 355, 362) Vol. III. Restored on pages 260—262 of Mackenzie Vol. II.

Beginning :

திண்டுக்கல் வகையராவுக்குச் சேர்ந்த, தேவாரம் பாளையப்பட்டு சோலைமலை அழகர் தல புராண வரலாறு கேள்வியின் விவரம் என்னவென்றால் :—

End :

கம்பெனியார் திட்டம் பண்ணினபடிக்கு நடத்திவிச்சுக் கொண்டும் யாசக [பறபத்தி] (விருத்தி) செய்து விசேட தினங்களையும் நடப்புவித்து வருகிறோம்.

(கு-பு) :—

இது, தேவார பாளையப்பட்டுக்கு உள்ளிருக்கும் திருமாலிருஞ் சோலைமலையிற் கோயிற் கொண்டிருக்கும் அழகர் கோயிலின் வரலாற்றை எடுத்துக் கூறுகிறது. முற்றும் இருக்கிறது. இது மெகென்ஸி மேனஸ்கிருப்ட்ஸைச் சார்ந்ததாய் டைலர் துரை காட்லாக்கு 355, 362-ஆம் பக்கங்களில் 807-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப் பெற்றுள்ளது. மெகென்ஸி பெரிய வால்யும் 2-ஆவதில் 260—262-ஆம் பக்கங்களிலே பெயர்த்து எழுதப் பெற்று உள்ளது. மிகவும் சுருக்கமானது. பிழையுளது.

No. 3245. உத்தம பாளையம் காளத்தீசுவரர் தல புராண வரலாறு.

UTTAMA PĀḶAIYAM KĀḶATTĪŚVARAR TALAPURĀṆA VARALAṞU.

Pages, 5. Lines, 32 on a page, much-injured, old, extent, 12, granthas.

Begins on fol. 37 (b) of the manuscript described under D. No. 3222.

Complete.

Account of the fame of Kāḷaṭṭīśvarar in Uttamapāḷaiyam of the Dindigal district.

This belongs to the Mackenzie's manuscript and is described under D No. 807, pp. 355 and 363 of Taylor's Catalogue, Vol. III. Restored by Taylor on pages 262-268, in Mackenzie Vol. II.

Beginning :

உத்தமபாளையம் காளத்தீசுவரர் தலபுராண வரலாறு :—

சுவஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம்.............கலியுக சகாப்தம் ....இதன்மேற் செல்லா நின்ற.................ஷூ சுக்கிரவார தினத்தில், திண்டுக்கல் வகையராவுக்குச் சேர்ந்த உத்தம பாளையம் துக்குடி கசுபாவிலிருக்கிற காளத்தீசுவரர் சுவாமி தலபுராண வரலாறு என்னவென்றால்... ....உத்தமஞ் சூழ்ந்த கங்கைய நாயக்கர் பாளையத்தில் பக்த பிரியனாகிய காளத்தீசுவர சுவாமி பிச்சக்கணக் கனுக்காகத் திருக்காளத்தியிலிருந்து எழுந்தருளிய திருக்காளத்தீசுவரன் ....ஞானம்பிகை அம்மன், திருவிளையாட்டமான வரலாறு ஏதென்னில் :—

End :

சுவாமி சன்னதிக்கு முன்பாக ஒரு நதி. அதன் பேர் சுரபி நதி. முக்காத வழி உத்தரவாகிணீ, ஆனதால் காசீ நதிக்குச் சமானம். இந்த நதியிலே தகனம் பண்ணின பிரேதத்தின் சிரசு வெடிக்கிறதில்லே.

(கு-பு) :—

இந்நூல், திண்டுக்கல்லுக்குச் சமீபத்தில், உத்தமபாளையம் காளத் தீசுவரரது தலவரலாற்றை யெடுத்துரைக்கின்றது. இப்பாளையத்தில் கணக்கு எழுதும் பக்தர் பிச்சக்கணக்கர் அவர்களுக்குத் திருக்காளத் தீசுவரர் இத்தலத்தில் ஸாந்நித்தியமாய்த் தரிசனம் கொடுத்ததாக அதுமுதல் இத்தலம் பிரசித்தமாகியது என்கிறது. முற்றும் இருக்கிறது. மிகச் சிதைந்துளது. மெகென்சி புத்தகங்களில் ஒன்றாய் டைலரது காட்லாக்கு 355—363-ஆன பக்கங்களில் 807-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப்பெற்றதேயாம். மெகென்ஸி பெரிய வால்யும், 262—268, பக்கங்களிலே காபி செய்து வைக்கப்பெற்றிருக்கிறது. மிகப் பிழையுள.

No. 3246 உத்தமபாளையம் பூர்வீக வரலாறு.
UTTAMAPĀḶAIYAM PŪRVĪKA VARALĀṞU.

Pages, 4 Lines; 36 on a page ; much-injured, old ; extent, 110 granthas.

Begins on fol. 40 (a) of the manuscripts described under D. No. 3228·

Complete.

Account of the different fames in the Uttamapāḷaiyam. Belongs to the Mackenzie manuscripts and is described under No. 807 of Taylor's Catalogue pp. 355–363, Vol. III. Restored by Taylor on pp. 268–274 of Mackenzie. Vol. II.

Beginning :

திண்டுக்கல் வகையராவுக்குச் சேர்ந்த உத்தமபாளையம் துக்குடி கசுபா. உத்தமபாளையம் பூர்வீகத்தில் உண்டான முகாந்திரம். விசாரணையினாலும் கேள்வியினாலும் கேட்டு எழுதப்பட்ட விபரம் என்னவென்றால் * * *

End :

புதுப்பட்டிக்கு மேற்கு முன்நத்தத்தில் ஒரு கல் செக்கு இருக்கிறதாகவும் யாவர் ஒருவர் அதைப் பார்க்கவேணும் என்று மனதில் நினைத்துக் கொண்டு போனால் அவர்கள் கண்ணுக்குத் தோற்றப்படுகிறதில்லை. அந்த மார்க்கத்தில் யாவர் ஒருவர் சுவாகமாய் வந்தால் அவர்கள் கண்ணுக்குத் தோற்றப்படுகிறதுண்டு. அதை மறுபடியும் பார்க்கவேணும் என்றால் நாலடி அப்புறப்பட்டுத் திரும்பிப் பார்த்தால் அவன் கண்ணுக்குத் தோற்றப் படுகிறதில்லையாம். இப்படி பூர்வசங்கதி வர்த்தமானம்.

(கு-பு) :—

இது, திண்டுக்கல்லுக்குச் சமீபத்தில் உள்ள உத்தமபாளையம் எனும் ஊர் உண்டான ஆதி வரலாற்றை யுணர்த்துவதாம். பஞ்சபாண்டவர் தம் வனவாசத்தில் இத்தலம் மிக அழகாயிருந்து உத்தமமாகவிருந்ததுபற்றி மிகவும் உவப்புடன் வசித்திருந்தனர். அதுமுதல் "உத்தமம்", எனப் பேர் வாய்ந்தது. இதில், முன்னம் ஒரு பாளையக்காரன், கல்லையதாச நாயக்கன் ஆட்சிபுரிந்து அரண்மனை கட்டிக்கொண்டிருந்தான். ஒரு சந்நியாசியுடன் சிநேகம் வைத்திருந்தோர். ஷ நாயக்கரை மதுரை சமஸ்த்தார் இவரிடமிருந்துவந்த ஒரு குதிரையைக் கொள்ளவிரும்பிக் கங்கை நாயக்கர் பாளையக்காரரைத் தாண்டிப் போர்புரியச்செய்ய, கல்லைய நாயக்கனுடன் (3) வருடம் வரை போர்புரிந்தார். அது காரணமாக, "உத்தமஞ் சூழ்ந்த கங்கைய நாயக்கர் பாளையம்", என்ற பேரும் இத் தலத்துக்கு வந்தது. கல்லையதாசன் ஷ துறவியை இரஸவாதத் தொழிலைத் தனக்குக் கற்றுக்கொடுக்குமாறு நிர்ப்பந்தித்து இறுதியில் குத்திப்போட்டான். அவன் அவரிடமிருந்து நகருடன் அழியுமாறு சாப மேற்றான். துறவியின் சமாதி புதுப்பட்டியில் இருக்கின்றது. கல்லைய தாசன் அபசயப்பட்டு அந்நீலக் குதிரையேறி ஓடிப்போய்த் தன் சம்சாரத்தை

விட்டுவந்த துக்கத்தால் தன் குதிரையையும் தன்னையையுங் கத்தியாற் குத்திக்கொண்டு இறந்துபோனான். நீலகண்டேசுவரர் கோவில் கல்லைய தாசனால் ஏற்பட்டதாம், என்பவை முதலான விபரங்கள் இதில் உள. மெகென்ஸி பெரிய வால்யும் 2. ஆவதில் 268—274 பக்கங்களில் பெயர்த்து எழுதப்பட்டிருக்கிறது. டைலர் காட்லாக்கு 355, 363 பக்கக் குறிப்பில் வந்துள்ளது. மிகச் சிதைந்தது. பிழைகள் உள.

No. 3247. உத்தமபாளையம் காளத்தீசுவரர் கோவில் சிலாசாசனம்.

UTTAMAPĀḶAIYAM KĀḶATTĪŚVARAR KŌYIL ŚILĀŚĀSANAM.

Pages. 2. Lines, 34 on a page, much-injured. old, extent, 30 granthas.

Begins on fol. 42 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

Inscription on stone in the temple of god Śiva Kāḷahastīśvarar in the Village of Uttamapāḷaiyam. Belongs to the Mackenzie Collection of manuscripts and is described under No. 807pp. 355–363 of Taylor's Catalogue, Vol III. Restored by Taylor, on pp. 274 and 275 in Mackenzie Vol II.

Beginning :

திண்டுக்கல் வகையராவுக்குச் சேர்ந்த உத்தமபாளையம் துக்குடி கசுபா காளஹஸ்தீசுவரர் கோவில் சந்நிதிக்கு முன்பாகவிருக்கிற சிலாசாசனத்தின் நக்கல்.............ஸ்ரீமத்து சகலகுண சம்பன்னரான ஸ்ரீகிருஷ்ணராயர், இராமதேவராயர், ஸ்ரீரங்கராயர் காரியத்துக்குச் கர்த்தராகிய விசுவநாத நாயக்கர், முத்து வீரப்ப நாயக்கர், திருமலை நாயக்கர், சொக்கலிங்க நாயக்கர், ரங்க கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கர், மங்கம்மாள் அவர்கள் பிருது வீராச்சியம் பண்ணியருளாநின்ற கலியுக சகாப்தம் சதுளாகூ௰சஞ௲ சாலிவாகன சகாப்தம் ௲சாயிரு௲ இதன்மேற் செல்லாநின்ற ஸ்ரீமுகஸ்ரீ ஆடிமீ அஉ ஞாயிற்றுக் கிழமையும், அவிட்ட நட்சத்திரமும், சிவயோக சிவகரணம்பெற்ற நாளில்.

* * * * * * * *

End :

இதற்கு விகாதம் பண்ணின பேர்கள் காராம்பசுவையும் மாதா பிதா குருவையும் கொன்ற தோஷத்திலே போவார்களாகவும். அநேக விர்மத்தி அடைந்துபோவாராகவும்.

(கு-பு) :—

இது, உத்தமபாளையத்துத் திருக்காளத்தீசுவரர் சந்நிதிக்கு முன்பாக உள்ளதொரு சிலாசாசனத்தின் பிரதியை அறிவிப்பதாம். இது, பூதான சாஸனமாம். முற்றுமுளது. மிக எழுத்துப் பிழைகள் இருக்கின்றன. மெகென்ஸி பெரிய வால்யும் 2 ஆவதிலே, 274, 275-ஆம் பக்கங்களிலே பெயர்த்து எழுதப்பெற்றிருக்கிறது. டைலர் காட்லாக்கு 355, 363 பக்கக் குறிப்பில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. இதன் ஏடு மிகச் சிதைந்ததாம்.

No. 3248. உத்தமபாளையம் காளஹஸ்தீசுவரர் கோவில் தாமிர சாசனம்

UTTAMAPĀḶAIYAM KĀḶAHASTĪŚVARAR KŌIL TĀMIRAŚĀSANAM.

pages, 2. Lines, 33 on a page, much-injured, old. extent, 50 granthas.

Begins on fol. 42 (b) of the manuscript described under D. No. 3228.

Complete.

A copy of the inscription on copper plate at the temple of Kāḷahastīsvarar in the village of Uttamapāḷaiyam. Belongs to the Mackenzie manuscripts and is described under No. 807, pp. 355—363 of Taylor's Catalogue, Vol III. Restored on pages 276—278 of Mackenzie Vol II. by Taylor.

Beginning :

திண்டுக்கல் வகையராவைச் சேர்ந்த உத்தமபாளையம் துக்குடி கசுபாவிலிருக்கும் காளஹஸ்தீசுவரர் கோவிலிருக்கும் தாம்மிர சாசனத்தின் நக்கல் ஸ்ரீமது மகா மண்டலேசுவரன் ராசாதி ராசன், ராச பரமேசுவரன் ராச மார்த்தாண்டன் * * * * *

* * * * * * * *

ஆனெகொந்திராயர், இராமதேவாயர், ஸ்ரீரங்க ராயருக்குப் பிருதுவீ ராச்சியம் பண்ண நின்ற சாலிவாகன சகாத்தம் சதசுஉாருயிருஞூ, இதன் மேல் விசைய நகரத்தில் வீற்றிருந்த வீரசிம்மாசனரூடராகப் பிருதுவீ சாம்மிராச்சியம் பண்ணியருளாநின்ற காலத்தில் ஆனெகொந்தி உட்சாவடிக்குச் செல்லாநின்ற தாராபுரஞ் சீமையில் * * *

* * * * * * * *

End :

இராசப் பிரசாதமும் தெய்வப் பிரசாதமும் உண்டாவதாகவும். மதுரை சொக்கலிங்கர் மீனாட்சியம்மனைச் சேவித்த பலனை யடைவாராகவும் இந்தத் தாம்மிர சாசனம் எழுதினது முத்தஞசாரி.

(கு-பு.) :—

இது, உத்தமபாளையம் திருக்காளத்தீசுவரர் கோவிலுக்குப் பூதானஞ் செய்து, மதுரை திருமலை நாயக்கரால் தாமிரசாசனஞ் செய்து கொடுத்ததைத் தெரிவிக்கிறது. முற்றும் உள்ளது. மெகென்ஸி பெரிய வால்யும் 2-ஆவதில் 276–278—ஆம் பக்கங்களில் பெயர்த்து எழுதப் பெற்றிருக்கிறது. டைலர் காட்லாக்கு 807-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. 353–363 ஆம்-பக்கம் பார்க்கவும்.

No. 3249. சின்னமன்னூர் பூலாவனேசுவரர் தலபுராண வரலாறு.

CINNAMANNŪR PŪLĀVANĒŚUVARAR TALAPURĀṆA VARALĀṞU.

Pages, 3. Lines, 33 on a page, much-injured; old; extent 75 granthas.

Begins on fol. 43 (b) of the manuscript described under D. No. 3228.

Complete.

A legend of the temple of Pūlāvanēśuvarar at the village of Cinnamanoor....alias Arikīśapuram or Daḷavāy Narasappabhūpālasamuttiram near Uttamapāḷaiyam . . . .

This manuscript belongs to the Mackenzie manuscript and is described under No. 807, pp. 355, 364 of Taylor's Catalogue Vol. III and restored by Taylor on pages 278—281 of Mackenzie Vol. II.

Beginning :

திண்டுக்கல் வகையராவுக்குச் சேர்ந்த உத்தமபாளையம் துக்குடி சேகரம் சின்னமன்னூர் கிராமமான அரிகேசபுரத்துக்குப் பிரதி நாமமான தளவாய் நரசப்ப பூபால சமுத்திரத்தில் "பூலாவனேசுவரர்", "சிவகாமியம்மன்", தலபுராண வரலாறு என்னவென்றால்—

முன்னொரு காலத்திலே மதுரை மண்டல அதிகாரியான "வீரபாண்டிய, விக்கிரம பாண்டிய" இராசாக்கள் இருபேருக்கும் நேத்திரம் பழுதாய் மலினம் வந்தது * * * * * * * *

End :

அதே முறைக்கு மறுநாள் பிரவாகத்தில் பெட்டியில் வந்த சிவகாமியம்மனையும் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகமும் செய்து வைத்தார். அம்மனுக்கு உத்திரபாகத்தில் கூபதாடனமாகப் பாதாள கங்கையும் உற்பன்னமாச்சுது. அதில் அநேக தேவதைகளி ருந்து எடுத்து பிரதிஷ்டை செய்து வைத்தார். அவைகளும் இப்போது இருக்கின்றன. சுவாமியும் அளவுக்கு அளவாய்த்தானே இருக்கிறார்.

சின்னமன்னூர் அக்கிராகாரம் புராதனத்தில் உண்டான வரலாறு என்ன வென்றால்—முன் கர்த்தாக்கள் நாளையில் (யாதினம்) தளவாய் நரசப்பையர் பிறதேசங்களிலிருந்து பிராமணர்களைத் தருவித்து, ஒழுங்காய் இரண்டு சிறகு

களைக் கட்டுவித்து பிராமணர்களைக் குடியேற்றுவித்து ஷ கிராமத்தின் நிலங்களை ஊ௨ பங்கு உண்டாக்கி நாலுபங்குக்கு ஒரு கரையாக முப்பது கரையேற்படுத்திக் கரைமாலை முதலானது ஏற்படுத்திகரை சுவாதீனம் ஒரு செய் நிலமா....முப்பது செய் நிலமாக மானியம விட்டுத் தாரை வார்த்துக் கொடுத்துச் சின்னமனூருக்குப் பிரதி நாமமான "தளவாய் நரசப்ப பூபால சமுத்திரம்", என்று நாமகரணமும் வைத்து இருந்தார். அந்த வகை, கரைமாலை சாதனங்கள் அக்கினி வாதையாய்ப் போய்விட்டன.

(கு-பு): —

இது உத்தமபாளையம் சமீபமான சின்னமனூர் பூலாவனேசுவரரது தல புராண வரலாற்றை யெடுத்து விளக்குவதாம். இவ்வூருக்கு "அரிகேச புரம்," "தளவாய் நரசப்ப பூபால சமுத்திரம்" என்ற இப் பெயர்களும் மறு பெயர்களாக வழங்கப்பட்டு வருவனவாம். மதுரையாதீனம் தளவாய் நரசப்ப பூபாலரால் இவ்வூர் கட்டப் பெற்றதாகும். முற்றும் உள்ளது. இது மெகென்ஸி பெரிய வால்யும் இரண்டாவதில் 278–282-ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றிருக்கிறது. டைல்ரது காட்டலாக்கு 807 ஆம். எண்ணில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. 355–363 பக்கக் குறிப்பை நோக்குக. மிகச் சிதைந்துளது. பிழைகளிருக்கின்றன. இறுதியில் இவ்வூர் உண்டான வரலாறும் விளக்கமாகிறது.

No. 3250. சுரபி நதி வரலாறு.

SURABI NADI VARALĀṞU,

Pages, 2. Lines, 28 on a page. much-injured. old, extent, 45 granthas.

Begins on fol. 45 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

An account of a river of Surabinadi near Kambam Belongs to the Mackenzie collection of manuscript and is described under No. 807, pp. 355, 364 of Taylor's Catalogue Vol. III. Restored by Taylor on pages 282—284 of Mackenzie Vol. II.

Beginning :

திண்டுக்கல் வகைராவுக்குச் சேர்ந்த உத்தமபாளையத்துக் குடிசேகரம் கம்பம் கிராமத்துக்குத் தென் கிழக்கேயிருக்கிற சுரபிநதி வரலாறு :—

கோதைவர்ம ராசாவின் பட்டணமான "கம்பம்", என்கிற கிராமத்துக்குத் தென் கிழக்கு அஞ்சு நாழிகை வழி தூரத்தில் இருக்கிற சுரபி நதி வரலாறு என்னவென்றால்—முன்னொரு காலத்தில் ஷ நதியிருக்கிற தலத்தில் சுந்தரானந்த மூர்த்தியானவர் ஈசுவரனை நோக்கி அநேக நாள் தவசு செய்தார். * * * * * * * *

End :

மேற்படி தீர்த்தத்தில் ஸ்நானமுஞ் செய்துகொண்டு அவ்விடத்தில் சில நாள் பெரியவர்களாயிருக்கப்பட்டவர் வாசஞ் செய்தால் அதில் சிறிது அதிசயங்கள் கேள்விப்படுகின்றன. அர்த்த சாமத்தில பலபல வாத்தியங் களுங் கேள்விப்படுகின்றன. இப்படியான மகத்துவம்.

(கு-பு) :—

இது, உத்தமபாளையத்துக்கு அருகில் "கம்பம்", என்கிற கிராமத்துக்கு ஐந்து நாழிகை வழி தூரத்திற் பிரவசிக்கும் சுரபி நதியின் மகத்துவத் தினையும், அது உண்டான வரலாற்றையும் எடுத்து விளக்குகின்றது. இத் தலம், சுந்தரானந்தர் ஈசுவரனைக் குறித்துத் தவம் புரிந்த இடமாம். அக் காலையில், ஈசுவரன் கட்டளையால் சுரபியென்னும் தேவேந்திரலோகத்துப் பசுவானது இந் நதி வடிவமாக மாறிப் பெருகியது. இத்தலத்துச் சுந்தரானந்தரால் பூசிக்கப்பெற்ற, குழந்தைவேலப்ப சுவாமியானவர், ஷ கம்பம் பட்டணத்துக்கு அதிபதியாம் கோதைவர்ம ராசாவின் கனவிற்றோன்றி ஆலயஞ் சமைக்கச் சொல்லி, அவர் அங்ஙனம் ஆலயஞ் சமைத்து வைத்தார் என்கிறது இதில் விளக்கமுறும். சித்திரை வருடப் பிறப்பு இத்தலத்துக்கு விசேடமாம். மெகென்ஸி பெரிய வால்யும் 2 ஆவதில் 282–284-ஆம் பக்கங்களில் டைலர் துரையால் பெயர்த்து எழுதப் பெற்றுளது. டைலர் காட்டலாக்கு 355, 364-ஆம் பக்கம் 807-ஆம் எண்ணின் குறிப்பிலே வருணிக்கப் பெற்றிருக்கிறது. முற்றுமுள. பிழையுளது.

No. 3251. கம்பங் கிராமம் உண்டான வரலாறு.

KAMBAṄ KIRĀMAM UṆḌĀNA VARALĀṞU.

Pages, 3. Lines 39 on a page. Much injured. Old. Extent, 45 granthas.

Begins on fol. 46 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

Legend of the village called Kambam belongs to the Mackenzie collection of manuscripts, and is described under No. 807, pp. 355, 364 of Taylor's Catalogue. Vol. III. Restored on pp. 285—287 of Mackenzie. Vol. II by Taylor.

Beginning:

கம்பம் என்கிற கிராமம் உண்டான வரலாறு :—முன் புராதனம் இந்தக் கம்பம் என்கிற கிராமம் பாண்டியதேசம். அப்போது பராக்கிரம பாண்டியன் நாளையிலே சின்னக்கம்பம் என்பதாய ஒரு பட்டணம். அந்தப் பட்டணத்துக்குத் தென்பாரிசத்தில் பாதை மார்க்கத்தில் ஒரு அதிசய முண்டாச்சுது.

* * * * * * * * * *

End :

கோதைவர்மராசாவானவர் சின்ன கம்பத்துக்கு வடக்கு 'கம்பம்' என்றொரு பட்டணம் உண்டுபண்ணிக் கோட்டையும் போட்டு அதின் மத்தியில் காசி விஸ்வநாத சுவாமிக்கு கோவிலுங்கட்டிப் பிரதிஷ்டையுஞ் செய்து கம்பராயப் பெருமாளுக்குக் கோவிலுங்கட்டிப் பிரதிஷ்டையுஞ் செய்து இரத உத்சவமுஞ் செய்து * * * * * இவ்வளவும் உண்டு பண்ணி மானியங்களும் விட்டுக் கொடுத்து நடப்புவித்தார்கள். அதே முறைக்கு இதுவரையும் நடந்து வருகிறது.

(கு-பு) :—

இது, கம்பம் என்கிற கிராமம் கோதைவர்ம ராசாவால் ஏற்படுத்தப் பட்டது. இதில் புத்தடியிலே சாமுண்டி தேவதை, அழகிச்செட்டியைத் தான் நேரிற் கையை நீட்டி அழகி போடுமாறு கேட்டு நான்கு கைகளிலும் அணிந்துகொண்டாள். அவ்வழகி செட்டியை நீ பராக்கிரம பாண்டியனிடம் சென்று சாமுண்டி ஆணையிட்டதாகக் கேட்டால் அவர், உனக்கும் அழகி கொடுப்பார் என்றதாக இவ் வரலாறும் பிறவும் விளங்கும். சுருக்க மாகவுளது. டைலர் காட்டலாக்கு 807 ஆம் எண் குறிப்பில் வருணிக்கப் பெற்றுளது. மெகென்ஸி பெரிய வால்யும் 2 ஆவதில் 285–287 பக்கங் களில் பெயர்த்தெழுதப் பெற்றுள்ளது.

No. 3252. கூத்தநாச்சித் தோப்பிற் சந்தை கூடிய வரலாறு.

KŪTTANĀCCIT TŌPPIṞ CANDAIKŪḌIYA VARALĀṞU.

Pages, 1. Lines 27 on a page, Much-injured; old, Extent, 20 granthas.

Begins on fol. 47 (a) of the manuscript described under D. No. 3228.

Complete.

Account of a general market of Kūttanāc cit toppu, near the Surabi river in Kambam Village. Belongs to the Mackenzie Collection of manuscript and is described under No. 807, pp. 355, 364 of Taylor's Catalogue. Vol. III. Restored by Taylor on pp. 287—288 of the Mackenzie. Vol. II.

Beginning :

கம்பத்துக்குத் தென்கிழக்கு, சுரபி நதிக்கு கிழக்கு, கூத்த நாச்சித் தோப்பில் சந்தை கூடிய விபரம் :—

முன் ஆதியில் பாண்டியர் பட்டத்தின் போது ஷை தானத்தில் மனைக் கியமான இடத்தில் சந்தை கூடும்படி செய்து அந்தச் சந்தையில் வேடிக்கை பார்க்க வேண்டியதைப்பற்றி ஷை தோப்புக்குச் சமீபத்தில் இருக்கிற கறட்டின் பேரில் ஒரு அரண்மனையும் உண்டாக்கி அப்பால் அச்சந்தையைப் பிரபல படுத் தும்போது * * * * நாளையில் சிவகிரியிலிருந்து, ஒரு இடை

யப் பெண் மலை வழியாய் ஷெ சந்தையில் மோர் கொண்டு வந்து விற்றுக் கொண்டே வருவாள். அவள் பேர் கூத்தநாச்சி * * * அவள் பேரில் ஷெ தேசத்து இராஜாவானவன் இச்சித்ததாகவும் அதைப்பற்றி அவள் துர்மரணம் அடைந்து போய்விட்டாள்.

* * * * * * * * * * * * *

End :

மேற்படி கறட்டின் மேலே முன் கட்டின மேடையிலிருக்கிறது. அதின் பேர் கூத்தநாச்சி மேடை யென்று வசந்தையாய்ச் சொல்லிக் கொள்ளுகிறது. இப்படியான வர்த்தமானம்.

(கு-பு) :—

இது, கம்பம் கிராமத்துக்கு அண்மையில் சுரபி நதிக்குக் கிழக்கேயிருக்கும் "கூத்தநாச்சி தோப்பு" என்னும் தல விசேஷத்தில், முன் ஓர் அழகிய சந்தைக் கூடுவது வழக்கமாயிருந்தது. அதில் ஒரு இடைச் சாதிப் பத்தினிப் பெண்ணை, அவ்வூர் அரசன் மோகித்து இச்சை கொள்ள, அது காரணமாக கற்புடை.மாது, அந் நாடழியச் சபித்தனள் எனும் இவ்விதி வரலாற்றை விளக்குகின்றது. அம்மாதின் பேரே ஷெ தலத்துக்கு வழங்கப் பெற்றது. மெகன்ஸி திரட்டில் ஒன்றும். டைலரது கேட்டலாக்கு 807-ஆம் எண் 355, 364-ஆம் பக்கக் குறிப்பில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. மெகன்ஸி பெரிய வால்யும், 2-ஆவதில், 287, 288 பக்கங்களில் பெயர்த்து எழுதப்பட்டிருக்கிறது. எழுத்துப் பிழையுமுள.

No. 3253. எரசக்க நாயக்கனூர் பாளையப்பட்டுப் பசுமலை வரலாறு.

ERAÇAKKA NĀYAKKANŪR PĀḶAIYAPPAṬṬUP PAŚUMALAI VARALĀṞU.

Pages, 5. Lines, 38 on a page. much injured. old. extent, 120 granthas.

Begins on fol. 47 (b) of the manuscript described under D. No. 3228.

Complete.

A legendary account of Paśumalai (Cow-mountain) in the Pāḷaiyappaṭṭu of Eraçakkanāyakkanūṟ. Belongs to Mackenzie collection of manuscripts and is described under No. 807, pp. 355, 364 of Taylor's Catalogue Vol. III. Restored on pages 288—294 of Mackenzie restored Vol. II by Taylor.

Beginning :

திண்டுக்கல் வகைய ராவுக்குச் சேர்ந்த யெரசக்க நாயக்கனூர் பாளையப் பட்டுப் பசுமலையினுடைய வரலாறு :—

முன்னொரு காலத்திலே வடக்கே உத்தராதியில் அமராபதி பட்டணத்தில் ஒரு இடையன் அநேகம் பசுக்களைச் சேர்த்துத் தொழுப்போட்டுக் கொண்டு ஷ பசுக்களை மேய்த்து வருகிற நாளையிலே மழை தண்ணீர் அரிதாய் * * * * ஒருவன் தட்சிண பூமியாகிய இந்தக் கம்பகிரியுடைய சாரிபில் வந்து இவ்விடத்தில் அற்புதமாயிருக்கிற மலையும் கானலுஞ் சுனையும் புல்லும் * * * * * * * * * *

End :

அது முதல் இந்த மலைக்குப் பேர் பசுமலை என்றும், பசுமலைத் தீர்த்தம் என்றும் நாமகரணம் உண்டாச்சுது. இப்படி அநேக நாளாய் நடந்து வரப்பட்ட பசுமலை வரலாறு.

(கு-பு): —

இது, எரசக்கநாயக்கனூர் பாளையப் பட்டிலிருக்கும் கம்பங்கிரி அல்லது பசுமலை என்றும் ஆதி வரலாற்றை எடுத்துணர்த்துவதாம். இம்மலைச் சாரல் மிகச் செழிப்பாக விருந்தமை பற்றி இம்மலைச் சாரலில் வடக்கிலிருந்து ஓர் இடைக் கோனூர் வந்து தங்கிப் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கையில், ஓர் நாளில் ஓர் கபிலை (பசு) புலியினிடம் சிக்கிக்கொண்டு தவித்து இறுதியாக, அவ் வேங்கையினிடம், நான் என் சிறு கன்றுக்குப் பால் கொடுத்த பின்னர் சத்தியம் தவறுமல் ஆகாரமாக உன்னிடமே வந்து சேருவேன், தயை செய்து என்னை விடு என்று வேண்டிக் கொண்டு, தன் கன்றிடஞ் சென்று பாலூட்டி, மீண்டும் சத்தியங் குன்ருமல் அவ் வேங்கையினிடம் சென்றது. அப்புலி, கபிலையினது பொய்யாமைக்கு மிக மனம் உவந்து மெச்சிவிட்டு கன்றிடஞ் செல்லுமாறு விடை கொடுத்தது. கைலாயபதி, பிராமணர் வடிவாய்த் தோன்றி தந்திரமாய்ப் பரீட்சைக்கையில், பசு சத்தியத்தையே கடைப்பிடித்திருந்த தாய் வீடு பெற்றது. அது காரணமாக இக் கம்பாத்திரிக்குப் "பசுமலை," என்ற பெயர் வந்தது என்ற இவ்விருத்தாந்தம் இதிலிருந்து வியக்தமாகின்றது. முற்றுமிருக்கிறது. மிகச் சிதைவுற்றிருக்கிறது. பிழையுள. டைலர் காட்டலாக்கு 355, 364-ஆம் பக்கம், 807-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப் பெற்றுள்ளது. மெகன்ஸி பெரிய வால்யும் (2)-ஆவதில் 288, 294 பக்கங்களிலே டைலர் துரையால் பெயர்த்து எழுதி வைக்கப் பெற்றிருக்கிறது. நிற்க, இதன் ஏடுகள் மாறிக் கோக்கப்பட்டிருக்கின்றனவாதலின் இப்போதுள்ள முறையில் 54, 55 (b) ஆக உள்ள ஏடுகளில் காணப்படும்.

No. 3254 கூடலூர் கூடலழகிய பெருமாள் கோவிற் சிலாசாசனம்.

KŪḌALŪR KŪḌALAḺAKIYA PERUMĀḶ KŌVIṞ ŚILĀŚĀSANAM

Pages, 1. Lines 29 on a page, much injured, old, extent, 22 granthas.

Complete.

A copy of the Inscription on stone at the temple of Kūdalaḻakiya perumaḻ in Kūḍalūr. Belongs to the Mackenzie collection of manuscript and is described under No. 807, pp. 355, 364 of Taylor's Catalogue, Vol. III and restored by Taylor, on pp. 294—295 of Manckenzie Vol. II.

Beginning :

திண்டுக்கல் வகையராவுக்குச் சேர்ந்த உத்தம பாளையம் துக்குடி சேகரம் கூடலூர் கிராமத்தில் கூடலழகிய பெருமாள் கோவிலுக்குப் பின்னாலே நாட்டியிருக்கப்பட்ட சிலாசாசனத்தின் நக்கல் :—

சகாப்தம் தூசூாகூயிக ௵ மேற் செல்லாநின்ற கொல்லம் அா சுயிசு ௵ கீலக ௵ ஆவணி ௴ கூஉ ஞாயிற்றுக்கிழமையும் பூருவபட்சத்துத் துவாதசியும், உத்திராட நட்சத்திரமும், சுபயோக கரணமும் பெற்ற நாளிலே நயினார் குலசேகரப்பெருமாள் கூடலூரில் நான்கெல்லைக்கு உட்பட்ட நிலத்தில் * * * * * * * * * *

End :—

ஆகக் கோவில் சூ-க்கும் பிராமண போசனத்துக்குமாக நிலம் உள. இந்த நிலம் இருநூத்திக் கலமும் சந்திராதித்தர் வரைக்கும் நடக்கும்படியாகக் கட்டளையிட்டோம். இந்தப்படிக்கு நடச்கிற விடத்திலே இந்த நிலத்துக்கு யாராவது ஒருத்தர் தடையுடை செய்ததேயுண்டானால் அவர்கள் கங்கைக் கரையிற் காராம் பசுவையும், மாதா பிதாவையும் கொன்ற தோடத்திலே போவாராகவும். இந்தப்படி பெருமாள் கோவில் கல்லிலே போட்டிருக்கிறதென்று அறியவும்.

(கு-பு) :—

இது, திண்டுக்கல் சீமையில் உத்தமபாளையத்துக்கு அருகில் கூடலூர் கூடலழகிய பெருமாள் கோவிலுக்கு உரிய பூதான சாசனத்தை யெடுத்து உரைப்பதாம். ஷை கோயிற் முதலான 6 கோயில்களுக்கும், மற்றும், பிராமண போசனத்துக்குமாக நிலம் விட்டதைத் தெரிவிக்கும். ஆனால் இந்தக் கல்லிலிருந்து இன்னார் வழங்கியது என்பது விளக்கப் பெறவில்லை. முற்றும் உளது. மெகென்ஸி திரட்டியவைகளுள் ஒன்றாய், டைலர் காட்லாக்கு 355—364 பக்கங்களில், 807-ஆம் எண்ணின் குறிப்பால் வருணிக்கப் பெற்றும், மெகென்ஸி பெரிய வால்யும் 2-ஆவதில் 294, 295 பக்கங்களிலே பெயர்த்து எழுதப்பெற்றுமிருக்கிறது. சிதைந்திருக்கின்றது. பிழையுமுள. இது போது இவ் வால்யுத்தின் ஏடுகள் எல்லாம் இடம் மாறிக் கோக்கப்பட்டிருக்கின்றன.

No. 3255. ஆயக்குடி அகோபிலப் பெருமாள் கோவில் சிலாசாசனங்கள்.

ĀYAKKUḌI AHŌBILAP PERUMĀḶ KŌVIL ŚILĀŚĀSANAṄKAḶ.

Paper, 11½ X 9 inches Pages, 46 Lines 26 on a page—Tamil, much injured, old, Extent, 828 granthas.

Complete.

This manuscript is original manuscript to the work described under D. No. 2795 and belongs to the mackenzie collection of manuscript but the Taylor's Catalogue number is not known.

(கு-பு) :—

இது, முன்னர் 2795-ஆம் எண்ணிலே வந்ததுக்கு மாத்ருகையாம். முற்றும் உளது. மெகென்ஸி மேனஸ்கிரிப்ட்ஸைச் சார்ந்ததாம். ஆனால், இப்போது இப்பிரதிக்குறிய டைலரது காட்லாக்கு எண் இன்னதென்று விளங்கவில்லை. ஏடுகள் மிகச் சிதைந்திருக்கின்றது. இதிலே கல் வெட்டுகள், தாமிர சாசனம் இவைகளிருக்கின்றன. ஆயக்குடி, விருபாட்சி, பழனி, சண்முக நதி, இரட்டியம்பாடி, ஐவர்மலை, கீரனூர் முதலான தலத்துத் தேவஸ்தான சிலாசாசனங்கள் எழுதப்பெற்றுள.

No. 3256. இரட்டியம்பாடி பாளையக்காரன் இராம்சுவாமி நாயக்கன் வமிசாவளி.

IRAṬṬIYAMPĀḌI PĀḶAIYAKKĀRAN IRĀMAŚWĀMI NĀYAKKAN VAMIŚĀVAḶI.

Page, 17. Lines, 20 on a page, much injured. eld. extent, 222 granthas.

Begins on fol. 1 (*a*) of the manuscript discribed under D. 640. Vol. II.

Complete.

A genealogical account of a pāḷaiyakkārar named Irāmaśuvāmi Nāyakkar of Irattyampādi pāḷaiyam in Dindigul. This manuscript seems to be a restored copy of the Mackenzie manuscript described under No. 820 of Taylor's Catalogue, Vol. III, p. 299.

Beginning :

கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த திண்டுக்கல் வகையரா இரட்டியம்பாடி மிட்டாவில் இரட்டியம் பாடி பாளையக்காரன் வமிசாவளி :—

இரட்டியம்பாடி இராமசுவாமி நாயக்கர் மிகவும் வணக்கத்துடனே எங்கள் வமிசாவளி வரலாறு தெரியப்படுத்துகிற தென்ன வென்றால் :—

End :

ஆகச்சனம், ௰௩. சீவனத்துக்கு மார்க்கங்கள் இல்லாமல் மிகவும் இளப்பத்துடனே மகா ராஜ ராஜஸ்ரீ கம்பெனியார் அவர்கள் கடாட்சத்திற்குப் பாத்திரனாய் இருக்கிறேன். இப்படிக்கு இரட்டியம்பாடி சப்புத்தி சமீன்தாரி இராமசுவாமி தெய்யைய நாயக்கர் வரலாறு. ௲அ௱௰௬ ஷு எப்ரல்மீ ௨௰ ௨ இராமசுவாமி தெய்யைய நாயக்கன் கையொப்பிதம்.

(கு-பு) :

இது, கோயம்புத்தூர் ஜில்லாவிலே திண்டுக்கல் சமீபம் இரட்டியம்பாடி ஜமீன்தாரி இராமசுவாமி தெய்யைய நாயக்கர் என்பவர் தமது வமிசாவளியை எடுத்துணர்த்தும் முறையிலே யுள்ளது. இதன் வாயிலாக இம்மரபில், மொத்தம் 18 பட்டக்காரர்கள் உளர். ஆனால் இஃதெழுதியவர் தம்மை ஷெ பாளையத்தைச் சேர்ந்துள்ள குப்பம்பாளையத்தில் குடியிருப்பவராகக் குறித்துள்ளார். முற்றும் உள. இது, மெகென்ஸிதுரை திரட்டிய நூல்களைச் சார்ந்ததாய் டைலரது காட்டலாக்கு 820 எண் 299-ஆம் பக்கக் குறிப்பில் வருணிக்கப் பெற்றிருக்கும் பிரதியினைப் பெயர்த்து எழுதி வைக்கப் பெற்றதாம். எழுத்துப் பிழைகளுடன் உள்ளது. முன்பு சிதைந்திருந்து பின்பு ஒழுங்கு செய்யப் பெற்றது.

No. 3257. உடையார்பாளையம் தாலுகா கங்கைகொண்டபுரத்துச் சிலாசாசனங்கள்.

UḌAIYĀR PĀḺAIYAM TĀLŪKKĀ KAṄGAIKOṆḌAPURATTU ŚILĀŚĀSANAṄKAḶ.

Pages 24, Lines 21 on a page, much injured, old. extent 70 granthas.

Begins on fol. 9 (b) of the manuscript described under D. No. 640, Vol. II

Complete.

This contains copies of the Inscriptions on stone in the village of Kaṅkaikoṇḍāpuram, Uḍaiyārpāḷayam Taluk.

This is a restored copy of the manuscript described under No. 820. p. 299 of Taylor's Catalogue, Vol. III.

Beginning :

ஆறுகாட்டுச் சீமையிற் சேர்ந்த (ஒ) உடையார் பாளையம் தாலூகா கங்கை கொண்டபுரத்திலிருக்கும் சிலாசாசனங்களைப் பார்த்து எழுதின நக்கல்கள். தரியாபத்து நிட்டில நாயன் அய்யன் ௲அ௱௰௬ ஷு மார்ச்சுமீ ௰அ௨.

சிங்கதீரத்துக்கு வடக்குப்புறம் காட்டு நடுவிலே யிருக்கிற மண்டபத்துக்கு மேலண்டை மதிலிலே யிருக்கிற சாசனங்கள்.

ஸ்வஸ்தி ஸ்ரீ கோன் நேரின்மை கொண்டான் சோழ மண்டலாதிபதி மும் மண்டலமும் ஆள்வான் எம்மண்டலமும் எகுவான்.

ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு இருபத்து மூன்றுவது செயங் கொண்ட சோழபுரத்து ஆளவந்தார் நாயனுர் கோவிலுக்கு அமுதுபடி நை வேத்தியத்துக்கும் சாயரக்ஷை தீபத்துக்கும் கஞ்சபள்ளி காட்டிலே அஞ்சு காடு புஞ்சை நிலம் தேவதானமாக விட்டோம்.

End :

ஸ்வஸ்தி ஸ்ரீ அகரத்து நாய்ச்சியார் நாயனுர்க்கும், நம்பிகளுக்கும், தர்ம மாக அமுதுபடிக்குக் காலந்தோறும், வேளைக்கு எண்ணெய்க்கு விட்ட தோப்புக் காடு. இந்தத் தர்மத்துக்கு வாகடையார் கல்வெட்டினது மகேசு வர ரட்சை சாஸனத்தின் எழுத்தின் நடுவே போயிருக்கிறது.

(கு-பு) :—

இது, உடையார் பாளையத்துக்கு அருகிலுள்ள கங்கை கொண்ட சோழ புரத்துக் காணும் 14 சிலாசாசனங்களின் பிரதியை எடுத்துக் காட்டுவதாம். சில கல்வெட்டுக்களில் இடையில் எழுத்துக்கள் விடப்பட்டிருக்கின்றன. இது, மெகென்ஸிதுரை திரட்டியவைகளுள் ஒன்றுய், டைலர் காட்டலாக்கு 299-ஆம் பக்கம், 820-ஆம் எண்ணின் குறிப்பால் வருணிக்கப்பெற்றதிலிருந்து பெயர்த்து எழுதி வைக்கப்பெற்ற பிரதியாம். ஏடுகள் எல்லாம் மிகச் சிதை வுற்றிருந்து, பின்பு ஒழுங்குசெய்யப் பெற்றுளது. எழுத்துப்பிழைகள் உள.

No. 3258. விருபாட்சி பாளையம் பன்றிமலை குன்றுவர் சாதி வரலாறு.

VIRŪPĀKṢHI PĀḶAIYAM PANṞIMALAI KUNṞUVAR JĀTI VARALĀṞU.

Pages, 9. Lines 20 on a page, much injured. old. extent, 203 granthas.

Begins on fol. 11 (a) of the manuscript described under D. No. 640. Vol II.

Complete.

An account of the mountaineers residing on the hill of Varāhagiri or panṟimalai in Virūpākṣhi pāḷayam.

This is a restored copy of the manuscript described under No. 820, p. 299 of Taylor's Catalogue of Mackenzie manuscript. Vol. III. Seems to be restored from the work described under No. D. 3174.

Beginning :

திண்டுக்கல் வகையரு விருபாட்சி பாளையப்பட்டுக்குச் சேர்ந்த மலைமேற் கிராமங்களில் இருக்கும் குன்றவர் சாதி விவரங்களாகிய வரலாறு. தரியா பத்து நிட்டில நாயன் அய்யன் தூஅாயிசு ௵ ஜூன்மீ ௰௫௨ தெலுங்கு

பார்த்தெழுதினது. வராக்கிரி யென்னப்பட்ட மலையில் விரூட்பாட்சி சீமைக்குச் சேர்ந்த கிராமங்கள் அஞ்சுக்கு பாச்சலூர், க. பெரியலூர், கண்ணூர், க. வெள்ளலே, க. வடகாடு, க. ஆகக்கிராமம், ரு. குன்றுவர் சாதி யுண்டானது எப்படியென்றால்.

End :

மலே வாசமாயிருக்கிறவர்களில் ஒரு ஊரான் (மற்றொரு) ஊரில் பெண்களைக் கொடுக்கிறதும் வாங்கிக்கொள்ளுகிறதுமாய் வருகிறதில்லை யென்றும், ஒரு வேளேயில் கொடுத்தாலும் அந்தப், பூமியிற் சேராமல் அதே விசாரமாய்ச் செத்துப்போகிறதென்று சொல்லுகிறார்கள். இந்த வரலாற்றைக் குறித்து இனியும் விசாரிக்குமளவில் சவிஸ்த்தாரமாய்த் தெரியப்படலாகும் என்று தோன்றப்படுகிறது.

(கு-பு):—

இது முன்னம் வந்த 3174 ஆம் எண்ணில் குறிக்கப்பெற்ற தெலுங்கு பாஷையில் அமைந்ததை மொழிபெயர்த்து வைக்கப்பெற்றது என்பதாக அறியப்படுகிறது. முற்றும் உளது. மெகென்ஸிதுரை திரட்டியவைகளிற் சேர்ந்ததாய் டைலரது காட்டலாக்கு 820 ஆம் எண்ணின் குறிப்பிற் காணும் பிரதியிலிருந்து பெயர்த்து எழுதிவைக்கப்பெற்றதாகும். 299 ஆம் பக்கம் நோக்குக. முன்பு மிகவும் சிதைந்திருந்து பின்பு ஒழுங்கு செய்யப்பெற்றது. எழுத்துப் பிழைகள் மிகவும் உள. இது குன்றவர் சாதியினது பழக்க வழக்கங்களை யெடுத்து விளக்குகின்றது. மற்றும், அம்மலை பொருள்களுடைய பெயர்களும் உணர்த்தப்பட்டிருக்கின்றன. நிற்க, சண்முகநதி முதலான சில மலையாறுகளுடைய விளக்கமும், இடையில், " குமணன் " என்னும் தமிழ் வள்ளல் பெயரும் பிரஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது.

No. 3259 விரூபாட்சி பாளையப்பட்டு திருமலை பொன்னப்ப நாயக்கன் வமிசாவளி.

VIRŪPĀKṢI PĀḶAIYAPPAṬṬU TIRUMALAI PONNAPPA NĀYAKKAN VAMIŚĀVAḶI.

Pages, 38. Lines, 20. on a page, much injured. Old. Extent, 460 granthas.

Begins on fol. 15 (a) of the manuscript described under D No. 640. T.H.C. Vol. II.

Complete.

A genealogical account of the pāḷaiyakkārar named Tirumalai Ponnappanāyakkan of Virupākṣi pāḷaiyam. It also contains some of the important events of their family history. This is a restored copy of the manuscript described under No. 820. p. 299. of Taylor's Catalogue of Mackenzie manuscript Vol III.

Beginning :

மகா ராஜ ராஜ ஸ்ரீ கர்னல்காலன் மெகென்ஸி சாயபு சர்வேயர் ஜெனரல் இண்டியா துரையவர்கள் 2. சூருக்குத் தரியாபத்து நிட்டலனுயன் அய்யன். ௲அா ௰௬ ஸூ ஜூன்மீ ௰௬உ கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த திண்டுக்கல் வகையரா விருபாட்சி பாளையப்பட்டு ஜமீன்தார் திருமலை பொன்னப்ப நாயக்கன் மிகவும் வணக்கத்துடனே எழுதிக் கொடுத்த எங்கள் வமிசாவளி விவரம் என்னவென்றால், பூர்வத்தில் என் வமிசத்தாராகிய பேர்கள் உத்தரதிக்கிலே அப்பே விருபாக்ஷக்குச் சேர்ந்த என் சர்க்களில் பரம்பரையாக இருக்கும் நாளையில் துலுக்கர் கலியாணம் பண்ணிச் சம்பந்தம் பண்ண நினைத்தபடியினாலேயும் சுற்றி வளைந்து பலாத்காரம் பண்ணபடியினாலே நாங்கள் கம்பளத்தார் நிராகரித்து * * *
* * * * * * * * * *

End :

ஜமீன்தாரியும் நடந்துவரக் கட்டளையாயிருப்பதினாலே எனக்கும் என்னுடைய ஜமீன்தாரி ஜாரியாக வேண்டிக்கொள்ளுகிறேன். திருமலைப் பொன்னப்ப நாயக்கன்.

(கு-பு) :

இது, விருபாட்சி பாளையம் திருமலை பொன்னப்ப நாயக்கர் என்றவர் தமது வமிசாவளியை எடுத்துக் கூறும் வகையினிலமைந்திருக்கிறது. விரிவாகவுள்ளது. இது மெகென்ஸிதுரை மேனஸ்கிருப்ட்ஸ்களுக்குரிய டைலர் காட்டலாக்கு 820 ஆம் எண்ணில் வந்த பிரதியைப் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றதாம். 299 ஆம் பக்கம் குறிப்பை நோக்குக. இம் மரபில் (உக) இருபத்தோரு பட்டக்காரர் இருந்ததாக உள்ளது. மிகப் பிழையுள. 44 ஆம் ஏடு வெற்றேடு.

No. 3260. தமிழ்ப் பண்டைய மன்னர்கள் சக ஆண்டுகள்.

TAMIḺP PAṆḌAIYA MANNARKAḶIN ŚAKA ĀṆḌUKAḶ

Pages, 16, Lines, 34—44 on a page, injured. Old, Extent, 450 granthas.

Begins on fol. 37 (a) of the manuscript described under D. No. 65. Vol. I.

Complete.

A List of the names of Śaka years of the Oldest kings of Tamil Country. It also gives an account of the Various kingdoms, their extent, etc. This manuscript belongs to the Mackenzie Collection of manuscripts and is described under No. 787. pp. 294, 295, of Taylor's Catalogue. Vol. III.

Its name is mentioned as "Dēśanirnaya".

Acc 16331
59 C440

Beginning :

தமிழ்ப் பண்டைய மன்னர்கள் சக ஆண்டுகளும், தேச நிர்ணயமும், கொங்கணி மங்கல் மல்லதேவராயன் சகை ௵ அள யசோராச சோளராயன் சகை ௵ கூாகூ௰க விநயாதித்தியராசன் சகை ௵ கூாகூ௰க விஷ்ணு வர்த்தனராயன் தளவாய் வல்லாளராயன் சகை வருடம் ௲௨௰க

சகை ௵ ௲சாஙு௰ரு வருஷத்தில் கிருஷ்ண ராயர் அண்ணன் நரசிங்க ராயர் தம்பி அச்சுத ராயர் இவர்கள் உன்மத்தூர் தூர்க்கம்வ ாங்கப்படாமல் போய் விட்டார்கள். சகை ௵ ௲சாஙு௰அ ஸ்ரீ கிருஷ்ண ராயருக்குக் கர்த்த ரான வீரண்ண நாயக்கன் அரங்க நாயகருக்குத் தருமம் பண்ணினுன்.

(கு-பு] :

இது, திராவிட தேயத்து ஆண்ட பண்டைய மன்னர்களின் பெயர்களை யும், அவரது சக ஆண்டுகளையும் மற்று சில கர்நாடகதேச விவரம், பாண்டிய தேச விவரம், சோழ தேச விவரம், கொங்கண தேச விவரம் என்றுதியாகச் சில தேச எல்லைகளையும் விவரித்துக் கூறுகின்றது. இதற்குச், "தேச நிர்ணயம்" எனப் பெயர் கூறப்படுகிறது. முற்றும் உளது. இது மெகென்ஸி மேனஸ்கிருப்ட்ஸைச் சேர்ந்ததாய், டைலரது காட்டலாக்கு 787 ஆம் எண்ணிலே வருணிக்கப் பெற்றிருக்கிறது. சிறிது சிதைந்துளது. பிழைகளிருக்கின்றன. இதற்குத் "தேச நிர்ணயம்" என்ற பெயர் அத்துணைப் பொருத்த மில்லதெனத் தோற்றுகிறது.

No. 3261 சந்திர வமிச ராசாக்களும், மற்ற ராஜாக்களும்.

CANDIRAVAMIŚA RĀJĀKKAḶUM MAṞṞA RĀJĀKKAḶUM.

Paper, 13¼″ × 8¼″. Pages, 514. Lines, 20, on a page. Tamil, Good. Old. Extent, 7710 granthas.

Complete.

Same work as that described under D. No. 2768. Vol. VII and seems to be a restored copy of the same (D. 2768.)

The name of the work is mentoined as Karnātakarājākkaḷ carittiram in Taylor's Catalogue No. 2305. P. 34. the Mackenzie's manuscripts Vol. III.

(கு-பு):—

இது முன்னர் 2768-ஆம் எண்ணில் வந்துள்ள பிரதியைப் பெயர்த்து எழுதப் பெற்றதாகும். ஆனுல், அங்கு இதற்குக் "கர்நாடக ராசாக்கள் ஸவிஸ்த்தார சரிதம்", என்பதாகப் பேர் கொடுக்கப் பெற்றிருக்கிறது. நூலா சிரியர் நாராயணன் என்பவர் ஆவர். எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. இதன் மாத்ருகை பிரதி டைலர் காட்டலாக்கு 34-ஆம் பக்கம், 2305-ஆம் எண்ணில் வருணிக்கப்பெற்றிருக்கின்றது.

No. 3262. சிதம்பர ஸ்தல மகிமை
CIDAMBARA ṢTHALA MAGHIMAI.

Paper $14\frac{3}{4} \times 10\frac{1}{2}$ inches. Pages, 8, Lines, 40, on a page. Tamil, much injured. Old, Extent, 200 granthas.

Begins on fol- 1, (a). The other works which are contained in this volume are described from Nos. 3263 to 3282.

Complete.

A legendary Account of Chidambara Sthalam in prose. Some stanzas extracted from different Sthalapurāṇas in praise of Śiva, Tillai Natesar are prefixed. Belongs to the Mackenzie collection manuscripts and is described under 819. P. 380. of Taylors Catalogue Vol. III. It is also restored by Taylor See P. 27—36. Mackenzie restored Vol. III.

Beginning:

சிதம்பரத்து மகிமை சிதம்பர புராணத்தில், அருட் காமக்கோடிப்பாகன், திருவானே, சிதம்பரங்கண்டவர்க்கு முத்தியொரு காலனேத் திருக்காலு முக்காலு முண்மை யீதுண்மை யுண்மையெனச், சகக்காலீதுரைத்தே நெ. ? லகணப்போதிற் சிரமயித்துச் சிதையமுன்னே, இருக்காதி மறை யொழிந்தவிப்பரி சென்ருன் சுருதியெல்லாம் வல்லான். “ ௫ ”

End:

பெரிய புராணம்:—ஆதியாய் நடுவுமாகி யளவிலாவளவுமாகிச், சோதியா யுணர்வுமாகிற் ரேன்றிடப் பொருளுமாகிப், பேதியா வேகமாகிப்பெண்ணு மாய் ஆணுமாகிப்,போதியாய் நிற்குந்தில்லேப் பொது நடம் போற்றி போற்றி.

(கு-பு):

இது சிதம்பரத்தின் மகிமையினே எடுத்துக் கூறுகின்றது. உரை நடையில் அமைந்திருக்கின்றது. இடையிடையே பல புராணங்களிலும் அடங்கியுள்ள சில சிதம்பர விஷயமான பாடல்கள் காணப்படுகின்றன. மெகென்ஸீ புத்தகத்தைச் சார்ந்ததாய் டைலர் காட்டலாக்கு 819-ஆம் எண்ணில் வர்ணிக் கப்பெற்றிருக்கிறது. பெரிய வால்யூம் 3 ஆவதில் 27–36 ஆன பக்கங்களிலே பெயர்த்து எழுதப்பெற்றிருக்கிறது. முற்றும் உளது. சிதைந்திருக் கின்றது. எழுத்துப் பிழைகள் இருக்கின்றன.

No. 3263. வியாக்கிரபுர மகாத்மியம்—சிதம்பரம்.

VIYĀKKIRAPURA MAHĀTMIYAM—CIDAMBARAM.

Pages, 13. Lines, 36, 42 on a page. Tamil and grantha, injured. Old. Extent 340 granthas.

Begins on fol. 6 (a) of the manuscript described under No. D. 3262.

Complete.

A legend relating to Viyakkirapuram, a place near Chidambaram town. This Manuscript belongs to the Mackenzie collection of manuscripts and is described under No. 819. Restored on pages of 36—53 of Mackenzie Restored Vol. III. Some of the Sanskrit stanzas of Cidambaram māhātmyam are found here.

Beginning:

சிதம்பரம் வியாக்கிரபுர மகாத்மியத்தினுடைய கதை.

புலகசனி என்கிற மகா பாபி ஒருத்தன் நாடுகளிலேயிருந்து ஸ்த்திரீ ஹத்தியை, கோஹத்தியை, பிரம்மஹத்தியை இவைகளெல்லாம் பண்ணிப் பணங்களைப் பிடிங்கிக்கொண்டு இருக்குமிடத்தில் ஒரு பிராமணன் அவனோடே வந்து சேர்ந்து அவனுக்குப் புத்தி சொல்லுவான். அது என்னவென்றால் வாரும் பிள்ளாய்! நீ மகா பாபியாகச்சே, வெகு நரகத்தை அனுபவிக்க வேணுமென்று பயத்தைக் காண்பிவித்து

* * * * * * * * *

* * * * * * * * *

End:

மன்னவன் சோழன் மனங்கனி சிறப்பாய் சாத்திய சேனைத் தலைவர்கள் குலத்தில் நாற்றிசையுள்ளோர் நாடாறும் வாழி மங்களத்துடனே மைந்தரைப்பெற்று பொங்கிய செல்வம் பொருந்தியே வாழி நாடக முத்தமிழ் நாடாறும் வாழி. இந்தப்படி வெள்ளாழர் தில்லையம்மன் கோவில் மெய்க் காப்பாளரில் சிவதாழ் வட பண்டாரம் சொற்படி யெழுதினது.

(கு-பு):

இது சிதம்பரத்துக்கு அருகிலேயுள்ள " வியாக்கிரபுரம் " என்றதொரு ஸ்தலத்தின் பெருமையை எடுத்துக்கூறுவதாம். இதன் கடையில் இதற்கு ஆதாரமாக அவ் ஸ்தல புராணங்களிலும் " இச்சிதம்பரம் " " வியாக்கிர புரம் ", என்றவைகளைச் சிறப்பித்துக் கூறும், பல வடமொழி சுலோகங்களும் எடுத்து எழுதப்பெற்றிருக்கின்றன. முற்றும் இருக்கிறது. மெகென்ஸி திரட்டுகளில ஒன்றாய் டைலர் காட்டலாக்கு 380-ஆம் பக்கம், 819-ஆம் எண்ணிலே வருணிக்கப்பெற்றிருக்கிறது. பெரிய வால்யூம் மூன்றுவதில் 36–53 ஆன பக்கங்களிலே டைலர் துரையால் பெயர்த்து எழுதப்பெற்றும் இருக்கிறது. முற்றுமிருக்கிறது. சிதைவுற்றது. பிழைகள் உள.

No. 3264. நீலிவனேசுவரசுவாமி கோவில் சருவமானியம்.

NĪLIVANĒŚUVARAŚUVĀMI KŌVĪL ŚARUVAMĀNIYAM.

Pages, 3. Lines, 34 on a page, much injured. Old. Extent, 66 granthas.

Begins on fol. 13 (a) of the manuscript described under D. No. 3262.

Complete.

Details of the temple of Nīlivanēśuvarar at Tiruppañchili near Turaiyur. Belongs to the Mackenzie collection of manuscripts and is described under 819, pp. 380 and 381 of Taylor's Catalogue, Vol. III. Restored by Taylor on the pages of 54—56 of Mackenzie Vol. III.

Beginning:

நீலிவனேசுவரர் சுவாமி கோவிலுக்குரிய சகல மானியம் திருப்பஞ்சீலி கிராமம் தட்டி சதுசாகூடுகூ.

End :

ஆகச் சில்லரை துசூாடு௰க ௵ * * * இதுவிபரம்.

(கு-பு):

இப்பகுதி, நீலிவனேசுவரர்க்குரிய சருவ மானியம் கணக்குகளையெடுத்துக் கூறுவதாம். முற்றும் உளது. டைலர் காட்டலாக்கு 381-ஆம்பக்கம் 819-ஆம் எண்ணின் குறிப்பில் குறிக்கப்பட்டுள்ளது. மெகென்ஸி பெரிய வால்யும் 3-வது 54–66 பக்கங்களிலே பெயர்த்தெழுதப்பெற்றிருக்கிறது. எழுத்துக்கள் தெளிவாகவில்லை. சிதைவுற்றிருக்கிறது.

No. 3265. திருப்பஞ்சீலி நீலவனேசுவரர் தல வரலாறு (துறையூர்.)

ṬIRUPPAÑCĪLI NĪLAVANĒŚUVARAR TALAVARALĀṞU (TURAIYŪR).

Pages, 2. Lines 39 on a page, much injured. Old. Extent, 30 granthas.

Begins on fol. 14 (a) of the manuscripts described under D. No. 3262.

Complete.

Gives an account of the origin of the Temple of Nilavaneswarar at Tirupañcili in Turaiyur Taluk. Belongs to the Mackenzie collection of manuscripts and is described under No. 819, pp. 380 and 381 of Taylor's Catalogue Vol. III. It is restored on pp. 57–58 of Mackenzie Vol. III.

Beginning :

துறையூர் தாலூகாவைச் சேர்ந்த திருப்பஞ்சீலி நீலிவனேசுவர சுவாமி தல வரலாறுக்கு விவரம்.—ஆதி நாள் முதல், நாளது வரைக்கும் தலம் உற்பத்தியாகி அறுபத்து நாலு சதுர்யுகமாச்சுது. இதுக்குத் தல புராணம் தாக்கல். கருநாடகம் முதல் நுய்யம்பாளேயக்காரர் இருக்கப்பட்ட துறையூர் ஆதீனத்தார் இந்தக் கிராமத்தையும் இதைச் சேர்ந்த பட்டி சமேஉம் தோப்பு சுங்கம் மாவடை மரவடை யெப்பேர்பட்டதும் சருவ மான்யமாக விட்டு இருந்தார்கள். அதுக்குத் தாமிர சாஸனம், சிலாசானம் எங்கள் அண்டையில் இல்லே. * * * * * * *

End :

இப்படிக்கு இரௌத்திரி ஷ்டு வரைக்கும் நடந்து வந்தது. துர்மதி ஷ்டு மகா ராச ராச ஸ்ரீ கம்பெனியார் அவர்கள் முன்னுலே நடந்தபடிக்குக் கிரயம்விட்டு அதில் வருகிற வருமானத்தை உச்சவம் முதலானவைகள் நடத்தி வைச்சார்கள். இது நடந்து வருகிறது. இப்படிக்கு அந்த ஸ்தலம் சுந்தர குருக்கள் எழுதிவைச்ச ஸ்தல வரலாறு.

(கு-பு)—

இது துறையூருக்கருகில் இருக்கும் திருப்பஞ்சீலி நீலிவனேசுவரரது ஸ்தல புராண வரலாற்றை யெடுத்து விளக்குவது. இது மிகப் பழமையான தொரு தலம் என்கிறது. ஆயினும் இக்கோவிலுக்குரிய கல்வெட்டுகள் தாமிர சாசனங்கள் உண்டு, இல்லே என்கிறதைப்பற்றிய யாதொரு தகவலும் தெரியாதென்றும் துறையூர் ஆதீனத்துப் பாளேயக்காரர்கள் யாரும் இத் தலத்துச் சுவாமியை யாதரித்துத் திருப்பணிகளே நடத்தி வந்தார்கள் எனவும், அதில், துறையூர் விசய வேங்கடாசல ரெட்டியார் மிகவும் அபிமா னத்துள்ளார் எனவும் விளக்குகின்றது. இது டைலர் காட்டலாக்கு 380–381 பக்கம், 819-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப்பெற்றும், பெரிய வால்யூம் 57–58 ஆன பக்கங்களில் பெயர்த்தெழுதப் பெற்றும் இருக்கிறது. சுருக்க மாகியது. சிதைந்துளது. பிழையுள்ளது.

No. 3266. தேனூர் சிலாசாஸன நக்கல் (துறையூர் தாலூகா).

TĒNŪR ŚILĀŚĀSANA NAKKAL (TUṚAIYŪR TĀLUK).

Pages, 2. Lines 17 on a page. Much injured, Old. Extent, 25 granthas.

Begins on fol. 14 (b) of the manuscript described under. D. No. 3262.

Complete.

A copy of the inscription on stone in the temple of Ṇandikeśuvarar and Kāmākṣiyamman of Tēnūr, donating some lands to the temple.

This belongs to the Mackenzie collection of manuscripts and is described under No. 819, pp. 380– 381, of Taylor's Catalogue, Vol. III and it is restored on pp. 58–60 of Mackenziēs restored Vol. III.

Beginning:

துறையூர் தாலுகா தேனூர் சிலாசாசனதுக்கு நக்கல் சத்திய ஸ்ரீ ? விசை யாப்ததகா ? சாலிவாகன சகாப்தம் ௵ ௲௬௱௨௰௧ கலியாப்தம் ௵ ௪௲௮௱௮ ௵ இதன்மேற் செல்லாநின்ற சருவசித்து௵ ஆவணிமீ ௨௰௬௨ உத்தராயணத்தில் சுக்கில பட்சத்தில் சத்தமியும் புதன்கிழமையும் அஸ்த நட்சத்திரமும் இந்தச் சுபதினத்தில் துறையூர் சீமை இராச்சிய பாரம் பண்ணின எறம ரெட்டியார் குமாரன் நல்லப்ப ரெட்டியார் துறை இராச்சிய பாரம் பண்ணுகையில் வசப்ப ரெட்டியார் குமாரத்தி பட்டத்துக் காமாட்சி அம்மாள் அவர்கட்கு * * * * * *

* * * * * * * * *

End :

ஆயத்துக்கு மேற்புறம் பிச்சிரெட்டி இலுப்பை தோப்பும் தேனூர் கிராமமும் பட்டத்துக்கு காமாட்சியம்மாள் திருவிளக்குத் தாரை வார்த்து இந்தத் தருமத்துக்கு அழிவுபண்ணினவர்கள் கங்கைக் கரையிற் காராம்பசுவைக் கொன்ற பாவத்திலே போவார்கள்.

(கு-பு):—

இது, தேனூர் நந்திகேசுவரசுவாமி சந்நதிக்கும், காமாட்சியம்மன் கோவிலுக்கும் ஆக விட்ட பூதான தரும சாசனத்தின் பிரதியாம். வசவ ரெட்டியார் குமாரத்தி காமாட்சியம்மாள் என்னு மாதரசியின் காலத்து உம்பளிகை கிராமமான தேனூர் கிராமத்தில் இருக்கின்றது. இத் தருமம் நல்லப்ப ரெட்டியார் என்பவரால் செய்யப்பெற்றது. மெகென்ஸி புத்தகவகையிற் சார்ந்தது. டைலர் காட்டலாக்கு 380—381 பக்கங்களின் குறிப்பினுற் குறிக்கப்பட்டும் மெகென்ஸி பெரிய வால்யும் 3-ஆவதில் 58—60-ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதப்பெற்றும் உளது. முற்றும் உளது. பிழைகள் இருக்கின்றன. சிதைந்துளது.

No. 3267. தேனூர் நந்திகேசுவரசுவாமி கோவில் தல வரலாறு.

TĒNŪR NANDIKĒŚUVARAŚUVĀMI KŌIL TALA VARALĀṞU.

Pages, 2. Lines, 20 on a page. Tamil, much injured. Old. Extent, 30 granthas.

Begins on fol. 15 (a) of the manuscript described under D. No. 3262.

Complete.

A legendary account regarding Nandikēśuvaraśuvāmi temple in the village of Tēnūr, Turaiyur Taluk. The temple is an ancient one. Belongs to the Mackenzie collection of manuscripts and is described under No. 819, pp. 380–381 of Taylor's Catalogue, Vol. III. It is restored on pages 60 and 61 Mackenzie restored, Vol. III.

Beginning :

துறையூர் தாலுக்காவைச் சேர்ந்த தேனூர் நந்திகேசுவரசுவாமி கோவில் தல வரலாறு. ஆதிமுதல் மகா அநாதிஸ்த்தலம். இந்த ஸ்தல புராணத்தில் ஸ்காந்தத்தில் புராணீகமாய்ப் பத்து அத்தியாயத்திலே இதனுடைய மாகாத்துமியம் சொல்லப்படுகிறது. அந்தப் புராணம் பாஸ்கர குருக்கள் வீட்டிலேயிருந்து குமார வேங்கடாசல ரெட்டியார் காலாபத்திலே தெய்வீகமாய்ப் போய்விட்டது. புராண சித்தியாயிருக்கப்பட்ட ஸ்தலமான படியினாலே சோழராசர் இராச்சியாதிபத்தியத்திலே கிராமங்கள் பூமிகள் விட்டு நடப்புவித்தார்கள் என்று பெரியவர்கள் சொல்லக்கேட்டது உண்டு.

End :

* * * * * * * * * * * * * *

கோவிற் கோபுர பிரகாரம் (க) வெளிப் பிரகாரம் (க)ஆகப் பிரகாரம் உ. தெற்குப்பார்த்த வாசல் முன் நிலக் கோபுரம் (க) எங்கள் வம்மிசப்பராம் பரியமாய்ப் பெரியவர்கள் மகா ஸ்தலம் என்று பெரியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டதுண்டு. அதையொழிய ஸ்தலபுராணம் ஆசிரிலே [தயாராக] இல்லே. இது எழுதினது கோவில் கணக்கு சுப்பையன் கையெழுத்து. தரனீகம் பெருமாளய்யன்.

—சிதம்பர குருக்கள்.

(கு-பு) :—

இது துறையூர் தாலுகாவில் தேனூர் நந்திகேசுரசுவாமி கோவில் தல புராண வரலாற்றை உணர்த்துவதாம். இத்தலம் மிகப் புராதனமான தென்றும் ஸ்காந்த புராணத்துள் பத்து அத்தியாயங்களைக் கொண்டுள்ள தொரு பகுதி உண்டென்றும், மற்று, அத்தல புராணம் காலாபத்திலே போய்விட்டதாதலின் இப்பொழுது இல்லை என்றும், ஷை கோயிலுக்கு தேனூர்ச் சருவமானியமாய் வழங்கப்பட்டு வந்தது என்றுங் கூறுகின்றது. முற்றும் உளது. மெகென்ஸி திரட்டிய நூற்களில் சேர்ந்தது. டைலரது காட்டலாக்கு 380–381-ஆன பக்கங்களில் 819-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப்பெற்றும், ரெஸ்டோர்டு வால்யும் 3-ஆவதில் 60—61 பக்கங்களில் பெயர்த்து எழுதப்பெற்றுமிருக்கிறது. சுருக்கமாயுளது. முற்றுமுளது. பிழைகள் காணப்படுகின்றன. சிதைந்துளது.

No. 3268. திருப்பட்டூர்க் கோவில் பிரம்மபுரீசுவரர் பிரம்மபுரீநாயகியம்மன் தல வரலாறு.

TIRUPPAṬṬURK KŌVIL PIRAMMAPURĪSUVARAR, PIRAMMAPURI NĀYAKIYAMMAN TALA VARALĀṞU.

Pages 3, Lines, 28–40 on a page, much injured. Old. Extent, 60 granthas.

Begins on fol. 15 (b) of the manuscript described under D. No. 3262.

Complete :

A legend about the temple of Pirammapūrīsuvarar in the village of Tiruppaṭṭur in Tuṟaiyūr Taluk. It also contains details regarding the villages belonging to the Temple. Its history is said to be found in Skandapurāṇā.

This manuscript belongs to the Mackenzie collection of manuscripts and is described under No. 819, pp. 380–381 of Taylor's Catalogue, Vol. III and it is restored on pp. 62-65 of Mackenzie restored Vol. III.

Beginning :

துறையூர் தாலுக்கா திருப்பட்டூர்க் கோவில் பிரம்மபுரீசுவரசுவாமி பிரம்மபுரிநாயகியம்மன் ஸ்தல வரலாறுக்கு விபரம் :—

பூர்வம் பிரம்ம்தேவர் சிருஷ்டியாய்ப் பிரும்மதேவர் வெகுகாலத் தபசு பண்ணினுர். சிறிது காலத்திற்குப் பிறகு அவரது தபசினுலே பார்வதி பரமேசுவரர் பிரத்தியட்சமானுர்கள். * * * *

* * * * * * * * * * * * * *

End :

இந்தப்படிக்குத் தலத்தார் வேங்கிடாசலய்யன் கணபதி குருக்கள் இதனுலே வித்தியாசமில்லே. இந்தத் தலத்துக்கு ஸ்காந்தத்திலே அஞ்சு அத்தியாயம் ஆசராயிருக்கிறது.

(கு–பு) :

துறையூர் தாலுக்கா "திருப்பட்டூர்" என்னும் ஊரில் உள்ள பிரம்மபுரீசுவரர் கோவில் தல வரலாற்றை யெடுத்துக் கூறுகின்றது. பிரம்மன், சுப்பிரமணியன் இவர்கள் பரமசிவனே வழிபட்ட தலமாம். இக்கோயிலுக்கு ஆதியில் பாலேயூர், பிரம்மகுறிச்சி, வாலேயூர், சண்மங்கலம், மாணங்குடி, திருப்படையூர், ஆவாரைவல்லி, இக் கிராமங்கள் சருவ மானியமாய் வழங்கப்பட்டு வந்தன என்கின்றது. மற்று, இடையிலே இவ்வூர் ஐயனுர்கோவில் வெகு சீர்ணமாய்ப்போன சில கல்வெட்டுகள் உள என்றுள்ளது. இதன் மகிமை ஸ்காந்த புராணம் வாயிலாகத் தெரியவரும் எனவும், இதுபோது ஐந்து அத்தியாயங்களேக் கொண்டுள்ள தொரு பகுதி தயாராக இருக்கிறதென்கிறது. மெகென்ஸி திரட்டுகளில் ஒன்ருய் டைலர் காட்டலாக்கு 380—381-ஆம் பக்கம் 819-ஆம் பக்கம் எண்ணின் குறிப்பில் குறிக்கப்பட்டும், மெகென்ஸி பெரிய வால்யும் 3-ஆவதில், 62—65-ஆன பக்கங்களிலே பெயர்த்து எழுதப்பெற்றுமிருக் கிறது. முற்றும் உளது. ஏடுகள் சிதைந்திருக்கின்றன. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

No. 3269. ஊட்டத்தூர் தேவஸ்தான வரலாறு.
ŪṬṬATTŪR DĒVASTHĀNA VARALĀṞU.

Pages, 6. Lines, 42; on a page, much injured. Old. Extent, 200 granthas.

Begins on fol. 16 (b) of the manuscript described under D. No. 3262.

Complete :

This gives an account of the Temple of Śiva, in Ūṭṭathur of Turaiyūr Taluk. This temple is said to be a very ancient and holy one. This is included in the collections of Col. Mackenzie and bears No. 819 in Taylor's Catalogue and is described in pages 380–382. This is also restored in pp. 65–74 of IV of the restored Volume.

Beginning :

துறையூர் தாலுக்கா ஊட்டத்தூர் தேவஸ்தானம் பசுரத்தினேசுவர சுவாமியார் அகிலாண்டேசுவரி அம்மன் ஸ்தல வரலாறுக்கு விபரம் :—

பூருவம் நைமிசாரண்யவனத்தில் வாசம் பண்ணப்பட்ட சௌனகாதி முதலான இருஷீசுவரர்கள் வாசம் பண்ணுமிடத்தில் ஸ்தல பௌராணிகருக்குச் சிம்மாசனங் கொடுத்துச் சமரபுர க்ஷேத்திரத்தின் மகிமையைக் கொஞ்சம் சொல்லியிருந்தார். அந்தக் கதையை இப்போது ஸவிஸ்தாரமாக எங்களுக்குச் சொல்லவேணும் என்று சௌனகாதி முனீசுவரர்கள் கேட்டார்கள். அப்படி சமரபுரம் என்றும், மந்தர நதீ யென்றும், பிரம்மதீர்த்தமென்றும், வில்வவனம் என்றும் சகல மகிமையையும் மனசிலே தியானம் பண்ணிக்கொண்டு * * *
* * * * * * * * * * * * * .

End :

சாலிவாகன சகாப்தம்௵ தூளாஉயிநட௵, துர்மதி௵ முதல் மகாராசமான்ய ராச ஸ்ரீ இங்கிலீஷ் கம்பெனியார் அவர்கள் * * *
* * * * ஊத்தத்துாறு சருவமானியம் கிராமம் நஞ்சை புஞ்சை சொர்ணதாயம் உட்பட கும்பினி அடி உயிச. அடிகோலால் குழி. க. ஆகக் குழி பிரமாணம் 3.—உதூடூாநடவ௵. புறம்போக்கு 8 தூஅா்யிஉவங
* * * * * * * * * * * * * *

பெரிய திருவிழா வாகனப்படி யெழுந்தருளும் வயணம் முதல் திருநாள் சப்பிரம். இரண்டாந் திருநாள் கிளிவாகனம். எட்டாந் திருநாள் பூந்தேரு. [எட்டாந் திருநாள்] ஒன்பதாந் திருநாள் குதிரைவாகனம்.

(கு–பு):

இது, துறையூர் தாலுகாவிலிருக்கும் ஊட்டத்தூர் சிவன் கோவிலின் வரலாற்றை எடுத்துக் கூறுவதாம். இத்தலம் மிகப்பழமையானதொரு புண்ணிய தலமாகும். பிரம்மதேவனால் பூசிக்கப்பெற்றது. மெகென்ஸி

திரட்டியவைகளில் ஒன்ருய் டைலரது காட்டலாக்கு 819-ஆம் எண்ணில், 380–382-ஆம் பக்கக் குறிப்பில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. மெகென்ஸி ரெஸ்டோர்டு வால்யும் 3-ஆவதில், 65—74-ஆன பக்கங்களில் பெயர்த்தெழுதப்பெற்றுள்ளது. மிகச் சிதைந்திருக்கிறது. பிழைகள் காணப்படுகின்றன.

No. 3270. ஊட்டத்தூரு கோதண்டராமசுவாமி தல மகாத்மியம்.

ŪṬṬATTUṞU KŌDAṆḌARĀMAŚWĀMI TALA MĀHĀTMIYAM.

Pages, 2. Line, 12—25 on a pages, much injured. Old. Extent, 30 granthas.

Begins on fol. 19 (a) of the manuscript described under D. No. 3262.

Complete.

This contains an account of Sri Kothandaramaswami Temple situated in Uṭṭatthur near Ariyalur.

This is one of the collections of Col. Mackenzie. This is described in pp. 380–383 of the Taylor's Catalogue under S. No. 819.

This is also restored in pp.74–75 of the 3rd Vol. of restored manuscripts.

Beginning.

ஊத்த(ட்ட)த்தூரு கோதண்டராமசுவாமி தல மகாத்துமியம்.

என்னவென்றல் பெருமாள் இருக்கிறது தண்டகாரண்யவனம் என்றும், கோதண்டராமசுவாமி வடக்கே அயோத்தியிலிருந்து தெற்கே இராவண சம்ஹாரம் பண்ணித் திரும்பிப்போகிறபோது இந்தத் தலத்தில் இராவண சம்ஹாரம் பண்ணி வந்தீர்களேயென்று வான்மீகி ருஷி முதலான பேர்கள்.

End :

துன்மதிஞூ மகாராஜ ராஜஸ்ரீ இங்கிலீஷ் கம்பெனியார் அவர்கள் துரைத்தனத்திலும், ஊட்டத்தூரு சுத்தரத்தினேசுவர சுவாமிக்குவிட்ட சருவ மானிய கிராமத்தில் கோதண்டராமசுவாமிக்குப் பூசை நைவேத்தியத்துக்கு ஷெ உள. பூசை சிறப்பாய் நடந்துவருகிறது.

நாராயண அய்யங்கார்—சேஷ அய்யங்கார்.

(கு-பு):—

இது, அரியலூருக்கு அருகிலே உள்ள ஊட்டத்தூர் கோதண்டராமசுவாமி கோவிலின் தல வரலாற்றை யெடுத்துக்கூறுவதாம். முற்றும் இருக்கிறது. மெகென்ஸி மேனஸ்கிரிப்ட்ஸ் வகையைச்சேர்ந்தது. டைலரது காட்டலாக்கில் 819-ஆம் எண்ணில், 380-383-ஆன பக்கங்களில் வருணிக்கப்பெற்றும், மெகென்ஸி ரெஸ்ட்டோர்டு வால்யும் 3-ஆவதில், 74-75-ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதப்பெற்றுமிருக்கிறது. பிழையுளது. சிதைந்துளது.

No. 3271. சமரபுரத்து வரம்பெற்ற வடக்குவாசற் செல்வி வரலாறு.

SAMARAPURAṬṬU VARAMPEṞṞA VAḌAKKU VĀSAṞ CELVI VARALĀṞU.

Page, 3, Lines, 10-29, on a page, much injured. Old. Extent, 45 granthass.

Begins on fol. 19 (b) of the manuscript described under D. No. 3262.

Complete.

This contains an account of the Amman by name "Varampeṟṟa Vadakku Vāsar Celvi" enshrined in the village "Samarapuram" which is situated near 'Ūṭṭathuru' described in the D. 3270. This is said to be a very ancient temple and honoured by many kings from the time of Rajendra Coḷa. This is included in the Mackenzie collections and is described under No. 819 of the Taylor's Catalogue in pps. 380—383. This has been transcribed in pp. 76-77 in Vol. 3 of the restored volume.

Beginning :

சமரபுரத்தில் புராண ஸ்தலமாயிருக்கப்பட்ட வரம்பெற்ற வடக்கு வாசற் செல்வி வரலாறு.

நந்தன் திக்கு வடபாரிசத்தில் அந்த அம்மனுடைய கோவில் அம்மனுடை பிரவாகம் முன் சமரபுரத்திலே இருஷீசுவரர்கள் முனீசுவரர்கள் (சகலமான பேரும்) தபசு பண்ணுங் காலத்தில் * * * * * * மகாவரங்கள் பெற்றார்கள் என்றும் புராணத்தில் இருக்கிறதென்றும் பெரியோர்கள் சொல்லக் கேட்டதுண்டு.

End :

* * * * * * சுவது வேங்கடாசலம். இந்த ஆறு நிருவாகத்தாரும் மேற்படி கோவிலுக்கு நிருவாக மெய்க்காவல் சகல காரியத்துக்கும் உத்தரவாதியாய்ப் பூருவமாய் இருக்கப்பட்டவர்கள், சில்லரை நிருவாகம் அ ஆக நிருவாகம் ௬சு.

(கு-பு.):—

இது, ஊட்டத்தூருக்கு அருகிலே உள்ள "சமரபுரம்" என்னும் ஊரிலேயிருக்கும், "வரம் பெற்ற வடக்கு வாசற் செல்வி," அம்மன் கோவிலினது தலபுராண வரலாற்றை எடுத்துரைப்பதாம். மிகச் சுருக்கமாயுளது. இப் புண்ணிய தலம் புராணப்பிரசித்தமானது என்றும், மற்று, இத்தலத்துச் செல்விக்குச் சர்வதேச சனங்களும் வேலன் முள்ளின்மேல் படுத்து வரங் கேட்டுப் பெறுவது வழக்காறு என்றும், வீர ராஜேந்திர சோழன் காலம் முதல் பிரசித்தமாய் அநேக மன்னர்களாலும் அபிமானிக்கப்பட்டு வந்த தலம் என்றும் கூறுகிறது. முற்றுமுளது. மெகென்ஸி மேனஸ்கிருப்ட்டைச் சார்ந்தது. டைலர் காட்டலாக்கு 380–383-ஆம் பக்கம் 819-ஆம் எண்ணின் குறிப்பிலே வருணிக்கப்பெற்றிருக்கிறது. மெகென்ஸி பெரிய வால்யும் 3-ஆவதில் 76–77-ஆன பக்கங்களில் பெயர்த்தெழுதப் பெற்றுமிருக்கிறது. சிதைந்துளது.

No. 3272. அரியலூர் தேவஸ்தானம் ஆலத் துறைவான் கோதண்டராமசுவாமி கோவில் வரலாறு.

ARIYALŪR DĒVASTHĀNAM ĀLAṬṬUṞAIVĀN KŌDAṆḌARĀMAŚWĀMI KŌIL VARALĀṞU.

Pages, 42. Lines, 19, on a page, much injured. Old. Extent, 10 granthas.

Begins on fol. 20 (b) of the manuscript described under D. No. 3262.

Complete.

Account of the temple of Viṣṇu Ālaṭṭūraṟāivān KōdaṇḍaRāmaśuvami in Ariyalūr Devasthanam in Trichinopoly district. This is described in Taylor's Catalogue under No. 819 and has been restored in the Mackenzie's, Vol. No. 3.

Beginning :

திருச்சினுப்பள்ளி (க) சுபாவகையராஅரியலூர் தேவஸ்தானம் ஆலத் துறைவான் கோதண்டராமசுவாமி கோவிலுக்கு வருமான வரலாறு :—

சாலிவாகன சகாப்தம்[ரு] (இராம)மலைப் பிலாதமழவராயர் நாளையில் ஆரணியமாயிருந்து காடுவெட்டி * * * * * *

End :

கோயிலும் கருப்பகிரகம், மண்டபம் மாத்திரம் கட்டிவைத்து பூசை நைவேத்தியத்துக்கு யெறக்குடி என்கிற ஷி சா யேக்கரா கிராமத்தையும் விட்டுப் பூசை நைவேத்தியம் நடந்துவந்தது.

(கு-பு) :—

இது திருச்சிராப்பள்ளிக்கு அருகிலேயுள்ள அரியலூரில் ஆலத்துறைவான் கோதண்டராமசுவாமி கோவிலுக்கு உரிய வரலாற்றையுணர்த்துவதாம். டைலர் காட்டலாக்கு 819-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப்பெற்றுள்ளது. மெகென்ஸி பெரிய வால்யும் 3-ஆவதில் 78-ஆம் பக்கத்தில் பெயர்த்து எழுதப்பெற்றிருக்கிறது. சுருக்கமானது. இக் கோயிலுக்கு இராம ஒப்பிலா மழவராயர் காடுவெட்டி நாடாக்கச் செய்தே வட மூலேசுவரர் மகா தபசுவனீ விக்கினேசுவரர், பிரசன்ன வேங்கடேசுவரர் என்றவர்களுடைய மூர்த்தங்கள் அகப்பட்டுக் காட்சியளித்தனர். அவர்களுக்குத் திருமண்டபாதி திருப்பணிகள் செய்துவைத்தனர் என்று கூறுகிறது. இதன் பின்னர் 21-26 வெற்றேடுகளாம்.

No. 3273. சிதம்பர க்ஷேத்திர மகிமை.
CIDAMBARA KṢETTIRA MAHIMAI.

Pages, 20. Lines, 28 on a page, much injured, Old. Extent 550 granthas.

Begins on fol. 27 (a) of the manuscript described under D. No. 3262.

A Legend of Cidambarkṣēttiram. This manuscript belongs to the Mackenzie Manuscripts and is described under No. 819. pp. 380-383 of Taylor's catalogue and restored on pages, 79-103 of Mackenzie's restored Vol. III.

Beginning :

சிதம்பரம் கைபீது :—

சிதம்பர க்ஷேத்திரத்து மகிமை, ஸ்ரீ சபாநாயகர் மகிமை, தீட்சிதர்களுடைய மகிமை.

புராண சித்தமாயிருக்கப்பட்ட பூர்வோத்தரம் பூர்வம் கைலாசத்திலேயிருக்கிற பரமேசுவரர்[ரு](இர)கசிய மாயிருக்கிற சிதம்பர க்ஷேத்திர மகிமைகளைப் புத்திமானுயிருக்கிற பிரதான மந்திரியாயிருக்கிற நந்திகேசுவர மூர்த்திக்கு அநேகங்கோடி கல்பத்துக்கு முன்னே இரகசியமாய் உபதேசம் பண்ணினர். * * * * * *

End :

இப்படிக்குத் தஞ்சாவூர் ராஜா நடப்பிச்சத்தினுலே அம்ஸூப திருவாலூரிலேயிருந்தார். இந்த எண்பது வருஷமும் தஞ்சாவூர் இராஜா தன் இராச்சியத்திலே சபாபதியிருக்கவேணும் என்று பூசை பண்ணிகிறவர்களை நிறுத்திக்கொண்டதினுலேயிருந்தார். அதுக்குமேல் சாலிவாகன சகம் கூசுாஸூப-இல் ஸ்ரீ சபாநாதரைச் சிதம்பரத்துக்கு எடுத்துவந்து சேர்த்தார்கள். ஸ்தானத்திற் சேர்ந்த பிறகு அதிக களையாய் ஸ்தானத்துக்கு நடந்துவந்தது.

(கு-பு):—

இது சிதம்பர க்ஷேத்திரத்தின் மாகாத்மியத்தினையும் பூர்வோத்திர வரலாற்றினையும் எடுத்து விளக்குகின்றது. விரிவாக இருக்கின்றது. மெகென்ஸி துரை சம்பாதித்த கையெழுத்துப் புத்தகங்களுள் ஒன்றும். டைலர் காட்டலாக்கு 819-ஆம் நம்பர் குறிப்பில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. 380–383 பக்கங்கள் பார்க்க. ரெஸ்டோர்டு வால்யும் 3-ஆவதில் 79–103-ஆன பக்கங்களிலே டைலர் துரையால் பெயர்த்து எழுதப் பெற்றிருக்கிறது. ஏடு சிதைந்திருக்கிறது. பிழையுளது.

No. 3274. நடுவுக்குறிச்சிப்பாளையக்காரன் வமிசாவளி.

NAḌUVUKKUṞICCIP PĀḶAIYAKKĀRAN VAMISĀVAḶI.

Page, 4. Lines, 36 on a page, much injured. Old. Extent, 150 granthas.

Begins on fol. 37 (a) of the Manuscript described under D. No. 3262.

Complete.

This gives the genealogy of Pāḷaiyakkarar of Naduvukkurichi. It contains some important events of the family and the achievements of important leader. It is understood that in appreciation of the famous deeds of one of the descendants of this line, they were given some titles, etc., by the then Pandiya Kings. This is one of the collections of Col. Mackenzie, contained in the pp. 103–110 of the restored Volume and described by Taylor under No. 819, pp. 380–384.

Beginning :

நடுவுக்குறிச்சி பாளையக்காரர் வமிசாவளி.—

ஆதியாரப்பிய[ம்] எங்கள் முன்னோர்கள் குத்தாலத்தேவரும் மருதப்ப தேவரும் கீளுவை குண்டையிங் கோட்டையிலிருக்கிறபோது மேல் நாடு திறச்சுளிகை ? பழனி மடம் சீமைக்கள்ளர் குண்டையங்கோட்டை நாட்டுக்கு வந்து [சவ்விறி] (சௌரி)யஞ் செய்தார்கள். அப்போது எங்கள் முன்னோர்கள் குத்தாலத் தேவரும் மருதப்பதேவரும் அந்த மேல் நாட்டுக் கள்ளரை அதம் பண்ணி திறச்சுளிகை பழனி மடம் மேல்நாடு வரைக்கும் போய் அதிலிருந்த கள்ளரை இல்லையெனச் செய்விக்கிற வரையில் * *

End :

இராச மானிய ராஜஸ்ரீ பாலீசுதுரையவர்கள் நாளையில் கிஸ்தி வகைக்குப் பட்டடை முங் கட்டவில்லையிட்டுச் சாலுனவ வெகுமதியுங் கட்டளை யிட்டார்கள். மகா ராச மானிய ராஜஸ்ரீ கும்பினியார் அவர்கள் உத்திரவு பிரகாரம் கம்பெனி காரியத்தில் மிகவும் கீழ்ப்பணிந்து நடந்து கொண்டு இருக்கிறேன்.

(கு-பு) :—

இது நடுவக்குறிச்சி பாளையக்காரரது வமிசாவளியைக் கூறுவது. மெகென்ஸி கலெக்ஷனில் சேர்ந்தது. டைலர் காட்டலாக்கு 810-ஆம் எண்ணின் (P.P. 380—384) குறிப்பில் வருணிக்கப் பெற்றுளது. இது சரித்திர நூலாராய்ச்சியாளருக்கு மிக உதவி புரியும் எனத் தோன்றுகிறது. இதில் வரகுணராமபாண்டியன் காலத்து இருந்த மருதப்பதேவர், குத்தால தேவர் என்ற பாளையக்காரர் ஆதி புருடர்களுக்குப் பாண்டிய ராசாவால் வரகுணராம குத்தால தேவர் என்ற சிறப்புப் பெயர் கொடுத்துப் பல நன் சிறப்புக்களையும் கள்ளர் பயம் நீக்கிவைத்ததுக்குப் பிரத்தியுபகாரமாகக் கொடுத்தது முதலான பழைய சரித்திரங்கள் தெரிகின்றன. இம் மரபிலே மொத்தம் உ௰௯ (29) பட்டக்காரர் இருந்தார்கள் எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. முற்றும் உளது. மெகென்ஸி ரெஸ்டோர்டு வால்யும் 103–110 ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதி வைக்கப்பெற்றிருக்கின்றது. மிகச் சிதைந்திருக்கிறது. எழுத்துப் பிழைகள் உள.

No. 3275. நீண்ட கரை துரை சரித்திரம்.

NĪṆḌAKARAI TURAI CARITTĪRAM.

Page, 1. Lines, 34 on a page, much injured. Old. Extent, 40 granthas.

Begins on fol., 39 (a) of the manuscript described under D. No. 3262.

Incomplete.

History of Nīṇḍakaraituṟai. This place was also called Sangamasthānam. This work is not mentioned in Taylor's Catalogue. It is restored in Mackenzie restored, Vol. III, pp. 157–160.

Beginning :

நீண்டகரை துரை சரித்திரம் ஈரோப்பிய தேசாதிபதிகள் இந்த இந்து தேசம் வருமுன்னமே சமுத்திரக் கரையாரென்னு [ர்ண்ணும்]ம் மீன் பிடிக்கிறவர்களுக்குப் பேராம்படி அவர்கள் சமுத்திரத்தில் பிடிக்கிற மச்சங்கள் உணர்த்திக் கொண்டு நாட்டுச் சனங்களுக்கு வித்துச் சீவனமாகையில் பிரதானமாக மேற்சொன்ன காரணப்படி காவேரிப்பட்டண முண்டான பிறகு சங்கம ஸ்தானம் என்றும் அந்தப் பட்டணத்துக்குடிகள் பெரிய திருவிழா நாளுண்டாக்கி நாட்டுச் சனங்களுங்கூட வரும்படியாகச் சமீபத்திலிருக்கிற திருவேற்க்காடு கோவில் சுவாமி சாய்க்காட்டுச் சுவாமி உற்சவம் உண்டாக்கி

* * * * * * * *

End :

அந்தப் பூணூல் அடையாளத்துக்கே பிரம்மகுலம் என்றும் பேர், அதுக்கு முன் பிரம்மகுலம் அல்லவென்றும் சூத்திரனுக்குச் சமானமென்றும், ஆனதினுலே இருபிறப்பாளர் என்றும் சொல்லப்பட்டவர்களுக்கே

பிரம்ம குலத்தார் என்றும் வழக்கப்பேர் பிரம்மாவென வெங்கும் வியாபிச்சுயிருக்கப்பட்ட சுவாமிக்கே பிரம்மம் என்னும் பேர். அந்தச் சுவாமியாலே அம்ச சலான அதிகாரம். * * * * *

* , * * * * * * *

(கு-பு) :—

இது நீண்டகரை துரை சரித்திரத்தை விளக்குவதென்று தெரிகின்றது. இதில் பின்பக்கம் மையழிந்து போயிருப்பதால் முற்றுமில்லே. இதன் விளக்கம் அறியப்பட்வில்லே. இத்தலம ஸ்ரீரங்கப்பட்டின உண்டான பிறகு சங்கமஸ்தலம் என்று வழங்கப்படும் என்று குறிக்கப்பட்டுள்ளது. திருவெண்காடு சாயக்காட்டுச் சுவாமி கோவிலுக்கு அண்மையில் உள்ளதாக உளது. டைலர் இதனைப் பற்றிக் குறிக்கவேயில்லே. மெகென்ஸி பெரிய வால்யம் 3-ஆவதில் 157—160 பக்கங்களிலே பெயர்த்து எழுதப் பெற்றுளது.

No. 3276. காவேரிப்பட்டண சரித்திரம்.

KĀVĒRIPPAṬṬAṆA CARITTIRAM.

Pages, 42. Lines, 28 on a page, much—injured. Old. Extent, 1260 granthas.

Begins on fol. 40 (a) of the manuscript described under D. No. 3262.

Complete.

This gives elaborately the previous history of the place called Sri Rengapaṭṭaṇam. This place is supposed to have sprung up before 900 years in the Ŝalivahana Ŝākha.

This is one of the Mackenzie collection and is restored in Vol. III, in pp. 111-156. This is also described under D. No. 819, in pp. 380–388 of the Taylor's Catalogue.

Beginning :

காவேரிப்பட்டண சரித்திரம். காவேரிப்பட்டணம் உண்டான வருஷம் அறிய அந்தச் சரித்திரம் சொல்லுகிற புத்தகத்தில் எழுதியிருந்தபடியாலும் சோழ ராசா, சோழதேசம் என்னும் அவர்கள் பேராலே சொல்லப்பட்டவர்களுடைய, சரித்திரத்தில் வருஷங்கண்டு எழுதியிருக்கிற ஆதரவைப்பற்றியும் அந்த ராசாக்கள் தேச பரிபாலனத்தில் காவேரி கரைகண்ட சோழன் நாள் வருஷந் தெரிய எழுதிக் காட்டியிருக்கிறதைப் பற்றியும், நிதானிக்கையில் காவேரிப்பட்டணம் உண்டான துவக்கம் பலவித கேள்வியாலும் சற்று, ஏறக்குறைய கூள (900) வருஷத்துக்குள்ளேதானேயிருக்கவேணும் என்று சில குறிப்புகள் தோணப்படுகின்றன. அது எதனலே யென்றல் ஈரோப்பிய தேசத்தாரில் உலந்தக்காரர் பிறத் தீக்சேக்காரர் இங்கிலீஷ்காரர் தினமார்க்க

காரர் ? பிரெஞ்சுக்காரர் இந்த இந்து தேசத்துக்கு வரும்படியாக துவக்க மான தூசுாஉ வருஷம் வருகிறதுக்கு முன்னமே * *

* * * * * * *

(நூல் ஆரம்பம்.)

பூவின் வாழியன் மாற்றேடும் புண்ணியன் பாதம் போற்றித் [தாழ் விலாக் காவிரிப்பூம்பட்டினந் தன்னில் வாழும், [ஆழ்கடற் கப்பலோட்டும் அளகேசன் பட்டணத்தில், வாழ்வுளார் கதையைப்பாட வாரணங் காப்புத் தானே. "க". * * * * * * *

* * * * * * * *

End :

அப்பால் ஒன்றையொன்று பார்த்து எழுதினவர்கள் தப்பிதம் என்று தள்ளவேண்டியும் இருப்பதேயல்லாமல் ஆண்டு தெரியாததால் பலதும் யோசிப்பதில் காணப்படுவது என்னவென்றால்.

(கு-பு) :—

இது ஸ்ரீரங்கப்பட்டணம் என்ற ஊரின் பூர்வோத்திர வரலாற்றை விளக்கு வது. மிக வித்தாரமாகவுள்ளது. இடையிடையே சில செய்யுட்கள் காணப் படுகின்றன.

இவ்வூர் முன்னம் "காவிரிப்பூம்பட்டிணம்", என்ற பெயரால் பழைய தமிழ் நூல்களில் காணப்படும் புராதனத் தலமென ஊகிக்கப்படுகின்றது. இத்தலம் கடற்கோட் பட்ட தலங்களுள் ஒன்றும் பின்னர் இத்தலத்துக்குள் சாலிவாகன சகம் (கூா-900) வருஷங்களுக்கு முன் மீண்டும் ஊர் உண்டாக் கிக் "காவேரிப்பட்டினம்" என்ற பெயர் வழங்கி வருகின்றது என்பதும் குறிக்கப்பட்டுள்ளது. நிற்க, இத் தலத்துக்கு அருகில் "திருவெண்காடு", என்ற தலவிசேடம் உண்டு. "திருவெண்காட்டடிகள்" என்றும் "பட்டி ணத்துப் பிள்ளையார்", என்றும் யோகீசுவரர் சபித்துப் போட்டதனால் நகர் அழிந்து போயிற்று என்றும், "பத்திரகிரியார்" என்ற வரும் பட்டினத்து அடிகளிடத்து உபதேச அருட்கள் பெற்றவரலாறும் பிறவும் விளக்கப்பட் டிருக்கின்றன. மெகென்ஸி திரட்டிய புத்தகங்களைச் சார்ந்ததாய் டைலரது காட்டலாக்கு எண் 819, 380—388-ஆன பக்கங்களில் குறிப்பில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. ரெஸ்டோர்டு வால்யும் 3-ஆவதிலே 111 —156-ஆன பக்கங்களில் டைலர் துரையால் பெயர்த்து எழுதப்பெற்றுமிருக் கிறது. எழுத்து விளக்கமாயில்லாமல் பிழைகள் மலிந்துகிடக்கின்றன. மிகச் சிதைவுற்றுள்ளது. இறுதிப் பகுதியின் சொற்றொடர் அரைகுறை யாக விடுக்கப்பெற்றுளது. நிற்க,

இதில் பட்டினத்துப் பிள்ளையாரது ஜீவிய சரித்திரமே விரிவாக உணர்த் தப்பட்டுள்ளது. ஆதலின் இதற்குப் "பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரம்" என்ற பெயரும் பொருந்துமெனத் தோற்றுகிறது.

No. 3277. துறையூர் ஜமீன்தாரி விஜய வேங்கடாசல ரெட்டியார் வரலாறு.

TUṞAĪYŪR JAMĒNDĀRI VIJAYA VĒṄKAṬĀCHALA REḌḌIYĀR VARALĀṞU.

Pages, 7. Lines 32, 35 on a page. Much injured. Old. Extent, 245 granthas.

Begins on fol. 61 (a) of the manuscript described under D. No. 3262.

This contains an account of the origin of the Jamin of Tuṟayur, and the geneology of the zamindars up to Vijaya Venkatachala Reddiar. This also contains a petition to the British to allow them to enjoy the lands given to them by the previous kings. This is described under No. 819 on pages 380–390 of the Taylor's catalogue. It is restored in page 161–170 of the 3rd Volume of Restored Manuscripts of Col. Mackenzie.

Beginning :

மகா ராஜ ராஜஸ்ரீ சர்வேயர் ஜெர்னல் மெக்கென்ஸி தொரையவர்களுக் குத்[தொ] துறையூர் ஸமஸ்தானத்து ஜமீன்தாரராகிய விஜய வேங்கடா சல ரெட்டியார் எழுதிக் கொடுத்தது :—

துறையூர் சமஸ்தானம் எந்தத் துரைத்தனத்தாருடைய நாளையில் எத்தனே வருடத்துக்கு முன்னே என்ன சங்கதிக்காகத் [தொ]துறையூர் சீமையை உங்களுக்கு யார் விட்டார்கள் என்று,

என்னவென்றுல் சாலிவாகன சகாப்தம் ௲௩ ௵ ஆகிய சுாயிஅ வருஷத்துக்கு முன்னே எங்கள் மூல புருஷர்களான அண்ணு ரெட்டி சூரா ரெட்டியார் என்கிறவர் வகிக்கே நெல்லூர் சீமையைச் சேர்ந்த, "பல்லவோல", என்கிற ஊரில் ஜமீன்தாரர்களாக இருந்தார்கள். அப்போது இந்த மதுரை சமஸ்தானம் ஆளுகிற கிருஷ்ணராயர் அவர்கள் நாளையில் மேற்படி சமஸ்தானம் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த கொள்ளிடத்துக்கு வடக்கு மழவநாடு [தீர்த்தகிரி] ? என்னப்பட்ட துயைூர்ச் சீமையில் வெகுபேர் கள்ளர்கள் இருந்துகொண்டு சீமையாவத்தும் அடித்துப் பறிக்கிறதும் ஊர் ஊராய்க் கொள்ளையிட்டு மனுஷ்யர்களை வெட்டிப் போடுகிறதும் இப்படி [யாயி]க் கொத்த அனேக சல்லியங்கள் பண்ணிக் கொண்டிருந்தார்கள். * * * *

End :

இப்போது எங்களுக்கு விட்டிருக்கிற ௰௩ கிராமங்களிலே வரப்பட்ட வருமானம் எங்கள் செலவுக்கே பத்தாமல் கடன்காரர்களுடைய உபத்திர வத்தினுலே நாங்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறபடியினுலே வெகு நாளாய் நடந்துவந்த பண்ணைவட்டமும் பாதுகாவலும் மாமூற்படிக்கு நடக்கும்படியாயும் எங்கள் சீமை எங்களுக்குக் கிடைக்கும்படியாயும்

உத்தரவு செய்யவேணும் என்று மிகவும் வணக்கமுடனே மனுவு பண்ணிக் கொள்ளுகிறோம். துறையூர்ச் சீமை எல்லைக்கு விபரம் :—

துறையூர் முதல் கிழக்கு முள்ளாளென்கிற கிராமம் வகைக்கும் காதம் ரு. தெற்கே திருப்பஞ்சேரி வரைக்கும் காதம் உ. இ. மேற்கு முருங்கக் களத்தூர் வரைக்கும் காதம் ௩. வடக்குத் தளிகை வரைக்கும் காதம். உ இ. இந்தப் படிக்குக் காரியஸ்த்தர்கள் இராமசுவாமி அய்யர் காசிராம அய்யரும் இருந்து எழுதுவித்தது. ஷ சீமைராயசம் கோடிசுப்பராயர் விக்கிரம௵ கார்த்திகைமீ உ௰ரு-உ துஅாஉ௰௵ டிசம்பர்மீ அவ இவை கள் எல்லாம் அனுபோகப்படிக்கு எழுதியிருக்கிறோம்.

(கு-பு) :—

இது, துறையூர் ஆதீனம் ஏற்பட்டது முதலான பூர்வோத்திர வரலாறு களையும் தமது வமிசாவளியினையும் ஷ ஊர் ஜமீன்தாரி விஜயவேங்கடாசல ரெட்டியார் என்பவர், மெகென்ஸி துரையவர்களுக்கு அறிவிக்குந்துறையிலே யமைந்திருக்கிறது. இவர் முன்னோர் வடக்கே நெல்லூருக்கடுத்துள்ள, "பல்லவோல", என்னும் ஜமீனிலிருந்து கிருஷ்ணராயர் காலத்திலே குடி யேறினார்கள் என்றும், இத்தலத்தில் அக் காலத்துப் பல தீங்குகளை யிழைத் துக் கொண்டிருந்த கள்ளர் சாதியினரை வலிமையடக்குவித்தற்காகப் பரிசாக வழங்கப் பெற்றது என்றும் இன்னோரன்னவை இதில் விளக்கம் ஆகின்றன. மெகென்ஸி திரட்டியவைகளுள் ஒன்றாகும். டைலர் காட் டலாக்கு 380—390-ஆம் பக்கம் 819-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டும்— பெரிய வால்யூம் 3-ஆவதில் 161—176-ஆம் பக்கங்களில் பெயர்த்தெழுதப் பெற்றுமிருக்கிறது. மிகச் சிதிலமாயது.

No. 3278. சேர சோழ பாண்டியர் முதலானோர் சகவாண்டு களும் சதுர்யுகப் பிரமாணமும்.

CĒRA COḺA PĀṆḌIYAR MUDALĀNŌR ŚAKAVĀṆḌUKAḶUM CATURYUGAP PIRAMĀṆAṄKAḶUM.

Pages, 12. Lines 21. 24 on a page. Tamil, much injured. Old. Extent, 145 granthas.

Begins on fol. 65 (a) of the manuscript described under D. No 3262 Vol I.

This is similar to one described under R. No. 335. This gives an account of the important events, etc., of the various Yugas and their Dharma. It also contains some names of the Pandiya kings.

Beginning :

சேரன் பெயர்—

வில்லவன் கொங்கன் வஞ்சி வேந்தனே பொந்தின் தாரோன்,
கொல்லி வெற்பன் குடக்கோன் குட்டுவன் குடகன் கோதை
மல்லல் சேர் உதியன் வானவரம்பனே மலையமானே
செல்லனீர்ப் பொருனையாற்றோன் சேரலன் சேரன்பேரே. (க)

கிருதயுகப் பிரமாணம் வருஷங்கள் ௰௭௨௰௮௲. இதிலே தர்மங்கள் நாலுபாதம். இதிலே மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராகவதாரம், நரசிங்கவதாரம், இப்படிக்கு விஷ்ணுநாலு அவதாரம் எடுத்தார்.

* * * * * * * * * * *

* * * * * * * * * * *

கலியுகப் பிரமாணம் ௪ இலட்சத்து ௩௰௨௲ வருஷம் பௌத்தாவதாரம், கலிநாதன் * * * * * *
புருஷப் பிரமாணம் மூன்றரை முழம் பிரமாணம். ௲௰௪௱ வருஷம். அப்போது இராச்சியமாண்டவர்கள் பேர்கள் பரீக்ஷித்து மகாராசா, சனமேசயராசா, இராச நரேந்திரன்.

* * * * * * * * * *

End :

சகாப்தம் ௲௪௱௮௰௬ வருஷம் ஆக இரத்தாட்சி சம்வத்ஸரம் வரைக்கும் ஸ்ரீரங்கன் தேவராய ஆண்ட வருஷம் ௰௪. சகாப்தம் ௲௫௱௮ 'விய சம்வத்ஸரம்.

(கு-பு) :—

இது, கிருதயுகம் முதல் கலியுகம் வரைக்கும் சதுர்யுகப் பிரமாணங்களை அந்த யுகதருமங்களையும பின்னர் கலியாதியில் பரீக்ஷித்து மகாராசாவின் ஆட்சியிலிருந்து, சாலி—சகம் ஆண்டு 1508 வருடம் வரை ஆண்டு போந்த பல மன்னர்களுடையவும் பெயர்களையும், அவர் அவர் ஆண்ட மொத்த சக வருடங்களையும் எடுத்து உணர்த்திப் போகிறது. இம் மாதிரியான நூல்கள் முன்னர் வந்த மூவருடக் காட்லாக்கு 335-வது எண்ணில் வந்திருக்கின்றன. மெகென்ஸி பெரிய வால்யும் 3-ஆவதில், 177—189-ஆன பக்கங்களில் பெயர்த்து எழுதப் பெற்றுள்ளது. டைலரது காட்டலாக்கு 819-ஆம் எண்ணில், 380—390 ஆனபக்கக் குறிப்பில் நோக்குக. எடுகள் தலை கீழாக உள. ஆகவே முதலிலே மும்மன்னர்களுடைய பெயர்கள் உணர்த்து மிடத்திலிருக்கவேண்டிய—பாண்டியன் பெயர் உணர்த்தும் பாடலும் உரைப் பகுதியும் இப்போது கடையகத்துக் காணப்படுகின்றது. அதனை அடுத்த பக்கமதிற் கொடுத்திருப்பதால் நோக்கிக் கொள்க.

பாண்டியன் பெயர்—

செழியனே கூடற் கோமான்
தென்னவன் வேம்பின் தாரோன்
வழுதியே குமரி சேர்ப்பன்
வைகையன் துறைவன் மாறன்
விழவொரு பொதிய வெற்பன்
மீனவன் கைதவன் சொற்
பழய பஞ்சவனே வெய்ய
கவுரியன் பாண்டியன் பேர். (௧)

(உரை) செழியன், மதுரைக்கு இராசா * * * * * * கவுரியன் இவைபெயல்லாம் பாண்டிய ராசாவின் பெயர்.

69

No. 3279. அண்ணன் திருமாளிகை யொழுங்கும் நவாபு பைசல் நாமாவும்.

ANNAN TIRUMĀḶIKAI YOḺUṄKUM NAVĀBU PAISAL NĀMĀ VUM.

Pages, 26. Lines, 35, 40 on a page. Tamil, much injured, Old. Externt, 780 granthas.

Begins on fol 72 (a) of the manuscript described under D. No. 3262.

This contains an account of Nawab's order restoring the Honours due to the House of Kanthadaiannan of Srirangam. This is described by Mackenzie under No. 819 and is restored in the 3rd Vol. on pages 189—234.

Beginning :

(கோயில்) அண்ணன் திருமாளிகை ஒழுங்குக்கு நக்கல் :—பெரிய பெருமாள் திருவோலக்கத்தில் முதலியாண்டானுக்கு வரிசை சாதித்தருளி னத்துக்கு வயணம் :—

பெரியபெருமாள் பெருமாள்கோயில் நின்றும் உடையவரை எழுந் தருளப் பண்ணுவித்து உபயவிபூதி ஸ்ரீ காரியமும் உம்முடைய ஆதீன மாக்கினோம். நீர் நன்றாக ஆராய்ந்து நங்காரியத்தில் ஒன்றுங்குறை யில்லாமல் நடத்திவிய்யும் என்று கோவிலவர் வரிசையாக உடையவருக்குத் தீர்த்தம் முதலானது சாதித்தருள அப்போது உடையவரும் தீர்த்தத்தைத் தாம் அங்கீகரித்தருளிச் சாத்துப்படி * * * * *

* * * * * * * *

End :

அண்ணனும் அது முறிஞ்சு அப்படிவேண்டாம். இன்று முதல் ஸ்ரீசட கோபன் உமக்கொருநாளும் நமக்கொரு நாளுமாக முறையாய் நடக்கட்டும் என்று சொல்ல அது முதல் அப்படியே நடக்கட்டும் என்று சொல்ல அது முதல் அப்படியே நடந்துவந்தது. இந்த வெகுமதிக்கு ஜாதிகளுக்கு வியவகாரமில்லாவிட்டாலும் ஜாதிகள் நிரம்பவும் பிரசித்தர்களாய் வந்தால் அவர்களுக்கும் வரிசைச் சாதிப்பிச்சுக்கொண்டு வருவார்கள். குமார அண்ணனுக்கும் பெரிய தொட்ட ஆசாரியர் கிரந்தஞ்சாதிச்சு அருளுகிறபோது

* * * * * * * * * *

Beginning :

அசரத்து நபாபு சாயபு அவர்கள் பைசல் நாமாபண்ணிக் கொடுத்ததுக்கு நக்கல் :—

சருக்காரிலிருந்து பைசல்நாமா யெழுதின்படி பைசல்நாமாவாவது இப்பவும்.

End :

ஒரு வேளையில் இவர்களிலே.

(கு-பு) :—

இது, ஸ்ரீரங்கம் கந்தாடையண்ணன் திருமாளிகைக்கு உரிய பழைய மரியாதைகள் முதலானவற்றையும், அதற்கு ஆதாரமாகத் தொன்று தொட்டு வரும் நவாபு அவர்கள் உத்திரவுகளையுமாக இவ்விடயங்களை எடுத்து உணர்த்துவதாம். முற்றும் உள்ளது. இது மெகென்ஸி துரையவர்களால் 819-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டதாகும். இது மெகென்ஸி பெரிய வால்யூம் 3-ஆவதில் 189—234-ஆன பக்கங்களிற் பெயர்த்து எழுது விக்கப் பெற்றிருக்கிறது.

No. 3280. சோழ சேர பாண்டிய மன்னர்கள் வமிசாவளி.

CŌḺA CĒRA PĀṆḌIYA MANNARKAḶ VAMIŚĀVAḶI.

Pages, 24. Lines 37, 40 on a page. Tamil, much injured, Old. Extent, 360 granthas.

Begins on fol. 86 (a) of the manuscript described under D. No. 3262.

This gives names of the kings of the three important kingdoms of South India, viz., Cera, Cola and Pandiyas the beginning and end of each line with reasons for their downfall.

This is supposed to be copied by one Kaḷi Kavirāyan of Poondurai near Erode.

This is described on pages 393 and 394 of the 3rd volume of Taylor's catalogue and is restored in page 234 of the Mackenzie's Restored Vol. No. 3.

Beginning :

சோழராசாக்கள், சேரராசாக்கள், பாண்டிய ராசாக்கள் இவர்கள் மூன்று இராசாக்களுடைய வமிசாவளிகளுடைய பூர்வோத்திரங்களுடைய பூர்வோத் திரங்கள்.

கோயமுத்தூர் தாலூகா, ஈரோடுக்குச் சேர்ந்த பூந்துறையில் இருக்கும் காளி கவிராயனிடத்தில் இருக்கப்பட்டதைப் பார்த்து நக்கல் எழுதப்பட்டது.

சோள(ழ) ராசாக்களுடைய விவரம் :—பூர்வத்தில் சூரியவமிசத்தில் பிறந்து பூமியாண்டு வரப்பட்ட சூரியவமிசத்து இராசாக்களுடைய வமிசத்தில் சோழியன் என்னப்பட்டபேரை உடைத்தானவராயிருக்கப்பட்ட காலத்தில், இதற்குப் பூர்வகாலத்தில் முசுகுந்த சக்கிரவர்த்தி இராச்சியபாரம்பட்ட திரு வாரூரில் மேல் எழுதப்பட்ட முசுகுந்த சக்கிரவர்த்தியினுடைய வமிசத்தில்

* * * * * * * *

End :

மேல் எழுதப்பட்ட பாளையப்பட்டுகள் கருநாடகத்தில் மதுரை சமஸ்த் தானத்துக்குச் சேரப்பட்டவை :—

1. திண்டுக்கல், 2. தாராபுரம், 3. கோயமுத்தூர், 4. நாயகன்பேட்டை, 5. சத்தியமங்கலம், 6. பாளையங்கோட்டை, 7. அந்தியூர், 8. ஈரோடு * * * * 23. சக்கிரகிரி, 24. மதுரைக்கோட்டை, 25. திரிசரபுரம்.

(கு-பு):—

இப்பகுதி சோழர், சேரர், பாண்டியர் என்ற தமிழ்நாட்டு மூவேந்தர்களுடைய வமிசத்துப்பட்ட வரிசைகளை யெடுத்து உணர்த்துகிறது. அதில், சோழர் பரம்பரையில் தேரூர்ந்தசோழன் முதல் கரிகாற்சோழன் வரையில் பட்டதாரிகள் 48 பேரும், தேவாமிசத்தோடு கூடியவர் எனவும், பின், பௌண்டரீகன் முதல் (18) கரம்பீரியசோழன் வரை 18 பேர் எனவும், இறுதியில் அவ்வமிசம் கவி சக்கிரவர்த்தி கம்பரது சாபத்தால் அழிவுற்றது எனவும், பின்னர் சேரரில், (1) யதுகுல சேகரன் முதல் (30) சீத்துலாரண்ய சேரன்வரை யாவரும் தேவாமிசத்தினர். பின், அட்சயபாத தீரசேரன் முதல் (20) கைலாசத்தையடைந்த (சேரமான் பெருமாள் நாயனார்) வரையில் இருபது பட்டதாரிகள் அவரோடு அவ்வமிசம் முடிவு அடைந்தது எனவும் கடையகத்து, பாண்டிய மன்னர்கள் ; 1 குலசேகரபாண்டியன் முதலாக, எஉ (72) பட்டதாரிகள் இருந்தார். அவருக்குப்பின் (12) கொடுங்கோற் பாண்டியன் இறுதியாக 12 பாண்டியர் இராச்சியபாரம் பண்ணினர் என்றும், பிறகு கோவலன் கண்ணகி சரித்திரத்தில் ஒருசிறிது பிரஸ்தாபிக்கப்பட்டு, அப் பத்தினிப் பெண் கண்ணகியால் மதுரை அழிந்து போனதும்; பிறவும், மற்று, அதற்குப்பின், இராச்சியபாரம் முகமதியர் வசமானதும், இராயராட்சியும் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் கர்நாடகர் ஆட்சியும், அவரது பாளையப்பட்டுகளும், கோட்டைகளும் கூறப்பட்டுள்ளன. இது டைலர் காட்டலாக்கு மூன்றும் வால்யும், பக்கம் 393, 394–819-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. மெகென்ஸி பெரியவால்யும் 3-ஆவதில் 234—வரையான பக்கங்களில் பெயர்த்து எழுதப்பெற்றிருக்கிறது. முற்றும் உளது. பிரதி மிகச்சிதைவுற்றது. மிக எழுத்துப் பிழைகளுடன் கூடியது.

No. 3281. உத்தண்ட வேலாயுதர் தலபுராண வரலாறு (ஊதியூர் கிராமம்).

UTTHAṆḌA VĒLĀYUDAR TALAPURĀṆA VARALĀṚU (ŪDIYŪR KIRĀMAM).

Pages, 2. Lines 28 on a page. Tamil, much injured, Old. Extent, 56 granthas.

This contains the Sthalapuranam of the place called "Āūdiyūr" wherein there is a famous temple of Subrahmanya called "Uddaṇḍa Velāyudhar." It also cantains how the place was called 'Oodiyur 'ivācalam,' etc.

This is one of the collections of Col. Mackenzie and is described in the 3rd Volume of Taylor's catalogue in page 395 and is restored in the 3rd bigger Volume of Taylor, on page 258.

Beginning :

தாராபுரம் துக்குடி காங்கேயந் தாலூகாவுக்குச் சேர்ந்த ஊதியர் கிராமம் உத்தண்ட வேலாயுத சுவாமியின் தேவஸ்த்தானக் குருக்கள் ஸ்த்தானீகன் எழுதிக்கொடுத்த ஸ்த்தல புராண கைபீயத்து :—

பூருவத்தில் அப்பிரமேசுவர புராணத்தில் ஸ்காந்தவலாருயிருக்கப் பட்ட சுப்பிரமண்ணியர் உத்தண்ட வேலாயுத சுவாமியார் வாசமாயிருக்கப் பட்ட மகத்துவம் என்னவென்ருல் தென்கரை நாட்டில் கொங்கணிலிங்க மூர்த்தியாகிய அப்பரமேசுவரர் புன்னைவன க்ஷேத்திரத்துக்கு உத்தரதிக் கினில் அரை யோசனை தூரத்தில் இருக்கிற சதுர்க்கிரியில் பிரம்மா முதலான தேவர்களும் யாகஞ்செய்யும்போது முக்கண்ணராகிய சிவன் அந்த அசலத் தில் பிரத்தியக்ஷமான படியினுலே சிவாசலம் என்னும் பேர் வரப்பட்டது.

End :

(கொங்கணசித்தர்) ஊதிப்புடஞ் செய்தபடியினுலே இந்தக் கேத்திரத் துக்கு "ஊதியூர்" என்றும் பேர் வரப்பட்டது. இப்படி இந்த வரலாறு என்று எங்கள் பெரியவர்கள் பரம்பரையிலே கேள்விப்பட்டது. மேல் எழுதப் பட்டதற்குத் தகவலாயிருக்கப்பட்ட தாம்மிரசாசனம் முதலானவைகள் எல்லாம் காலந்திரங்களிலே ராசீகங்களிலே கைசோர்ந்து போய்விட்டன. ௲அளஎ ஷு ஜூலை மாதம் உ௰௧ ௨ 1. தானீகம் சுப்பையன் ஒப்பிதம், 2. தானீகம் சடையப்பன் ஒப்பிதம்.

(கு-பு) :—

இப்பகுதி ஊதியூர்க் கிராமம் "உத்தண்ட வேலாயுதர்" என்ற ஸ்ரீசுப்பிரமணியரது ஸ்தல மகிமையினை எடுத்துக்கூறுவதாம். இத்தலம் தென்கரை நாட்டில் புன்னைவன க்ஷேத்திரத்திற்கு வடக்கில் அரையோசனை யில் சதுர்க்கிரி சீமையில் இருக்கப் பெறுவதாம் ; மற்று, இம்மலைக்குச் சிவ கிரி, சித்தகிரி என்ற பேர் வந்தகாரணமும், சித்தகிரியில் கொங்கணசித்தர் அம்மலை பொன்னும்படி சில மூலிகைகளின் உதவியைக்கொண்டு ஊதிப்புடம் இட்ட அக்காரணத்தால், "ஊதியூர்," எனப் பெயர் பெற்றது என்ருதியனவும் பல புண்ணிய தீர்த்தங்களுடைய வரலாறுகளும் இதில் சுருக்கமாக அத்தலத்துத் தானீகர்களால் விளக்கப்பட்டிருக்கின்றன. முற்றும் உள்ளது. மிகவும் சிதிலமாயது. பிழையுள. இது மெகென்ஸி மேனஸ் கிருபட்ஸ்ஸைச் சார்ந்ததாய், டைலர் துரை காட்லாக்கு மூன்ரும் வால்யும், 395-ஆம் பக்கத்தில் வருணிக்கப் பெற்றதாயும், பெரிய வால்யும் 3-ஆனதில் 258–ஆனபக்கங்களில் டைலர் துரையால் பெயர்த்து எழுதுவிக்கப் பெற்றதாயும் இருக்கிறது.

No. 3282 ஜயங் கொண்டேசுவரர் தேவஸ்தான வரலாறு (காரையூர்).

JAYAṄKOṆḌĒSUVARAR DĒVASTHĀNA VARALĀṞU (KĀRAIYŪR).

Pages, 2. Lines 20 on a page. Tamil, much injured, old. Extent, 60 granthas,

Begins on fol. 99(a) of the manuscript described under D. No. 3262.

This contains the history of the temple of Jayaṅkoṇḍēśwarar situated at Kāraiyūr Village in Kāṅgeyam Taluk and explains the various names of that God. The whole information is said to be based upon "Śivan Malaipuram". This is one of the collections of Col. Mackenzie and is described under No. 819 of Taylor's Catalogue and restored on (p. 261) of the restored Vol. No. 3. (larger Volumes).

Beginning :

தாராபுரம் துக்குடி காங்கேயம் தாலூக்காவுக்குச் சேர்ந்த நத்தம், கரையூர் கிராமம் செயங்கொண்டேசுரசுவாமி தேவஸ்தான குருக்கள் ஸ்தானீகன் எழுதிக்கொடுத்த கைபீயத்து,

பூர்வத்தில், ஆதி காலத்திலே சுப்பிரமணிய சுவாமி சூரசம்ஹாரம் பண்ணிக்கொண்டு தேவந்திரன் முதலான தேவரை யெல்லாம் சிறைமீட்டு வருகிறபோது காஞ்சிமாநதி தீரமான புண்ணியவன க்ஷேத்திரமான இந்த விடத்தில் சகலமான தேவரும் * * * * * தேவரீர் எங்கள் நிமித்தமாக "வீரம கேந்திரபுரிக்கு" எழுந்தருளி * * மெத்தவும் கருவிதனுயிருக்கிற சூரனைச் செயித்து

* * * * * * *

End :

இந்த வரலாருயிருக்கப்பட்ட சிவன்மலை தல புராணத்திலும் சொல்லி வருகிறது. இப்படிக்கு எங்கள் பெரியவர்கள் வமிச பரம்பரையிலேயும் கேள்வி * * * * * * தகவளா யிருக்கப்பட்டா சிலாசாசனங்களிலேயும் * * * * * * தகவலாயிருக்கப்பட்ட சாசனங்கள் முதலானவை * * * * * * ராசரீகத்திலே கை சோர்ந்து போய்விட்டது. தூஅான ஸ்ரீ சூலை டீ௴ உச உ நத்தங் கரையூர் சிவஞான பண்டிதன் ஒப்பிதம், ஸ்தானீகன் நஞ்சையன் ஒப்பிதம்.

(கு-பு) :—

இப்பகுதி, காங்கேயம் தாலூக்காவில் நத்தம், கரையூர் கிராமத்துச் "செயங்கொண்டேசுவர சுவாமி," யென்னும் வீரமயேந்திர புரமேற் சென்று சூரபத்மனை வென்றருளியே முருகப்பிரானுரது தேவஸ்தான

வரலாற்றை எடுத்து உணர்த்துவதாம். இதில், இத்தலத்துக்குள்ள பெயர்களில் இப்புண்ணிய தலத்து இந்திரன் சூரனை வென்று ஆண்மைபெற்றவத்தால், "ஆணூர்" எனவும், அவனுக்கு ஜயத்தைக் காட்டிய வத்தால் முருகப்பிரானுர் "செயங்கொண்டேசுவரர்" என்ற பெயருங் கொண்டனர் எனவும், மேகவாகனன் ஆம் இந்திரன்தான் சிவனைப்பூசித்ததால் (கார் மேகம்) "கரையனூர்," எனவும், ஆக இவ்வகையான பல பெயர்களும் இத்தலத்துக்குக் காரணப் பெயர்களாய் அமைந்தன; இவ்வரலாறுகளுக் கெல்லாம் ஆதாரமான நூல், "சிவன்மலை தல புராணம்," என்றதாய் இவ் விருத்தாந்தங்கள் எல்லாம் புலனுகின்றன. இது மெகென்ஸி துரையால் சம்பாதிக்கப்பெற்றது. டைலர் காட்லாக்கு 819-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றும், ஷெ பெரிய வால்யும் 3-ஆவது 261-ஆன பக்கங்களிற் பெயர்த்து எழுதப் பெற்று முள்ளது. முற்றும் உள்ளது. மிகச் சிதிலமானது. பிழைகள் உள.

No. 3283. சோழன் பூர்வ பட்டையம்.

CŌḺAN PŪRVAPAṬṬAIYAM.

Pages, 72. Lines 28, 30 on a page. Tamil: injured old. Extent, 1,620 granthas. Printed. Incomplete.

Begins on fol. 15 (a) of the manuscript described under D. No. 455.

Same work as that described under No. 791, Vol. III, p. 458.

(கு-பு):—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2981—ஆம் எண்ணில் வருணிக்கப்பெற்றதிலிருந்து பெயர்த்து எழுதிவைக்கப் பெற்றிருப்பது போலக்காணப்படுகிறது. டைலர் துரை காட்லாக்கு 3 ஆம் வால்யும், 458-ஆம் பக்கம், 791-ஆம் எண்ணில் வருணித்துக் கூறப்பெற்றதேயாம்.

No. 3284. புதுவை இடங்கை வலங்கை சாதியார் வரலாறு.

PUDUVAI IḌAṄKAI VALAṄKAI JĀTIYĀR VARALĀṞU.

pages. Paper, 34, 14×9"; Lines 9—30 on a page. Tamil, good, new, 320 granthas.

Begins on fol. I (a); the other works herein are:—

Neṟumbūr kuṟumbark kōṭṭai varalāṟu 20 a.

Tamiḻ rājākkaḷ kāla oḻuṅku 24 a.

Ātoṇḍai cakravarti varalāṟu 31 a.

Maduraīt talakkōvil uṇḍāna varalāṟu 39 a.

72

Pāṇḍiya mannavar vamśāvaḷi 40 a.
Meckenzie turaiyin kēḻvikaḷ 43 a.
Tirunārāyaṇapura dēvasthāna tiruppaṇimālai 45 a.
Āyakkuḍi jamīndāri kumārakoṇḍama nāyakan vamiśāvai 47 a.
Padumācala varalāṟu 57 a.
Koṇḍama nāyakan śāsanam 56 a.
Kannivāḍi maṇkōṭṭai Durkkai Amman kōvil varalāṟu 61 a.
Naman kuṟicci Pūcceyanāyakan śāsanam 64 b.
Nallūri tāmira śāsana nakal 65 a.
Diṇdukkal ellaippuṟa viḷainilapporuḷ, etc., 67 b.
Nilakkōṭṭai jamīndāri kūḻappanāyakan vamiśāvaḷi 79 b
Kāḷahasti rājākkaḷ vamśāvaḷi 82 a.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY 27 OCT 1957

This is the originaḷ of the manuscripts described under Nos. 3196 to 3206.

Same work as that described under No. 800 of Taylor's Catalogue, p. 351.

(கு-பு) :—

இந்த வால்யும் முன்னம் வந்துள்ள D. 3196–3206-ஆன எண்களிலே வருணிக்கப் பெற்றுள்ள பகுதிகளுக்கு மாதுருகையாகும். மெகென்ஸிதுரை திரட்டியவைகளில் ஒன்ருய் டைலர்துரை காட்லாக்கு, 351-ஆம் பக்கம், 800-ஆம் எண்ணின் குறிப்புகளில் வருணிக்கப் பட்டுள்ளது. முன்பு இம் முதற்பகுதியினது ஏடுகள் யாவுமே மிகவும் பொடிப் பொடியாய்ச் சிதைவுற்று ஒவ்வொரு ஏடுகளிலும் ஒரு சிறிய பகுதியே மிகுதியாய் நிற்கின்றதாய், நாம் கையினுற்றொடவுந் தகுதியற்ற தாய், அத்துணை சிதைவுபட்டிருந்தது. இப்பொழுது அங்ஙனம் சிதைந்த பகுதிகளனைத்தையும் சேர்த்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதிற்கண்ட சாரங்களை இனி நாம் இதன்மாதுருகையாம் D–3196-ஆம் எண் பிரதியைக் கொண்டே தெளிய வேண்டியிருக்கின்றது. ஆனுல், உள்ளபகுதிகளில் எழுத்துமாத்திரம் பிழைபட எழுதப்பட்டிருந்தபோதிலும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. இப்போது முதலிற்காணப்படும் ஏட்டிற்கண்ட விடயம் ஷை எண்ணின்பாதியில் 9-ஆம் பக்கத்தின் கடைசியில் 17-ஆம் வரியில் தொடங்கப்பட்டுள்ளது. முன்னுள்ளபகுதிகள் உள்ள ஏடுகள் சிதறுண்டன போலும். 19–20 என்ற இவ்விரண்டேடுகளும் எழுதப்பெருமலிருக்கின்றன.

No. 3285. நெறும்பூர் குறும்பர் கோட்டை வரலாறு.

NEṞUMBŪR KUṞUMBAR KŌṬṬAI VARALĀṞU.

Pages, 8. Lines 11—22 on a page. Tamil, good, old, 55 granthas.

Begins on fol. 20 (a) of the manuscript described under No. 3284. Complete.

This is the original of the manuscript described under D. No. 3197.

Same work as that described under No. 800 of Taylor's Catalogue, p. 351.

(கு-பு) :—

இது, மெகென்ஸி துரையாற் றிரட்டப்பெற்றவைகளுள் ஒன்றாய் டைலர் துரை காட்லாக்கு, 351-ஆம் பக்கம், 800-ஆம் எண்ணில் குறிக்கப்பெற்ற தாயும், D–3197-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாகவும் ஆகியிராநின்றது. எழுத்து அத்துணை செவ்வனே இல்லை. முற்றும் இருக் கிறது. குறும்பர்க்குரிய கோட்டைகள் இத்துணையன எனக்கூறுவது. எழுத்துப்பிழை மிகவிருக்கின்றன.

No. 3286 தமிழ் ராஜாக்கள் கால ஒழுங்கு.

TAMIL̠ RĀJĀKKAL̠ KĀLA OL̠UṄGU.

Pages, 14. Lines 12—15 on a page. Tamil, good, old, Extent, 37 granthas,

Begins on fol. 24 (a) of the manuscript described under No. 3284. Complete.

This is the original of the manuscript described under D. No. 3198.

(கு-பு) :—

இது மெகென்ஸி துரையால் சம்பாதிக்கப்பெற்றது. டைலர்துரை காட் லாக்கு, 351-ஆம் பக்கம், 800-ஆம் எண்ணின் குறிப்பில் காணப்பெற்ற தும், D–3198-ஆம் எண்ணின் பிரதியின் மாத்ருகைப் பிரதியும் ஆகும். முற்றும் உள்ளது. எழுத்துப்பிழைகள் உள.

No. 3287. ஆதொண்டை சக்கரவர்த்தி (நாககுமாரன்) வரலாறு.

ĀTOṆḌAI CAKKARAVARTHI (NĀGAKUMĀRAN) VARALĀṞU.

Pages, 16. Lines 32—25 on a page. Tamil, good, old. Extent, 238 granthas.

Begins on fol. 31 (a) of the manuscript described under No. 3284. Complete.

This is the original of the manuscript described under D. No. 3199.

(கு-பு) :—

இது மெகென்ஸி துரையால் சம்பாதிக்கப்பெற்றது. டைலர்துரை காட்லாக்கு, 35-ஆம் பக்கம், 800-ஆம் எண்ணின் குறிப்பில் குறிக்கப்பெற்றுள்ளதாய், D. 3199-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றுள்ள பிரதிக்கு மாத்ருகை பிரதியாகவும் இருக்கிறது. இதிலுள்ள நாயகனும் ஆதொண்டைச் சக்கிரவர்த்திக்கு "நாககுமாரன்" ஆனமைபற்றி இப்பெயரும் வழங்கப்படும்போலும். மிகப்பிழைகள் காணப்பெறுவதோடு எழுதின முறைமையும் அத்துணை நன்ருகவில்லை. பல ஏடுகளில் அடியோடு எழுத்தின் மை அழிந்து உள்ளது.

No. 3288 மதுரைத் தலக்கோயில் உண்டான வரலாறு.
MADURAIT TALAKKŌYIL UṆḌĀNA VARALĀṞU.

Pages 3. Lines 29—32 on a page. Tamil, good, old. Extent 56 granthas.

Begins on fol. 39 (a) of the manscript described under No. 3284.

This is the original of D. No. 3200.

Complete.

(கு-பு) :—

இது மெகென்ஸி துரையால் சம்பாதிக்கப் பெற்றது. டைலர் துரை காட்லாக்கு, 351-ஆம் பக்கம், 800-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப் பெற்றதாயும், டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு, 3200-ஆம் எண்ணின் பிரதிக்கு மாதுருகையாகவும் அறியப்படுகின்றது. முற்றும் உள்ளது. எழுத்துப் பிழைகளுள. பல ஏடுகள் கிழிந்தும் சிதைந்தும் உள.

No. 3289 பாண்டிய மன்னர் வமிசாவளி.
PĀṆḌIYA MANNAR VAMIŚĀVAḶI.

Pages, 5. Lines 25—41 on a page. Tamil, good, old. Extent, 110 granthas.

Begins on fol. 40 a of the manuscript described under No. 3284.

Complete.

This is the original of the manuscript described under No. 3201.

(கு-பு) :—

இது மதுரையில் அரசாண்டிருந்த பல பண்டைய பாண்டிய மன்னர்களது வம்ச பரம்பரையை யெடுத்து உணர்த்துவதாம். மெகென்ஸி துரையால் சம்பாதிக்கப் பெற்றது. டைலர் துரை காட்லாக்கு, 351-ஆம் பக்கம், 800-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப்பட்டுள்ளதும், டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு, 3201-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகை பிரதியும் ஆம். முற்றும் உள்ளது. எழுத்துப் பிழைகள் இருக்கின்றன. முன்பு ஏடுகள் கிழிந்திருந்தன. இப்பொழுது மெண்டிங் செய்யப்பட்டுள்ளது.

No. 3290. மெகென்ஸி துரையின் கேள்விகள்.

MACKENZIE TURAIYIN KĒḶVIKAḶ.

Page, 4. Lines 11—34 on a page. Tamil, good, old. Extent, 40 granthas.

Begins on fol. 43 (a) of the manuscript described under No. 3284. The fol. 44 b is left blank.

Complete.

This is the original of the manuscript described under D. 3202—Viz. the questions put forth by Col. Mackenzie.

The reply for these questions is contained in D. 3186.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு, 3202-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகை பிரதியாகும். மெகென்ஸி துரை புத்தகங்களுள் சேர்ந்ததாய், டைலர் துரை காட்லாக்கு, 351-ஆம் பக்கத்தில், 800-எண்ணின் பிரதியின் குறிப்பில் வருணிக்கப் பெற்றதாயும் உள்ளது. இதற்குறிய விடைகளை 3186-ஆம் எண்ணில் வந்துள்ளதைப் பார்த்துத் தெரிந்துகொள்ளவும். ஏடுகள், 'பாணம்,' என்ற புழுக்களால் தின்னப் பெற்றிருக்கின்றன. எழுத்துப் பிழைகள் மிகக் காணப்படுகின்றன. இதில் கேள்விகளின் எண்ணிக்கை சரியாகக் குறிக்கப் பெறவில்லையாயினும், ஷ எண்ணின் பிரதியில் வினவும்—நேராக விடையுமாக, 13 தலையங்கமும், எண்ணும் கொடுத்து எழுதப்பெற்றுள்ளதை நோக்குக.

No. 3291. திருநாராயணபுரம் தேவஸ்தானத் திருப்பணி மாலை (விட்டுக்காட்டித் தாலூகா, திருச்சி ஜில்லா).

TIRUNĀRĀYAṆAPURAM DĒVASTHĀNAT TIRUPPAṆIMĀLAI.

Pages, 4. Lines 20—26 on a page. Tamil and Telugu, good, old. Extent, 55 granthas.

Begins on fol. 45 (a) of the manuscript described under No. 3284.

Complete.

This gives an account of the history of the temple at Tirunārāyaṇapuram in Viṭṭukaṭṭi Taluq in Trichy Dt. the works like, the building of Vimāna, Vāhanas for festivals, etc., done for the temple by various kings of the land are given and hence the work, named is, " Tiruppaṇimālai " which means " list of works " done for the temple.

This is described under No. 800 in page 351 of the Taylor's. Catalogue.

Beginning :

திருச்சிராப்பள்ளி கசுபா, விட்டுக்கட்டித் தாலூகா, திருநாராயணபுரம் தேவஸ்த்தானத் திருப்பணிமாலே :—

ஆதியிலே திரிபுவன சக்கிரவர்த்தி யானந்த மணிமாடத்தான் வேதியர்கள் முனிவர் திருப்பிரதிட்டைபண்ணி வீதியணியணியாய் வாழ மாதுளை வங்களவிண்டலம் வெல்லு, மதுரகவியதிராசர் மகுடந்தந்த வீரசக்கிரவர்த்திராயன் நீணிலத்தில் நெய.....................யாமே.

End :

கனகமணி கசிதநவ கோபுரங்....................................
வகுபூஷண ராசமாணிக்க கீர்த்தியாம். வசுமதியில் மிக வாழியவே......

(கு-பு) :—

இது, திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் விட்டுக்கட்டி தாலூகா, திருநாராயணபுரம் தேவஸ்தானத்துக்குரிய தொன்று தொட்டுவரும் திருப்பணிவரிசைகளை யுணர்த்திவரும் " திருப்பணிமாலே " யென வழங்கப்படும் தமிழ்ப் பிரபந்தமாகும். இங்கு, ஐந்து பாடல்களே. மிகவெழுத்துப் பிழைகளுடன் உடனுக்குடனுய் ஒரு ஆந்திர வியாக்கியானத்துடனும் எழுதப்பட்டுக் காணப்படுகின்றன. அத்தெலுங்கு உரையும் மிகவெழுத்துப் பிழையுடன் உள்ளது. இதன் ஏடுகள் 2-ம் மிகப்புழுவரிக்கப் பெற்று, கிழிந்தும், படித்தற்கரியதாயிருக்கின்றன. ஆயினும், இத்தமிழ்ப்பாடல்கள் மாத்திரம் செந்தமிழ் நடையில் அமைந்தவையாம். எழுதுவோர் தாம் பிழைபட எழுதினுர்கள் அதனே, இனி இதிலிருந்து நாம் இத்திவ்விய தலத்துள் அமர்ந்துள்ள வேதநாராயணன்றன் கோயிலுக்குத் திரிபுவன சக்கிரவர்த்தி முதலியோர் பலரும் செய்து போந்த திருப்பணி வரிசைகளே உணர்ந்து கொள்ளலாம் என்பது. இப்பகுதியைக் குறித்து டைலர் துரை தாம் தமது காட்லாக்கில் 351-ஆம் பக்கம் 800-ஆம் எண்ணின் குறிப்பில் குறிக்கின்ருராயினும் இதனேப் பெயர்த்து எழுதிவைத்திருப்பதாகக் கூறவும் இல்லே ; மற்று, அவ்வெண்ணின் பிரதியைப் பெயர்த்தெழுதப்பெற்ற பகுதியிலும், D. 3203-ஆம் எண்ணின் பகுதிக்கு முன்னுக இருத்தற்குரியது. அவண் பிரதி செய்து காணப்பெறவுமில்லே. அதற்கு ஏது இப்பகுதி அக்காலேயிலேயே மிகச்சீர்ணமாயிருந்ததுபோலும். தமிழ்ப்பாட்டையும் தெலுங்கு உரையையும் ஓரிடத்திற் பெயர்த்து எழுதவல்லார் இல்லாமையும் ஈர் காரணமாய் அமையலாம் என்பது. இப்போது இதனேப்படித்து உணர்தல அரிதிலும் அரிதாயிருக்கிறது. இதிற்கண்ட பண்டைய மன்னர்களின் பெயர் ஆவன :—

(1) திரிபுவன சக்கிரவர்த்தி, (2 பிருது சக்கிரவர்த்தி, (3) சிபி சக்கிரவர்த்தி, (4) மது சக்கிரவர்த்தி, (5)நள சக்கிரவர்த்தி, (6) நர சக்கிரவர்த்தி.

No. 3292. ஆயக்குடி ஜமீன்தாரி குமார கொண்டம நாயக்கன் வமிசாவளி.

ĀYAKKUḌI JAMĪNḌĀRI KUMĀRA KOṆḌAMA NĀYAKKAN VAMIŚĀVAḶI.

Pages 8, Lines 29 on a page, Tamil, good, old, Extent, 123 granthas.

Begins on fol. 47 (a) of the manuscript described under D. No. 3284.

Complete.

This is the original of the manuscript described under 3203.

(கு-பு) :—

இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 3203-ஆம் எண்ணின் பிரதிக்கு மாதுருகைப் பிரதியாம். மெகென்ஸிதுரைப் புத்தகங்களிற் சேர்ந்தது. டைலர் துரை காட்லாக்கு 800-ஆம் எண்ணின் குறிப்பில் குறிக்கப்பெற்றிருக்கிறது. 351-ஆம் பக்கம் நோக்குக. ஏடுகள் சிதைவுற்றிருக்கின்றன; மிகப் பிழைபட எழுதப்பெற்றுள்ளது. எழுதின முறையும் அத்துணை நன்றாக இல்லை. நிற்க, இம்மாதுருகைப் பிரதியிலே இதுபோது 3-ஏடுகள் காணப் பெறவில்லை; ஆகவே, இதன் மாதுருகைப் பிரதியில் 68-ஆம் பக்கம் 1-ஆம் வரியிற்கண்ட "நாம் வரத்தக்கதில்லை. நீங்கள்போய் அறிக்கை செய்து கொள்ளலாம் என்று சொன்னார்," என்ற பகுதிவரையிலுமே இப்போது காணப்படுகின்றது. நோக்கிக்கொள்க.

No. 3293. பதுமாசல வரலாறு.

PADUMĀCALA VARALĀṞU.

Pages 10, Lines 24—18 on a page, Tamil, good, old, Extent, 102 granthas.

Begins on fol. 51 (a) of the manuscript described under D. No. 3284.

Complete.

Same work as that described under No. 800 of Taylor's catalogue P. 351.

This is the original of the manuscript described under D. 3204. This belongs to Collections of Col. Mackenzie. Some pages are not properly arranged and some are stuck up into one and could not be separated and deciphered. Hence some portions are left (blank) undescribed.

(கு-பு) :—

இது முன்னர், 3204-ஆம் எண்ணில் வந்துள்ளதுக்கு மாத்ருகைப் பிரதியாகும். மெகென்ஸிதுரை திரட்டியவைகளில் ஒன்றாய் டைலரது காட்லாக்கு 351-ம்ஆம் பக்கம் 800-ஆம் எண்ணில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. இதன்

ஏடுகள் சிதைந்துள. இதன் பின்னர் 57 (a)-ஆம் ஏடு முதல் 81 (b) ஏடு வரையில் பலவிடயங்கள் ஒன்றேடொன்று தொடர்பில்லாமல் தலைகீழாகவும் குறுக்காகவும் எழுதப்பெற்றும், இதுபோது பல ஏடுகள் குறுக்காக வைத்துத் தைக்கப்பெற்றும், பிரித்து ' பார்க்கவுங்கூட இயலாமல், உள்ள விடயங்களைத் தெரிந்துகொள்வதற்கும் இயலாவண்ணம் அத்துணை, அரிதாயிருக்கின்றனவாதலின் அப்பகுதிமாத்திரம் ஈண்டு (காட்லாக்கில்) வருணிக்கப் பெறுமலே விடப்பட்டு உளது. நிற்க, அங்ஙனேயே முன்னர் இதைப் பெயர்த்துப் பிரதிசெய்யப் புகுந்தவரும், ஷை பகுதிமாத்திரம் பிரதிசெய்ய வியலாது என வாளாவிடுத்து மற்றைய பகுதிகளை மாத்திரம் பெயர்த்து எழுதிவைத்திருப்பதுவும் குறித்துக்கொள்ளத்தக்கது. இதைப்பற்றி P. 114. "This portion only should be written" எனும் ஆங்கிலக் குறிப்பும் காணப்படுகிறது.

No. 3294. (குமார) கொண்டம நாயக்கன் சாஸனம்.

(KUMĀRA) KOṆḌAMANĀYAKKAN ŚĀSANAM.

Pages, 10, Lines 35—13 on a page, Tamil, good, condition, old, Extent—64 granthas.

Begins on fol. 56 (a) of the manuscript described under D. No. 3284.

Complete.

This relates to the gift of a place known as "Koṇḍama (Naickan) Samudram or puḍukkarai Valhi to Sri Paramesvara Bhattar S/o Alagaravaiyyar, of the Atreya gotra.

Beginning :

குமார கொண்டம நாயகன் சாஸனம்.—

ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாஹந ஸவாப்த சகாப்தம் க. ஸ்ரீஸம் சதஅாயசஅு இதன்மேற் செல்லா நின்ற விஜய நாஸம் வதஸ்ரதி. சித்திரைமீ' உம-உ வெள்ளிக்கிழமையும் பக்ஷத்துப் பஞ்சமியும் உரோஹிணி நக்ஷத்திரமும் * * * *
ஆயக்குடி படாகையில் வால்மீகி தேசத்தில் இம்முடிப்பட்டத்துக் குமார கொண்டம நாயக்கன் குமாரன் ஒபள கொண்டம நாயக்கர் புத்திரன் குமார கொண்டம நாயக்கன் புதுக்கரை வழிக்குப் பிரதிநாமமான "குமார கொண்டம சமுத்திரம்" தாராதத்தம் பண்ணினபடி : ஆத்திரேய கோத்திரத்தில் ஆபஸ்த்தம்ப ஸூத்திரத்தில் கிடாம்பி அழகரவையன் புத்திரன் பரமேசுவர ஐயன்கையில் * * * *
பூதானம் பண்ணிக்கொடுத்தோம்.

End :

இந்தப்படிக்குத் தாநாதி விக்கிரயங்களுக்கும் யோக்கியமாக அக்கிராகாரமும் பட்ட விருத்தியும் தான சாஸனம் பண்ணிக் கொடுத்தோம். * * * * * * * * *

கோபால செட்டியார் [சொ] (சு)ந்தரப்பெருமான்.

(கு-பு) :—

இது, ஆயக்குடி (குமார) கொண்டம நாயக்கன் அவர்கள் தாம் ஆத்திரேய கோத்திரத்தினர் அழகரவையன் புத்திரனுர் பரமேசுவர பட்டர் ஐயர் கையில் ஷெ புதுக்கரைவழி அல்லது கொண்டம (நாயக்கன்) சமுத்திரம் என்ற ஊரைத் தாரைவார்த்துக் கொடுத்துச் சாசனம்பண்ணினபடியை எடுத்து விளக்குகின்றது. பிரதிமிக எழுத்துப் பிழையுடன் இருக்கின்றது. சிதைவுற்றிருந்து பின்பு ஒழுங்கு செய்யப்பெற்ற பிரதியாம்.

No. 3295. கன்னிவாடி மண்கோட்டை துர்க்கையம்மன் கோவில் வரலாறு.

KAṈNIVĀḌI MAṆKŌṬṬAI DURKKAIYAMMAN KŌVIL VARALĀṞU.

Pages 7, Lines 18—24 on a page, Tamil, good ,old, Extent 40 granthas.

Begins on fol. 61 (a) of the manuscript described under D. No. 3284.

This contains an account of the circumstances under which the Temple of Durgai amman was constructed here and the arrangements made for its worship, etc.

Beginning :

௲அராயசுஷூப, அக்டோபர்மீ உல, கன்னிவாடிக்குச் சேர்ந்த ராஜதானியில் மண் கோட்டைக்குள் இருக்கப்பட்ட துர்க்கையம்மன் கோவில் வரலாறு :

நூறு வருஷத்துக்கு முன்னுக வடக்கேயிருந்து ராவுத்தன் மண்கலசத்தில் துர்க்கையம்மனே அவர்கள் ஆவாகனம் பண்ணிக்கொண்டுவந்து ஷெ கோட்டை கிழக்குவாசலுக்கடுத்த வுள்ளாக சமையிருக்கப்பட்ட ஸ்தலத்தில் இவன் கொண்டுவந்த மண்குடத்தைப் பூமியிற் புதைத்து மேலே மண் விக்கிரகம் பண்ணிவைத்து ஷெ ஜமீன்தார் உத்தரவு பிரசாரத்துக்குப் பிரதிஷ்டை செய்துவைத்தார்கள். * * * * * * * *

End:

அதை ஜனங்கள் பார்த்துப்பயந்து காய்ச்சல் கண்டு நிரம்பவும் உபத்திரவமாகிறது. இந்தச் சல்லியத்திஞலே முன்னிருந்தபேர்கள் மந்திரத்துடனே விலங்குபோட்டு இருக்கிறது. ஷெ கோவிலுக்கு வடக்குப்பார்த்த

வாசல், இதுக்குத் தக்ஷிணதிக்கு நஞ்செய் * * * * புஞ்செய் * * * * * இவர்களே செய்கிறது ? இப்படிக்குக் குடிகளும் ஜமீன்தார் முதலானவர்களும் சொல்லு கிறார்கள்.

(கு-பு) :—

இது கன்னிவாடியில் மண்கோட்டை ஸ்தலத்தில் அமைந்ததொரு துர்க்கையம்மன் கோவிலினது வரலாற்றையெடுத்து உணர்த்துவதாகும். மிகச் சுருக்கமானது. பிழைகள் மிகவுள.

No. 3296. நமன்குறிச்சி பூச்செய நாயக்கன் சாஸனம்.

NAMAN KUṞICCI BHŪCCEYA NĀYAKAN ŚĀSANAM.

Page 1, Lines 18 on a page, Tamil, good. old, Extent, 9 granthas.

Begins on fol. 64-(b) of the manuscript described under D. No. 3284.

Complete :—

Same work as that described under No. 800 of Taylor's catalogue on page 351. Relates to the donation lands of the village Naman kuṟichi and other villages donated to the villager's by Bhucceya Nayakkan.

Beginning:

ஸ்ரீஸாலிவாஹந ஸகாப்த சூஸரு௵ இதன்மேற் செல்லாநின்ற பிரசோத்பத்தி௵ சித்திரைமீ உ-வ சுபவாரமும் * * * * * * * *ஸ்ரீ திருமலே பூச்செய நாயக்கர் சகோதர ஒவள பூச்செய நாயக்கர் குமார "வீரபூச்செய நாயக்கர்" நமன் குறிச்சிக்கு, இதனுட்சேர்ந்த சீரங்கன்பட்டி, மாதன பட்டி, நாகமங்கலம், தீரணிப்பட்டி * * * மடத்துப்பட்டி முதலான கிராமத்தில் * * * முதலாகிய பேர்களுக்குச் சிலா சாதனப்பயமாகக் கல்வெட்டிக் கொடுத்தபடி :—இந்தச் சிவஸ்த்தலம் நம் முடைய வமிசத்திலே பிரதிஷ்டை பண்ணினதினால் அபிமானமான, தரும மானபடியினாலே

* * * * * *

End :

சிலாசாதனப்படி நடப்பிவிக்கிறது. ஊர் சீமைக்கும் உடன் சாதனம் பண்ணிக் கொடுத்தோம். இந்தப்படிக்குச் செட்டி வர்த்தகர் குடியானவர் பலரும் நம்மை நம்பிக் குடியிருந்து சொகத்திலே யிருக்கவும். இந்தத் தருமத்துக்கு * * * * போகக்கடவர்கள்.

(கு-பு) :—

இது, நமன் குறிச்சி பூச்செய நாயக்கர் அவர்கள் அக்கிராமவாசிகளுக்கு அதனையும் அதற்குட்பட்ட சில கிராமங்களையும் இறையிலியாகக் கொடுத்துச் சிலாசாஸனமும் பண்ணிக்கொடுத்ததனை யெடுத்து விளக்குகின்றது. மெகென்ஸி மேனஸ் கிரிப்ட்ஸ்களில் சேர்ந்தது. டைலர் துரை கேட்லாக்கில் 351-ஆம் பக்கம் 800-ஆம் எண்ணில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. முற்று முளது. மிக எழுத்துப்பிழையுள. முன்பு மிகவுஞ் சிதைவுற்றிருந்தது. இப்பொழுது ஒழுங்கு செய்யப்பட்டுளது. ஆனால் இதிற்கண்ட கோவிலின் சுவாமி இன்ன பெயரினர் என்பது விளங்கவில்லை. இன்றைக்கு 259-வருடங் களுக்கு முன்னரே ஏற்பட்ட சிலாசாஸனமாகும்.

No. 3297. நல்லூரி தாமிரசாசன நக்கல்.

NALLŪRI TĀMIRA ŚĀSANA NAKAL.

Page 5, Lines 8—29 on a page. Telugu and Tamil, good, old. 43 granthas.

Begins on fol. 65 (a) of the manuscript described under D. No. 3284.

Complete.

This relates to the copper plate found in " Nallūri " containing the informations about the lands and villages donated for the providing facilities to the Pilgrims coming to Srīrangam.

The donations appear to have been made when Veera Venkata Varadarayar was ruling ' Kanagiri.'

This is one of the collections of col. Mackenzie and is included in the mss. described under No. 800, page 351 of Taylor's catalogue.

(கு-பு) :—

இது மதுரைக்குச் சேர்ந்ததாம். விசங்கி நாட்டு நல்லூரில் இருக்குமதாய் ஓர் தாமிர சாசனத்தின் பிரதியாகும்; இது " ஸ்ரீ விசுவநாத விஜயரங்க சொக்கநாதய்யவாரு " என்னுமவர், "வெங்கம்பட்டலுவாரு," என்பவருக்கு அக் காலையில் மீனாக்ஷி நாயுடு நடத்திய அன்னதான தரும சத்திரமதை இடையருமல் நடத்திவருவதற்காக, ஸ்ரீரங்கம் காவேரிக் கரையின் " கிருஷ்ணப்ப நாயக்கன் படித்துறையில்," ரதசப்தமி புண்ணிய காலத்தில் ஸ்ரீரங்கநாதன் சந்நதியில் தருமமாகப் பல ஊர்களையும், மற்று எல்லா உரிமைகளையும் கொடுத்து அதனைத் தாமிர சாசனமாக்குவித்த தனையுமெடுத்து விளக்குகின்றது. மற்று, இக் கட்டளை சகாப்தம் 1648௵ கனிகிரியில் (கனகிரி) " ஸ்ரீவீரவேங்கட வரதராயர் " என்ற

77

வள்ளல் அரசாண்டிருக்குங் காலையில் ஏற்பட்டது என்பது முதலிற் காணப்படும் தொடர்மொழியால் தெரிகின்றது. இதில் கண்டிருக்கும் சில ஊர்களின் பெயர்கள் வருமாறு :—

ஆயிதம்பட்(டு)லு, பணப்பாறை, விராலி மலைக்குக் கீழ்த் திசையில் ராஜுகிரி, கீரனூர், கடங்கங்குடி, ஆங்குடி, சிங்கம்பட்டி, புல்லப்பட்டி என்பவைகளாம். இதில், முற்றும் இருக்கிறது, தெலுங்கு பாஷையி லானது தெலுங்கு எழுத்திலேயே எழுதப்பட்டுமுள்ளது.

இது மெகென்ஸி துரையால் சம்பாதிக்கப் பெற்றது. டைலர் துரை காட்லாக்கு 351 ஆம் பக்கம் 800 ஆம் எண்ணில் வருணிக்கப்பெற்றதிலே யடக்கமானது. ஆனல் இப்பகுதியை மாத்திரம் யாது காரணம்பற்றியோ டைலர் துரை ஒரு சிறிதும் குறித்துக் கூறினரில்லை. மிகச் சிதைவுற்றிருந்து ஒழுங்கு செய்யப்பெற்றது. எழுத்துப் பிழைகள் உள்ளன.

No. 3298 திண்டுக்கல் எல்லைப்புறம் விளைநிலப் பொருள்களும், நிலவரி வருமானங்களும்.

DIṆḌUKKAL ELLAĪPPUṞAM VIḶAINILAP PORUḶKAḶUM NILAVARI VARUMĀNAṄGAḶUM.

Pages 24, Lines 12—24 on a page, Tamil, good, old, Extent, 479 granthas.

Begins on fol. 67 (b) of the manuscript described under D. No. 3284.

Complete.

This gives an account of the extent of wet and dry lands in the villages around Dindigul, the crops that are cultivated, their value, the rivers and lakes that are in those villages are given. It also contains particulars about the taxes collected in those villages and the incomes derived by the villagers.

Beginning :

திண்டுக்கல் வகையராவில் தாடிக்கொம்பு துக்குடிக்குச் சேகரம் **வல்லக்கொண்டம** நாயகன் பாளையபட்டில் தென்னம்பட்டி மிட்டா சேகரம் கசுபா தென்பட்டியில் இருக்கும் **சிவனடியார் பிள்ளை** தெரியப்படுத்தின ஓலை முகாந்திரத்தில் எழுதியிருந்த செய்தி—தாதுஸு வையாசிமீ ௳௰௨ ஷ ஊருக் குளத்தில் சுவாமி வந்து பிரசன்னமாயிருக்கிறதும், வரங்கள் கொடுக்கிற சமாசாரங்களும் விவரமாக எழுதச் சொல்லியும் உத்திரவு வந்தது. ஷ ஊருக்கு மேற்கு முள்ளிமடை உள்வாயில்மடை குளக்கரையில் ஒடையபுத்தில்த் தென்புறம் ஒரு புத்து இருக்கிறது. அந்தப் புத்தின் அடியில் ஷ ஊர்க்கணக்கு நடலிங்க முதலியார் பேரில் நாள சித்திரைமீ ௳௰௨ சனிக்கிழமை முதல் சுவாமி தண்டாயுதபாவ ஆராதனையாகி ஷ புத்து அடியிலிருக்கிறார். அந்த இடத்தில் ஒரு கொட்டகையும் கட்டியிருக்கிறது.

* * * * * * * * * * *

End :

விளைவு :—சிறுமலையில் கேப்பை, தேசண், மலைசாமை, மொச்சை, கொட்டைமுத்து, கடுகு, மிளகாய், கத்திரி, * * * * * * * * * * *

ம : உ. மெ. மணிக்குக் கொல்லப்பட்டி கெச்சாலப்ப நாயக்கர். ஜமீன்தாரீ காரியஸ்த்தர் ; பாலசுப்பிரமணிய பிள்ளை வந்தார். ஸ்மார்த்த தமிழ்ப் பிராம்மணர். * * * * * * *

(கு-பு) :—

இது திண்டுக்கல்லுக்குச் சுற்றுப்புற எல்லைக் கிராமங்கள் பலவற்றிலும் சென்று அந்தந்த ஊர்களில் உள்ள பல புலன்களையுந் தெரிந்துகொண்டு அங்கங்கேயுள்ள நஞ்சை புஞ்சை முதலான தலங்களில் விளையும் பல தானியங்களையும், ஆறு கோயிற் குளம் குகை வரி, வருமானம் முதலான வைகளையும் தெரிவிக்கும் முறையிலே யமைந்து உள்ளது. இதில் கண்ட ஊர்களின் பெயர்களில் சில பின்வருமாறு :—

தென்னம்பட்டி, முள்ளிப்பட்டி, சுக்காம்பட்டி, புதுப்பட்டி, மேலாற்றுக் கிராமம், கொளத்தூர் மிட்டா, பாடியூர், செட்டி நாயகன்பட்டி, சிறுமலை, அம்மைய நாயக்கனூர் பாளையப்பட்டு, குட்டம் மிட்டா, வெல்லபட்டி, அம்மட்டரை பாளையப்பட்டு, மதுரை திருமலை நாயக்கர் பழைய அரண்மனை, செங்குந்தர்மலை, பூதங்கள் குடத்தாட்டுக் குளம், திருமங்கலம், எட்டயபுரம், கொல்லப்பட்டி, என்றின்னோரன்ன பல ஊர்களும் பிறவும் ஆம். நிற்க, விஷயங்களில் யாவும், தொடர்பின்றியிருக்கின்றன. அவை தலைகீழாகவும் அங்கங்கே யெழுதப்பட்டு, இருக்கின்றன. முன்பு ஏடுகள் சிதலுற்றிருந்தன. இப்பொழுது ஒழுங்குபடுத்தப்பட்டுளது. மிக எழுத்துப் பிழையுடன் காணப் படுகிறது. அங்கங்கே எழுத்து மை அடியோடு அழியப்பெற்று படிப்பதற்கு அரிதிலும் அரிதாயுள்ளது.

No. 3299. நிலக்கோட்டை ஜமீன்தாரி கூளப்ப நாயக்கன் வமிசாவளி.

NILAKKŌṬṬAI JAMĪNDĀRI KŪḶAPPA NĀYAKAN VAMIŚĀVAḶI.

Pages 5, Lines 17—44 on a page, Tamil, good, old, Extent, 81 granthas.

Begins on fol. 79 (b) of the manuscript described under D. No. 3284.

Complete :

Same work as that described under No. 800 Taylor's catalogue, of the Page 351. This is the original manuscript described under No. 3206.

This gives the geneology of the "Kūḷappa Nāyakar's family" who were the Zamindars at Nilakkōṭttai.

(கு-பு) :—

இது, மெகென்ஸி துரையாலே சம்பாதிக்கப் பெற்றதாய் டைலர் துரை காட்லாக்கு 351 ஆம் பக்கம் 800 ஆம் நம்பரிலே வருணிக்கப்பெற்றிருக் கிறது. மற்று, இது D. 3206 ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப்பிரதியாக வும் காணப்படுகின்றது. ஏடுகள் மிகச் சிதலுற்று உள. எழுத்துப் பிழைகள் உள. எழுதின முறையோ, அத்துணையழகாயுமில்லை. மற்று, இப் பிரதி யின் முதல் ஏட்டில் சா–சகம்–கூருாருயஎ. (1557)௵-ம் எனக் காணப் பெற்று ஷை பாளையக்காரர் தம் மரபுக்கு மூலபுருடராம் 1 ஆம் பட்டக்காரர் பெஞ்சை மாக்கய நாயக்கர் பட்டம் தொடங்கி, 27 ஆம் பட்டக்காரர் வரையிலாக (27) பட்டக்காரர்களுடைய பெயர்களைக் கொண்டதொரு தோன்றன் மரபாக வந்த மற்றொரு வமிசாவளி முறையினை யெடுத்துக் கூறும் ஒரு அட்டவணையும் எழுதப்பெற்றிருக்கிறது. அது, ஷை பெயர்த் தெழுதிய பிரதியில் காணப்பெறவில்லை. இதில் உள்ள பெயர்களை ஷை புத்தகத்திலேயே நேரிற் காண்க. இதன் பின்னர் இதுபோது 83 ஆம் ஏடாகக் காணப்பெறும் ஏடு இதற்கு முந்தியுள்ள " திண்டுக்கல் எல்லைப்புறம் விளைநிலப் பொருள்களும் நிலவரி வருமானம் முதலியனவும்," என்ற கீழில் வந்த பகுதியோடு சேர்ந்து இருத்தற் குரியதாம்.

No. 3300. காளஹஸ்தி ராசாக்கள் வமிசாவளி அல்லது தாமரை வமிச மன்னர்கள் வரலாறு.

KĀḶAHASTI RĀJĀKKAḶ VAMIŚĀVAḶI OR TĀMARAI VAMIŚA MANNARKAḶ VARALĀṞU.

Pāges 8. Lines 22—24 on a page. Tamil. Good. Old. Extent 74 granthas.

Begins on fol. 82 (a) of D. No. 3284.

Complete.

This is the original of the manuscript described under D. No. 3206.

Same work as that described under No. 800 of Taylor's Catalogues P. 351.

This contains the geneology of the kings of Kalahasti known as the Padma Vamsas or Tamarai Vamsas. The kings of this family were great warriors and poets. In the Telugu work 'Ushaparinayam' described under D. 427 there are many references to show that the author of that work belonged to the Thāmara Vamśa and that Madras or Chennaippaṭṭiṇam got its name from one Chennama Nayakar who

built the city or village called Chennama Nayakan Kuppam. Reference is also made as to how he got the lands near Kalahasti form the Padsha of Golkonda for putting down the Docoits and thieves that were ravaging the land.

(கு-பு) :—

இது மெகென்ஸி துரைப் புத்தகங்களுள் ஒன்று. டைலரது காட்லாக்கு 351-ஆம் பக்கத்து 800 ஆம் எண் குறிப்பிற்கண்டதே. D. 3206-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாம். இது மிகவும் சீர்ணமாகக் காணப்படுகின்றது. பிழையுள. இனி, இதிற்கண்ட "தாமரை வமிசம்" அல்லது பதும வமிசமானது பல வேறிடங்களிலும் பண்ணைப்பணைத்திருந் ததை நாம் உணர்தற்கு இஃதோர் அலகுசால் கருவியாயிருக் கின்றது. நிற்க, தெலுங்கு டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு எண். D. 427. "உஷாபரிணயமு," என்றதொரு நூலிலும், அந்நூலாசிரியர், தம்மர புணர்த்தும் வகையில் தம்மைத் "தாமரல வமிசமு" எனப்பணித் துள்ளார் இம்மரபில் தோன்றிய யாவரும் போர்வீரர்களாகவும், கவிப் புலமையினராகவும், வள்ளல்களாக்வும், அங்கங்கே மிகப் பெரும் புகழுடனே வந்திருந்தனர் என்பது போதரும். இதில் தோன்றிய ஒரு சென்னம நாயுடு என்பவரின் பெயரே இச் சென்னைமாநகர்க்குச் சூட்டப் பெற்றது; ஆரணிக்கருகிலேயுள்ள செஞ்சிக்கோனைச் செயித்து "சென்னமசாகரம்", என்பதும் இதுபோலவாம். என்றின்னோரன்ன செய்திகள் பலவும் அந்நூலிலிருந்து விளக்கமாம். மற்று இதில் அங்ஙனேயே திருவல்லிக்கேணியில் இம்மரபில் 22-ஆம் புருடராம் "சென்னப்ப நாயுடு", என்றும் அவர் கடலோரத்தே "சென்னம நாயகன் குப்பம்" அறக்கட்டுவித்து அதிலேயே வசித்து வந்தார் என்கின் றது விளக்கமாகின்றது. இக்குப்பம் இதுபோது சீரழிந்து கிடக்கிறது. இவருக்கு ஒரு நற்புத்திரராம், "அக்கப்பர்" என்னுமவர் மிகக் கடவுள் பக்திவாய்ந்தவராயும், மகாவீரராகவும் இருந்து அக்காலையில் கோல கொண்டாவிலே அரசு செலுத்திய, "பாட்சா"வால் சன்மானிக்கப் பெற்றுக் காளஹஸ்திக்கும், "திருப்பதிக்கும்", இடையிற் சில கள்ளர் களை முறியடித்து ஒழித்தனர். அம்மகோபகாரத்துக்குக் கைம்மாருக அவராற் "காளஹஸ்தி" நிலப்பரப்பில் அதிகாரத்தை எற்று அங்கேயே தலைவராய் வதிந்துவந்தனர் என்னும் இதுவே இதிற்காணும் முக்கிய செய்தி. பிழையுள.

No. 3301. மலையாள தேச வரலாறு அல்லது கேரளோற்பத்தி.
MALAIYĀḶA DĒSA VARALĀṞU OR KĒRAḶŌṞPATTI.

Pāper 16¼" × 10½". Foll. 1—35. Lines 30, 34 on a page. Tamil, much—Injured, Old. Extent 2,400 granthas.

Complete.

Same work as that described under No. 789 of Taylor's Catalogue Vol. III, P. 296.

This deals with the origin and growth of the Malayala country and its history. The work consists of 2 parts of which the first part alone is described in the T. C. under No. 401. The first part alone is found on pages 345 to 427 in the II Volume of the larger Volumes of Col. Mackenzie collections and has been included by Taylor in his Catalogue on pp. 296 under No. 789.

(கு-பு) :—

இது மெகென்ஸி துரையால் தொகுக்கப்பெற்றது. டைலர் துரை காட்லாக்கு 296 ஆம் பக்கம் 789-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது. மற்று, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 392-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றதை யொத்ததேயாய் அதிலே மற்றையொரு பிரதியாக உளது. இங்குக் காணப்பட்டு "கேரள உற்பத்தி" யென்ற தலையங்கத்தின்கீழ் உள்ள இரண்டு பிரிவுகளுஞ் சேர்ந்து ஒன்றாகக் கருதப்பட்டு வருணிக்கப் பெற்றிருக்கிறது. நிற்க, மூவருடக் காட்லாக்கு 401-ஆம் எண்ணிலே முதற் பிரிவான பகுதி மாத்திரம் அடக்கமாய்ப் பிரதி செய்யப்பட்டதே வருணிக்கப்பட்டிருக்கிறது. இனி 31-ஆம் எட்டில் ஆரம்பமாம் இரண்டாம் பகுதியிலே மலையாளத்தில் சில காலங்கட்கு முன்னர் முகம்மதியர்களின் சேர்க்கை ஏற்பட்டதாய், அது முதல் அங்கே அம்மதமும் பரவப்பெற்று ஒரு சிலருடைய ஆட்சியும் ஏற்பட்டதும், அவரது வமிசமுறைமையும் விளக்கமாகின்றன. விரிவு நேரிற் காணத்தக்கது. பிழையுள்ளது. மிகச் சிதைவுற்றது. மெகென்ஸி பெரிய வால்யும் 2-ஆவதில், 345—427-ஆன பக்கங்களிலே டைலர் துரையால் முதற் பகுதி மாத்திரம் பிரதிசெய்யப் பெற்றிருக்கிறது. மற்று, இப்பகுதி கன்னனூர் பீபீயரசியினதாகும் என்ற கருத்துக்கொண்டது ஒரு ஆங்கிலத் தொடர் மொழியும் இதில் காணப் பெறுவதும் குறிப்பிடற்பாலது.

No. 3302. திருச்சிராப்பள்ளி செவந்தீசுவரர் கோவில் சிலாசாஸனம்.

TIRUCCIRĀPPAḶḶI ŚEVANTĪŚUVARAR KŌVIL ŚILĀŚĀSANAM.

Paper $15\frac{1}{4}'' \times 9\frac{1}{2}''$. Foll. 161. Lines 30—52 on a page. Tamil and Telugu, much Injured. Old Extent 10,000 granthas,

Complete.

This contains a large number of inscriptions found on Temples, villages regarding the temples, the lands donated to them for the conduct of worship, affording facilities to the pilgrims; an account of the lands to be enjoyed for performing certain duties in the temple like worship, etc., in Śevanthiśvarar and other temples. Though the title refers only to the inscriptions about Śeventiśvarar Kovil in Trichirappalli, this work contains many inscriptions found scattered all over the Tamil Districts.

This is divided into 8 main subdivisions or parts each containing a large number of inscriptions of a district.

Some leaves are left blank here and there, perhaps with the intention of copying certain inscriptions.

This also contains geneological data about the rulers, important families, etc., that were found necessary to be noted in the inscriptions.

This may be very useful for research scholars in history of the Tamil lands and of the temples.

Same work as that described under No. 845 of Taylor's Catalogue.

Beginning :

திருச்சிறுப்பள்ளி சீமைகசுபா திருச்சிறுப்பள்ளி செவந்தீசுவரர் கோவில் சிலாசாஸனம் நகல். ஸ்வஸ்தி ஸ்ரீ ஸாலீவாஹந ஸகாப்த சந ருள இதற்குமேற் செல்லாகின்ற வராபவ ஸம்வத்ஸரம் ஆனிமீ உ. சனிக்கிழமை திரயோதசியும் மகா நட் சத்திரமும் சுபயோக சுபகரணமும் பெற்ற சிம்ம லக்கினத்தில் விசுவநாத நாயக்கர் அய்யர் சொக்கப்பநாத நாயக்கர் அய்யன் * * * * * * * * * *

* * * சிலாசாஸனங் கொடுத்தபடி மதுரை திருச்சிறுப்பள்ளி, உட்பட உதசத்தில் ? அஞ்சு சாதிமாரும் ஆனை உபய சாமரம் வெள்ளைக் கொடை பல்லாக்குக் கூடாரம் முதலான சருவ வெகுமானமும் தாங்கள் நடத்திக் கொள்ளுகையில் இடையிலே அவரவர் வர்க்கமாருட்டமாகக் காண்பித்தபடியினாலே நாம் பூருவோத்திரம் விசாரித்துக்கட்டளையிட்டது— ஆனை, உபயசாமரம், வெள்ளைக்குடை, பல்லாக்கு, கூடாரம், சகல வெகுமணமும் மதுரை திருச்சிறுப்பள்ளி தென்கரை வடக்கரை உள்பட தேசத்துக்கெல்லாம் இந்த வெகுமானம் எல்லாம் நடத்திக்கொள்ளவும்.
* * * * * * * * * * * * * *

End :

(திருக்கடன்மல்லை) மாமல்லைப்புறத்துச் சிலாசாசனம் :—ஸ்வஸ்தி ஸ்ரீ திருபுவன சக்கிரவர்த்தி ஸ்ரீ வீர வீர வீர வெஸரன் சம்மூகராயன் சுபானுஷு முதல் . . . . . மாமல்லைப்புறத்திலே யாவரும் வேண்டிய பத்து ஊரவருங்கண்டு பெருமூலகுய்ய ? தலசயனப் பெருமாளுக்கும் நிலமங்கை நாய்ச்சியாருக்கும், திருமண்டபமும் திருவிடையாட்டமான நிலமும், இதில் உள்ள தென்ன மரமும் வெண்புறத்தில் உள்ளனிலமாளு வெல்லையும் ? இதில் உள்ளதென்ன மரமும் இந்நாள் தலத் திருவாராதனைக்கும் திருப்பணிக்கும் பல(த்திருப்)பணி[னி]களில் அமர்ந்த பேருக்கும் இப்பத்தில்க்கொள்ளும் உபாதிகளும் உட்பட ஸமஸ்தமும் நடக்கும்படி சொல்லிவிட்ட வரவுக்குத் திருவாராதனையும் திருப்பணியும்.
* * * * * * * * * * * * *

End :

அப்போது துலக்கர்கள் ஆனெகுந்தியை வாங்கிக்கொண்டு சிறிது தேசங்களேயும் ஸத்வசம் பண்ணிக்கொண்டு இருந்தார்கள். அப்போது **இராமராயன்** காலதர்மம் அடைந்த பிறகு அவன் மகன் " ஸ்ரீரங்கராயன் " பெனுகொண்டையிலே யிருந்துகொண்டு அவன் தம்பி " **வேங்கடபதி ராயனே** ", சந்திரகிரியிலே வைத்து அவன் நடுதம்பி " ராமராயனே ", ஸ்ரீரங்கப்பட்டணத்திலே வைத்து இராச்சியம் இரட்சித்தான். ஸ்ரீரங்கப் பட்டணத்திலே, ராமராயன் ' காலதர்மம் ' அடைந்த பிறகு கொஞ்ச நாள் காமப்ப கௌடன் வீரப்ப கௌடன் ஸ்ரீரங்கப்பட்டிணத்திலே யிருக்கச் செய்தே சிக்கராயப்பட்டணம் பாளேயக்காரன் " சிக்கராயன் ", என்கிறவன் ஸ்ரீரங்கப்பட்டணத்திலே காமப்ப கௌடன், வீரப்ப கௌடன் இவரைச் செயித்து ஸ்ரீரங்கப்பட்டணத்தைக் கட்டிக்கொண்டு இருக்கிற சமாசாரம் கேட்டு, ஸ்ரீ ரங்கராயன் அவன்............

(கு-பு) :—

இவ்வால்யும் மெகென்ஸி துரையால் சம்பாதிக்கப்பெற்றதாம். டைலர் துரை காட்லாக்கில் 314-ஆம் பக்கம் முதல் 345-ஆம் பக்கம் வரையிலான 845-ஆம் எண்ணினது குறிப்புக்களிலே வருணித்துக் கூறப்பெற்றிருக்கின்றது. இது, 1—8 பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக் கின்றது. ஒன்றும் பிரிவில் திருச்சிராப்பள்ளி செவந்தீசுவரர் கோவில் சிலாசாசனம் முதலாக, 40. கங்கைகொண்டபுரம் கோவில் விமானமதி லிருந்து கண்ட வடமொழி சுலோகமான (மிகத்தப்பு) ஒரு சாசன வரையிலாக நாற்பது உருப்படிகளேக் கொண்டதொரு பகுதி யிருக்கின்றது.

2-ஆம் பிரிவில்—சிதம்பரம் சிலாசனங்களே யெழுதும் உத்தேசத்துடன் அதற்காக வேண்டிய 11—14 எடுகள் ஒன்றும் எழுதப்பெருமல் விடப்பட்டிருக்கின்றன.

3-ஆம் பிரிவில்—15—65-ஆன எடுகளில் (1) தாராபுரம், துக்குடிக்குச் சேர்ந்த கரூர் தாலுக்கா. நெரூர் அக்கினீசுவரசுவாமி கோவில் சிலாசா சனம் முதலாக, 173 கோயமுத்தூர் துக்குடி, சத்தியமங்கலம் தாலுக்கா பெரிய அக்கிரகாரம் யக்ஞய சாஸ்திரிகள் கன்னட தாமிரசாஸனம் வரையிலாக, நூற்று முப்பத்து மூன்று உருப்படிகள் கொண்டதொரு பகுதி இருக்கிறது. இடையில்—162—164 சாசனம் தெலுங்கு.

4-ஆம் பிரிவில் (66—127). D. எடுகளில் விஷ்ணு காஞ்சீபுரம் வரதராசப்பெருமாள் கோவில் சிலாசாசனம் முதலாக, 108-ஆவது, பாலமுது திருநந்தாவிளக்குச் சிலாசாசனம் வரையிலாக (101) நூற்றொரு உருப்படிகள் கொண்ட பகுதியும், மற்று, சிவகாஞ்சியில் எடுகளில் 102-ஆவது திருப்பருத்திக்குன்றந் திரிலோக நாயகர் முன் மண்டப சிலாசாசனம் (கன்னடம்) முதலாக, 124-ஆவது எகாம்பரநாதரேசுவரர் கோவில் சிலாசாசனம், ஸ்ரீபெரும்பூதூர் ஆதிகேசவப்பெருமாள் சிலா சாசனம் முதலிய (159) உருப்படிகள் அடங்கியதொரு பகுதியை யுடைத்தாயிருக்கின்றது. பின்னர்,

5-ஆம் பிரிவில் (128—134) ஏடுகளில், ஒன்றும் எழுதப்பெருமலேயே யிருக்கின்றன.

6-ஆம் பிரிவில் -135—147-ஆன ஏடுகளில் திருக்கழுக்குன்றம் பக்தவத்சலர் கோவில் சிலாசாசனம் முதற்கொண்டு 27 உருப்படிகள் கொண்டதொரு பகுதியிருக்கின்றது. இடையிலே 148-ஆம் ஏடு வெற்றேடாகும்.

7-ஆம் பிரிவில்—149--161-ஆன ஏடுகளில் திருப்போரூர் சிலாசாசனங்கள் 1—5-உம், தையூர் சிவன் கோவில் சிலாசாசனம் 1-உம், வெளிச்சக்குளத்தூர் சூத்திரத் தெருவின் சாசனம் 1-உம், திருவொத்தியூர் அம்மன் சந்நிதி சிலாசாசனம் (2)-உம், திருவடந்தை நித்திய கல்யாணேசுவரர் சந்நிதி சிலாசாசனங்கள் 1—5-உம், திருக்கடன் மல்லை சிலாசாசனங்கள் 1—6-உம், 156-ஆம் ஏடு வெற்றேடு, 157—தேவராய மகாராயர் சாசனங்கள் 1—4-உம் இடையில், 365—375-ஆன பக்க எண்கள் கொடுத்த பகுதி காணப்பெறவில்லை. 161-ஆம் ஏட்டிலே (19) ஆனை கொந்திராயர் சரித்திரம் (அரைகுறை) என்ற இவைகள் இதில் அடக்கமாகின்றன. இதன் வித்தாரம் டைலர் துரை காட்லாக்குக் குறிப்புக் கொண்டு உணர்க. எழுத்து மையழியப் பெற்றுள்ளது. இது அங்கங்கே பல வால்யுங்களில் வரப்பெற்றவைகளை ஒருங்கே சேர்த்து எழுதிவைக்குங் கருத்திலே எழுதப்பெற்றதாம் என்க. மற்று, இதில் 105-ஆம் ஏட்டில் இலக்ஷ்மீகுமாரதாதாசார்யர் தாத ஸமுத்திரம் அல்லது பொற்றுமரையாள் குளத்தில் உள்ள ஹனுமான் விடயமாக செய்துபோந்த "ஹநூமத்விம்ஶதிঃ" என்பது சா;ன புரஸ்ஸரமாகக் காணப்படுகின்றது.

இதில், 119—122 ஏடுகளில் ஸ்ரீ வைஷ்ணவ மதத்து சுப்பிரசித்த எல்லா ஆழ்வாருடையவும் ஆசாரியர்களுடையவும், அவதார வருட தினங்களை உணர்த்தும் வடமொழிச் சுலோகங்களும், நாத முனிகளுக்கு முன் ஸ்ரீ விஷ்ணு வர்த்தனர், அவர் குமாரர், 1008 சங்கர்ஷணருஷி, சொட்டை நம்பி, கோவிந்த முனி, அவர் குமாரர் ஈச்வர முனி, அவர் குமாரர் ஸ்ரீமந் நாத முனிகள். இவர் அவதாரம் காட்டுமன்னார் கோவில் ஈச்வர முனிகள் யமுநா தீரத்தில் கோவர்த்தநபுரத்தில் ஆளவந்தார். அவர் குமாரர் நால்வர். 1. ஈஸ்வர பட்டர், 2. கோவிந்த பட்டர், 3. நாத முனி, 4. ரங்கராசர், கோவிந்தர் குமாரர் திருமலை நம்பி, திருமலை நம்பி குமாரர் இருவர். 1. திருக்குருகைப் பிரான் பிள்ளான், 2. இராமாநுசர் திருக்குருகைப் பிரான் பிள்ளான், தொடங்கி இடையில், 15 பேர் பின்னர். 16-ஆம் அவர் பஞ்சமதபங்கம் தாதாசாரியர், 17. கோடி கந்நியாதானம் தாதாசார்யர் 18. இலக்ஷ்மீகுமார தாதாசாரியர் என்பதாக ஸ்ரீ விட்ணு வர்த்தநாசார் தொடக்கமாக இடையருமல் விருத்தியடைந்த (காஞ்சீபுரம் தாதாசார்ய பரம்பரை) அம்மரபின் வமிசாவளியும் இன்னோரன்னவும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவ்வால்யும் சரித்திர வாராய்ச்சியாளருக்கு மிக ஊதியம் பயக்குமென்க. ஆனால் இது, எழுத்து

மையழியப் பெற்று, அங்கங்கே படித்தற்கரியதாயிருக்கின்றது, மிக எழுத்துப்பிழையுள. சிதை வுற்றிருக்கிறது. காஞ்சி, ஸ்ரீ பெரும்பூதூர் களுக்கு உரிய சிலா சாசனங்கள் சில இடையே வேறிடத்திலுங் காணப்படு கின்றன. ஆக மொத்தம் உள்ள சிலாசாசனங்கள் 392. சில அரை குறையாக விருக்கின்றன.

No. 3303. அய்யிலூர்க் கபாலீசுவரர்க் கோயில் சிலாசாசனம்.

AYYILŪRK KAPĀLĪŚUVARARK KŌYIL ŚILĀŚĀSANAM.

Paper $15\frac{1}{4}'' \times 11\frac{1}{4}''$. Pages 4. Pages 3 and 4 are left blank. Lines 29 on a page. Tamil, much injured. Old. Extent 20 granthas.

Begins on fol. 1 (a). The other works which are contained in this volume are described from Nos. 3303 to 3356.

Complete.

Manuscripts belongs to the Mackenzie collection manuscripts and is described under No. 832, P. 306 of Taylor's, Catalogue Vol. III.

This is the Original of D. No. 2876, 3515.

(கு-பு) :—

இது மெகென்஝ி துரைப் புத்தகங்களுள் ஒன்றும், டைலர் துரை காட்லாக்கு எண் 832. (306-ம் பக்கம்) குறிப்பில் வருணிக்கப் பெற்றிருக் கிறது. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2876, 3515-ஆம் எண்ணின்கண், உள்ள பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாகுமெனத் தோற்றுகிறது. ஏடு மிகச் சிதைந்திருந்து ஒழுங்கு செய்யப் பெற்றுளது. மிக எழுத்துப் பிழையுளது இவ்வூர் திருச்சி ஜில்லா, விட்டுக்கட்டித் தாலூகாவில் உள்ளது. இரண்டாம் ஏடு இருபுறமும் ஒன்றும் எழுதப் பெறுமலிருக்கிறது.

No. 3304. தாழ்குளங் கிராமம் மகா ஜனங்கள் கைபீது.

TĀḺ KUḶAṄ KIRĀMAM MAHĀ JANAṄKAḶ KAIFIYATHU.

Pages 4, Lines 24 on a page. Tamil, injured. Old. Extent, 50 Granthas.

Begins on fol. 3 (a) of the manuscript described under No. D. 3303.

Complete.

This is the Original of D. No. 2877. Same work as that described under No. 832 of Taylor's Catalogue, Vol. III, p.p. 306.

(கு-பு) :—

இது, அந்தியூர் தாலுகா. பவானிக்கூடல் மிட்டா, தாழ்குளம் கிராமத்து மகாசனங்கள் எழுதிக் கொடுத்த வரலாறும். மெகென்ஸி திரட்டியவைகளுள் ஒன்றும். டைலர் துரை காட்லாக்கு 832-ஆம் எண் 1, பக்கம் 306 ஆவதில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு D. 2877 (3516)-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ரு கைப் பிரதியாம். இவ் வேட்டின் பின் புறத்திலும் ஷெ ஊர் விடயமான பூர்வ வரலாறுகள் அடங்கிய ஒரு கன்னட மொழியிலாகிய சிலாசாசனப் பகுதியும், 4-ஆம் எட்டில் பிறவும் ஷெ எழுத்திலேயே எழுதப்பட்டுள.

No. 3305. மறவர்பாளையம் அப்பிரமேய சுவாமி கைபீயத்து.

MAṞAVAR PĀḶAIYAM APPIRAMĒYA SVĀMI KAIFIYATHU.

Pages 2. Lines 2 on a page. Tamil, injured. Old, Extent 40 granthas.

Begins on fol. 5 (a) of the manuscript described under D. No. 3303.

Complete.

This is the Original of D. No. 2878.

Contains the details about the donations of Nachiyar—padugai and Kothanur villages for the temples of the villages This is the same work as that described under No. 832 of Taylor's Catalogue, Vol. III, page 306.

(கு-பு) :—

இது, மெகென்ஸி துரையால் தொகுக்கப் பெற்றவைகளுள் ஒன்று. டைலர் துரை காட்லாக்கு (பக்கம் 306) 832-ஆம் எண்ணில் வருணிக்கப் பட்டுள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு D. 2878 (3517)-ஆம் எண்ணில் வந்துள்ள பிரதிக்கு மூலப்பிரதியாகவும் ஆகின்றது. இதில், (1) நாய்ச்சியார்ப்படுகை, (2) கொத்தனூரு என்ற கிராமங்களை இக்கோயில் பூதான சாஸனம் பூர்வமாகக் கட்டளை திட்டங்கட்கு வழங்கிய வரலாறும், நாயச்சியாரது தேரானது புன்னக வனத்துத் தலத்தில் அழுந்தியதன் காரணமாக, அத்தலம் "நாய்ச்சியார் படுகை", என்ற பெயர் பெற்றது என்பதும், பிறவும் விளக்க முறுகின்றன. ஆகவே இப் பெயரால் ஒரு சாசனம் இருக்க வேண்டும் என்பதும் வாசகர்களுக்குக் குறித்துக் கொள்ளத்தக்கது. சிக்க தேவ ராய உடையார், திப்பு எனும் இவ்விரு அரசர்களது பெயரும் பிரஸ்தாபத்தில் காணப்படுகின்றன.

No. 3306. வரதநல்லூர் அக்கிரகார மகாசனங்கள் கைபீயத்து.

VARADANALLŪR AKKIRAHĀRA MAHĀ JANAṄKAḶ KAIFIYATHU.

Pages 2. Lines 38 on a page. Tamil. Much injured. Old. Extent, 10 granthas.

Incomplete.

Begins on fol. 6 (a) of the manuscript described under D. No. 3303.

This is the Original of D. No. 279.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue, Vol. IV, page 306.

(கு-பு) :—

இது, மெகென்ஸிதுரைத் தொகுதிகளுள் சேர்ந்தது. டைலர் துரை காட்லாக்கு 306-ஆம் பக்கத்தில் 832-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றுள்ளது. டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2879-ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப் பிரதியாம். மிகப் பிழையுடனும், படித்தற்குப் புரியாமலும் இருக்கிறது. சிதை வுற்றுளது. இவ் "வரதநல்லூர்" கோயமுத்தூர் ஜில்லா, அந்தியூர் தாலூக்கா, பவானிக் கூடன் மிட்டாவிற்குச் சேர்ந்ததாம் எனக் குறிக்கப்பட்டிருப்பதுங் காண்க.

No. 3307. கேசரமங்கலம் மகா சனங்கள் கைபீயத்து.

KĒCARAMAṄGALAM MAHĀJANAṄKAḶ KAIFIYATHU.

Pages 2. Lines 34 on a page. Tamil. Injured. Old. Extent, 40 granthas.

Complete.

Begins on fol. 7 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2880.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue Vol. IV, page 306.

(கு-பு :)—

இது, மெகென்ஸிதுரையவர்களால் திரட்டப்பட்டது. டைலர் துரை காட்லாக்கு 306-ஆம் பக்கம், 832-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப் பெற்று உள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2880-ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப் பிரதியாம். இவ்வூர், கோயமுத்தூர் ஜில்லா, அந்தியூர் தாலூக்கா, குரிச்சிக் கிராமத்தை யடுத்த கூத்தம்பூண்டிக்கு அருகில் உள்ளது, என அறியப்படுகிறது. முற்றுமுளது. எழுத்துப் பிழைகள்உள. சிதைந்துள. இக் கேசரமங்கலத்துக்குப் பிரதிப் பெயர் "இரகுநாத சமுத்திரம்" என்று குறிக்கப்பட்டுள்ளது.

No. 3308. சின்னப்புலியூர் மகா சனங்கள் கைபீயத்து.

CINNAPPULIYŪR MAHĀ JANAṄKAḶ KAIFIYATHU.

Pages 2. Lines. 26 on a page. Tamil. Injured. Old. Extent, 30 granthas.

Complete.

Begins on fol. 8 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2881.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue, page 306, Vol. IV.

(கு-பு) :—

இது, மெகென்ஸி துரையவர்களால் சம்பாதிக்கப்பட்டதாய் டைலர்துரை 832-ஆம் எண் 306-ம் பக்கக் குறிப்பிற்கண்டதாம். டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2881-ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப்பிரதியாகவும் உள்ளது. முற்றும்உள. எழுத்துப் பிழையுடன் காணப்படுகின்றதாதலின் இதில் உள்ள பல பெயர் களின் உருவங்களை உள்ளதை யுள்ளவாறு தெளிந்து கோடற்கு அரிதினு மரிதாக விருக்கின்றது. இதில் விளக்கிய ஊர் சின்ன புலியூர், சின்னப் புல்லூர், புல்லூர்என்ருதியாகப் பல வேறு வடிவமாகக் காணப்படுகின்றது. எப்பெயர் பொருத்த முடைத்தோ ? பெயர்க் காரணம் விளங்கவில்லை. சிதைவுற்றுளது.

No. 3309. பொண்ணுய்ச்சிக் கிராம மகா சனங்கள் கைபீயத்து.

POṆṆĀICCIKKIRĀMA MAHĀ JANAṄKAḶ KAIFIYATHU.

Pages 2. Lines 26 on a page. Tamil. Much injured. Old. Extent, 60 granthas.

Complete.

Begins on fol. 9 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2882.

Same work as that described under No. 832 of Taylor's Catalouge, page 306, Vol. IV

(கு-பு) :—

இது, மெகென்ஸி துரையால் சம்பாதிக்கப் பெற்றது. டைலர் துரை காட்லாக்கு 306-ஆம் பக்கத்து 832-ம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப் பட்டுள்ளது. இனி, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு, 2882-ஆம் எண்ணின் பிரதிக்கு

மூலப் பிரதியாகும். இவ்வூர்ப் பெயர் சரியான முறையிற் காணப்படவில்லை. அதற்குக் காரணமும் இதிலிருந்து விளங்கவில்லை. ஆனால் இவ்வூருக்கு "அரிநாராயணபுரம்" என மற்றொரு பெயர் உளது. எழுத்துப் பிழையுள. ஏடுகள் சிதைந்துள.

No 3310. ஒருச்சேரி யக்கிரகாரம் மகா சனங்கள் கைபீயத்து.

ORŪCCĒRI YAKKIRAHĀRAM MAHĀ JANAṄKAḶ KAIFIYATHU.

Pages 31. on a page. Tamil. Much Injured, Old. Extent, 56 granthas.

Complete.

Begins on fol. 10 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2882.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue, page 306, Vol. IV.

(கு-பு) :—

இது, மெகென்ஸிதுரையால் சம்பாதிக்கப்பெற்றதாம். டைலர்துரை காட்லாக்கு 832-ஆம் எண்ணில் 306-ஆம் பக்கக் குறிப்பில் வருணிக்கப் பட்டிருக்கிறது. இனி இது, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2882-ஆம் எண் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாம். இதில் சாலி—சகம், ௲ ௨ ௱ ௲ மேல் (A. P. 1078) ஒருச்சேரி கிராமமும், சம்பைக் கிராமமும், ஒன்றாக விருந்தன. பின்னர் "திருமலை நல்லான் சக்ரவர்த்தி" கோவிந்தராஜ சக்கரவர்த்திக்குக் கிரகமும் கட்டுவித்து "திருமலைராய சமுத்திரம்" எனப் புனைபெயர் வைத்து வழங்கிப் பிரௌட (?) மகாதேவராயர் சிலாப் பிரதிட்டையும் பண்ணி வைத்துத் தானம் பண்ணினார். சிலகாலம்வரை இறையிலியாக நடந்து வந்தது; என்றுதிய சில பழைய விவரம் புலனாகின்றது; ஷை தலம் ஐதர் பிரபு காலத்துக்கு முன் திருப்பதி ஸ்ரீ வேங்கடேசர்க்கும் ஸ்ரீநிவாசரங்க செட்டியாயாராலே உரிமையதாயிருந்ததும் புலனாகும். இதன் பின்புறம் தலைகீழாக எழுதப் பெற்றுளது.

No. 3311. பெரியபட்டி வெங்கண்ணையன் வாக்குமூலம்.

PERIYAPAṬṬI VEṄKAṆṆAIYAN VĀKKUMŪLAM.

Pages 2. Lines 24 on a page. Tamil. Old. injured. Extent, 25 granthas.

Complete.

Begins on fol. 11 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2884.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue, page 306 Vol. IV

(கு-பு) :—

இப் பிரதி மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்தது. டைலர்துரை காட்லாக்கு 306-ஆம் பக்கம் 832-ஆம் எண்ணின் குறிப்பிலேயுளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு D. 2884-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாம். இது, ஷியூரிலிருந்த "வெங்கண்ணையர்" என்பவர் சக்கிரி தாலூக்காவில் கல்லாபுரத்தில் இரண்டு மா நிலம் நஞ்சை தீர்வை பயன் தமக்கு உரித்தாயிருந்து அது காலக்கிரமமாகப் போய்த் தற்காலம் அவ்வுரிமையைத் தாமிழந்து இருக்குஞ் செய்தியினைக் காட்டியதைவேண்டிக் கோடன் முறைமையிலே யமைந்திருக்கிறது. இவ்வேட்டின் பின்புறம் ஒன்றும் எழுதப் பெறாமல் விடப்பட்டுளது. மிகப் பிழையுளது.

No. 3312. பிரம்மதேசம் வித்துவமகா சனங்கள் கைபீயத்து.

PIRAMMADĒŚAM VIDDUVA MAHĀ JANAṄKAḶ KAIFIYATHU.

Pages 2. Lines 36 on a page. Tamil. Much Injured. Old. Extent, 60 granthas.

Begins on fol. 13 (a) of the manuscript described under D. No 3303.

This is the original of D. No. 2885.

Same work as that desoribed under No. 832 of Taylor's Catalouge, page 306, Vol. IV.

(கு-பு) :—

இது மெகென்ஸிதுரைப் புத்தகங்களுள் சேர்ந்தது. டைலர்துரை காட்லாக்கு 832-ஆம். எண் 306 ஆம் பக்கக் குறிப்பிற் கண்டதே. மற்று டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2885-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாகவும் இருக்கிறது. முற்றுமுளது. இப் பிரம்மதேயம் கொங்கு தேசத்து வடகரை நாட்டிற் சேர்ந்தது. ஆதியில் பிரம்மாவால் சிருஷ்டிக்கப்பட்டது. பிரம்மேசுவரம் தேவஸ்தானமும் உண்டாயிற்று. அப்பொழுதே சரசுவதி நதியும் உண்டாயிற்றுப்போலும். சாலி—சகம்—௲ உ௱. A. D. 1278 ஸ்ரீ இராயர் அவர்களால் ஸோமோபராக புண்ணிய காலத்து பிராம்மணர்க்குத் தானமாக வழங்கப்பட்டது. இவ்வூருடன் மற்று, (2) கேசமங்கலம், (3) வரதநல்லூர், (4) ஊராச்சிக்கோட்டை, (5) சந்நியாசிப்பட்டி, (6) ஒருச்சேரி, (7) (?) புஞ்சை, (8) சிங்கம்பேட்டை ஆக, 8 அஷ்டாக்கிரகாரமும், ஒரு காலத்து ஒருங்கு சேர்த்து எண்ணப்பட்டிருந்தன என்றும், ஒரு காலத்துப் பாளையப்பட்டாகவும் இருந்தது எனவும் இன்னோரன்ன செய்திகளை விளக்குகின்றது.

No. 3313. காவேரிபுரம் மிட்டா மணியக்காரர் கைபீயத்து.

KAVĒRIPURAM MIṬṬA MAṆIYAKKĀRAR KAIFIYATHU.

Pages 2. Lines 29 on a page. Tamil. Much injured. Old. Extent, 50 granthas.

Begins on fol. 13 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2886.

(கு-பு) :—

இது, கோயம்பத்தூர் ஜில்லா அந்தியூர் தாலூக்கா, காவேரிப்புரம் மிட்டாவினதும் அதன் புறஞ்சூழ்ந்த சிலமலை நிலங் கோட்டைகளை உடையவும், ஆன ஒரு சில செய்திகளை யெடுத்துக் கூறுகின்றது. மெகென்ஸிதுரை புத்தகங்களுள் சேர்ந்தது. டைலர்துரை காட்லாக்கு 306 பக்கம் 832. ஆம் எண்ணின் குறிப்பிற் கண்டதே. D. 2886-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகையாம். எழுதின முறை விளக்கமாயில்லை. மிக மிகப் பிழையுள. மிகக்சிதைவும் உள.

இதில் இத்தலத்துக்குரிய கோயில்கள் 4. (1) சலகட்சேஸ்வரர் தேவஸ்த் தானம், (2) அரங்க நாதர் தேவஸ்த்தானம், (3) முக்கியப் பிராமணர் தேவஸ்தானம், (4) வேங்கடரமண தேவஸ்தானம் என நான்கு. இதில் வேங்கடரமண தேவஸ்தானம் ஊர்க் கோட்டைக்குள்ளே உள்ளது. உட்கோட்டை பழமையானது. வெளிப்புறக்கோட்டைகளை மைசூர் கொண்டை ராஜர் ஆவர். பேட்டைக்கும் கோட்டைக்கும் இடையில் "செம்பரப்பள்ளம்" என்றவொரு ஓடையுளது. ஷை ஊருக்குத் தாக்கலாய்க் "கத்திரியப்பாடி" என்ற ஊர் உளது. அதில் ஓர் மலையும் தேவஸ்தானமும், வடக்கில், (½) அரை நாழி வழியில் அரங்கநாதன் திருப்பாதமுள. கோளிகர் சாதியினர் இருவகையினர் மலையிற் சஞ்சாரஞ் செய்து காய் கிழங்கு களையேயுண்கின்றனர். அரண்மனையினர் கட்டளையின்படி சேவகம் புரிந்து வாழ்பவர். மற்று, "வரதுண்டிமலை" என ஒன்றுளது. அது மிகப் பெரிது. ஷை தலத்துக்கு நாலுகாத வழியிலே "பொண்ணய்ச்சிக் கிராமம்" என்றொரு மலைக் கிராமம் நாலுநாழி உயரமுள்ளது ; என்றின்னோரன்ன செய்திகள் எடுத்துக் காட்டப்பட்டு இருக்கின்றன. இனி இங்குக் கூறிய "பொண்ணய்ச்சி" என்ற மலைக் கிராமம் முன்னர் D. 3309. ஆம் எண்ணில் வருணித்துள்ள "பொண்ணய்ச்சி" என்ற ஊரே என நினைக்கப்படுகிறது. இதுவும் கோயம்புத்தூர் ஜில்லா, அந்தியூர் தாலூகாவில் உள்ளது என்பதனையும் குறிக்கொள்ளலாம் என்பது.

No. 3314. சிங்கம்பேட்டை அக்கிராகாரம் மகாசனங்கள் கைபீயத்து.

ŚIṄGAMPĒṬṬAĪ YAKKIRAHĀRAM MAHĀJANAṄKAḶ KAIFIYATHU.

Pages 2. Lines 30 on a page. Tamil. Much injured. Old. Extent. 60 granthas.

Complete.

Begins on fol. 14 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2887. Same work as that described under No. 832 of Taylor's Catalogue, Vol. III, page. 306.

(கு-பு) :—

இது, மெகென்ஸி கலெக்ஷனில் ஒன்று. டைலர்துரை காட்லாக்கு 306-ஆம பக்கம் 832-ஆம் எண்ணின் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2887-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகையாம். மிகப் பழமையுடன் உளது. சிதைவுள. இவ் சிங்கம்பேட்டை கோயமுத்தூர் ஜில்லா, அந்தியூர் தாலூக்கா குறிச்சிமிட்டாவைச் சார்ந்ததாயிருப்பது. இவ்வூரைச், சா—சகம்—1200. ஆம் ௵ பிரமாதி ௵ பால்குனசுத்த, பௌர்ணமி உத்திராட நட்சத்திரம் கூடின சுப தினத்தில், ஸ்ரீ ராஜ ஸ்ரீ பிரௌடதேவ மகாராயர் அவர்கள் பிராமணர்களுக்குப் ''பிரௌடதேவ மகாராயர்புரம்'' என்ற பேருடன் வழங்கியது. சா—சகம்—1620-ம் ௵ வரை இடையூறின்றிப் பிராம்மணர்களுக்கு உரியதாகவிருந்தது என்பது முதலான பூர்வ வரலாறு உணர்த்துகிறது.

No. 3315. ஆண்டிக்குளம் அக்கிரகாரம் மகாசனங்கள் கைபீயத்து.

ĀṆḌIKKUḶAM AKKIRAHĀRAM MAHĀ JANAṄKAḶ KAIFIYATHU.

Page 1. Lines 22 on a page. Tamil. Much injured. Old. Extent, 20 granthas.

Complete.

Begins on fol. 15 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2888. Same work as that described under No. 832. Taylor's Catalogue, Vol.III, page. 35 and in the descriptive catalogue under No. 2888.

(கு-பு) :—

இது, மெகென்஬ிதுரை கலெக்ஷனில் சேர்ந்தது. டைலர்துரை காட்லாக்கு 35 ஆம் பக்கம், 832-ஆம் எண்ணினது குறிப்பில் வருணிக்கப் பட்டிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2888-ஆம் எண்ணில் வந்துள்ளதற்கு இது மாத்ருகைப் பிரதியாம். எழுத்துப் பிழையுடனிருக் கிறது. சிதைந்துளது. எழுத்துத் தெளிவாக எழுதப்படவில்லை. இவ்வூர் கோயமுத்தூர் ஜில்லா, அந்தியூர் தாலூக்காவில் ஹோபளி பவானிக் கூடன் மிட்டாவுக்கு அருகே இருக்கிறது. இவ்வேட்டின் பின்புறம் ஒன்றும் எழுதப் பெறுமல் விடப்பட்டிருக்கிறது.

No. 3316. மயில்ரங்கம் திருஞான சம்பந்த வள்ளல் பண்டாரக் கைபீயத்து.

MAYILRAṄGAM THIRUÑĀNASAMBANDA VAḶḶAL PAṆḌĀRAK KAIFIYATHU.

Pages 2. Lines 34 on a page. Tamil. Much injured. Old. Extent, 40 granthas.

Complete.

Begins on fol. 16 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2889. Same work as that described under No. 832 of Taylor's Catalogue, pages 306-307.

(கு-பு) — :

இது, மெகென்஬ி கலெக்ஷனில் சேர்ந்தது. டைலர்துரை காட்லாக்கு 306—307-ஆம் பக்கம்—832-ஆம் எண்ணில் கண்டதே. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2889-ஆம் எண்ணிலே வருணிக்கப் பெற்றதற்கு மாத்ருகையாம். எழுத்துகள் விளக்கமாயில்லை. மிகப் பிழையுடன் இருக்கிறது. சிதையப் பெற்றது. இம் மயில்ரங்கம் தாராபுரத் துக்குடி காங்கேயந் தாலூக்கா வெள்ளைக்கோவில் மிட்டாவைச் சார்ந்ததாம் என்று ஆரம்பத்தில் கூறப் பட்டுள்ளது.

No. 3317. மேட்டுப்புத்தூர் ஜைனபஸ்தி தேவஸ்தான கைபீயத்து.

METTUPPUTTŪR JAINABASTI DĒVASTHĀNA KAIFIYATHU.

Pages 2. Lines 29 on a page. Tamil. Much injured. Old. Extent, 27 granthas.

Complete.

Begins on fol. 17 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2890. Same work as that described under No. 832 of Taylor's Catalogue, pages 306, 337.

(கு-பு) :—

இது, மெகென்ஸி கலெக்ஷனில் சேர்ந்தது. டைலரது கேட்லாக்கு 306—307-ஆம் பக்கம் 832 எண்ணின் குறிப்பில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. டிஸ்கிரிட்டிவ் காட்லாக்கு 2890-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாகவும் உளது. இது கோயமுத்தூர் ஜில்லாவில் பெருந்துறை தாலூக்கா விஜய மங்கலம் மிட்டாவைச் சார்ந்துள்ள மேட்டுப்புத்தூர் ஜைன மத பஸ்தி அல்லது கோவிலினது பூர்வ வரலாற்றினை எடுத்து கூறுவதாம்.

No. 3318. மசகூர் மாந்தீசுவரசுவாமி தேவஸ்தான வரலாறு.

MAŚAKŪR MĀNDĪŚUVARAŚUVĀMI DĒVASTHĀNA VARĀLARU.

Pages 2. Lines 30 on a page. Tamil. Much injured. Old. Extent, 40 granthas.

Complete.

Begins on fol. 18 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2891. Same work as that described under No. 832 of Taylor's Catalogue, pages 306, 307.

(கு-பு) ;—

இது, மெகென்ஸிதுரைப் புத்தங்களுட் சேர்ந்தது. டைலர் துரை காட்லாக்கு 306-307-ஆம் பக்கங்களில் 832-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2891-ஆம் எண்ணில் வந்ததற்கு மாதருகைப் பிரதியாம். எழுத்துத் தெளிவாக இல்லை. மிகப் பிழையுடன்

உள்ளது. இதன் கடையில் வள்ளியிறச்சாலைக்கிராமம் மாந்தியேசுவர சுவாமியார் சந்நிதியில் சுப்பிரமணிய சுவாமி சந்நிதியிலே நிலைகாலில் எழுதியிருக்கிற சிலாசாஸனத்துக்கு நக்கல் :—

(a) ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் மகாராச கேசரி வர்மரான திரிபுவன சக்கிரவர்த்திகள் "ஸ்ரீவரகுணபாண்டியதேவர்க்கு ஆண்டு ௰உ பன்னிரண்டாவது வள்ளியறச்சாலையில் வெள்வான்" ஆனாரும் உடையார் மாந்தியேசுவரம் உடையாருக்கு அமுதுபடிக்கு மாந்தை நகரில் மூன்று மாத்திரை பூமி கொடுத்தோம்.

Note.—இதற்குமேலே, கீழே பத்து அட்சரம் யோசித்தும் தெரியவில்லை. மெத்தவும் பொகிழிந்து ? இருக்கிறது. அதனாலே தெரியாத அட்சரம் எழுதவில்லை. மகேசுவர ரக்ஷை. தூஅாள ஸ்ரீ சூலைமீ உ௰வ

என்பதாக ஒரு கல்வெட்டும் காணப்படுகின்றது. முற்றும் உளது. மிக எழுத்துப் பிழையுடன் உளது.

No. 3319. எல்லைக்காடு இராமச்சந்திரபுர அக்கிரகாரம் மகாசனங்கள் கைபீயத்து.

ELLAIKKĀḌU RĀMACCANDIRAPURAM AKKIRĀKĀRAM MAHĀJANANKAḶ KAIFIETHU.

pages 2. Lines 25 on a page, Tamil. Much injured. old. Extent 10 granthas.

Complete.

Begins on fol. 19 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2893.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue, pages 306, 307.

(கு-பு) :—

இது மெகென்ஸி கலெக்ஷனில் சேர்ந்தது. டைலர் துரை காட்லாக்கு 832-ஆம் எண் 306-307-ம் பக்கக் குறிப்பில் வருணிக்கப்பெற்றிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2893-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகையாம். முற்றும் உளது. எழுத்துத் தெளிவு இல்லை. பிழையுமுளது. இவ்வேட்டின் பின்புறம் ஒன்றும் எழுதப்பெறாமலே உள்ளது.

No. 3320. மயில்ரங்கம் தசதிக்கு தேவஸ்தானம் வைத்தியநாதசுவாமி கோவில் தலபுராணம்.

MAYILRAṄGAM THAŚATIKKU DĒVASTHĀNAM VAITHIYA-NĀTHAŚVĀMĪ KŌVIL TALAPURĀṆAM.

Pages 1. Lines, 30 on a page. Tamil. Much injured. Old. Extent, 20 granthas.

Complete.

Begins on fol. 20 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2894.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue pp. 306—307,

(கு-பு) :—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்தது. டைலர் காட்லாக்கு 306–307-ஆம் பக்கங்களிலே 832-ஆம் எண்ணின் குறிப்பிற் கண்டதே இனி. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2894-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகை யாம். முற்றும் உளது. தெளிவு இல்லை. சிதிலமாயது. பிழையுளது. இவ்வேட்டின் பின்புறம் எழுதப்பெறவில்லை.

No. 3321. காடையூர்க் கிராமம் காடையீசுவரர் தேவஸ் தானக் கைபீயத்து.

KĀḌAIYŪRK KIRĀMAM KĀḌAI ĪŚVARAR DĒVASTHĀNAK KAIFIYATHU.

Pages 2, Lines 27 on a page. Tamil. Much injured. Old. Extent, 15 granthas.

Complete.

Begins on fol. 21 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2895.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue, pp. 306—307.

(கு-பு) :—

இது மெகென்ஸி கலெக்ஷனில் சேர்ந்தது. டைலர் காட்லாக்கு 832-ஆம் எண் 306–307-ஆம் பக்கங்களின் குறிப்பில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2895-ம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாம். முற்றும் உளது. சிதைவுற்றிருப்பது. மிகப் பிழையுமுளது.

No. 3322. காங்கேயம் அகத்தியேசுவரசுவாமி கோவில் கைபீயத்து.

KĀṄKĒYAM AKATTIYĒŚUVARAŚVĀMI KŌVIL KAIFIYATHU.

Pages 2. Lines 32 on a page. Tamil, Much injured. Old. Extent. 50 granthas.

Complete.

Begins on fol. 22 (a) of the manuscripts described under D. No. 3303.

This is the original of D. No. 2896.

Same work as that described under No. 832 of Taylors Catalogue, p.p. 306—307.

(கு-பு) :—

இது, மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்தது. டைலர் காட்லாக்கு 832-ஆம் எண் 306–307-ஆம் பக்கக் குறிப்பில் வருணிக்கப்பட்டிருக்கிறது. டிஸ்கிரிப்டிப் காட்லாக்கு 2896-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாம். முற்றும் உளது: மிகப் பிழையுமுடையது. இத் தலத்துக்குச் சிங்கமுகாசுரன் பேரால் "சிங்கபுரம்" எனவும், சுப்பிரமணியர்தாம் கங்கையிற் றோன்றினமையின் காங்கேயர்—(கங்கைப் புதல்வர்) என்ற முருகர் பேரால் "காங்கேயர் உறைவிடம்" என்று பொருள் அமையக் "காங்கேயம்" எனப் பெயர் பெறுவதாயிற்று எனவும் இதில் விளக்கப்பட்டுள்ளது.

No. 3323. திருவியங்கூர்மலை மேலைக் கோபுரவாசல் மதிலின் சிலாசாசனம்.

TIRUVIYAṄKŪR MALAI MĒLAIK KŌPURAVĀŚAL MADILIN ŚILAŚASANAM.

Pages 2. Lines 25 on a page. Tamil. Much injured. Old. Extent 25 granthas.

Complete.

Begins on fol. 23 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2897.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue, pp. 306—307.

(கு.பு.).—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சேர்ந்தது. டைலர் துரை காட்லாக்கு 306–307-ஆம் பக்கம் 832-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப்பட்டுள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2897-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாம். முற்றும் உள்ளது. மிகப் பிழையுடன் உளது. சிதிலமாயது. இவ்வூர் எந்தவூரின் எல்லைக்குட்பட்டது என்றும், இப் பெயர் பெறுவதற்குக் காரணம் இன்னது என்ருதியவைகளில் ஒன்றும் இதிலிருந்து விளங்கவில்லை. ஆனல் இத் தலமானது, சோழமண்டலத்து—மலைப்பிரதேசம் என்பது மாத்திரம் தெரிகின்றது.

No. 3324. சிதம்பரம் கோவிந்தராசசுவாமி கோவில் சிலாசாசனம்.

CIDAMBARAM GŌVINDARĀJAŚUVĀMI KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages 2. Lines 15 on a page. Tamil. Much injured. Old. Extent, 7 granthas.

Complete.

Begins on fol. 24 (a) of the manuscript described under D. No. 3303.

This also is included in the Collections col Mackenzie and is described in pages 306—308 under No. 832 of the Taylor's Catalogue of col Mackenzie's collections.

This is the original of D. No. 2898.

Contains information about the Renovation of the Temple and about the villages donated for the temple.

(கு-பு) :—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்ததாம். டைலர் துரை காட்லாக்கு 306–308-ஆம் பக்கங்களில் 832-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2898-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாம். முற்றும் உளது. தில்லை எனவும் சித்திரகூடம் எனவும் வழங்கப்படாநின்ற சிதம்பரத்திலே கோயில் கொண்டிருக்கும் கோவிந்தராசசுவாமிக்கு ஸ்ரீரங்கராயர் அவர்கள் சாலி–சகாப்தம். ௲௫௱௬௰௫. A.D. 1643. சுபானு வருடத்தில் தில்லை கோவிந்தராசன் சந்நிதியில் ஜீர்ணோத்தாரணமும், புண்டரீகவல்லித் தாயார், ஆண்டாள், சக்கிரத்தாழ்வார், இவர்கள் திவ்விய விமானங்கள் முதலாயின உத்தாரணத் திருப்பணியுஞ்செய்து, மற்று, ஆடூர், கருங்குழி, குழியாமங்கலம், மருதாந்தநல்லூர், உடையூர், ஆக ஐந்து கிராமங்களேயும் சருவமான்யமாகவும் வழங்கினதைக்காட்டுகிறது.

88

No. 3325 சிதம்பரம் கோவிந்தராஜசுவாமி கோவிற் சிலாசாஸனம்.

CIDAMBARAM GŌVINDARĀJAŚVĀMI KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages 2. Lines 32 on a page. Tamil. Much injured. Old. Extent, 10 granthas.

Complete.

Begins on fol. 25 (a) of the manuscript described under D. No. 3303.

This is the original of D. No. 2898.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue Vol. III, pp. 306—307.

This and the work described under the previous number, viz. 3324 though described separately here, can be treated as one. This contains information regarding the lands donated for doing puja to Lord Govindaraja. The various claims of men or people who should perform the puja and the number of days each has to do it are also given.

Beginning :

சிதம்பரம் கோவிந்தராசன் சிலாசாசனம்.

ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகா மண்டலேசுவரன் ஹரிஹரராய விபாடன் பாஷைக்குத் தப்புவராதகண்டன் மூவராயகண்டன் கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான் பூர்வ பச்சிம சமுத்திராதிபதி * * * * * * * ராஜாதிராஜன் ராஜபரமேசுவரன் அச்சுததேவ மகாராயர் பிருதுவீராச்சியம் பண்ணியருளாநின்ற சகாப்தம்—ருசாஈ௫௰௧. (1461)-ஸு இதற்குமேற் செல்லாநின்ற விக்கிருதி ஸம்வத்ஸரம் மிதுனநாயற்று பூருவபட்சத்து சதுர்த்தசியும் ஸாத்தியாநமயோகமும் அந்தவாரமும் பெற்ற அனுஷ நட்சத்திரத்து நாள் வடகரை ராஜாதிராஜ வளநாடு வேளூர் நாட்டு வழுதலம்பட்டுச் சவாடிதனியூர் பெரும் பெற்றப் புலியூரில் அச்சுததேவ மகாராயர் பெருமாள் தில்லை கோவிந்தராசரைப் பிரதிஷ்டைப் பண்ணிவைத்து திருவாராதனக் கட்டளைக்குக் காவேரிக்கு வடகரை * * * * * * * *

End :

திருநாள்களுக்குத் திருவீதியில் எழுந்தருளப் பண்ணவும், மற்று, திருக்கோயிலுக்குவேண்டின ஊழியம் நம்பிமார் முதல், குப்பையெடுப்பான் கடை கடைக்கட்டளைக்குக் கட்டளையிட்ட உத்தரவுப்படி ஊழியம் உண்டானதெல்லாம், அவரவர்கள் காணலாட்சிகொண்டு அந்தப்படி சந்திர சூரியர்கள் உள்ளவரை பரம்பரையால் ஊழியம்பண்ணி வினியோகங்கள் உண்டானதைப் பெற்றுவரக் கடவார்களாகவும்.

(கு-பு) :—

இது மெகன்ஸி கலெக்ஷனைச் சார்ந்தது. டைலரது காட்லாக்கு 832-ஆம் எண் 306—308-ஆம் பக்கக் குறிப்பில் காணப்பட்டிருக்கிறது. இனி, டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2898-ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப் பிரதியாம். அங்கு முன்எண்ணின் பகுதியும், இவ்வெண்ணின் பகுதியும் இரண்டும் ஒருங்கு சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. ஆதலின் ஒன்றுக வருணிக்கப் பட்டது. இங்கு தனித் தனியே கொண்டு வருணிக்கப்பட்டு உள்ளது. இப் பகுதியிலே தில்லை கோவிந்தராசன் சந்நிதியிலே துவசஸ்தம்ப மண்டபத் துக்குக் கிழக்கு (41 சக) என்று எண்ணிட்டு அக் கோயிற்குரிய சிலாசா சனம் ஒன்று உளது.

ஷை சாசனத்திற் சாராம்சம் வருமாறு.—சாலி—சகாப்தம் ௲௪௱௬௰௧ A. D. 1539 ஷூ அச்சுததேவ மகாராயர் வழுதலம்பட்டுச் சாவடி தனியூர் பெரும்பற்றப்புலியூரில் தில்லை கோவிந்தராசரைப் பிரதிஷ்டை பண்ணு வித்துத் திருவாராதனைக் கட்டளைக்கு ஆக, காவேரிக்கு வடகரை கடலங் குடி மாகாணையில் குலத்ப கிராமம். அஞ்சரை வாயிற்றலைக் கிராமம், முள்ளங்குடிக் கிராமம், மற்றொன்று ஆக நான்கு கிராமங்களையும் சருவ மான்யமாக வழங்கி, ஷை கிராமங்களிலிருந்து உண்டான பொன் ஐந்நூறும் (500), திருவாராதனத்துக்கு உரியதாம். திருவாராதனஞ் செய்யும் நம்பி மார்கள் முப்பது வட்டத்தில் பிரிவு, திருவீதியில் காசிப கோத்திரத்துக் குப்பையருக்கு நாள் எட்டு. திண்டிவனம் பாரத்துவாச கோத்திரத்து நல்ல பெருமாளுக்கு நாள் எட்டு. திருவகீந்திபுரம் கௌசிக கோத்திரம் தேவ நாய கப்பட்டருக்கு நாள் எட்டு. தாடாளன் கோவில் கௌதம கோத்திரம் ஸ்ரீநி வாசப்பட்டருக்கு நாள் இரண்டு. ஷையூர் பாரத்துவாசக் கோத்திரம் நரசிம்ம அய்யங்காருக்கு நாள் நான்கு. ஆக முப்பது நாட்கள் முறை என ஏற்படுத் தியும் அவைகளைச் சிலாசாசனமாக்குவித்தும் விளக்கப்பட்டிருக்கின்றன. எழுத்து விளக்கமாகவில்லை. மிகப்பிழையுடனிருக்கின்றது. இவ்வேடு தலை கீழாக வைத்து பைண்டு செய்யப்பட்டுள்ளது.

No. 3326. திருவெள்ளறைத் தல வரலாறு.

TIRU VEḶḶAṞAIT TALA VARALĀṞU.

Pages 2. Lines 28 on a page. Tamil. Much injured. Old. Extent 30 granthas.

Complete.

Begins on fol. 26 (a) of the manuscript described under D. No. 3303.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue, vol. III, pp. 306—308.

This is the original of D. No. 2899.

Acc 16331 C44089

(கு-பு) :—

இது மெகென்ஸி கலெக்ஷனிற் சேர்ந்தது. டைலரது காட்லாக்கு 832 ஆம் எண் 306—308-ஆம் பக்கக் குறிப்பில் காணப்பட்டுள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2899-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகையாம். மிகப் பிழையுளது, எழுத்துத் தெளிவாக இல்லை. சிதைவுற்றுளது.

No. 3327. திருவெள்ளறைத் தல புராண வரலாறு.
TIRUVEḶḶAṞAIT TALA PURĀṆA VARALAṞU.

Pages 2. Lines 38 on a page. Tamil. Much injured. Old. Extent, 60 granthas.

Complete.

Begins on fol. 27 (a) of the manuscript described under D. No. 3303.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue, Vol. III. pp. 306—308.

This is the original of D. No. 2900.

(கு-பு) :—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்தது. இவ்வூர், திருச்சிராப்பள்ளி ஜில்லா ஸ்ரீரங்கத்துக்கு அண்மையிலேயுள்ளதொரு திருவெள்ளரை (பெரியாழ்வார் மங்களாசாஸனம் பெற்ற தலம்) என்னும் ஸ்ரீ விட்ணு திவ்விய தலத்தின் புராண வரலாற்றை எடுத்து விளக்குவதாம். டைலர்துரை காட்லாக்கு 832 எண் 306—308 எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2900-ஆம் எண்ணிற்கு மூலப்பிரதியாம். இத் தலம் கேதகீவனம் ஆம் வான்மீகி முனிவர் வழிபட்ட தலமாம். இதன் சிறப்பினை ஸ்ரீ விட்ணு புராணம் முதலம்சம் 8 அத்தியாயங்கள் விளக்கும் என்கின்றது. எங்களாழ்வான் அபிமானித்திருந்து கைங்கரியஞ் செய்த இடம். இன்னும் சுவாமிக்குச் சுந்தரராசப் பெருமாள், (2) வடிவழகிய நம்பி, (3) ரூப நாராயணசுவாமி, என்ற பெயர்கள் சுவாமிக்கு அமைந்துள. இத் தலத்துக்குப் " பிரேமபுரி க்ஷேத்திரம் " என்ற பெயர் உண்டு. சாலி சகம் 1560-ஆம்௵ கருநாடகராதீனத்து விசயரங்க சொக்கநாத நாயக்கர் நாள்வரைக்கு இத்தலம் மிகச் சிறப்புடன் பாராட்டப்பட்டிருந்தது. பிற்காலம் சிறிது நில புலன்களையே பெற்றிருக்கிறது.

No. 3328. சிதம்பர தேவஸ்தான சிலாசாசனம்.

CIDAMBARA DĒVAŚTHĀNA ŚILĀŚĀSANAM.

Page 8. Lines 42 on a page. Tamil. Much injured. Old. Extent, 175 granthas.

Complete.

Begins on fol. 28 (a) of the manuscript described under D. No. 3303.

Same work as that described under No. 832 of Taylor's Catalogue, Vol. III pp. 306—309.

This is the original of D. No. 2991.

(கு-பு) :—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சேர்ந்தது. டைலரது காட்லாக்கு 832 (pp. 306—309) ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 290 ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாம். இப் பிரதியில் எழுத்து மை யழியப்பெற்று எழுத்துக்கள் விளங்காமல் உள. மிகப் பிழையுடனிருக்கிறது, இப்பகுதியிலே தில்லை நடராசர் கோயிலுக்குள் பல பகுதியிலுள்ள நான்கு சிலாசாசனப் பகுதிகளைக் காணலாம். அவற்றுள், (1) சனீசுவரர் சந்நிதிக்கு வடக்கில் கீழ் வரி பெரிய பட்டம் சாராமிசம் வருமாறு :—

(1) நிலச்சாசனம் ஒன்று திருநந்தாவனம் திருப்பணிக்கு ஆக வாங்கி விட்ட நில பூஸ்திதியைத் தெரிவிக்கும். இறுதியில் சோழன் எழுத்து என்று கையொப்பமிட்டுள்ளது. இச்சாசனம் (ய) என நம்பரிட்டு முதலிற் காணப்படும்.

(2) Foll, 28 (b) யக ஆவது சாசனம் ? நிருவஞ்சாமர காலத்திலே சுவாமிக்குச் செங்கழுநீர் திருப்பள்ளித் தாமந்தார், திருத்தொங்கல், செங்கழுநீர் தொங்கல் (மாலை)சாத்துப்படிக் கைங்கரியத்துக்காக செங்கழுநீர் புட்பங்கள் பயிராக்குவித்தற்காக நிலம் ஏற்படுத்திய வகையையும், சாசனமாக்கிய வகையையும் விளக்குகிறது. இங்ஙனம் தொண்டைமான் செய்யச் சொன்னதைத் தாம் முற்று வித்ததாகவுங் கூறப்பட்டுள்ளது. 29 (b) எடுவறிதே உளது.

(3) Foll 3 ஆவது, சாசனம் வருமாறு.—யஉ என்ற எண் கொடுக்கப் பெற்றுள்ளது. ஷ சாஸனம் ஸ்ரீ சபாநாதர் சந்நிதானம் தெற்கு வாயில் கீழ்ப்புறம் திருநிலை முகப்புக் கொறட்டிலே எழுதியிருக்கப்பட்டது. இதன் சாராமிசம் தாண்டவேசுவரனரது மகா பூசைத் திருப்பணிக்கு ஆக ஒரு பூதான சாசனம் பண்ணினதைத் தெரிவிக்கின்றது. மிகப் பிழையுடனும் மிகக் கிழிந்தும் இருப்பதால் விடயங்களை வாசித்துணர முடியவில்லை.

(4) Foll, 30 (b) சிதம்பர மேலைக் கோபுரம் கீழ்வாசல் கீழ்ப்புறத்தில் இருக்கிற சாசனம். ௰௩ என்றிலக்கமிட்டது. இது, கச வேட்டை கண்ட வீரப்பிரதாபன் வேங்கடதேவ மகாராயர் 1503 ஞூ மேல் வையப்ப கொண்டப்ப கிருஷ்ணப்ப நாயக்கர் அவர்கள் நடராசருக்கும் சிவகாம சுந்தரிக்கும் நைவேத்திய திருவிழாக்களுக்கு 7 கிராமங்களை வழங்கி சிலா சாசனமாக்குவித்ததனைத் தெரிவிக்கும். மிகக்கிழிந்துளது. மிக எழுத்துப் பிழையுளது. 31 (b) ஏடு வெற்றேடாகும்.

No. 3329. புன்னாகவனமென்ற புன்னைவன க்ஷேத்திர வரலாறு.

PUNNĀGAVANAMENṞA PUNNAIVANA KṢĒTTIRA VARALĀṞU.

Page, one only. Lines 35 on a page. Tamil, much injured. Old. Extent 15 granthas.

Complete.

Begins on fol. 32 (a) of the manuscript described under D. No. 3303.

This contains some anecdotes about the place known as Punnāgavanam. This describes certain incidents showing the greatnes or power of the diety of this place kuown as " Aprameyēsvarar ".

(கு. பு.)—

இது புன்னாகவனம் என்ற புன்னைவன க்ஷேத்திர வரலாறு. இதில் அப்ரமேயேசுவரர் என்று சுவாமியின் பெயர். கொங்கணசித்தர் ஆரா தித்தபடியால் கொங்கணலிங்கா என்று பேரும் உண்டு. இத் தல விசேடத்துக்குத் தல புராணம் ஒன்று உண்டு. அதில் கொங்கணச் சருக்கம் என்பதாக ஒரு சருக்கம் உளது. மற்று, கொங்கணரிடத்து ஞானோபதேசம் பெற்றுர் ஒருவர் இடைஞானியர் ஷ இலிங்கத்தை வந்தனை வழிபாடுகள் செய்திருந்தார். ஆகவே இடை ஞானிச்சருக்கம் என்று ஒரு சருக்கமும் உண்டு.

கேரள தேசத்திலிருந்து செட்டியார் ஒருவர் மிளகுபொதி கொண்டு வியாபாரஞ் செய்ய வருகையில் இடைவழி இவ்வனத்தில் தங்கியிருப்ப, சுவாமி விருத்த வடிவினராய்த் தோன்றிச் சடாவபிஷேகத்துக்காகக் கொஞ்சம் மிளகு கொடுக்குமாறு கேட்க, செட்டி யறியாது, " இம் மூட்டைகள் யாவும் மிளகு பொதிகள் அல்ல ; பயறு பொதிகளாம்", என்று பொய் யுரை விடைபகர்ந்து சென்று குறித்த இடஞ் சென்று மூட்டை யவிழ்த்துப் பார்க்கையில் மிளகு எல்லாம் கடவுள் மகிமையால் பயறுகிக்கிடக்கப்பின் புத்தி வந்து, இத்தலமேல் வந்து இந்தப் பயிறு மிளகானுல் இத்திரவிய மெல்லாங் கொண்டு கோயிற்றிருப்பணி செய்விக்கிறேம் " என வேண்டிக்

கொண்டான், 'அஃது அங்ஙனமேயாக சுவாமிக்குக்கோயில் முதலாயின கட்டுவித்தான் என்றின்னோரன்ன சிறப்புச் செய்திகளை அப்பிரமேயேசுவர புராணங் கூறும் என்றுளது. இத்தலத்துக்கருகில் "சிவாசலம்" என்று ஒன்றுளது. இத் தலவிசேடம் கங்காதேவி வழிபாடு செய்தமையின், "அம்பாள்புரம்" எனவும், கொங்கணர் புரம், இடைஞானியர்புரம், என்ற பல பெயர்களாலும் அழைக்கப் படும். இத்தலம், "சுவயம்பூதலம்" ஆம், என்றின்னோரன்னவை பல விளங்குகின்றன. முதலில் (32) என்றிருக்க வேண்டிய ஓர் ஏடு, இது போது யாது காரணம்பற்றியோ காணப்பெறவில்லை. இப்போது, 33 ஆம் ஏடு 32 ஆம் ஏடாகக் கணக்கிடப்பட்டுளது. ஆகவே இப்பகுதி அரைகுறை யானதே. மிகக் சிழிந்திருப்பதால் அவ்வேடும் கீழ் விழுந்து போயிருக்கும் போலும். மிக எழுத்துப் பிழையுடன் உள்ளது. எழுத்துத் தெளிவாக எழுதப் பெறவில்லை.

No. 3330. ஊதியூர் கிராமம் மஞ்சறுமறவர் பாளையம் தேவஸ்தான வரலாறு.

ŪDIYŪRKIRĀMAM MAÑJAṞĀ MAṞAVARPĀḶAIYAM DĒVASTHĀNA VARALĀṞU.

Page, one only. Lines, 33 on a page. Tamil, much injured. Old. Extent 18 granthas.

Complete.

Begins on fol. 32 (b) of the manuscript described under D. No. 3303.

Same work as that described under No. 832 of Taylor's catalogue Vol. III. pages 306–311.

This is the original of D. No. 2910.

(கு. பு.)—

இது புன்னாக வனம் என்னும் அதைச் சார்ந்துள்ள ஊதியூர் கிராமத்தில் மஞ்சறுமறவர் பாளைய தேவஸ்தானத்திலிருக்கும் அப்பிரமேயேசுவரரது க்ஷேத்திர வரலாற்றினையும் மகத்துவத்தினையும் எடுத்துரைக்கும் வகையிலே அமைந்திரா நின்று உள்ளது. 67-ஆம் பக்கம் அல்லது 34 (a)-ஆம் ஏடு இதுபோது யாதுகாரணம்பற்றியோ காணப்படவில்லை. ஆதலின் இப்போது 35–ஆம் ஏடு 34–ஆம் ஏடாக உளது. இஃது அரைகுறையாகவே யிருக் கிறது. மிகச் சிதையப் பெற்றிருக்கின்றது. எழுத்துக்களும் தெளிவாக எழுதப்பெறவில்லை. மிகப்பிழையுடனிருக்கிறது. இப்பகுதி மெகென்ஸி துரை கலெக்ஷனிற் சேர்ந்தது. டைலர்துரை காட்லாக்கு 832-ஆம் எண் 306—312 ஆம் பக்கக் குறிப்பிற்கண்டதேயாம். இதற்குப் பிறகு உள்ள ஏடு முற்பக்கம் பிற்பக்கம் மாறிவைக்கப்பட்டுள்ளது. ஊதியூர் தாராபுரத்துக்கு அண்மையில் காங்கேயம் தாலூக்காவில் உள்ளது என முதல் வாக்கியம் அறிவிக்குமதைக் காண்க. இப்பிரதி D. 2910-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகையாம்.

No. 3331. கண்ணபுரம் கிராமம் விக்கிரம சோழீசுவர தேவஸ்தான வரலாறு.

KAṆṆAPURAM KIRĀMAM VIKKIRAMA ŚŌḺĪŚUVARA DĒVASTHĀNA VARALĀṞU.

Pages, 2. Lines, 28 on a page. Tamil, much injured. Old. Extent 40 granthas

Complete.

Begins on fol. 33 (a) of the manuscript described under D. No. 3303.

Same work as that described under No. 832 of Taylor's catalogue Vol. III. pages 306—312.

This is the original of D. No. 2911.

This contains the Sthalapurāṇa of Sri Vikirama Ṡōḻīsvara enshrined in the temple at Kaṇṇapuram village. This also contains some Mythological explanations for the village being known as Kaṇṇapuram or Karnapuram, etc.

(கு. பு.)—

இது மெகென்ஸி திரட்டியவைகளில் ஒன்றும். டைலரது காட்லாக்கு 306–312-ஆனபக்கங்கள், 832-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப்பட்டுள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2911-ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப் பிரதியாகும். தாராபுரம் அருகே காங்கேயம் தாலூகாவிலே, "கண்ண புரம்" என்ற ஊரிலே, "விக்கிரம சோழீசுவர தேவஸ்தானத்துக்கு உரியதொரு தலபுராணமாம். மிகச் சுருக்கமானது. இத்தலத்தே சைவப் புராணப்படி திருமால் சக்கிராயுதம் பெறவேண்டிப் பரமசிவனைத் தாமரை மலர் கொண்டு, அருச்சித்து வழிபட்டு வருகையிலே ஒரு நாளில், ஆயிர மலர்க்கு ஒரு புட்பங் குறைந்திருக்க, அதற்காகத் தமது செந்தாமரைக்கண் மலரைச் சாத்தி யக்குறை நீங்கினர் என்கிறது ; ஆதலின், "கண்ணபுரம்" என இவ்வூர் நாமம் பெற்றது. ஆகவே இக்குறி காரணக்குறியாம் என்க. மிகப் பிழையுடன் உளது. எழுத்துத் தெளிவாகவும் இல்லை. ஆனல் இவ் வூர்க்கு, "கண்ண புரம்", என்றதற்கு மற்றுஞ்சில காரணங்களுஞ் சொல் லப்பட்டிருக்கின்றன. எது பொருந்தியதோ ? இதன் பின்னர் ஒரு ஏடு எங் கிருக்க வேண்டியதோ இங்கு இருக்கின்றது. இதிலுள்ள விடயம் பூந்துறை யான பள்ளி கொண்ட பெருமாளுக்கு கையெழுத்து என்னப் பெற்று ஓர் பூதான சாசனம் ஆம். அரை குறையானது. ஒரு சிறிய பகுதியேயுளது. மாந்தாதியர் ஜீர்ணோத்திரம் பண்ணுவித்தபடியாலே "மாந்தாதீசுவரர்" எனவும், பஞ்சபாண்டவர் காடுறைந்தபோது கர்ணன் இத்தலத்துச் சுவாமி யைப் பூசித்தவதனல் இது, "கர்ண புரம்" என்ற பெயர் வரப்பெற்றது எனவும், விக்கிரம சோழனல் பூசிக்கப் பெற்று இத்தலத்துக்கு விக்கிரம சோழீசுவரம் எனவும் பெயர் வந்தது; சுவாமி—விக்கிரம சோழீசுவரர்

அம்மை-வித்தகச் செல்வி. இக்கதை யெல்லாம் சிவன்மலை "தலபுராணம்" என்றதிலே கூறப்பட்டுள்ளது எனவுங் குறிக்கப்பட்டிருக்கிறது. இதன் ஏடு இப்போது முன்பின் பக்கங்கள் மாற்றிவைக்கப்பட்டிருக்கின்றது. யாது காரணமோ?

No. 3332. கத்தாங் கண்ணி கிராமம் நன்மணீசுவரர் தேவஸ்தான சிலாசாஸனம்.

KATTĀṄKAṆṆI KIRĀMAM NANMAṆĪŚUVARAR DĒVASTHĀNA ŚILĀŚĀSANAM.

Page, one only. Lines, 13. Tamil. Good. Old. Extent 7 granthas.

Begins on fol. 34 (a) of the manuscript described under D. No. 3303.

Same work as that described under No. 832 of Taylor's catalogue Vol- III on pages 306—312.

This is the original of the manuscript described under D. No. 2915.

(கு. பு.)—

இது மெகென்ஸி கலெக்ஷனிற் சேர்ந்தது. டைலர்துரை காட்லாக்கு 306-312 ஆம் பக்கங்களில் 832–ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2915 ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப்பிரதியாகும். மிகப்பிழையுடன் உள்ளது. இவ்வூர்க்குச் சதுர்வேதி மங்கலம் எனவும் ஒரு பெயர் காணப்படுகிறது.

No. 3333. கணக்கன் பாளையம் அக்கிரகாரம் ஸ்ரீநிவாஸா சாரியாரிடத்துள்ள தாமிரசாசனம்.

KAṆAKKANPĀḶAIYAM AKKIRAHĀRAM ŚRĪNIVĀSĀCĀRI-YĀRIḌATTUḶḶA TĀMIRAŚĀSANAM.

Pages, 8. Lines, 52–33 on a page. Grantha. Good. Old. Extent 296 granthas.

Begins on fol. 35 (a) of the manuscript described under D. No. 3303. Fol. 40 (b) is left blank.

This is included in the collections of Col. Mackenzie and is described by Taylor under No. 832 on pages 306–312 of his catalogue.

This contains some Sanskrit stanzas describing the geneology of the Kings of Mysore and ending with Krishnadevaraja Udayar. This also

contains information that he built a Vaishnavaite temple at Tirukkaṇāmbur on the ranks of the river Bhavani and that he arranged for the conduct of worship in that temple. It also contains the information that on a Sri Jayanti day, he gave away some 4 villages by name Tirukkanambur, Ekanayakan palayam, Thuraithanam palayam and Kanakan palayam to Brahmins in charity and also inscribed this on copper plates with the Royal Seal.

Beginning :

கோயமுத்தூர் ஜில்லா சத்திய மங்கலம் கோபால செட்டிப்பாளையம் தாலூக்கா புதுக்கரை மிட்டா பயிகிமவுசே கணக்கன் பாளையம் அக்கிரகாரம் மகாஜனங்கள் ஸ்ரீநிவாஸாசார்யரிடத்தில் இருக்கிற தாம்மிரசாசன நக்கல் :—

வடமொழி சுலோ கங்கள் :—

(கு. பு.)—

இது மெகன்ஸி கலெக்ஷனைச் சார்ந்தது. டைலர் துரை காட்லாக்கு 306 – 312-ஆம் பக்கங்களில்–832 - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. மைசூர் ராஜவமிச பரம்பரயை 151 வடமொழி சுலோகங்களில் எடுத்துணர்த்தி அதில் கிருஷ்ண தேவராஜ (உடையார்) தாம், தமது பிதாமகியின் (தேவமாம்பா) இஷ்டப்படிக்குத் தம் பிதாவினது ஆஜ்ஞையைக் கொண்டு பவானி நதிதீரத்தில் திருக்கணும்பூரிலே தம் பெயரால் கிருஷ்ண தேவராஜபுரம் அக்கிரகாரத்தையும், விஷ்ணு கோவிலையும் கட்டுவித்து, (1) திருக்கணும்பூர், (2) துரைத்தனம் பாளையம், (3) எக நாயக்கன் பாளையம், (4) கணக்கன் பாளையம் என்னும் நான்கு கிராமங்களையும் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தீ மஹோத்ஸவ காலத்திலே பிராமணர்களுக்குத் தானமாக உதக தாராபூர்வமாகத் தாரை வார்த்துக் கொடுத்து, அதைக்கண்டீரவ நரஸராஜ உடையாரின் கையொப்பமு மிடுவித்துத் தாம்மிர சாசனமாக்குவித்த முறையினை யெடுத்து உணர்த்துகின்றது. இச்சாசனம், சாலி சகம். 1631. A. D. 1709-௵க்கு மேல் செல்லாநின்ற விரோதி வருஷம் ஆவணி௴-புதவாரம்–ரோஹிணி நட்சத்திரம் கிருஷ்ணாட்டமியும் பெற்ற சுபதினத்தில் எழுதப்பட்டது என்பது நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. மற்று, கடைசியில் கன்னட பாஷை வசன நடையில் இதே விஷயம் நன்கு விளக்கி எழுதப்பட்டுள்ளது. ஆனல் வடமொழி சுலோகங்கள் முழுமையும் மிகப்பிழையுடன் உள. எழுத்து கிரந்தாக்ஷரத்திலானது. முற்றும் உளது. இதன் பக்கங்கள் யாவும் தலைகீழாக எழுதப்பட்டு உள. மாற்றிப் படிக்கவேண்டும். மிகச் சிதைந்திருந்து தற்பொழுது ஒழுங்கு செய்யப் பெற்றுளது. இவ்வூரும் புறஞ்சூழ்ந்த கிராமங்களும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கே உரியவை யென்றும் இவை சிருங்கராசாரியரின் பிராத்தனையால் எற்பட்டவை யென்றும் வரையப் பட்டுள்ளது. 40 (b) வெற்றேடாகும்.

No. 3334. முந்தூர் மிட்டா சோழீசுவர சுவாமி தேவஸ்தான சிலாசாஸனம்.

MUNDŪR MIṬṬĀ ŚŌḺĪŚUVARA SVĀMI DĒVASTHĀNA ŚILĀŚĀSANAM.

Pages, 3. Lines, 15–18 on a page. Tamil. Good. Old. Extent 27 granthas

Begins on fol. 39 (a) of the manuscript described under D. No. 3303. Fol. 39 (b) is left blank.

Complete.

This is the original of the manuscript described under D. No. 2912 which was described by Taylor under No. 832 on pages 306–312.

(கு. பு.)—

இது மெகென்ஸி கலெக்ஷனிற் சேர்ந்ததாம். டைலர் துரை காட்லாக்கு 306–312-ஆன பக்கங்கள், 832-ஆம் எண்ணின் குறிப்பிற்கண்டதே. மற்று, D. 2912-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாகும். முற்றும் உள்ளது.

No. 3335. விஜய மங்கலம் மிட்டா மசகூர் ஜைன பஸ்தி (கோவில்) சிலாசாஸனம். (பெருந்துறை தாலூகா)

VIJAYAMAṄGALAM MIṬṬĀ MAŚAKŪR JAINA BASTI (KOVIL) ŚILAŚĀSANAM (PERUNTUṞAI TALUK.)

Pages, 2. Lines, 18–20 on a page. Tamil. Good. Old. Extent 25 granthas.

Begins on fol. 40 (b) of the manuscript described under D. No. 3303.

Complete.

This is the original of the manuscript under D. No. 2913. This contains an account of the three inscriptions pertaining to this temple.

Same work as that described under No. 832 of Taylor's catalogue pages on 306—312.

(கு. பு.)—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்தது. டைலர் காட்லாக்கு 832-ஆம் எண், 306-312 ஆன பக்கங்களில் வருணிக்கப்பட்டுள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு D. 2913-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாகும். இப்பிரதியில் அக்கோயிலுக்கு உரிய (3) மூன்று சாசனங்கள் அடங்கியுள்ளன. பிழையதிகம். தெளிவாக எழுதப்படவில்லை. சிதைந்துளது.

No. 3336. ஈரோடு தொண்டீசுவர சுவாமி கோவில் சிலாசாசனம்.

ĪRŌḌU TOṆḌĪŚUVARA SUVĀMI KŌVIL ŚILĀŚĀSANAM.

Page, one only; Lines, 29 on a page. Tamil. Good. Old. Extent 17 granthas.

Begins on fol. 41 (b) of the manuscript described under D. No. 3303.

Complete.

This is the original of the manuscript described under D. No. 2914; some portions are very much injured and lost.

Same work as that described under No. 832 of Taylor's catalogue on pages 306—312.

(கு. பு.)—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்தது. டைலரது காட்லாக்கு 306-312 ஆம் பக்கங்கள் 832-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2914-ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப்பிரதியாகும். ஆனால் இப்பிரதி இப்பொழுது மிகக்கிழிந்துபோய் ஏடுகளின் சிறிய அரைப் பகுதியே காணப்படுகின்றன. மிகுதியான பகுதியில்லை யாதலால் அதிலடங்கிய சாசனப்பகுதிகள் இல்லாமல் இருப்பதால் அரைகுறையானவையே. மொத்தம் (3) மூன்று சாசனங்களாம். மிகப்பிழையுளது. இனி இதற்கடுத்தாற்போல் இருக்க வேண்டிய, "கத்தாங்கண்ணி நன்மணீசுவரர் தேவஸ்தான சிலாசாசனம்" என்ற, பகுதி முன்னமே ஏடு மாறுட்டத்தினால். D. 3332-ஆம் எண்ணில் வந்துள்ளது நோக்கத் தக்கது.

No. 3337. ஈரோடு தொண்டீசுவர சுவாமி கோவில் சிலாசாசனம்.

ĪRŌḌU TOṆḌĪŚUVARA SUVĀMI KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 2. Lines, 28–30 on a page. Tamil. Good. Old. Extent 30 granthas.

Begins on fol. 42 (a) of the manuscript described under D. No. 3303.

Incomplete.

This is the original of the manuscript described under D. No. 2916.

This is described under No. 832 on pages 306-312 of the Taylor's catalogue of the manuscripts collected by Col. Mackenzie. This contains the 3 inscription found on the Tondisvarar temple. Some pages are torn in the end and it is incomplete.

(கு. பு.)—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்தது. டைலரது காட்லாக்கு 832-ஆம் எண், பக்கங்கள் 306-312 குறிப்பில் வருணிக்கப்பட்டுள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2916-ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப்பிரதியாகும். இதிலே—

(1) தொண்டீசுவரர் கோவில் கருப்பக்கிரகம் மேற்குப்பட்டி வரியில் இருக்கப்பட்ட ஷ கோயிலுக்கு அந்நாட்டவர் அளித்த பூதான சாசனம். இச்சாசனம், வெள்ளாள தேவர் ? (பல்லவ) காலத்து சாலி சகாப்தம் 1260, A.D. 1440. மேல்விளம்பிஸ்ரீ ஏற்பட்டதொன்று.

(2) ஷ கோவில் மாமண்டபத்தில் தெற்குப்புறத்து உள்ளது. வீர வேங்கட பிரதாபராயர் காலத்து சாலி சகம் 1501. A.D. 1578 ஸ்ரீ சர்வதாரிஸ்ரீ தொண்டீசுவரர்க்கும் பள்ளிகொண்ட பெருமாளுக்கும் நித்த பூசை, நைமித்திக பூசை முதலியன நடாத்துதற்காக விடுத்த பூதான சாஸனம் நல்ல வீரப்பப் பிள்ளையும் பூந்துறை நாட்டவரும் சேர்ந்து ஏற்படுத்தியதாம்.

(3) ஷ கோயில் கருப்பக் கிரகத்து மேற்குப்பட்டியில் எழுதியதாம். இது அரைகுறையானது. ஆக மூன்று சாஸனங்களே இருக்கின்றன. மிகப் பிழையுடனிருப்பவை. மிகக் கிழிந்துளது. இதற்கு அப்புறம் ஓர் ஏடு இருந்திருக்கவேண்டும். அது இப்போது எக்காரணம் பற்றியோ காணப் பெறவில்லை. கிழிந்து வீழ்ந்துவிட்டது போலும்.

No. 3338. காஞ்சி அழகிய மணவாள சீயரிடத்துள்ள தாமிர சாசனம்.

KĀÑCI AḺAKIYA MAṆAVĀḶA JĪYARIḌATTUḶḶA TĀMIRA ŚĀSANAM.

Page, one only, Lines, 32 on a page. Tamil. Good. Old. Extent 20 granthas.

Begins on fol. 43 (a) of the manuscript described under D. No. 3303.

Complete.

This is one of the inscriptions collected by Col. Mackenzie and is described by Taylor in his catalogue under No. 832 on pages 306-312.

This contains details about 2 villages granted to Alakiya Manavāḷa Rāmānuja Jeer of Kanchi for the conduct of worship to Sri Varadarāja, etc., on all days and on festival days also.

Beginning :

அனுபவ சாஸன சமாசாரம் : அனந்தகிரி தாலூக்கா காஞ்சீ மகா ஸ்தலத்தில் ஹஸ்திகிரி சிகரத்தில் ஜகத்ரக்ஷணார்த்தமாக நின்றருளிய ஸ்ரீ வரதராஜஸ்வாமி முதலான தேவஸ்தானத் தலங்களுக்கு நித்திய கைங்கரியங்கள் முதலான மகோத்ஸவங்களுக்கு ஸ்ரீரங்கப்பட்டணத்திலே ஸ்ரீ கிருஷ்ணராய உடையார் அவர்கள் காஞ்சி அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் அவர்கள் வசத்தில் பெரி(ய) ஏரி ஒபளிக்குச் சேர்ந்த "வேப்பம் பூண்டி", "காமகாபாளையம்", இந்த இரண்டு கிராமமும் சருவ மானிய மாக நடந்துகொண்டு வரும்படியாய்த் தாம்மிர சாசனமும் சிலாசாசனமும் பண்ணுவித்துக் கொடுத்து கிராமமும் நடப்புவித்துக்கொண்டு வந்தார்கள். இப்புறம் நவாப்பு அயிதர் அல்லீகான் பகுதூர் அவர்களும் இதே பிரகாரம் சருவ மானியமாக நடப்புவித்துக்கொண்டு வந்தார்கள். * *

End :

* * * * * * * *

இந்த இரண்டு கிராமத்துக்கும் நியதி பிரகாரத்துக்கு இந்தச் சுவாமியவர் களுடைய குமாஸ்த்தாக்கள் முகாந்திரமாக இந்தக் கிராமத்துப் பணமும் வரப்படுத்திக்கொண்டிருந்தார்கள் என்று ஸ்த்தனத்துச்சம் பிரதி சான போகன் கெவுடன் நாட்டுக் கர்ணம் முதலானவர்கள் எழுதுவித்துக் கொடுத்த அனுபோக சாசனமான யோகபட்டை சயி ? (யம்) பரிதாபிஷூ ஆஸ்வயுஜ பகுள துவிதீயையில்.

1. வேங்கடாசால சாஸ்திரி.

2. ஸ்த்தலம் சம்பிரதி கிருஷ்ணயன் ஒப்பிதம்.

* * * * * * * *

ஷை ஸ்தலம் தேவஸ்த்தானம் மணியம் குப்பையன் ருசு.

(கு-பு) .—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சேர்ந்தது. டைலரது காட்லாக்கு 306-312-ஆம் பக்கங்களில், 832-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. காஞ்சீ அழகிய மணவாள ராமாநுஜ ஜீயரிடத்து, மைசூர் ஸ்ரீரங்கப்பட்டணம் கிருஷ்ணராய உடையார் அவர்கள் கோயில் திருப்பணிகளுக்காக "வேப்பம் பூண்டி, காமபாளையம்" என்ற இவ் விருகிராமங்களையும் சருவமானியமாக நடத்துவித்து செப்புப்பட்டையமும் கல்வெட்டும் எழுதிக்கொடுத்தது முதலான செய்திகளையும், அங்ஙனம் சருவ மான்யமாக டிப்பு சுல்தான் முன்காலம் வரை நடந்து வந்ததனையும் எடுத்து உணர்த்திப் போகிறது. முற்றுமிருக் கிறது. மிகப் பிழையுடன் உள்ளது. கிழிந்துளது. இவ்வேட்டின் பின்புறம் வெற்றேடாம்.

No. 3339. அரசலூர் மிட்டா மசகூர்ப் பெருமாணூர் கோவில் தமிழெழுத்துச் சிலாசாசனம். (பெருந்துறை தாலூகா.)

ARAŚALŪR MIṬṬĀ MAŚAKŪRP PERUMĀNĀR KŌVIL TAMIḺEḺUTTUC CILĀŚĀSANAM. (PERUNTUṞAI TALUK).

Page, one only ; Lines, 24. on a page. Tamil. Good, Old. Extent 18 granthas.

Begins on fol. 44 (a) of the manuscript described under D. No. 3303.

Complete.

This is the original of the manuscript described under D. No. 2917. This is described under No. 832 on pages 306-312 of Taylor's Catalogue of the manuscripts .Collected by Col. Mackenzie.

(கு. பு.)—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்தது. டைலர் துரைக் கேட்லாக்கு 306-312-ஆம் பக்கங்களில், 832-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப்பட்டுள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2917-ஆம் எண்ணின் பிரதிக்கு மாத்ருகைப் பிரதியாகும். பெருந்துறை தாலூகா, அரசலூர் மிட்டா, மசகூர்ப் பெருமாணூர்க்கோவில் புற்றிடங்கொண்ட ஈசுவரலிங்கநாதருக்கு உரிய இரு சிலாசாசனப் பகுதியை உணர்த்துகிறது. இதிலே,

(1) கலியுக சகாப்தம்.—௩௲௫௱௬௰ (3560) க்கு மேல் ஜெய௵ சித்திரை௴ புதவாரம் புனர்ப்பூசம் நாளில் அச்சுதராயர் தருமதிருப்பணிக்காகவிட்ட பூதான சாசனமாகும்.

(2) கோவிந்தராயர், கலியுக சகாப்தம் ௩௲௫௱௬௰ (3560) ஜெய௵ ஐப்பசி௴ ௰௫௳ திங்கட்கிழமை அசுவனி நட்சத்திரம் நாளில் ஷெ கோயில் சுவாமிக்குத் தருமமாகப் பூதானம் பண்ணிச் சூல கல்லும் யேட்டுச் சிலாசாசனமும் பண்ணினதாம். முற்றும் உளது. மிக எழுத்துப் பிழையுளது. கிழிந்துளது. இவ்வேட்டின் பின்புறம் வெற்றேடாம்.

No. 3340. பெரியபாளையம் வரதராஜசுவாமி கோவில் சிலாசாசனம்.

PERIYAPĀḺAIYAM VARADARĀJASVĀMI KŌVIL ŚILĀŚĀSANAM.

Pages, 2. Lines, 24—8. on a page. Tamil. good, Gld. Extent 23 granthas.

Begins on fol. 45 (a) of the manuscript described under D. No. 3303.

Complete.

This is the original of the manuscript described under D. No. 2918. This is described under No. 832 on pages 306-312 of the Taylor's Catalogue of the Manuscripts Collected by Col. Mackenzie.

(கு. பு.)—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்தது. டைலர் துரை காட்லாக்கு 306-312-ஆம் பக்கங்களில், 832-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2918-ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப் பிரதியாகும். ஒரு சாசனம் உளது. மிகப் பிழையுள. சிதைந்துளது. இது வீரசோழ வளநாட்டு முகுந்தநாராயண விக்கிரம சோழரது சதுர்வேதி மங்கலத்துப் பிராமண சமூகத்தாருக்கு அளித்த பூதான சாசனத்தைத் தெரிவிக்கும், கலி—சகம்—தருளஎ-க்குமேல் ஆண்டு பதினாலாவது விக்கிரமவூ என்று இறுதியில் குறிக்கப்பட்டிருக்கிறது.

No. 3341. அலகு மிட்டா மசகூர் கைலாசநாதர் கோவில் ஶிலாசாசனம் (காங்கேயம் தாலூகா.)

ALAKU MIṬṬĀ MAŚAKŪR KAILĀSANĀTHAR KŌVIL ŚILĀŚĀSANAM (GĀṄGĒYAM TALUK).

Page, one only ; Lines, 22. on a page. Tamil. Good, Old. Extent 15 granthas.

Begins on fol. 46 (a) of the manuscript described under D. No. 3303.

Complete.

This is the original of the manuscript described under D. No. 2919 under No. 832 on pages 306-312. This is described in the Taylor's catalogue of the Manuscripts collected by Col. Mackenzie.

(கு. பு.)—

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சேர்ந்தது. டைலர் துரை காட்லாக்கு 306-312 ஆம் பக்கங்களில், 832-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2919-ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப் பிரதியாகும். கலியுக சகாப்தம் சதுசுாநடியஉ (4432) வருஷத்துக்குமேல் விக்கிரமவூ ஆவணிமீ ழகஉயில் பொங்கலூர் காணுட்டில் அலகுமலே குமாரர் திருவுளத் தினலே ஸ்ரீபாதந்தாங்கி சமய முதலியார்களுக்கு சருவமானியமாக வீரபாகு தேவர் பட்டையம் எழுதிக் கொடுத்ததைத் தெரிவிக்கும். மற்று, இதன் கடைசியில் "ஷ மிட்டா அலகுமலேக்குச் சேர்ந்த கொடுவாயிலே இருக்கும், பெரிய பெருமாள் நாகேசுவரசுவாமி இந்த இரண்டு கோவிலிலேயும் அநேகமாய்ச் சிலாசாசனங்கள் எழுதியிருக்கின்றன. அவைகளிலே வயணம் ஒன்றும் தெரியவில்லே." என்ற தொடர்மொழி குறிக்கப்பட்டிருக்கிறது. மிக எழுத்துப் பிழையுடனிருக்கிறது. சிதைந்துள்ளது. பின்புறம் வெற்றேடாகும்.

No. 3342 கீரனூர் தேவஸ்தான சிலாசாசனம்.

KĪRANŪR DĒVASTHĀNA ŚILĀŚĀSANAM.

Page, one only; Lines, 22. on a page. Tamil, Good. Old. Extent, 15 granthas.

Begins on fol. 47 (a) of the manuscript described under D. No. 3303.

Complete.

This is the original of the manuscript described under D. No. 2920. This is described under No. 832 on pages 306-312. of the Taylor's catalogue of the collctions of Col. Mackenzie.

(கு. பு.)—

இது, தாராபுரத்தையடுத்த காங்கேயம் தாலூக்காவுக்குச் சேர்ந்த கீரனூர் கிராம தேவஸ்தான சிலாசாசனமாம். மெகென்ஸி கலெக்ஷனைச் சார்ந்ததாகும். டைலரது காட்லாக்கு 306-312 ஆம் பக்கங்களில், 832-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2920 ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப்பிரதியாகும்.

(1) கோவீர ராஜதேவன் என்றவர் தமக்கு ஆண்டு மூன்றுவதில் ஷ தேவஸ்தானம் ஆதிநாதேசுவரருக்கு **மண்ணங்காட்டுக்குளமும்** அதன் கீழ்ப்பால் நிலமும் இறையிலியாக தேவதானமாக அமுதுபடிக்காக விடுத்ததனைச் சாசனமாக்குவித்ததாகும். முற்றுமுளது. மிக எழுத்துப் பிழையுடனிருக்கிறது.

(2) கலி—சகம்—சதுசுாநடூஉ (4632)-க்கு மேல் அச்சுதராயருக்கு இராச்சியம் செல்லுகையில் பலராசர் உடையார் அதிகாரத்து நாளில்—வியஷூ ஐப்பசிமீ௳ டுஉ இல் கீரனூர் ஆதீசுவரருக்கும் அகிலாண்ட நாயகிக்கும், வீரநாராயணப் பெருமாளுக்கும் இரண்டு இரண்டு பங்காகவாக்கி அமுதுபடி திருப்பணிக்காக வழங்கியதைச் சாசனமாக்குவித்ததாம். ஆக, இரண்டு சிலாசாசனங்கள் இருக்கின்றன. மிக எழுத்துப் பிழைகளிருக்கின்றன. சிதையப்பெற்றது. பின்புறம் வெற்றேடாகும்.

No. 3343. காங்கேயம் அகத்தீசுவரசுவாமி தேவஸ்தான சிலாசாசனம்.

GĀṄGĒYAM AHATTĪŚUVARA SŪVAMI DĒVASTHĀNA ŚILĀŚĀSANAM.

Page, one only. Lines, 27. on a page. Tamil. Good, Old. Extent, 12 granthas.

Begins on fol. 48 (a) of the manuscript described under D. No. 3303.

Complete.

This is the original of the manuscript described under D. No 2921.

This is described under No. 832 on pages 306-312 of Taylor's Catalogue of Col. Mackenzie's collection of manuscripts and inscriptions.

(கு-பு.) —

இது தாராபுரம் துக்குடி காங்கேயம் தாலுகா கசுபா அகத்தீசுவர சுவாமி தேவஸ்தானத்துக்கு உரியதொரு சிலாசாசனப் பகுதியாம். மெகென்ஸி கலெக்ஷனைச் சேர்ந்தது. டைலர் காட்லாக்கு, 306-312-ஆம் பக்கங்களில் 832-ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2921-ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப் பிரதியாகும். வீர அச்சுதராயர் மகாராயரது காரியஸ்தர் திம்மநாயக்கஉடையாருக்குத் தக்ஷிண புஜமான வாலையதேவர் கலி ௵ 4333 ௵ மேல் நந்தன ௵ மாசிமீ ௳ வியாழக்கிழமை, பஞ்சமி, இரேவதி நாள், செங்குளம் வண்ணுன் வாவி, ஆண்டிச்சிகுட்டை, இம்மூன்று குளமும் புறஞ்சூழ்ந்த நஞ்சை புஞ்சை முதலானவைகளைத் தேவஸ்தானமாக வழங்கிச் சிலாசாசனமும் ஆக்குவித்ததைத் தெரிவிக்கும் என்பது. மிகப் பிழையுள. பின்புறம் வெற்றேடாயுளது. கிழிந்துளது.

No. 3344. கஞ்சப்பள்ளி மிட்டா மசகூர் தென்னீசுவரர் தேவஸ்தான சிலாசாசனம் (கோயமுத்தூர்ஜில்லா)

KAÑJAPPAḶḶI MIṬṬĀ, MAŚAKŪR TENNĪŚUVARAR DĒVASTHĀNA ŚILĀŚĀSANAM (KŌYAMUTTŪR DISTIRCT).

age, one only; Lines, 19. on a page. Tamil. Good. Old. Extent, 13 granthas.

Begins on fol. 49 (a) of the manuscript described under D. No. 3303. fol. 49 (b) is left blank.

Complete.

This is the original of the manuscript described under D. No. 2922.

This is described under No. 832 on pages 306-312 of Taylor's catalogue of Col. Mackenzie's Collection of Manuscripts and inscriptions. This relates to the donation of certain villages to the Temple of Tennìśuvarar by Ramayyan.

(கு-பு.) —

இது மெகென்ஸி கலெக்ஷனைச் சேர்ந்தது. டைலர் காட்லாக்கு 306-312 ஆம் பக்கங்களில், 832-ஆம் எண்ணின் குறிப்பில் வருணிக்கப் பெற்றிருக்கிறது. டிஸ்கிரிப்டிவ் காட்லாக்கு 2922-ஆம் எண்ணின் பிரதிக்கு மூலப்பிரதியாகும். இது, சாலி-சகம். ௲௱ ௨௰௧ ௵ மேல், தாது௵ வைகாசிமீ

௨௰௩௨. தசமி குருவாரம் புஷ்யம் நட்சத்திரம். மதுரை சமஸ்த்தானம் சருவாதிகாரி இராமய்யன் அவர்கள் அதிகாரத்துக் காரிகர்த்தர் சிதம்பரநாத முதலியார் அவர்கள் ? தண்ணுயகன் கோட்டை தாலூக்கா கஞ்சப்பள்ளி தென்னீசுவரருக்குப் படித்தனம் தீபாராதனம் முதலியவை நடந்து வருதற்காக, தட்டான்குளம், புதுக்குளம், முருகன் குளம், இவைகட்குக் கீழில் உள்ள நஞ்சை புஞ்சை நிலங்களை தேவதானமாக வழங்கிச் சிலாசாசனமும் ஆக்கிக் கொடுத்ததனை விளக்கும் எனக. முற்றும் உள்ளது. பிழையதிகம். கிழிந்திருக்கிறது. பின்புறம் வெற்றேடாகும். இங்குப் பிரஸ்தாபித்த இராமப்பய்யன் என்பவர் மதுரையதிகாரி, திருமலை நாயக்கருக்கு மதுரைச் சீமையிற் சேவகம் புரிந்திருந்த இராமப்பய்யனே எனக. சிதம்பர நாத முதலியாரது சாலி சகம் ௲௬௱௨௰௧ 1621 A.D. 1699௵ எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் வந்துள்ள, "இராமய்யன் அம்மானை" எனும் நூல் இவ்விராமப்பய்யனது வீரப்பிரதாபம் முதலியனவற்றை விளக்குமாறு காண்க.

No. 3345. சிக்கதேவராயப் பேட்டை ஶ்ரீ வேணுகோபால சுவாமி யருச்சகர், வேங்கட நரஸய்யங்காரிடத்துள்ள சாசனம் (கன்னடம்).

CIKKADĒVARĀYAPPĒṬṬAI, ŚRĪ VĒṆUGŌPĀLA SUVĀMIYARUCCAKAR, VĒṄKAṬANARASAYYAṄGĀRIḌATTUḶḶA ŚĀSANAM (ANDIYŪR TALUK) (KANNAḌA).

Page, one only. Lines, 33. on a page. Kannada. Good. Old. Extent, 2? granthas.

Begines on fol. 50 (a) of the manuscript described under D. No. 3303 fol. 50 (b) is left blank.

Complete.

This is one of the inscriptions collected by Col. Mackenzie and is described under No. 832 on pages 306-312 of the catalogue of Taylor's. This is in Kannada and relates to the donations of certain land to Sri Vēṇugōpālasvami enshrined at the temple in Chikkadēvaāryapēṭṭai in Andiyur Taluk of Coimbatore District. The lands are donoted for the purpose of celebrating certain festivals.

(கு. பு.)—

இது கோயம்புத்தூர் ஜில்லா அந்தியூர் தாலுக்கா சிக்கதேவராயப்பேட்டை ஶ்ரீ வேணுகோபால சுவாமி கோவில் அருச்சகர் வேங்கடநரஸய்யங்காரிடத்துள்ளதொரு மேற்படி சுவாமியின் ரதோத்ஸவத் திருநாள் முதலியன

இடையருது நடந்து வருதற்காகவேண்டி ஷெ யூர் மகா ஜனங்களிடம் சாலி சகம் தூசூாஎயிடு ஷூ 1675 ஷூ A.D. 1753. மேல், செல்லா நின்ற ஸ்ரீமுக ஸம்வத்ஸரம் ஆவஸ்யுஜ (ஐப்பசி) மீஉ. மைசூர் ஸ்ரீ கிருஷ்ண ராஜ உடையார் அவர்கள் தேவதானம் வழங்கிய பூதானம் கிரயசாசனமதை யெடுத்துக்காட்டுகின்றது. முற்றும் உள்ளது. மெகென்ஸி கலெக்ஷனிற் சேர்ந்ததாகும். டைலரது காட்லாக்கு 306-312-ஆம் பக்கங்களில் 832-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டுள்ளது. இச் சாசனக் கட்டளை கன்னட பாஷையிலே எழுதப் பெற்றிருக்கிறது. முன்பு கிழிந்திருந்து, இப்பொழுது ஒழுங்கு செய்யப் பெற்றது. இவ் வேட்டின் பின்புறம் ஒன்றும் எழுதப் பெருமலிருக்கின்றது.

No. 3346. ஆண்டிக்குளம் அக்கிரகார சிலாசாசனம் (கன்னடம்.)

ĀṆDIKKUḶAM AKKIRAKĀRA ŚILĀŚĀSANAM (KANNAḌA).

Page one only. Lines 16 on a page. Kannaḍa. Good. Old. Extent 8 granthas.

Begins on fol. 51 (a) of the manucript described under D. No. 3303, fol. 51-b is left blank.

This inscription is described under No. 832 on pages 306-312 of Taylor's catalogue of the manuscripts and inscriptions collected by Col. Mackenzie. This is written in Kannaḍa.

(கு. பு.)—

